[Copyright Registered.]

1912.

Price 12/- net.

[Copyright Registered.]

Crown 8vo. Cloth gilt. 7/6 net.

Old Furniture: Its Collection and Value.

By Percy Macquoid.

With numerous Illustrations.

Crown 8vo. Cloth gilt. 7/6 net.

Old Furniture: Its Collection and Value.

By Percy Macquoid.

With numerous Illustrations.

Crown 8vo. Cloth gilt. 7/6 net.

Old Furniture: Its Collection and Value.

By Percy Macquoid.

With numerous Illustrations.

Crown 8vo. Cloth gilt. 7/6 net.

Old Furniture: Its Collection and Value.

By Percy Macquoid.

With numerous Illustrations.

Crown 8vo. Cloth gilt. 7/6 net.

Old Furniture: Its Collection and Value.

By Percy Macquoid.

With numerous Illustrations.

Crown 8vo. Cloth gilt. 7/6 net.

Old Furniture: Its Collection and Value.

By Percy Macquoid.

With numerous Illustrations.

உ

சிவமயம்.

கணபதி துணை.

இந்நூலாசிரியர் சரித்திரச் சுருக்கம்.

பூலோகத்திற்குத் திலகம் போன்று பல்வளங்களுநிரம்பிய நம் இந்தியாவின் தெற்குப்பாகத்தில் தொண்டைமண்டலத்தில் அறுநான்கு கோட்டத்துள் மூன்றுவதாகிய ஈக்காட்டுக் கோட்டத்தைச்சார்ந்த தொழுவூர் கிராமவாசிகளாகிய வேளாளருள் சதாசிவ மகாரிஷி கோத்திரத்தைச்சார்ந்த குடும்பத்தில், சென்னையில் வியாபாரநிமித்தம் நிலைத்த தொழுவூர் - செங்கல்வராய முதலியாரென்பவருக்கு இந்நூலாசிரியர் சாலிவாகனசகம் கஎருச-க்கு மேற்செல்லாநின்ற நந்தனவரு ஆவணிமீ கூ அசுவனி நக்ஷத்திரங்கூடிய குருவாரத்தன்று அவதரித்தனர். இவரது மூத்தபாட்டனாரும், செங்கல்வராயமுதலியார் பெரியதகப்பனாருமாகிய, வேலாயுதமுதலியார் சிவபதம்பெற்றதினத்திரவு அவதரித்தகாரணத்தால், இவருக்கு வேலாயுதமுதலியாரென்று திருநாமமிடப்பட்டது.

இத்தலபதில் பள்ளிக்கூடவைக்கப்பட்டு ஆரம்பத்தில் தெலுங்குசம்பிரதாயமுறைப்படி கற்றுப் பிறகு தேர்ச்சியுள்ள ஒருவரிடத்தில் தமிழ் பயின்றவந்தனர். இவர் இளமையிற்றானே, அன்பு, அடக்கம், பொறுமை வாய்மை, தூய்மை, பக்தி, ஆசாரம், இன்சொல், பெரியோர்கண்மை மனச்சுத்தம், யுக்திமுதலிய நற்குணங்களமையப் பெற்றதாய்த்தந்தையைக் களிப்பித்துவந்தார். ஒத்தவயதில் தன்னையுடன் வியாகரணம் பயின்றுவருபவர் ஒருமையுற்று அவருடன் வாணிபமேற்கொண்டு தூத்துக்குடிமுதற்றொண்டிபோழுது தன்னைக்கு இராஜதானைகானை அங்கு அனுப்பிவைத்து சென்னைக்குத்திரும்பி சமுசாரபாரம்பொறுத்தார். பிறகு தாயாதிகளின் வஞ்சத்தால் ஜீவிதோபாயம் முட்டுப்பட்டு பிதிராற்ஜிதங்களில் வரிக்குடம் வீடொன்றே கிடைத்தது.

அக்காலையில், "தூலதிலமீது நிலைகெட வென்றே மெய்த்தவத் தோனோனாதுத் திருவொற்றியூர்" என்று திருவண்ணாட்டடிகள் பாடிற்ற முத்திதலமாற்ற திருவொற்றியூருக்குப் பாடம்படிக்கவானைருக்குப் படித்து செய்வாராய்ச்சென்வாராயினர். அப்போது இவர் தன்னைக்கு ஆண்டசேயர்களில் லொருவரான தானையப் - ரூப்பண்ணை முதலியார் இவர் அறிவின் திவாடரிந்து, இவரை அக்காலத்தில்சென்னையில் முருகன்கடவுளின் வாய்பிரசாதியாயும் சிவாலயுத்திச் செல்வராகியும், முத்தி, சித்தி, விபத்தியாயங்களின் விளக்கவுக்கு குருவாய்த்தமைந்த திருவருட்

பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் - இராமலிங்க சுவாமிகளிடம் சேர்த்தார். அவர் இவ்வரலை எதிர்பார்த்திருந்தவரானபடியால் அன்புடனேற்று "புதியவனல்லன் என் பிள்ளை யெனக்குக் கிடைத்தது" என்று அருமை பாராட்டினர். இவரும் தமதாசிரியரிடத்து எல்லா விடயங்களையும் உபந்நியாச வாயிலாகத்தினின்று விளங்கினர். இவரை அவர் பலவகையிலும் சோதித்து இளையபிள்ளையார் உபாசனை சித்திக்கச்செய்தார். ஆசிரியர் கருணைப் பிரதாபத்தி வருத்து இவரை வல்லத் தேர்ச்சி செய்வித்து தமது மாணாக்கருட் சிறந்தவராக்கினர்.

பிறகு இவர் தமது குலகுருவாகிய வயலில்லா நெல்லூர் - இரத்தினகுருக்களிடம், சமயம், விசேடம், நிருவாண முதலிய சைவ தீக்ஷைகளை முறையேபெற்று சைவசித்தாந்தத்தை மேற்கொண்டொழுகினர். இவர் "அன்பிற்பெருகிய சிறப்பின் மிக்க அருச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று தேவர்பிரான் தமது ஆளுடைய நம்பிகளுக்கு அணைக்கிரகித்ததைக் கடைப்பிடித்து, சிவபெருமானைப் பல செந்தமிழ்ப் பாக்களாற்றுதித்துவந்தனர்.

இவர் செய்கை இங்ஙனமாக, மைசூர் இராஜ்ஜியத்தைச் சார்ந்த பெங்களூரில், திருக்கலசை-கிருஷ்ணசாமி முதலியாரென்பவருக்குந் தவப்பேறான "சிரங்கம்மாள்" என்னும் கற்பிற்கரசியைக் குலகுருவின் சகாயத்தால் மணமுடித்து பெங்களூரிலேயே சிலகாலம் வாசஞ் செய்தார். அடுத்தடுத்து சென்னைக்கு வந்து ஆசிரியரை வழிபட்டு, தன் குடும்பத்தாரையும் பாதுகாத்துவந்தார். அக்காலத்தில் தமது குருமூர்த்தி பத்திப் போன்பிற் றதும்பிப் பொறித்நுவைத்த அருந்தமிழ்ப்பாக்களை வலாற்றுடன் பரிபாகருக்கு உபயோகமாம்படி அச்சிட்டு வெளியிட்டனர்.

இதுகாரணமாக அக்காலத்தில் சென்னையில் விக்வாஞ்சி வதிந்த யாழ்பாணம் கலலூர் ஆறுமுகநாவலரவர்கள் அபிமானிகளுக்கும் இராமலிங்கசுவாமிகள் அபிமானிகளுக்கும் பல்வகைய வாதம் பொருமையால் நடக்க முடிவில் "போலி யருட்பா மறுப்பு" என்னும் சூசகர்க்கப் பத்திரிகைவெளிவர, அதற்கு மறுப்பாக இவர் "போலியருட்பா மறுப்பென்னும் சூசகர்க்காரண்ய நாசமறாபரசு" என்னும் புத்தகமெழுதி உண்மை யாவரு மறியும்படி செய்தனர். அதோடு அவ்வாதம் முற்றுப்பெற்றது. பிறகு திருவருட்பிரகாசவள்ளலார் பார்வதிபுரமென்னும் வடலூரிலிருந்தபொழுது இவரும் தமது குடும்பத்துடன் ஆசிரிய பணிவிடை செய்கையில், இவரது செந்தமிழ்ப்பாக்

களை அவர் வாவழைத்து பல வித்வான்கள், பண்டிதர்கள், அறிவோர், அறவோர் சமரசவேத சன்மார்க்கசங்க வித்வான்கள் முதலியோருடன் ஆராய்ந்து அச்சங்கத்து மகத்துக்கள் முன்னிலையில் இவருக்கு "உபயகலாநிதிப் பெரும்புலவர்" என்று தீர்மானம் பிட்டுக் களித்தனர். இதற்கு வேண்டிய ஆதாரம் அடியேனிடம் தற்காலத் திலுள்ளது.

மேல்வருங் கருமம் நோக்கி வள்ளலார் இந்நிலவுலகத்தாரது ஊனக்கண் ணுக் கெட்டாது மறைய, இவர், தமது மூத்த பத்தினியும் எனது பெரிய அன்னையுமாகிய சிரங்கம்மாள் முதலியர், சிவபத மடைய அவ்விடமிருந்து பாலப்பருவத்தினராயிருந்த தமது மூத்த குமாரரும், எனது அருமைத்தமையனருமாகிய தொ.வே. திருநாகேஸ் வர முதலியாரென்பவரைக் கைப்பிடித்து, நடுவில் பல விடுக்கண்களை யனுபவித்து சென்னைவந்து சேர்ந்தார், தமது இளைய சகோதரது வஞ்சனைக் காற்றது அவரை விட்டுவிலகி, பாளையம் - சோமசுந்தர செட்டியார், நாகை-கண்ணு-இராமலிங்கம் பிள்ளை, கூடலூர் - கனக சபைபிள்ளை முதலிய ஆன்ம நேயர்கள் ஆதரவில் சென்னை மூர்த்தி யாழ்ப்பேட்டையிலும், தண்டையார்ப்பேட்டையிலும் வசித்து வந்தார். அச்சமயத்தில் தூண்டி-அரங்கநாத முதலியார், எம்-ஏ., என்பவர் நேசம் நேரிட, அவரும், சோமசுந்தர செட்டியாரும் மற்றவர் களும் இவரை சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் தமிழ்ப் பண்டித ராம்படி செய்தார்கள். அக்காலேஜில் தமிழ்ப்பண்டிதராக பத்துவருட காலம் தமிழ்ப்புலமை நடாத்தி, தமது இளைய மாமனாராகிய திருக் கலைசை-சப்பராயமுதலியார் என்பவரின் துவிதிய குமாரத்தியாகிய சொர்ணம்மாள் என்பவரை மறுமண முடித்து அடியேன் என்று 1889வது பிப்ரவரிமீ 22உக்குச் சரியான சர்வதாரிவரு மாசிமீ 12உ சுக்கிரவாரதினம் தனது ஆன்மார்த்தமாகிய படைப்பக்கராதரது திரு வடி நீழலைச் சேர்ந்தனர். இவரியற்றியுள்ள செய்யுள்நடை, வசன நடை நூல்கள் பலவுள. அவற்றை ஒவ்வொன்றாக இனி வெளியிட உத்தேசங்கொண்டுள்ளேன். அவற்றில் முக்கியமானவைகளினிட்ட வசன வியாசன்றும் சேர்த்திருக்கின்றனன். இவரது இரண்டாம் புதல்வி யாரும் ஜீவந்தராயடியேனிடமிருக்கின்றனர். இவரது மூத்த குமா ரரும் எனதருமைத் தமையனாருமாகிய தொ. வே. திருநாகேஸ்வர முதலியார் அடியனைக்காதாரமாகவும் ஆறுகலாகவும் சிரஞ்சீவி தொ. வே. தி. இராமலிங்கமென்னும் ஒரு கன்மணியை வைத்து 1912வது ஜனவரிமீ 8உ சோமவாரதினம் எம்மிடமுபதன் திருவடி நீழலைச் சேர்ந்தனர். இவருடைய இரண்டாம் புதல்வியாரும் அடியேனிட மிருக்கின்றனர். இவ்வாசிரியரின் சரித்திர விரிவை பின்னர் கனிப்புத் தகமாக அச்சிட்டு வெளிப்படுத்தப்படும். சுபம்! சுபம்!!

இங்ஙனம்:

தொழுவூர் வே. செங்கல்வராயன்.

கணபதிதுணை.

இந்நூலாசிரியரியற்றிய நூல்கள்.

வசனநடை.

பராசரஸ்மிருதி ஆசாரகாண்டம்.
சங்கரவிஜயம்.
திருவெண்காடர் சரித்திரம்.
பெரியபுராண வசனம்.
மார்க்கண்டேய புராணம்.
வேளாண்மை பியல்.
யோகவித்தையைப்பற்றி யுபந்நியாசம்
விநாயகசதுர்த்தி விரதசங்கிரகம்.

செய்யுணடை.

மூத்தபிள்ளையார்.

துவாதசநாம சங்கீர்த்தனம்.
திருப்பாதப்புகழ்ச்சிமாலை.
சரணதசகம்.
மங்களம்.
பஞ்சரத்தினம்.

இளையபிள்ளையார்.

ஷண்முகசரணஷ்டகம்.
திருப்பதத்திருப்புகழ்மாலை.
திருக்கழற்பல்லாண்டுமாலை.
சித்திரயமகவந்தாதி.
திருத்தணிகைச்சித்திரமாலை.
திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி.
" வெண்பாவந்தாதி.
திருத்தணிகை நான்மணிமாலை.
" மும்மணிக்கோவை.
" இரட்டைமணிமாலை.
" கலம்பகம்.
திருப்போரூர் கலிவிண்ணப்பம்.
தனிப் பதிகங்கள்.

சிவபெருமான்.

சிவாட்டோத்தரசதநாமமஞ்சரி.
சீபாதத்திருப்புகழ்மாலை.
திருவடித் திருப்புகழ்மாலை.
திருப்பதி யழகாயிரத்தந்தாதி.
அடைக்கலமாலை.
அபயமாலை.
சிறுவிண்ணப்பமாலை.
சரணகதிமாலை.
அம்பலக்குறம்.
கையடைமாலை.
சந்நிதிமுறையீட்டுமாலை.
ஓலமாலை.
தைநியசரணியமாலை.
கையறவுமாலை.
அபராதக்ஷமிப்புமாலை.
இணைமணிமாலை.
அருணைமபாராயணத்திரட்டு.
மகிழ்மாக்கலம்பகம்.

வடிவுடையம்மையார் சௌந்தரியாஷ்டகம்.

திருவருட்பிரகாசனர் சந்நிதிமுறை.

ஆளுடையபிள்ளையார்
இரட்டைமணிமாலை.
தசகமாலை.
ஆளுடையநம்பிகள்
கலிவிண்ணப்பம்.

சிவஞானபாலயதேசிகர் மும்மணிக்கோவை.

நெஞ்சாற்றுப்படை.

ஸ்ரீநாதகுருநாதர் கலிமாலை.

திருச்சிற்றம்பலம்.

முதற்பதிப்பின் முகவுரை.

ஒப்பு மூயர்வு மில்லாத பேரின்ப வீட்டுநிலை யுண்மை யிதுவென்று, யாவர்க்கும் விளங்கும்படி காட்டவந்த குருமூர்த்தங்களுள் ஒருவராகிய இப்பட்டினத்துப் பிள்ளையார் சுமார் கூரா - வருடத்திற்கு முன், காவிரிப்பூம்பட்டினத்திலே வேளாண் குலத்திலே அவதாரம் செய்திருக்கலாம் என்று தோன்றுகின்றது.

எப்படியென்னில், இவர் செய்தருளிய கோயிற்றிருமும்மணிமாலை முதலிய பிரபந்தங்கள் பதினொராந் திருமுறையுள் நம்பியாண்டார் நம்பிகளால் சேர்க்கப்பட்ட திருப்பதிகங்களிலும், அவர்க்குப் பின்னிட்டு அவதரித்த சேக்கிழார்பெருமான் செய்தருளிய பெரிய புராணத்தினைப் பின்னிட்ட பெரியோர்கள் பன்னிரண்டாந் திருமுறையென்று அமைத்துவைத்துப் பூசித்து வருவதாலும், அச்சேக்கிழார் பெருந்தகையை மகா கவியாகிய கம்பர் திருக்கைவழக்கத்துள், '——காவலன் - மண்ணிற் கடலின் மலையிற் பெரியதென - எண்ணி யெழுதிக் கொடுத்த வேற்றக்கை" என்று துதித்திருப்பதாலும், அக்கம்பர் காலம் "எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழின் மேற் கம்பநாடன் கண்ணியவரங்கழுன்றினை கவியரங்கேற்றினனே" எனக்குறிப்பித்திருப்பதனாலு மென்றுணர்க.

இப்பட்டினத்தாரைச் செட்டியார் என்று வழங்குவதாகவே புராணத்துள்ளும் வசியர் என்று கூறப்பட்டுள்ளதே, வேளாளரென்ற தெவ்வாறெனின், வேளாளர் வசியரென்ற விவகாரம் நூல்வழக்கென்பது வேளாண்மாடியுலுள்ளோ மாம் கூறினேம். அன்றி இன்னும் அக்காவிரிப்பூம் பட்டினத்துள்ள வேளாண் செட்டிகளில் அவர் மரபினர் உள்ளாராகக் கேள்விப்படுகின்றனம், ஆதலினென்க. இவரைத் தத்துவராயர், ஒழிவிலொடுக்க நாலுடையார், தாயுமானவர், முதலிய பல பெரியோர்கள் துதித்திருக்கின்றனர்.

இலக்கணக்கொத்துடையார் தமது நூலுள் இவரையெடுத்தோதித்தாம் கூறுமிலக்கணத்துக்கு இவரிலக்கியத்தினை மேற்கோள் காட்டினர்.

இவர் சிவானுபவத்திற் சிறப்புற்றிருந்தாற்போலவே கல்வி கேள்விகளிலும், செல்வத்திலும் மிகச் சிறப்புற் றிருந்தனராக விளங்குகின்றது.

இப்பட்டினத்துப்பிள்ளையார் துறவுபூண்டு திருவண்ணுமலைக்கு வந்தங்கிருக்குநாளில் ஓர் கணிகையைக் காமுற்று வீரியத்தை வெளிப்படுத்த அதனை யவளுண்டு கருவுற்றுப் பிறந்தசேயே, திருப்புகழ் செய்தருளிய அருணகிரிநாதர் எனச் சிலர் கூறுகின்றனர். ஆயின் அதனுண்மை வெளிப்படுவது அருமையாக விருத்தலாலும் எமக்குக்

கிடைத்த முதனூல்களொன்றனுள்ளும் அக்கதையினைக் குறிப்பியா மையாலும் யாமும் அதனைவிட்டனம்.

இவரது சரித்திரங்களைத் தமிழ்ச் செய்புளாற் கூறும் புராண மொன்றும் வடமொழியாற் கூறும் புராணமொன்றும் வழங்குகின் றன. ஆனல் தமிழ்ச் செய்புளாற் கூறும் புராணம் செய்த நூலாசிரி யர் இலக்கிய விலக்கண சாத்திர சம்பிரதாயங்களிலே சிறந்த கல்வி கேள்வியுடையராகவும் சிறந்தவாக்கியாகவும் தோன்றுகின்றூர். ஆனல் அவர் செய்த புராணம் கையெழுத்துப் பிரதிகளில் பலவழுவுற்று வழ ங்கியபடி அச்சிடப்பட்டதாகக் காணுகின்றதன்றிச் சுத்தபாடதோக்கி யச்சிடப்படவில்லை யாதலின் அனேக விடங்களிற் பொருள் விளங்க வில்லை. ஆனலும் கருத்து மாத்திரம் மிகவாழமுடையதாக விருக்கின் றது. ஆதலின் அந்நூலாசிரியர் சிறந்த பெரியோரென்பதற் கையமில்லை. அவரின்னரெனப் பேரும் வரலாறும் தெரியவில்லை.

இவ்வாசிரியர் தாம் புராணஞ் செய்வதற்கு முன்னூல்பெறுது பெரியோர் வழங்கும் வாய்மொழிபற்றிக் கூறியதாக "வெண்காடர் குலவணிகரின்புகூர, மன்னிய நல்லறிஞர் சிலர் பரந்த கதை யிதைத் தொகுத்து வகுத்துக்காட்டும், என்னவெழிற் புவியூரிலிருந் தலரு றியு நெறியிசைத்துளென்யான்." எனவும், "புலிமுனியும் பதஞ் சலியு முதலான பெரியோர் தம்புகழ்ப்புராணம், இலகுபவாமவர்க்கு முனங்கதி யடைந்தோ ளவிலவரியற்புராணம், பலபல வாமவைபோல வருவனவு மவ்வண்ணம் பகரலாகும், கலிவடநூல்சொல்லி லென் சொல்லாவிடி லென்கதிக்கதைகள் கழறலாமே" எனவும் கூறினர்.

அப்புராணத்துள் அவ்வாசிரியர் கூறிய கதைபாவது, புகார்ப் பட்டினத்தை யிந்திரன் கண்ட வரலாறும், அந்தகருள் வெண்காடர் வாழ்ந்திருக்குநாளில் மருதூருடையார் சிறுவராக வந்து விலைப்படக் கொண்டு மகஞைகப் பாராட்டி வருகையில் ஞானேபதேசஞ்செய்தவர் மறைய விவர் துறவுபூண்டு திருவிசைப்பா பலபாடிச் சேந்தனைச் சிறைமீட்டு முத்திக்கு விடுத்து ஒற்றியூரடைந்து திருமேனி சிவலிங்க மாக நிறுத்நிபதுமாம். அன்றி யிப்பட்டினத்தார் அவதாரமும் இவ ரால் அருள்பெற்ற பத்திரகிரியார் சரிதமும், இவர்செய்த மான்மிய மும் கூறிலர். இவ்வாசிரியர் 'பரந்தகதை தொகுத்து" என்றதால் இன்னு மநேக கதைகள் கூறுதொழிந்ததாகக் காட்டுகின்றது.

அதற்கேற்ப அப்பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்களாற் குறிப்பிக்கின்ற கருத்திசையப் பலகதைகளைப் பெரியோர்கள் கூறு கின்றனர். அக்கதை புராணத்து ளில்லையாயினும் மறுக்கலாகாததாக விருக்கின்றது. மேலும் இந்நூலாசிரியர் வடமொழியிற் புராணமில்லை யென்றே கூறினர். ஆகவே வடமொழிக்கதை யிவர்க்குக் கிடைத்த படி யன்றுபோலும்.

இனி எமக்குக் கிடைத்த வடமொழிப் புராணமோ "பவிஷ்யோத் தர புராணத்துள் திருவிடை மருதூர் மான்மியத்தில் கூறப்பட்ட

தாகக் கூறுகின்றது. கதைகள் சற்றேறக்குறைய சாங்கமாக விருக் கின்றது. ஆயினும் அதன் சொன்னடைமுதலியன விசேடஞ் சிறந்த தாகக் காணப்படவில்லை. ஏனெனில் அடிகளார் அருளிச்செய்த திருப் பாடல்களின் கருத்தமைந்த தோத்திரங்க ளொன்றும் பொருந்த வில்லை.

இனி எமக்குக் கிடைத்த விருவகைப் புராணங்களுள்ளும் இப் பட்டினத்தடிகளுக்கு ஞானகுரியர் திருவிடைமருது ருடையாராகிய சிவபெருமானே மகவாக வந்து முடிவி லருள்செய்து மறைந்ததாகக் குறிப்பித்திருக்கின்றது. அங்ஙனமிருக்க,

"திருவேடமாகித்தருவிற்பயின்றெனைத்தேடிவந்து
பரிவாகப்பிச்சைபகருமென்றுனைப்பதம்பணிந்தேன்
கருவாகுமேதக்கடற்கரைமேவக்கருதுமென்னை
யுருவாக்கிக்கொள்ளவல்லிலாவிங்ஙனேசிவனுற்றதுவே."

என்று அவரது செய்யுளைப்பற்றிப் பட்டினத்தார் வழக்கப்படி யடியு வர் பூசைசெய்யு நிமித்தம் தேடிச் சென்றிருக்கையில் சிவபெருமான் அடியவர் கோலத்துடன் அவரது மனைக்குச்சென்று காதற்றலைசியு மோலையுங் கொடுத்து இருந்தபடி பாவனை தீக்ஷைசெய்து மறைந்த தாகச் சிலபெரியர் கூறுகின்றனர். ஆயினும் இருவகைப் புராணத் தைப்பற்றியே யாம் எழுதியிருக்கின்றனம்.

தமிழ்ப்புராணத்துள், அடிகளார் அருளிச்செய்தது என்று மூதல் குறித்திருக்கும் திருப்பாடல்களிற் சிலது கிடைக்கவில்லை. அவற்றைப் பிறைக்குறி ( ) யிட்டு அதனுள் அம்முதற்குறிப் பெ முதி யிருக்கின்றது.

இங்ஙனம் யாம் வெளிப்படுத்திய வாசகசரித்திரம் அத்தமிழ்ப் புராணக் கருத்தையுந் தழுவி வடமொழிப்புராண சரிதத்தை முற்றுங் கொண்டு அடிகளார் திருப்பாடற் சரித்திரங்களை நல்லோர்பால் விசா ரித்து எழுதியபடி யென்றுணர்க.

இன்னும் அடிகளது பல அற்புத சரிதங்களும் பாடல்களு முள் ளனவாகக் கேள்விப்படுகின்றோம் ஆதலால், உணர்ந்த பெரியோர் கள் அவற்றை அருள்செய் தனுப்புவார்களாயின் அவர்கட்கு வந்த னஞ்செய்து பெற்று இரண்டாமுறை யச்சியற்றி வெளிப்படுத்துவிப்

இப்பட்டினத்தார் மாணைக்கரும், திருப்பல்லாண்டு செய்தருளிய வரும், திருவிசைப்பா செய்தருளிய வொன்பது நாயன்மார்களுள் ஒருவருமாகிய சேந்தனர் சரித்திரம் எமக்குக் கிடைத்தவிருவகைப் புராணங்களுள் குறித்தமட்டில் வெளிப்படுத்தலாயிற்று. இன்னும் வேறு சரித்திரங்களிருக்கின் அவற்றையும், திருவிசைப்பா வருளிச் செய்த மற்றைநாயன்மார்கள் சரித்திரத்தையும் கிடைத்துள்ளவர்கள் தயவு செய்தனுப்புவர்களாயின் யாவர்க்கு முபயோகமாகும்படி வெளிப்படுத்தப்படும்.

சென்னப்பட்டணம்:
1885வது ஆகஸ்டுமீ }

தோ. வே.

உ

கணபதி துணை.

இரண்டாம் பதிப்பின் முகவுரை.

பட்டினத்துப் பிள்ளையாரென்னும் திருவெண்காட்டடிகளது சரிதம் சென்ற வியவுர ஆடிமீ த்தில் எந்தையாராகிய தொழுவூர். வேலாயுதமுதலியாரால் வடமொழியினின்றும் தமிழில் வசனரூபமாக மொழிபெயர்த்து அச்சிடப்பட்டது. அதனுல் அநேகர் அம்மகானது அற்புதசரிதத்தைத் தெளிந்துய்வாராயினர்.

அம்முதற்பதிப்பின் பிரதிகள் நாளடைவில் விலையாய் விட்டமையால் தற்காலத்திலுள்ள பல இஷ்டர்கள் மறுபதிப்பு பதிப்பிக்க வற்புறுத்தி வந்தனர். முதற்பதிப்பு அச்சிட்டு முடிந்தபிறகு திருக்கழுமல மும்மணிக்கோவையின் பிற்பாகமாகிய 18 - பாசுரங்கள் கிடைத்தன. அவர் பரிசோதிக்குங் காலையில் திருவெண்காட்டடிகளது வாக்கென்று துணிந்து மறுபதிப்பிற் சேர்க்கும்படி ஆஞ்ஞாபித்தபடி சேர்க்கப்பட்டுள்ளன. வசனநடையிலுள்ள வரும்பதங்களின் பொருளும் பாடல்களிலுள்ள வரும்பதங்களின் பொருளும் விளங்க அரும்பதவிளக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. திருவெண்காட்டடிகளது திருவருள் பெற்று திருப்பல்லாண்டு பாடியருளிய சேந்தனாரது பிரபந்தங்களும், திருவிடைமருதூரில் சிற்சோதியிற் கலந்த பத்திரகிரியாரருளிய "மெய்ஞ்ஞானப்புலம்பல்" என்னும் பிரபந்தமும் சில நண்பர்கள் விருப்பத்தின்படி சேர்க்கப்பட்டுள்ளது. திருவெண்காட்டடிகள் சரித்திரத்திற்கு அட்டவணையும் சேர்த்துள்ளேன். திருவெண்காட்டடிகளது சரித்திரத்தை வசனநடையில் முதலில் எழுதிய புலவராகிய எந்தையாரது சரித்திரம் ஒருவாறெழுதிச் சேர்த்துள்ளேன். இவரது சரித்திரம் விரிவாக பிரத்தியேகமாய்வெளியிட உத்தேசித்து சுருக்கமாக முடித்தனன். இந்நூலை கையொப்ப நேயர்களது உதவியைக்கொண்டு ஒருவாறுமுடித்தனன். அடியேனுடைய முயற்சி முற்றச்செய்த "திருவருட்பிரகாச வள்ளலா"ரது சீர்பாதங்களை வணங்கியுய்வேனுக. திருவெண்காட்டடிகள் செய்தருளிய மற்றுஞ் சிலபாடல்களுள்ளனவாக அடியேனும் கேள்விப்பட்டுள்ளேனுயினும் அவைகள் கிடைக்கப்பெற்றிலன். சேந்தனாரது சரிதமும், பத்திரகிரியாரது சரிதமும் இன்னும் விவரமாகக் கிடைக்கப்பெற்றால் வெளிப்படுத்துவேன்.

சென்னை.
1906வது டிசம்பர்மீ

தொ. வே. திருநாகேஸ்வரன்.

மூன்றும் பதிப்பின்

முகவுரை.

திருவெண்காட்டடிகளது சரிதம் சென்ற வியவருஷத்தில் எந்தை யாராகிய உபயகலாநிதிப் பேரூர்புலவர் தொழுவூர் வேலாயுதமுதலியார் அவர்களால் வடமொழியினின்றும் தமிழில் வாசகரூபமாக மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியிடப்பட்டது. பிறகு அப்பதிப்பின் பிரதி கள் நாளடைவில் விலைபாய் விட்டமையால் சென்ற 1905-ம் வரு டிசம்பர் மாதந் தொடங்கி சஞ்சிகை ரூபமாக இரண்டாம் பதிப்பு அடியேனது தமையனர் தொ. வே. திருநாகேஸ்வர முதலியாரவர்க ளது விடாமுயற்சியால் இடையே நேர்ந்த இடையூற்றின்கண்ணும் விடாமல் முற்றுப்பெற்று விலைபாய் வருகின்றது.

தற்காலம் கனகசங்கிய சென்னை யூனிவர்சிட்டி சங்கத்தார் இவ் வசன நூலினருமைபெருமைகளை பிரசிடென்ஸி காலேஜில் தமிழ்ப் பண்டிதராயிருக்கும் மகாமகோபாத்தியாயர் பிரம்மஸ்ரீ உ. வே. சுவாமி நாத ஐயரவர்கள், பச்சையப்பமுதலியார் காலேஜ் தமிழ்போதக நிபு ணர் (லெக்சரர்) ம-ா-ா-ஸ்ரீ தருமணம் - செல்வகேசவராய முதலியா ரவர்கள், எ-ஏ ஆகிய இவர்கள் மூலமாயறிந்து அதில் ஓர் பகுதியை நாளைவரும் 1913-ம் வருத்திய இண்டர மீடியேட் இன் ஆர்ட்ஸ் பரீட்சைக்கு களிகூர்ந்து நியமித்தன ராதலாலும் இரண்டாம் பதிப் பின் பிரதிகளும் சொற்பமாக யிருக்கின்றமையாலும் மூன்றும்ப திப்பு வெளிவரலாயிற்று. இதை யுத்தேசித்தே சரிதபாகத்தை மாத்திரம் வெளியிடத் தீர்மானித்து சென்றவருஷம் எனது தமையனரால் துவ க்கப்பட்டுப் பிறகு அவருக்கு நேர்ந்த மிகவும் அபாயகரமான வியாதி யின் உபாதையால் முடிவுபெறாமல் நின்றுவிட்டது. பின்பு சென்ற ஜனவரிமீ எனது தமையனர் காலமாய் விட்டமையாலும் இடையில் எனக்கு நேர்ந்த பலகுடும்ப வியவகாரங்களினாலும் சற்றுத்தாழ்ந்து எனது பிரியநண்பரும் ரிப்பன்பிரஸ் சொந்தக்காரருமாகிய ம-ா-ா-ஸ்ரீ சிவசங்கரசெட்டியாரவர்களது நன்முயற்சியினாலும் ஒருவாறு பூர்த்தி செய்தனன்.

இது விரைவில் முடிக்க நேர்ந்தமையால் இதன்கண் பொதிந் திருக்கும் பிழைகளைப் பெரியோர்களாயினோர் அன்புகூர்ந்து பொறு ப்பதுடன் மற்றும் குறைப்படியாதாயினு மிருப்பின் அடியனுக்குத் தையுடன் தெரிவிப்பார்களென்று கோறுகின்றனன். மறுபதிப்பு வெளியிட நேரிடின் சகலமும் சீர்திருத்தப்படும். இப்பதிப்பை ஒரு வாறு முற்றச்செய்தனன். அடியேனது முயற்சி முற்றச்செய்த தயா பர மூர்த்தியாகிய சற்குரு ஸ்ரீவருட்பிரகாச வள்ளலா ரென்னும் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளது சீர்பாதங்களை வணங்கி யுய்வோனாக.

சென்னை: }

[illegible] சுந்தரம்பிள்ளை.

உ

சிவமயம்.

சுணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப் பிள்ளையார் என்னு வழங்கும்

திருவெண்காடர் சரித்திரம்.

வாழ்த்து.

பிறவியெனக்கரும் பிணிப்பொற்றையும்
உறவினைக்காணும்வெறுவியசுரமும்
வெருவியவீடுமேவருவபாவின்
அருட்புணைகெழீஇயவலமோம்புபு
மடனிகுழலுமாகவைத்தடத்துறீஇ
யிடரளற்றுப்பாக்கினியழுக்கட்
கடமியலொற்றைக்கொம்பரூன்றுபவே
தெறுபுலவேடர்கறுவுகனியவஞ்சுபு
குறவிதோண்மணந்தவேல்விடலேவெண்டபவே

அதாவன்று,

பொதியிற்பொதிந்துமறையின்மணந்து
கண்டமிழ்சுவைத்துவையநீடுப்ந்த
சுவடுபதமிடற்றுக்கவடுபலபோக்கிய
மாவடியிருந்தசெவியலமுலை
உண்டுளங்குளிர்ந்துதொண்டகநிரம்ப
வாடாவார்வத்துமாண்பறம்பூத்த
பைங்கொடியடிநிழல்பற்றித்தொண்டத்

தொகைக்குடிசுற்றஞ்சூழ்பவாழியரோ
அருட்பிரகாசனன்பர்வாழியரோ
வாழியர்நலனேவாழியர்நிலனே
வாழியர்மறையேவாழியர்முறையே.

ஆதிநடுவந்தமிலாவுண்மையனேப்பராபரனேபனேத்துந்தாங்கும்
சோதியைத்தாக்கற்றிருந்ததூயனேமாயாதசுகவாரிதன்னே
யேதிலர்முப்புரம்பொடித்தவிறையவனேயிச்சையெலாமிசையநல்கும்
மாதியலும்பாதியனேமணிமன்றமுடையானேமனத்துள்வைப்பாம் (க)

திருமணக்குமம்புயத்துத்தீர்த்தரிருவருந்தெய்வத்
தருமணக்குநிழலரசுமுதலவருந்தனிவழுத்தக்
கருமணக்காகெறியளிக்குங்கடக்களிற்றைக்கைதொழுது
மருமணக்கும்பட்டினத்துவள்ளலார்கதையுரைப்பாம். (உ)

பாயிரம்.

முன்பொருவரிக்கதையைமுன்னூலிற்பெறுதறவோர்மொழியுமந்த,
வின்புகல்கொண்டுனைத்தனமென் றியற்றமிழ்ப்பாவதனுலேயினைசத்தா
ரன்றே,பின்பினியபவுடிகோத்தரத்தினரனடியார்கள்பெருமைக்கூற்றி,
னன்புபெறச்சொலக்கேட்டகிருட்டிணராந்தனவனருண்மாணைக்கன். (ங)

முதனிலைக்கேமுடிவுநிலைமுற்றுணர்ந்துகடைப்பிடித்துமுயல்வோ
ன்ற, விதயனவன்சிவானந்ததேவன்முதற்பெரியோருமீசன்ருளிற், சித
வலறுமன்பினருணசலன்சேய்சண்முகனுஞ்செயல்வலானும், கதைபுரி
யவடசொல்லிச்சந்தமிழினமைவித்தல்கடனென்றுத. (ச)

ஓகையானுயர்தவத்துவேங்கடாசலப்பெயரோனுதவுமைந்தன்
நாகையான்செயலெல்லாமின்னுயிர்கட்கிதமெனவேநயந்தான்மாறி
லீகையான்றவர்குறட்கிலக்கியந்தேர்நன்னெஞ்சனியல்பார்ஞான
வாகையானில்லிருந்தும்பற்றில்லான்கங்கைகுலமகிழவந்தான். (ஞ)

கான்பெற்ற குவலயந்தார்க் கண்ணியானிராமலிங்கன் கண்ணன்
வைப்பிற், றான்பெற்றசெல்வமெல்லாந்தக்கார்க்கேயெனுந்தகையான்
சாற்றுகீது, வான்பெற்றபெரும்பேறுமண்ணவர்க்காம்படியென்னமதித்
துநானும், ஊன்பெற்றவுடல்பெற்ற பேறென்னவாசகத்தினுலைக்க
லுற்றேறன். (ட)

மலச்செருக்கிங்கறுத்தெம்மைவாழ்விக்கும்வெண்காடர்
நலச்செருக்கினின்சரிதநாவுரைக்கும்படிதுணிந்தேன்
புலச்செருக்குப்புறந்தந்தேன்புரிதவமும்பொருளில்லான்
குலச்செருக்குங்கொடைச்செருக்கும்போலுமாங்குவலயத்தே. (எ)

நைமிசாரணியத்திறம்.

தெய்வத்தமிழ்நூலின்பொருளைப்போலும் விசாலமாய் அந்நூல் கலைக்கற்ற பெரியோர்கள் புகழ்போலுயர்ந்து, அவர்கள் நற்குணம் போற் றழைத்துத் தண்ணளியோடு சாந்தமணம்வீசி, உள்ளம்போல மலர்ந்த பெருமையை யுடையதாகிய ஸ்ரீ நைமிசாரணியத்தில் வாசஞ் செய்கின்றவர்களும் தவஞ்சிறந்து கல்வி கேள்விகளால் நிறைந்தவர் களுமாகிய முனிவர்கள், சகல சாத்திரங்களையும் ஐயந்திரிபற நன்கு யாராய்ந்து சைவசித்தாந்த முடிபுகளெல்லாவற்றையு முற்று முணர்ந்து புராணங்க ளெல்லாவற்றையும் உள்ளிரகசியக் கருத்தோடு அள விட்டறிந்த ஸ்ரீ வியாசமுனிவர் மாணைக்காராகிய சூதமுனிவர் வரக்கண் டெதிர் சென்று பணிந் துபசரித்து அழைத்து வந்து இருக்கச்செய்து அருச்சித்துத் தாமனைவரும் சூழ விருந்து, அவனை நோக்கி, கவலைக் கடலுக் கொருகட்டுமரம்போல வெமக்குக் கிடைத்த பெருங்கருணை வள்ளலாகிய ஐயரே! இதுவரையில் சித்தசாந்தம் பிறக்கும்படி தேவ ரீரிடத்து அனேகமாயிரந் தெய்வக்கதைகள் கேட்டனம் ஆயினும் அவைகள் தேவரீருடைய வாக்கினின்றும் வரும் சொல்லமுதத்தோடு கூடி மிகுந்த சுவையுடையதா யிருந்தபடியால் இன்னும் கேட்டல் வேண்டுமென்னும் ஆசை வெள்ளம் கரை கடந்து பெருகுவதே யல் லாமல் இவ்வளவிற் போதுமென்னுந் திருத்தி பிறந்த தில்லை. பழகுந் தோறும் நல்லவர்களுடைய நட்பு எவ்வாறு இனிப்பைத்தருமோ அவ் வாறு இனிக்கின்றது. ஒருவன் இவ்வுலகத்துள்ளே பெறத்தக்க செல் வம் எல்லாவற்றுள்ளுஞ் சிறந்தது செவிச்செல்வமாகிய கேள்வியே யன்றோ? அக்கேள்வியை மாத்திரம் தேவரீரை யொத்த பெரியோர்க ளிடத்தில் கேட்கப்பெற்றால் தூலமாகிய விவ்வுடம்பை நிலை நிறுத்தும் படி கொள்ளுகின்ற வேறு ஆகாரமும் வேண்டுமோ. இக்கேள்வியாகிய செவி யுணவு பெற்றவர்கள் இவ்வுலகத்திற்றானே அவி யுணவு பெற்ற தேவர்களோ டொப்பவர்களே. கல்வி யொரு சிறிதும் கற்றறியா தவனுனுலும் ஒருவன் நல்லோர்களாலே நற்கேள்வி கேட்டிருப்பா

ஞலல் அது அவனுக்கு நேரிடும் ஆபத்துக்கிடமான யெல்லாச் சோர்வுகளையும் ஒழித்துவிடுமே. தேவரீரைபொருத்த பெரியோர்கள் வாயினின்றும் வருஞ்சொற்கள், வழக்கு நிலத்தில் நடப்பவர்களுக்கு ஊன்றுகோல் உதவுவதுபோலும் இவ்வுலக வியல்பி லொழுகும் எங் கட்குந் தளர்ச்சி வாராது தாங்குந் தருமுடைய வாமன்றே? "தெவி யிற்சுவையுணரா வாயுணவின்மாக்கள், அவியினிடம் வாழினுமென்" என்று பெரியோர் கூறினர். கேள்வி உருசியறியாமல் வாய் உருசி அறிந்து பிழைத்திருப்பதினும் சாவதே நலம். தேவரிடத்துப் பல புராணக்கேள்விகள் அதிக நுட்பமாகக் கேட்டிருப்பதால் எங்களை யறியாமலே எங்களிடத்து உண்டாயிருந்த கல்விச்செருக்கு, தகைச் செருக்குமுதலிய வெல்லாம் ஒழிந்தேபோய் விட்டது. நல்ல கேள்விக ளால் மிகவுந் தெளிவுக்கப்பட்ட காதுடைய நாங்கள், "பிழைத்தவரைத் தும் பேதமை சொல்லா பிழைத்தவரைத், தீண்டிய கேள்வியவர்." என்ற மூன்றோர்கள் விதியை அனுபவமாகக் கண்டறிந்திருக்கின்றமை யால் "எனைத்தானு நல்லவைகேட்க வினைத்தானும், ஆன்ற பெருமைதரும்" என்னும் ஆப்தவாக்கியத்தைச் சிந்தித்து, இப்போது தேவரிருக்குச் சிறிது வருத்தங்கொடுக்க வடன்பட்டனம். அனல் அது எங்கள் மட்டிலே, பன்றி பிவ்வுலகத்துள்ள மக்கட் பிறப்பை யுடையவர்கள் யாவர்க்கும் பெருங் கன்மை விளைக்குந்தன்மையால் கடாவுதித்து தேவரீர் அந்த சரமத்தை அங்கீகரித்துக்கொள்ளவேண் டும். அதாவது, மூன்று சுதரிசனருடைய இன்ப சரித்திரத்தைச் சொல்லி முடித்தின்னர், சிவனுக்கிரசத்தால் பரிபாகியாயிருந்த சி சகனன குபேரன் இப்பூவுலகத்திற் றென்னிலைக் காவிரிப்பூம் பட்டி னத்தில் வசியனைகப்பிறந்து, கடலின மகவாகப்பிறந்து வாழ்ந்திருந்து சிவஞானியாய்ச்சித்தி முத்திகளை யடைந்ததாகத் திருவளம்பற்றினீர். அச்சரித்திரத்தை விரிவா லெங்கட்கு விளங்கச்சொல்லி யருளவேண்டு மென்று பிரார்த்தித்து விண்ணப்பித்தனர்.

அதுகேட்ட சூதமுனிவர் பரவச முடையவராய்க் கண்களில் ஆனந்த நீர்பெருக, உடம்பு புளகம்போர்ப்ப, சிறிதுநேரங் கம்பித்தடை தியான யோகத்திருந்து, ஐயா முனிவர்களே! நீங்கள் செயற்கரிய காரியங்களைச் செய்துமுடித்து நல்ல பக்குவம் பழுத்த சந்தேகமு முடையவர்கள் ஆதலால் இக்கதையைக்கேட்க விருப்பமுற்றீர்கள்.

சாதுக்களுக் கன்றிச் சிவஞானிகள் கதையைக் கேட்கும் விருப்பம் ஏனையர்க்குண்டாகாது. வண்டும், ஈயும் ஆறுகாலுடைய சிறு பறவை யென்று பெயராலும் அவயவத்தாலும் ஒருவாறு ஒத்திருந்தாலும் வண்டு வாசனையுள்ள மதுரமான பூக்களின் தேனையே விரும்பித் தேடிச் சென்று உண்ணும்; ஈயோவெனில் நாற்றமுடைய அழுகற் புண்ணின் சீயையே விரும்பி புண்ணும். ஆதலால் உங்கள் தரத்திற் கேற்ற கதையையே கேட்க விருப்பமுற்றீர்கள். இதை யுங்கட்குச் சொல்லுதலால் நானும் புனிதனுய் மெய்ப்பயன் பெற்றவனேன் என்று இனிய வார்த்தைகூறிப் பின்பு தமது ஆசிரியனைத் தியானித்து விடைபெற்று முனிவர்கட்கு அத்தெய்வச் சரிதத்தினைக்கூறத்தொடங் கினர்.

கேளும், அந்தணர்களே! இக்கதை முன்னொரு காலத்தில் சாமவேத சாகையைச்சார்ந்த சாந்தோக்கியமுதலிய வைதிடதங்களால் சுத்த ஞானியென்று புகழ்ந்தெடுத்து ஓதப்பட்ட சிவஞான முனிவரா கிய ஸ்ரீ உபமன்னியபகவான், தன் மாணாக்கர்களாகிய பல முனிவர்க ளுக்கும் கூறியதாக பௌஷ்யோத்ர புராணத்திற் கூறப்பட்டுள்ளது.

எவ்வாறெனில் தன்னை யடைந்தவர் யாவர்க்கும் நிர்ப்பயத்தை யும், நிக்கராசத்தையும், நோயில்லாமையையும், இஷ்டசித்தியையும், நித்திய சுகத்தையும் கொடுத்து ஊழிக்காலத்தி லுலகமெல்லா மழிந்தா லுந் தன் தலைவர்போல அழிவற்றோங்குந் சத்தியனான சொரூபமா கிய ஸ்ரீ மகாதேவியின் சாரலிலே புகழோனப் பாடி தொழுமை தோலைந்தித் தயனிற்குளிர்ந்து ஆசாரமொப்பப்பூத்து உதாரமென் னத் காய்த்துப் பழுத்துசெல்வன் சொழித்த இன்பமயமான வனமொன் றுண்டு. அதில் கற்றுணர்ந்தோரது அடக்கம்போலும் விளங்கும் பார்வதியே நதியே ஒழுக்கங் கல்வி யெல்லாம் வடிவெடுத்தாற்போலும் விளங்கிய படிதமுடையவர்களாய்க்கேட்டல், சிந்தித்தல், தெளித லென்னுங்கடன் பூண்ட பல முனிவர்களாகிய சீடர்கள் புடைசூழ ஸ்ரீமன் உபமன்னிய பகவான் எழுந்தருளியிருக்கும்போது, அம்மாண வர்களாகிய முனிவர்கள் எழுந்து வணங்கி நின்று, ஓ! வியாக்கிரபாத முனி புத்திரரே! சிவபெருமானரால் அனுக்கிரகிக்கப்பட்ட திருப் பாற்கடலுண்ட செல்வரே! வேதாகமங்களின் எல்லை கண்ட வெம்

பெருமானே! ஸ்ரீ கண்ணனூர் சிவதீக்ஷாகுருவே! அடியோங்கள் உலகியலும் அருளியலும் ஒருமிக்க வுணர்ந்து உய்யும்படி ஸ்ரீ பத்தபரமேசுரர்களென்று வேதாகமங்களால் புகழப்பட்ட சாதுக்களாகிய சிவனடியார்கள் சரித்திரங்களைச்சொல்லி யருளவேண்டுமென்று விண்ணப்பித்தனர்கள்.

அப்போது ஞானசாரியராகிய ஸ்ரீ உபமன்னிய பகவான் நெஞ்சங்குளிர்ந்து, உடல்பூரித்து, என்பு நெக்குவிட்டு, அன்பினுருகிப் பெருகி ஆராமைமேலிடக் குழைந்து குழைந்து பரவசராய்த்தம்பித்து நின்று, தெளிந்து கம்பிக்கச் சொல்லுவாராயினர். ஐயா! முனிவர்களே! எல்லாமுடைய விறைவராகிய சிவபெருமான் திவ்விய சரித்திரம்போலவே, அச்சிவமுணர்ந்த பெரியோர்களாகிய அடியார்களது அற்புதசரித்திரமும் அளவிடுதற் கரியதென்று இன்னமும் வேதாகமங்களே முறையிடுகின்றனவாலல், நான் என்னென்று அறிந்து அளவிட்டுச் சொல்லப்போகின்றேன் உடம்பெல்லா நாவாகவும், ஊழிக்காலமெல்லா நாளாகவும் கொண்டு இவ்வுலகமுழுவதும் ஒருங்கூடிச் சிறிது சிறிதே எடுத்துக்கூறிச் சென்றாலும் முற்று முடியாதே!! நாம் என்செய்யக்கடவோம். ஆயினும் “ கடலோடிப் பொருள்தேடினேன் ” “ மலைகடந்து மருந்துதந்தேன் ” என்பாரைப்போல, ஆற்றலுக்குத்தக்கபடி சிறிதுகூறுவேன். கேட்பீர்களாக, ஓ! அந்தணர்களே! உணர்ச்சிதேய வரும் பிறப்பு வேதனைக்கும், பொறிபுலன் மனமுதலிய வெல்லாங்கலங்கி யுடல்சோர வரும் மரண வேதனைக்கும் மிகப்பயந்து, அவ்விரண்டையு மொருமிக்கத் தொலைக்கும் வழி யெதுவென்று தலையிற்றீப்பற்ற நீரைத்தேடிச் செல்லுவோனைப்போலுந் தேடிச் செல்லுந் தேட்டமுடைய தீவரர்களாகிய வுங்கட்குச் சொல்லத்தக்கதொரு கதையுள்ளது ; அது சுத்த மந்தனையும் அதிசீக்கிரத்தில் தீவரமாக்கிப் பக்குவம் வருவித்துப் பிறவிநோய் நீக்கி அமுத நிலையாகிய முத்தி சித்திகளைத் தரத்தக்கது ; கேட்டவர்கள் யாரையும் மஹா புனிதராக்க வல்லது; சாவாநிலைக்கு வழிகாட்டியாயுள்ளது; சோகமோக மயக்கங்களை நாசஞ்செய்வது ; அஞ்ஞானக்காட்டுக்குப் பெருந்தீயாயுள்ளது; ஞானமுதமழைபோல்வது; பேரின்பப்பிரவாஹமாயிருப்பது; எவ்வகைப்பட்ட பயத்தையு மொழிக்கும் நற்றுணையாவது; நினைக்க நினைக்க நெஞ்சுருகச்சுவைப்பது! சொல்லத்

சொல்ல நாவினிற்றேனூறுவது ; கேட்கக் கேட்கக் கிளர்ச்சியாய்த் தைரியத்தை விளைப்பது ; தருமங்களுக்கெல்லாம் நிதிகூபம் போன்றது; செல்வங்களுக்கெல்லாம் காரணமாயுள்ளது ; தேடுவார் தேடத் தக்க பொருளிதுவெனக்காட்டும் தீபமானது ; முன் சைவாசிரியராகிய ஸ்ரீ நந்தியடிகள் அருள்பெற்ற சனற்குமாரர் வழியில் வழங்கியது;சுவேதாரணியர்சரித்திரம் என்னும் திருவெண்காட்டடிகளுடைய திருக்கதை இதனைமற்றக்கதைகள்போல நினையாது உள்ளுன்றிச் சிந்தித்தறியவேண்டும். யாவர்க்கு மங்கலமுண்டாகவென்று சொல்லலாயினர்.

சிவபெருமான் திருவுலா வண்ணம்.

ஐயா முனிவர்களே ! முன்னொருகற்பத்தில் புண்ணியமேலீட்டாற் குபேரபதவியைப்பெற்றிருந்த வொருவர், கீழ்ப்போன சன்மங்களில் சரியை, கிரியை யென்னும் இரண்டுபாதங்களையும் அனுட்டித்து முறையே தாதமார்க்கம், சற்புத்திரமார்க்கங்களைக் கடந்து பரிபாகியாய் மேல்யோகபாதத்தை அனுட்டித்துச் சகமார்க்கமடைந்ததால் சிவனுடைய தோழனென்று உலகுபுகழச் சிவபெருமானிடத்து அன்பும் நண்பும் பெருக வாழ்ந்திருக்குங் காலத்தில் ஒருநாள் ஸ்ரீ கைலாசத்திற்குச் சிவதரிசனஞ்செய்யும்படி சென்றிருந்தார். அப்போது அங்கே, சர்வகாரணராகிய சிவபெருமான் மேல்நடக்குங் கருமத்தால் தாங்கொண்ட சகளகோலத்திற்கு ஏற்க; உலகில், இலீலாவிலாசமாக உலாவரும்படி திருவுள்ளத்தில் அருளிச்சைகொண்டு அபினயித்து, உலகமாதாவாகிய மஹாதேவியாருடன் கூடி, இடபாரூடராய் ஸ்ரீ கணபதி, முருகப்பிள்ளையார், வீரபத்திரர், கூர்மாண்டர், ஆடகேசுரர், காலாக்கினி ருத்திரர், ஸ்ரீநந்தியடிகள், பிருங்கிமுனிவர், பிங்கிருடி, குண்டோதரர், கும்போதரர், பானுகம்பர், சங்குகன்னர்முதலிய பிரமதகணாதீசுவரர்களெல்லாம் ஜயஜயவென்று புகழ்ந்து சேவித்துவர, கைலைத் திருவோலக்கம் தரிசிக்கவந்திருந்த பிரமதேவர், விஷ்ணு, இந்திரன், ஆதித்தர், வசுக்கள், மருத்துவர், உருத்திரர், திக்குப்பாலகர், முதலிய தேவர்களும், அகத்தியர், கதீசி, பிருகு, மார்க்கண்டர், வசிட்டர், அங்கிரா, பரத்துவாசர் முதலிய முனிவர்களும், அரக்கர், இராக்கதர், கருடர், காந்தருவர், சித்தர், வித்தியாதரர், இயக்கர், கிம்புருடர் முதலிய கணங்களும் புடைசூழ்ந்து ஹர!! ஹர:!! வென்று

போற்றுதல் செய்யத் தமது அன்பின்மூழாகிய குபேரனும் பிரியா நேயத்திற் றொடர எழுந்தருளி வருகையில், வழிக்கணுள்ள ஸ்ரீ இமயம், மந்தரம், பசுபதீச்சரம், கேதாரம், காசி, ஸ்ரீ சைலம், காளத்தி, வடவனம், காஞ்சி, அருணசலம், விருத்தகிரி முதலிய மஹா க்ஷேத்திரங்களின் விபவங்களைக் கடாக்ஷித்து, எமது பிதாவாகிய விபாக்கிரபாதர் பேரன்புசெய்து பூசித்திருந்து நித்தந் திருநடனங் கும்பிடுங் காரணத்தாற் பெரும்பற்றப்புலியூரென்னுஞ் காரண நாமம் பெற்று விளங்கும் ஸ்ரீ சிதம்பர மஹாக்ஷேத்திரத்தின் மங்கலங்களை யனுக்கிரகித்துச் சிதாகாச ரஹசியத்தை வெளிப்படுத்தும் திருச்சிற்றம்பலம் என்னும் தெய்வத்தானத்துள் வீற்றிருந்தருளி யிருந்தார்.

அந்த நாளில் தனதராகிய தோழர், பெருமானுடையடைந்து போக்கு வரவு ஒன்றுமில்லாத பரிபூரணப் பொருளாகிய எம்பெருமானே! ஒன்றினும் விருப்பும் வெறுப்பும் தேவரீர்க் கில்லையாயினும் அடியோங்கள் வேண்டுவதை யளித்துக் குறைமுடிப்பதே திருவருளியற்கை யாதலால் இனி மற்றைய திருப்பதிகளையுஞ் சென்று பெருமான் செய்யும் அருளப்பாட்டினைத் தரிசிக்கவென்று என்னுள்ளத்து ஓராசை யெழுகின்றதென்று விண்ணப்பித்தனர். அதுகேட்ட ஆரூடையாரும் தமது தோழனுர் குறையை முடிக்கத் திருவுளஞ்செய்து ஸ்ரீ நந்திதேவர் முதலிய பிரமதகணங்களுந் தேவர் முனிவர் முதலியாவரும் புடை சூழ்ந்து சேவித்துவரச் சிதம்பரத்து நின்றும் எழுந்தருளி ஸ்ரீ சுவேதாரணிய மென்னும் வடமொழிப் பெயரை யுடைய தாய் நினைத்தவர்கள் பாவத்தை யெல்லாம் போக்கத்தக்க திருவெண்காடென்னுந் தலத்தை யடைந்தருளினர்.

புகார்ச்சிறப்பு.

அப்போது, ஆரூடையார்பக்கலாக வரும் சகராகிய குபேரனுர், தமக்கு உத்தமசத்திநிபாதம் பிறந்து இனி ஞானசன்மார்க்கத்தை யடையும் பருவம் சமீபித்திருந்தபடியால் அத்திருவெண்காட்டருகு தேவர்க ளுலகங்களினுஞ் சிறந்த அழகு : செல்வம் வாய்ந்திருந்த காவிரிப்பூம் பட்டினத்தைப் பார்த்தார். அவ்வளவில் அது இவர் கண்ணையும் மனத்தையும் கவர்ந்து கொண்டது. ஏனெனில்; முன்னுளிலே தேவேந்திரன், தன்னுடைய தாயாகிய அதிதியானவள்

* சாயாவனமாகியதிருச்சாய்க்காட்டுக்குத் தினந்தோறும் சிவதரிசனஞ் செய்யும்பொருட்டு வருவதைக்கண்டு, அவ்வருத்த நீங்கும்படி அவ்வாலயத்தையே தன்னகரத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டிவந்து ஆலயத்தினை அடியோடு பேர்த்தெடுத்த போது, உலகெலாம்பெற்ற மாதாவாகிய பார்வதியார் புறம்போந்து "கூகூ" என்றுரைசகாட்டப் பெருமான் கண்டிந்திரனை எடுக்காதபடி தடுத்தருளி அவனுக்கும் அவனன்னைக்கும் பேரருள்செய்யப் பின்னப்பாகசாதனன் அங்கு முன்போல ஆலயப்பதிட்டை செய்யும்படி நகரமொன்றுகண்டு வேதியர் முதலிய உயர் வருணர் நால்வரையுந் தந்து வைசியர் மரபு மிகவும் தழைத்தோங்க வளம்படுத்தி, சாயாவனத்து ஸ்ரீ அழுதவண்ணப் பிராணுக்கும், "கூகூ" வென்ற காரணத்தால் வழங்கும் "கூவென்ற மென்மொழிப் பிராட்டிக்கும்" ஆலயஞ் சமைத்து, நித்தநைமித்தமுதலிய சிறப்புகளை வழுவாது மேன்மேலோங்க நடத்தித் திருப்பல்லவனீச்சர முதலிய மற்ற வாலயப் பதிட்டைத் திருப்பணிகளையு நிறைவேற்ற வருத்தனன்.

அப்பால் அந்நகரங் காலமுறையிற் றன்னின் மேம்பட்டு, அற்பு தன் கைலைப் பொற்பினில் விளங்குஞ் சைவக்கோயிலால் விளக்கமுற்ற படியோ அச்சைவக்கோயிலை விளக்கலுற்றபடியோ அறியேன், அரு மறையோதுங் கிடக்கையும், அருணூல்பயிலு மிருக்கையும், அந்தணர் வாழுமுறையுளும், ஆகுதிவழங்குந் துறைகளும், சீறம்புரியு மிடங்களும், பேரறம்புரியு மிடங்களும், தாகலம் பெருகுஞ் சாலையும், தேனலமருவுஞ் சோலையும், இருநிலம் புரக்கு மாசாண்மையையும், அவ் வாசனைப் பிரிவருமொக்கலர் பெயராச் சூழலும், ஐவகைச்சுற்றத்தினர மர்மானிலைகளும், உறுதித்துணையவர் உவந்த மாடங்களும், நிலா முற்றத்தொடு நிலை நிரைக்காலதர், பல்கணிச்சாளரம் பலபல வினைசந்தன அரசிறைமண்டபம், அமைச்சிபல் மண்டபம், மூதெறிமண்டபம், முனைறுறைமண்டபம், அத்தாணிமண்டபம், வித்தாரமண்டபம், சித்திரமண்டபம், விசித்திரமண்டபம், ஆராய்ச்சிமண்டபம், தேராயமண்டபம், பட்டிமண்டபம், குட்டிமமண்டபம், கலைபயில்மண்டபம், கழக மண்டபம், கல்விமண்டபம், செல்வமண்டபம், விருதமண்டபம், மேரதமண்டபம், சிலம்பமண்டபம், திறலறிமண்டபம், அலங்

---

* காவிரிப்பூம்பட்டினத்திற்கு முதற்பெயர் "சாயாவனம்" என்பதாம்.

காரமண்டபம், ஆசாரமண்டபம், ஆடல்மண்டபம், பாடல்மண்டபம், தேவமண்டபம், சேவல்மண்டபம் முதலிய மண்டபங்களும் அன்ன சாலை, ஆயுதசாலை, எழுத்தறிசாலை, ஏகாந்தசாலை, நாடகசாலை, பாடகசாலை, மந்திரசாலை, யந்திரசாலை, தோரணிசாலை, தோரண சாலை, வசந்தசாலை, வாகனசாலை முதலிய சாலைகளும் கணக்கறி தெற்றி, வழக்கறிதெற்றி, கூடத்தெற்றி, மாடத்தெற்றி, வாதத் தெற்றி, சீதத்தெற்றி முதலிய தெற்றிகளும், நீதிமன்றம், நியாய மன்றம், நல்லோர்மன்றம், வல்லோர்மன்ற முதலிய மன்றங்களும், தேவர்வாழ்பொது, காவலர்சேர்பொது, ஊரவர் தேர்பொது, நேர லர்பேர்பொது, கற்றவர் முதலாமற்றையர் யாரும் நித்தமும் கூடும் வித்தகப் பொதுக்களும், சதுக்கமுஞ் சந்தியும், விதப்பரு மிடங்களும், செய்குன்றுகளும், திருந்து சூளிகைகளும், கோபுர நிலைகளும், கூடமா டங்களும், நெடுந்தேர்ச் சாலையும், கடிமதயானைக்கூடமும், அடுபரிக் குதிரை மந்திரமும், பெரும்போர் மறவர் சூழலும், திருந்து படை பலபயிலும் வீரர்பாடியும், தேரோட்டுஞ் சூதரும், களிறு நடத்து மாதாரணரும், பரிசெலுத்தும் வாதுவரு முறைபு முறையுளரும், தேரோடு வீதியும், செண்டு வளித்தெருவும், வேளாண்வைசியர் தா ளாண்மைக்குடி வீறுசால்வீதியும், கூறுசால்கூலமும், ஆவணமறுகுங் காவணநிலையும், பீடிகைத்தெருவும், மாடமாளிகைகளும், பொற்கரு வூலம் பொலிமணிக்குவைகளும், சொற்பயில் கம்பலைச்சூழலும் நீழ லும், அணிபல பகல்செயும் அழகிய முன்றிலும், யவனர், சோனகர், கவணமாமக்கர், சீனர், சாளுவர், உளைநாட்டினர், பல-தீவர், வங்கா ளர், ஈழர், கொங்கணர், மாகதர், மச்சர், மிலேச்சர், வன்வடுகர், பப்ப ரர், கூர்ச்சரர், பஞ்சகவுடர், அங்கர், வங்கர், அருங்கருநாடர், குட்டு வர், குடகர், ஓட்டர், பாஞ்சாலர், முதற்பெருநாட்டினர் விதப்பல சரக்கு, வேண்டிவந்துலவும் நீண்ட பண்டசாலைகளும், சுண்ணஞ் சந் தநம் வண்ணங்கலவை, நானமான்மத நல்ல வாசங்கள், தொடுபூவிடு பூதொடலைக்கண்ணி, நறுவீவர் பச்சிலை விளைபுகைவிற்பவர், காசுத் தெருவும், பட்டிப்பருத்தி பலநிறக் கம்பலம், கட்டும் பட்டசாலியர் வீதியும், வயிரமாணிக்க மரகதம் பவளம் முத்துங்குயிற்று முழுவீதி களும், அவரை துவரை உழுந்து பயறு முதலிய முதிரையும், நெல் லும் புல்லும் வரகுந் தினையும், சாமையும் சோளமுமாதி கூலங்களை விற்கும் கூலவீதிகளும், பிட்டு முதலிய விற்கும் காழியர் வீதியும்,

அம்பர் மூதலியவிற்கும் கூவியர் வீதியும், உப்பு விற்கும் உமணர் வீதியும், சங்குவளை முதலிய அறுப்பார் வீதிகளும், கள்விற்கும் கண்ணுடையாட்டியர் வீதியும், இலை கயிறு முதலிய விற்கும் பாசவர் வீதியும், தச்சர், தட்டார், கன்னர், கருமார், சிற்பரோவியர், பற்பல தொழிலினர் வியக்கும் கலங்கள் செய்து நயக்கும் வீதிகளும், கைவினை மக்கள் வீதியும், துளக்கருவியாகிய குழலும், நரப்புக்கருவியாகிய யாழ்முதலியவு மிசைக்குங் குழலரும்பாணரும் வாழும் வீதியும், தோற்கருவியாகிய மத்தள முதலியவுந் தாளமாதியவும் கொண்டு முழக்குங் குயிலுவரும், நின்று புகழுஞ் சூதரும், இருந்து புகழும் மாகதரும், வைதாளியாடும் வைதாளியரும், நாழிகைக் கணக்கரும், சாந்திக் கூத்தாடும் கண்ணுளரும் மதங்கரும், காவற்கணிகையரும், கழகக் கூத்தியரும், அகக்கூத்தாடும் பதியிலாராகிய ஆடற் கூத்தியரும், ஏவற் பெண்களும், பரியாசகஞ் செய்தாடி நகைப்பிக்கும் வேழம்பரும், மூங்கின்மேனின்றுடம் கழாயம்பரும் பிறதொழிலரும் வாழும் வீதிகளும், பண்ட மாற்றுவார் செய்யும் ஓசை, கடலொடு மாறி யொலிக்கு மியல் புடையவாய் மதிமே காலாகக்கட்டப்பட்ட நாளங்காடியும், கண்டவர் வியந்து மயங்க நெருங்கி யிருப்பதேயன்றி, பூதமொன்று தேவேந் திரனு லேவப்பட்டு முசுகுந்தனென்னும் அரசனுக்கு வருமிடையூறு காக்கவந்து நிற்கும் அந்நாளங்காடித் தெருவிலுள்ள பீடிகையும், கரி காற் சோழன் வெற்றியின் பொருட்டு வடதிசை நோக்கிச் சென்று பரதேயமன்னனை வெற்றிகொண்ட நாளில், மனிதராலாக்கப்படாது தேவர் கம்மியனு லாக்கப்பட்டு யாவர்க்கும் வியப்பினை யுண்டாக்கு மற்புதத்தனவாகியவற்றுள் ஒன்றாகி வச்சிரநாட்டரசன் திறையாகக் கொடுத்த நிழல் பிரியாது இரவையும் பகலாக்கும் முத்துப்பந்தரும், மகதநாட்டரசன் இறையாகத்தந்த பட்டிமண்டபமும், (இது, யாமிக்க கல்வி புடைபோமென்று விருது கூறிவந்தவரை யெல்லாமளந்தறிய வல்ல வித்தியாமண்டபமாம்) அவந்திநாட்டரசன் கப்பமாகத் தந்த வாயிற்றோரணமும், (இது, பகைத்தவரை யச்சுறுத்தி நட்டவரை யாதரிக்க வல்லதாம்) உடையதா யிருக்கின்றது மன்றி, தாழிட்ட வாயிலுங் காவலுமின்றிப் பல பண்டப்பொதிகளைப் பெயர்பொறித்து விடப்பட்ட தாதலால் யாரேனுங் களவி னலவற்றைக்கொண்டு சென்றால் கருதிய விடத்துக்கு அவர்களைப் போகவொட்டாது தடுத்துத் தன் வெளியிடத்தே தானே சுழன்று கிடக்கப்பண்ணி யினியாரும்

களவென்பதனைக் கனவிலுங் கருதவொட்டாது செப்பும் வெள்ளிடை மன்றமும், கூன்குருடு செவிடுமை தொழுநோயுமுடையார் சென்று வலம்வந்து பணிந்து முழுகிலல் அச்குற்றம் நீங்கி அழகும் வலியு முடைய யாக்கையராச்க வல்லபொய்கையை யுடைய இலஞ்சிமன்ற மும், மருந்தூட்ட உண்டு மயங்கிலருரும் பித்தேறிலருரும் பேய்பிடிக்கப் பட்டாரும் நஞ்சுண்டாரும் பாம்பு கடிக்கப்பட்டாரும், பிறகாரணத் தால் அஞ்சிலருரும் வந்தடைந்து வலஞ்செய்து பணிய அவர்க்கத் துன்ப மொழிவிக்கும் ஒளிநெடுங்கல் நிற்கு மன்றமும், தவஞ் செய்வா ரைப்போல் அபினயஞ்செய்து தீயகாரியஞ் செய்யும் பாதகத் தவசிப் பூனைகளும், கணவர் நம்புமபடி யில்லற தருமம் வழுவாது நடத்து வானைப்போற்காட்டித் தீயகாரியஞ் செய்யும் வஞ்சப்பெண்டிரும், தம்மையாதரிக்கு நீதியரசரை வஞ்சிச்கும் துட்டமந்திரிகளும் தமது மனைவியை விட்டுப் பிறர் மனைவிபால் விரும்பிச் செல்லுங் தூர்த்தர் களும், பொய்சாட்சி கூறுவாரும், பயன்பெறுங் காலத்தொருவர் பக்கத் திருந்து புகழ்ந்து நின்று, பெரூத காலத்தவர் பழிதூற்றும் கோளரு மாகிய இவர்களென் னைப்பாசத்தாற் கட்டுண்டு துன்பப்படுபவர்க ளாம் என்றிருபூதம் பெருங்கூச்சலிட்டிலாவும் பூதசதுக்கமும், அர சன் செங்கோன்முறை பிறழ்ந்தாலும் நீதித்தலத்தில் நடுவுநிலை தவறி னாலும் சாகூியாக நாவிறற் சொல்லாது ஒருபாலைபிருந்து கண்ணீரு குத்துக் காட்டி யுண்மை யுணர்த்தும் பாலை மன்றமும் அமைய விள ங்கியது. அன்றியும் முத்து, பவளஞ் சங்குப்பு முதலவாகும் அலைதரு பண்டத்தாலும், மயிற்பீலியாணக்கோடு தேன் கலைமுத்த முதலிய வாகும் மலைதருபண்டத்தாலும், பலதேயந்தீவுகளிலுள்ள மணி பொன் பட்டு முதலியவான கலந்தருபண்டத்தாலும், குளிர் நன்னீர்நிலை, பல்பொருட்புதையல், பளிங்கு சீதவண்ணச் சிலையாதியாலும், நெல் கழுகு வாழை கரும்பு தெங்குபலாவாதி பயன்செறி மரக்கா முதலிய வற்றாலும், ஏனைய மருத நிலந்தருபண்டத்தாலும், கவரி வற்கலை பால் தயிர் இழுது முதலிய காடுதரு பண்டத்தாலும், குடை கண்ணுடி கருப்பூரங் கலவை வண்ணப்பொன்னுடை பணிமுதலிய நாடுதருபண் டத்தாலும் குறைவற்ற தென்பாணன் எங்நகரத்திற்கு மெப்பொரு ளாலுங் குறைவறுப்பதாயுள்ள தென்பதே தேற்றம். என்னை ? அங்கு வாழ்வார் ஒருபொருள் வேண்டி மற்றெப்புறத்தும் புகாராகவே, அது பூம்புகார்ப்பட்டினமாயது எனவும்பொருள் படுதலால்.

குபேரன் பிறக்கும்படி யிறைவர் கட்டளை பெற்றது.

இங்ஙனந் தேவரு முனிவரு மானிடரும் விழைவு கொள்ளத் தக்க அற்புத மழகு செல்வம் வாய்ந்த அக்காவிரிப்பூம்பட்டினம் முன்னம் இறைவர் வலிது சென்று ஆவணங்காட்டித் தடுத்தாண்டருளப் பெற்ற நம்பி யாரூரராகிய வன்றொண்டப் பெருந்தகையார் திருவாரூர்த் திருப்பூங்கோயிலமர்ந்த வீதிவிடங்கப் பெருமான் முதலடியெடுத்துக் கொடுத்தருளக்கொண்டு பாடியருளி வைத்த திருத்தொண்டத் தொகையாகிய கருவூலத்து அமைந்த பொன்னன்ன வெமது இயற்பகை யடிகள் திருவவதாரஞ் செய்யப்பெற்றுள்ளதாதலால், தன்னைக் கண்ட சிவதாழுராகிய குபேரனுர் மனத்தையுங் கண்ணையும் கவர்ந்தேயன்றி யவர் தன்னை விட்டுப் பிரியாவகையும் பிணித்துவிட்டது. ஆகவே அவ்வச்சிரவண்ணர் தம்மைத் தாழுமை கொண்டாண்ட தேவர் பெருமான் திருவடிகளில் பலகாலும் விழுந்து பணிந்து எழுந்து துதித்துநின்று, எம்பெருமானே ! இத்தெய்வத்திருப்பதி யாது காரணமோ யான் தன்னைவிட்டுப் பிரியாவகையோராணையைத்தாண்டி என்னை முற்றும் வசஞ்செய்துகொண்டது; திருவுள்ளமாலுல் இங்கு சிலகாலம் வசிக்கப் பெறுவேனுகவென்று விண்ணப்பஞ்செய்தார்.

அதுகேட்டருளிய நடதாண்டவரும் மேல்நடக்குங் கருமங்கருதி, அக்குபேரனை நோக்கி, ஐய, நீ போக தனுவுடையவனுப்போக பூமி வாழ்கின்றனை, இக்கருமபூமிவாழ்க்கை விரும்புவதடாதாயினும் விருப்பம் விளைந்ததால் " அவாவென்ப வெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுந்,தவாப் பிறப்பீனுமித்து" என்ற தறநூன்முடிபு; ஆகவே மானுட யாக்கையை யடைந்து இங்கு வாழ்தியென்றருளிச்செய்தனர்.

அப்போது, தனதனர், பிறத்தலுக்கஞ்சி நெஞ்சுதுணுக்குற்றுடல் பதைக்கப்பணிந்து நின்று, எம்முடையாய் ! முன்வினை யிருந்தவாறு சிறிதுமறியேன்; இங்ஙனம் விளைந்தது. இனி யென் செய்கோ ! எம் பெருமானே ! போதும்பிரிவதற்கிணையாத திருத்தொண்டினிலைமை பிரியச் செய்த பெருந்தீவினையுடையேன், பேதைமானுடப் பிறப்பினை யடைந்து செல்வத்தான் மயங்கும்வழி, தேவரீர்மேலே பான்முளை விளையாதபடி கான்முளையாகவந்து அவலமறுத்துண்மை நிலையனுக்கிரகித் தருளவேண்டுமென்று பலமுறை வணங்கினர். வணங்கிய தாழனை யவ்வாறாக

னிய பெருமாட்டியாரோடு மற்றைத் திருப்பதியாவுங் கண்டு சென்று கைலைபுக்கு வீற்றிருந்தருளினர்.

திருவெண்காடர் திருவவதாரம்.

கேட்டீர்களோ முனிவர்களே! அப்பால் அக்குபேரனுர் மூவருங் கடக்க முடியாத சிவபெருமான் றிருவாணையைக் கடப்பதற்கஞ்சி, "செந்நெலாலய செழுமுளைமீட்டுமச் - செந்நெலேலயாகி விளைதலா - லந்நெல் - வயனிறையக்காய்க்கும் வளவயலூர-மகனறிவு தந்தையறிவு" என "அறநூல்" வகுத்தலின் யாவர்பாற்சென்று சனனமடைவோ மென்ற விசாரத்துட னிருக்கையில், அத்தெய்வப்புகார்ப் பட்டினத் தொருசாரில், அந்நகர வைசியமரபி லவதரித்துப் பொன்னைத்தேடி வளர்ப்பதுபோலவே தருமம், புகழ், ஒழுக்கம், அறிவு, அன்பு, அடக் கம், சிவபத்தி, அடியார்பத்தி, குருபத்தியையும் தேடித் தொகுத்து வைத்த சரக்கறைபோல விளங்கும் சிவதேச ரென்பவர், திருமகள் விழுமுமழகும், கலைமகள் புனையும் அறிவும், மலைமகளருளும் அற மும் அமைந்து, "தெய்வந்தாழாள் கொழுநற்றொழுதெழுவாள் - பெய்யெனப்பெய்யுமழை" என்றழுதுவோர் மொழிக்கு, இலக்கிய மாகி யருந்ததியும் வணங்குங் கற்புடையராகி இருபெருங்குலமும் விளக்கவந்த ஞானகலாம்பையென்னு மனைவியாரோடும் கூடித் தேவர் பூசை, பிதிரர்கடன், விருந்துபசரித்தல், பல்லுயிரோம்பல், பழமறை பயிறல்முதலிய ஐவகைவேள்விகளும் வழுவாது நாடோறும் நடத்தி இல்லறம் புரிந்து ஓர் பெண் மகப்பேறுடையவராய் வாழ்ந்து வருங் காலத்து ஆண்மக்கட்பேறின்றி மிகவருந்தி மானிடப் பிறப்பினை யடைந்தறிவிறைச் சிறந்தோர்க்கு, இம்மை மறுமையென்னு மிருவகை யின்பமும் பயத்தலால், "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த, மக்கட்பேறல்லபிற" என்றது தமிழ் வேதம் என்று எண்ணியெண்ணி நெடுமூச்செறிந்து நெஞ்சம்புண்ணுகி யென்செயக்கடவோம் என வருந்தி, அவ்வில்லறக்கிழவோர் இருவரும், விளக்கு நிலையொடு விரிச்சி யாராய்ந்தும் கட்டு வைப்பித்தும் கணக்குப்பத்துணருங் கண்ணுடைச் சோதிடநாடியும், புண்ணியதீர்த்தம் பொருந்தியாடியும், தலை மெழுகி யுண்டு தவம் பலபுரிந்தும், புழுதிபடக்கிடந்து போகந்துறந்தும், பக லுணர் இரவுணர்பட்டினி புரிந்தும், அருநோன்பு செய்தும், பெரு வேள்வியாற்றியும், மாதவனைப் பேணியும், ஆதுலனை யளித்தும்,

வானவனை வழிபட்டுத் தானமது பலசெய்தும், அறவனை யடைந்து நெறிமுறைபணிந்து, கவலைகளறத்தினஞ் சிவகதை கேட்டும், உலகினை யளந்த நெடியமால் முன்னே, ஓருமகன் வேண்டிப் பெரியமாதவஞ் செய்து, பூசைபுரிந்த ஈசனை யம்முறை, கந்தனெந்தையொடு கவுரி யென்னம்மை, பந்தமாவைத்தபடி யருச்சித்தும் அந்த சீர்கேட்டும் ஆதரித்திருந்தும், பன்னளநூழந்தன ரின்னோர்விரதம்.

அது நோக்கிக் குபேரனரும், இவர்களிடத்து நாம் மகவாகப் பிறப்பதே பெருநன்மை, அறிவொழுக்கங்குறையாது வளரும், அறம் பெருகும் பாவந்தேயுமென்றெண்ணிச் சிவத்தியானத்தோடும் அந்த ஞானகலாம்பையாருடைய கருப்பத்திற் பிரவேசித்தனர். அப்போது அவ்வம்மையார் முத்துக்களைக்கருவில் வைத்த செல்வச் செங்கரும்பு போல வயிறுவாய்த்து விளங்கினர். அதனைக் கேள்விப்பட்ட சுற்றத்தி னரும், நட்பினரும், அயலாரும், பிறருங் காப்பவருங்கண்ட கலாப மயிலாயினர். புதல்வர்ப்பேறுவேண்டிய விருவர்க்கேயன்றி யூரிலுள் ளார் பலர்க்கும் நற்கனவுகாணல், இழந்த பொருளைப் பெறுதல், சிறு முயற்சியாற் பெரும்பயன் பெறுதல், பகைவர் வலிந்துவந்து, உண்மையி னட்புக்கொள்ளுதல், கருத்தின்றிச் சிவத்தியானம் புண்ணியசிந்தை யுள்ளக்கிளர்ச்சி யுண்டாதல் முதலிய பல நற்குறிகளுண்டாகவே, யாவரு மிக்கருவின்கணுள்ள சிசுவினுல் பெற்றோர்க்கும் மற்றோர்க் கும் பெருமபயன் விளைவுண்டாம்போலுமென்று சிந்தித்துக்களித்திருந் தனர். மாதம் வளருந்தோறும், சிவநேசனரும் பும்ஸவனம் சீமந்த முதலிய கருப்பக் கடன்களை நிறைவேற்றிவந்தனர். ஞானகலாம்பை யாரும் கருவளரவளர மேனி விளர்த்துப் பச்சை நரம்போடிக்கண்ப சந்துகுழிய மயக்கப்பொய்த்துயில்கொண்டு புளிக்குடியும் விரும்பிச் சிவசிந்தனையோடும் அக்கருவைப்போற்றி வந்தனர்.

இங்ஙனம் பத்துத்திங்களுமாகவே நல்ல திதிவார நக்ஷத்திரயோக கரண மமைந்த தினத்தில் ஐந்துகோள்களுச்சமாய் மற்றவையோடு திரிகோணகேந்திரங்களி லமையச் சுபலக்கினத்தில் வலம்புரிச்சங்கம் ஒலிபொருந்திய நல்ல முத்தினைப் பெற்றாற்போலும். பாற்கடல் சந்தி ரனைப் பெற்றாற்போலும் அந்த ஞானகலாம்பையானவர் புத்திரனைப் பெற்றார். உடனே தேவர் பூமழை பொழிந்தனர்; தேவதுந்துமி முழ ங்கிற்று; இளந்தென்றற் காற்றுவீசிற்று; கூவல்குளம் ஓடைகயம் முத

லிய நீர் நிலைகள் தெளிவை யடைந்தன ; ஆகாய மறுவின்றி விளங்கி யது; காரணமின்றி யெல்லா வுயிர்களுக்கும் உள்ளக் கிளர்ச்சியும் ஊக் கமும் களிப்பும் பொங்கி யெழுந்தன ; மரமுதலிய வோரறிவுயிரும் பருவங்கடந்தவாயும் தளிர்த்துப்பூத்துச் சிறந்தன ; யாவர்க்குஞ் சிவ ஞானமும் பத்தியும் அன்பும் அடியவர்கள்பால் ஆராதகாதலும் பெரு கியது; சைவர்கள் வலத்தோளுங் கண்ணுந்துடித்தன. பெற்றவர்கள் களிப்பை யென்னென்று பேசுவது; சுற்றமுதலிய மற்றவர்கள் வாராத வாழ்வு வாய்த்தவர்களானார்கள்; அதுகண்டங்ஙகரத்திலுள்ள அறிவறி ந்த முதியோர் யாவரும் ஆநந்தமடைந்து சிவபுண்ணியமெல்லாந்திரண் டொருவடிவமாயிற்றே? சிவஞானம் யாம்பெறவேண்டி யிவ்வாறு வந் ததோ? சிவன்றிருவருளிங்ஙனம் தடுத்தாளக்குழந்தை வடிவில் வந் ததோவென்று அதிசயித்துத் துதித்து நின்றார்கள்.

உடனே வேளாண்மையிற் சிறந்த பிதாவாகிய சிவநேசரும் தெய்வக்காவிரியாற்றிற்குச்சென்று நீராடிப் பிதிர்தேவதைகள் களிப்ப நீர்க்கடன் முற்றி மனைபுகுந்து சுருதி மிருதிகளைக் கற்றுங் கேட்டு முணர்ந்த முதுமறையோர்களை யழைப்பித்து, விதை வழங்கு நவமணி களையும் பொன்னையும் நிலத்தையும் பிறவற்றையும் தானமாகக்கொடு த்து,யாவர்க்கும் முப்பழங் கண்டு சர்க்கரை தாம்பூலம் பகிர்ந்தளித்து, அன்னதானமுதலிய சிறப்பச்செய்து தேவாலயத்துச் செல்வ விழா வும் பூசையுங் குறவற நடத்துவித்து, ஏழைகள் அனைவர்க்கும் வேண் டியவாறு குறைவறுத்துபகரித்து, நல்ல கணித முணர்ந்த சோதிடர்க ளால் சாதகருமஞ் செய்வித்து, மனைத்தெய்வச் சிறப்புப் பூசனையும் வேள்விச் சாந்தியு முடித்துப் புத்திரப்பேறு திருவிழாக்கொண்டாடி னர். அப்பால் பத்துநாளும் எண்ணெய் விழாமுதலிய சிறப்பச்செய்து பதினோராநாள் பெற்றோரிருவரும் நீராடி மகவாகிய மணிக்குமி நீராட் டிப், பொட்டிட்டுத் தொட்டிலிற்கிடத்தி தெய்வக்காப்புச்செய்து நல் லோரையில் பந்துக்கள் வேதியர் முதலியோர் புடைசூழ விருந்து, விதிப்படி திருவெண்காடர் என்று நாமகரணஞ்சாத்தி அருமை பல செய்தார்கள். அச்செல்வக்குழந்தை தொட்டிலிற்கிடந்து, அம்மையப் பனைப்பிரிந்து வருந்துமக் குறிப்பு வெளிப்பட அழுதும், இனிபாசப் பிணிப்பையும் மயக்கப்பற்றையு முதறி யுதைத்துத் தள்ளுங்குறிப்பு வெளிப்படுத்துவதுபோற் கையுதறிக் காலுதைத்து ஆடியும், உலகர் பேய்மதிகண்டு நகைப்பார்போல் நகைத்தும், பிறவித் துன்பத்திற்

கஞ்சுவார் போலஞ்சியும், மயல் கவிழ் குறிபோல முகங் கவிழ்ந்தும் அருளொளிகண்டு தலையெடுத்தசைத்தாடுமதுபோல விளக்கொளிகண்டு தலையெடுத் தசைத்துச் செங்கீரையாடியும், மேற்சிவயோகத்திருக் குஞ் செய்தி வெளிப்பட விருந்து சப்பாணி கொட்டியுங், தாய் முகநோக்கிப் புன்முறுவல் செய்து முலைநெருடியுண்டும் மகிழ்செய் யும். இங்ஙனமாக அருமகப் பெற்றோரும் பெருகருற்றோரும் பூரண சந்திரனைக்கண்ட சமுத்திரம்போல மகிழ்ச்சி பொங்க நாளொருமேனி யும் பொழுதொரு வண்ணமுமாக அச்சைவக் கொழுந்தாகிய பிள்ளைப் பெருந்தகைபை வளர்த்து நான்காமாதத்திற் சந்தி மிதிப்பித்து ஆறு மாதத்தில் விதிப்படி உருத்திரப் பல்கணத்தாராகிய சிவனடியானை உண்டி வினையாதியாற்பூசித்து! அம்மாஹேசுவரப் பிரசாதத்தால் அன் னப்பிராசனஞ் செய்வித்தார்கள்.

அப்பால் தவழ் பருவங்கடந்து தளர் நடைப்பருவ மடைதலும் கொந்தளமாகிய சூழியம் விளங்க, காதிற் சிறுகுதம்பை யூசலாட மார் பிலம்பலை மதாணி முத்தாரங்கள் மழலை வழிவோ டழகு செய்யக் கையிற் கடகமின்ன, அரையின் மணிக்கோவை சிற்றுரைசெய்யக் காலிற்சிறுசதங்கையோடு தண்டைகலீனென வொலிப்பத் தத்தடி யிட்டு நடந்துமோடியும், வீதியிற் சிறுதேருருட்டியும், பேதைச் சிறு மிய ரிழைத்தாடுஞ் சிற்றிலழித்தும், நற்றாய், செவிலித்தாய், கைத்தாய், ஊட்டுந்தாய், சேடியர், சிலதியர், பாங்கியரொடு பின்சென்று அழை ப்ப வோடியொளித்தும் வந்து மேல் விழுந்து முத்தமளித்தாடியும், ஊரின்கண் யார்க்கும் காமப்பகுதி வெளிப்பட நமது திருவெண்காட் டையர் விளையாடி யருளினர்.

சிவஞசர் சிவபதப்பேறு.

இங்ஙனமாக, " மக்கண்மெய்தீண்டலுடற்கின்ப மற்றவர், சொற் கேட்ட லின்பஞ்செவிக்கு" என்ற திருக்குறளினிலக்கியமாம்படி தாய் தந்தையரிருவர்க்கு மின்பம்விளைய இவ்விளைய பெருந்தகையார் அன்பு, அறிவு, அடக்கம், ஆசாரம், நிராசை, சத்தியம், தவம், ஆராய்ச்சி, சிவஞசமுதலியவெல்லா முடன் வளர வளர்ந்து ஐந்து திருவயதடைந் தார். அக்காலத்தே, தந்தையாகும்படி தவஞ்செய்த சிவஞசனார், அம்மைமந்தர் வரலாற்றை முற்றுங்கண்டு களிக்கப்பெறுது விளைவயத்த ராய்த் தேகவியோகஞ்செய்து சிவபதம் பெற்றனர்.

அப்போது அவர் மனைவியாரும் சுற்றத்தினரும் நடப்பினரும் கடலென மறுகினர். பின்பு குழந்தைப் பருவத்திருந்த திருவெண் காட்டையர், அன்னையா லேவற்படி சுற்றத்தார் சார்புபெற்றுப் பிதா வுக்குச் செய்யவேண்டிய நீர்க்கடன் முதலிய யாவும் தான்முறை தவ றாது செய்து முடித்தனர்.

திருவெண்காடர் வித்தியாப்பியாசம்.

அப்பால் கணவனை யிழந்த அத்தாபதமகளாகிய தாயார் தமது தவப்பயனாகிய மைந்தர்பால் ஆராத காதலுடையராய் வளர்ப்பவர்; மகனார் கல்வி பயிலத்தக்க பருவம் வந்திருப்பதை யுணர்ந்து பலகலை களையு முற்றுமுணர்ந்த நல்லதோர் வேதியனை வருவித்து, அவனை யுபசரித்து வேண்டுவன வெறுப்பக்கொடுத்து அவரிடந் தமது புத்தி ரனை யோதுவதற்குப் பள்ளியில் அமைத்தார். திருவெண்காடனரும் தவக்குறை முடிக்கவந்தவராதலால், அவ்வளவில் கண்டவனெல்லாரும் வியக்கும்படி நிமித்தமாத்திரையில் ஆசாரியர் முன்னிலையாக வெல்லா நூலையுங் குறைவற வோதிமுடித்து, முற்றுமுணர்ந்தவர்களில் முதல்வ ராக விளங்கி யிருந்தனர். அவருக்குப் பூர்வவாசனையால் சிவஞானந் தானே விளங்கியது; சிவபத்தி, அடியார்பத்தி, ஜீவகாருணியம், உலக விடயப் பற்றுக்களில் மனஞ்செல்லா தருவருத்தல் முதலிய பெரியோ ரொழுக்க முழுவதும், அப்பிள்ளையானை யடுத்தவர்க்கும், அவர் சரி தங்கண்டவர்க்கும் கேட்டவர்க்கும் இயற்கைக்குணம்போல அமைய விளங்கி வந்ததாலல் அவர் செய்தி பித்தன்மைத்தென்று வேறு கூறு வானேன்.

திருவெண்காடர் வஸ்துவிசாரஞ்செய்தல்.

ஆகவே அவ்விளம்பருவத்தினராகிய திருவெண்காடாருக்கு முற் பிறப்பின் றொடர்ச்சியால் சிவபூசையிற்பற்றும் விருப்பமும் மனநிற் றேன்றிச் சிந்திக்கலாயினர்.

எங்ஙனமெனில், கண், வாய், மூக்கு, செவி, குதம், குறியென் னும் ஒன்பதுவாயிலாலும் மலசலங்களை யொழுகச் செய்கின்ற இவ் வுடம்பு புழுக்களால் நிறைந்த பாண்டம்போலும் அருவருப்புள்ளதாய் ஒருகணமு நிலையென்று கொள்ளக்கூடாததாய்ப் பல துன்பங்களுக்குஞ் சரக்கறையாயுள்ளது. இவ்வுடம்பினைமுன்னம் தாய் நமது என்பாள், தந்தை நமது என்பான், மனைவி மக்கள் முதலிய சுற்றத்தினர் நமது

என்பார்கள், ஒழியாத நோய்களோ நமது நமதென்று நவித்துக் கொண்டு நிற்கும்; பின்னரோவெனில், நாய் நமது என்னும்; நரிநம தென்னும், காகம்-கழுகு-பருந்து-பேய்-கூளி முதலிய நமது நமதென் னும், இடையிடையே யானு மெனதெனதென்றிருப்பேன். யோசிக்கு மிடத்தில் இது யாரதோ? என்போல நின்றுதித்தனபேருடம்பு, எவ்வாறுப் விட்டது? என் கண்காண முன்னர் என்ன வுபசாரத்தி ருந்து பின்லை இழிக்கப்பட்டு எடுத்துங்கிடத்தியும் புரட்டியும் அப்பா ஐயா வென்ற சொல்லை மறந்து பிணமென்றழைத்து எடுமென்றும், இடுமென்றும், சுடுமென்றும், மண்ணிலிட்டும் தீயிலிட்டும் வீணை கழி க்க நாறிக்கிடந்தே, என்னபயன்பெற்றது? கருவொழியக் குழவிப் பருவத் தழிந்ததோகோடி; குமரப்பருவத்தழிந்ததோ பலகோடி; கிழப்பருவத்தழிந்ததோ கணக்கில்லை; அதுநிற்க. இந்தப்பாடு, இவ் வொருடம்புடனே யொழிந்தவாறு, அல்லவே சமுத்திரதரங்கம்போல எத்தனை பிறப்புப் பிறந்து எத்தனை பாடுபட்டவாறு புள்ளது; கல்லா ய்ப் பிறந்து கடந்ததுகோடி; காடாகிநின்று கழிந்ததுகோடி; புல்லா ய்ப் பிறந்து புலர்ந்ததுகோடி; பூடாகித்தோன்றி மடிந்ததுகோடி; புழுவாய்ச்சனித்து மரித்ததுகோடி; பலமிருகம் பாம்பாகிப்பட்டது கோடி; பறவை மீன் வர்க்கமாம்பாடதோ கோடி; அலைகப்பேயாகி யலைந்ததோகோடி; அரக்கரொடு தேவராய் அருமுனிவராகி, நிலை குலைந்து நெறிமயங்க நேர்ந்ததோகோடி; நினைக்க நினைக்க ஐயோ!! நெஞ்சு துடிப்பதுவே! இதுவரையிலும் இவ்வுலகத்தின்கண்ணை ஓவ் வொரு உயிர்களும், எறும்பு முதல் யானையீறுக அண்டசம்,சுவேதசம், சராயுசம், உற்பீசம் என்னும் நால்வகை யோனியுள்ளும்; தேவர், மானிடர், விலங்கு, பறவை நீர்வாழ்வன, ஊர்வன, தாவரம் என்ற வெழுவகைத் தோற்றத்துள் எடுக்காத யாக்கையில்லை, கிடக்காத நில மில்லை, படுக்காதபாயலில்லை, அடுக்காதகாலமில்லை, பெறுததாயில்லை, உறுதசுற்றமில்லை, உண்ணுத வுண்டியில்லை, பண்ணுத தொழிலில்லை, எடாதயெடுப்பில்லை, படாதபாடில்லை, அந்தோ!! என் செய்வோம். உறங்குவதையும் விழிப்பதையு மெண்ணிப்பார்த்திரங்குவதென்னை? மறப்பது நினைப்பதுமே செத்து மறுபிறப்பாவதாயிருக்கின்றது. இவ் வகைத்தாக இடையிட்ட காலமோவெனில் பசி, தாகம், நித்திரை, சோகம், மோகமுதலியவற்றுள்ளும், அவற்றைத் தணிக்கும் வழிதேடு முயற்சியுள்ளும் ஒவ்வொன்றுனே ஒழிவதாகவிருக்கின்றது. ஆலல்

எக்காலத்தில் இப்பிறவிப் பெருந்துன்பத்தினையொழிக்கவல்ல திது வென்றறிவதும், அறிந்தவற்றைக் கடைப்பிடித்துச் செய்வதும், ஐயோ! என் செய்வோம்! என்று இரங்கி அழுதழுது வாடி.வருந்திக் கிளப்பு மினைப்புழுற்றுக் கையறவடைந்து, "பிறப்பென்னும் பேதை மை நீங்கச் சிறப்பென்னுஞ், செம்பொருள் காண்பதறிவு" என்று, சிந்தித்துச்சிந்தித்து, "நடலைவாழ்வு கொண்டென்செய்தீர் நாணிலீர், சுடலை சேர்வது சொற்பிரமாணமே, கடலி னஞ்சமுதுண்டவர் கை விட்டால், உடலினர் கிடந்தூர் முனிபண்டமே" ஆகையால், "பூக்கை கொண்டரன் பொன்னடி போற்றிலார், நாக்கை கொண்டரணம நவிற் றிலார், யாக்கைக்கே யினைதேடி யலமந்து, காக்கைக்கேயினையாகிக் கழிவரோ" இவ்வுலகத்தறிவில்லாதவர். அவர்களைப்போலவே "வாழ் த்தவாயு நினைக்கமடநெஞ்சும், தாழ்க்கச்சென்னியுந்தந்ததலைவனைச், சூழ்த்தமாமலர் தூவித்துதியாதே, வீழ்த்தவாவினையேன் நெடுங்கால மே" என்று ஆராமை மேல்கொண்டு, "கற்றுக்கொள்வனவாயுள நாவுள, இட்டுக்கொள்வனபூவுளநீருள, கற்றைச்செஞ்சடையாளுளனு முளோம், எற்றுக்கோ நமனல் முனிவுண்பதே" என்று சிவபூசை செய்யநெஞ்சிற்றுணிவுகொண்டெழுந்தார்.

இங்ஙனம் விசாரத்தால் மனங்கனைந்தெழுந்த திருவெண்காடர், இனி பூசிக்கப்படும் சிவலிங்க விபல்பிணையாராய்ந்து "மலர்ந்த வயன்மாலுருத்திரன் மகேசன்-பலந்தருமமும்முகன்பரவிந்துநாத-நலந் தருஞ்சத்தி சிவன்வடிவாகிப்-பலந்தருலிங்கம் பராகந்தியாமே" என்னு மாகமத்துணிபுணர்ந்து, இத்தகைய சிவலிங்கத்தினை நாமெவ்வாறு பெறுவது, எவ்வாறு அருச்சனைசெய்வது, இக்கருமங் குருமுகத்தா லன்றி முடியாதே "நேயத்தேதநிற்கு நிமலன்மலமற்ற-நேயத்தை நல் கவல்லோனித்தன்சுத்தனே-ஆயத்துவாதத்துவமூணர்ந்தாங்கற்ற-நேய ர்க்களிப்பவனீடுங்குரவனே" என்றெண்ணி மனங்குழைந்து, "பரி சனவேதிபரிசித்தவெல்லாம் - வரிசைதரும்பொன்வகையாகுமாபோற்-குருபரிசித்தகுவலயமெல்லாம்-திருமலந்தீர்ந்து சிவகதியாமே" என்று குருமகிமையைத்தியானித்து, அந்தோ! வாழ்நாள் வீணளாகக்கழி கின்றதே தேசிகோத்தமனது திருவடித்தீர்த்தமும், பரிகலச்சேடப் பிரசாதமும் என்று பெறுவோம்? என்னைக்கொண்டு தன்னையளிக்கும் எம்பெருமானர் எப்போது எழுந்தருளுவார்? எவ்விடத்தி லெழுந்

தருளுவார்? என் செய்தால் வருவார்? குருநாதன் திருவடியன்றி வேறு தாரகமுள்ளதோ மக்களுயிர்க்கு? "பத்திப்பணித்துப்பரவுமடி நல்கிச் - சுத்தவுளையாற்றுரிசறச்சோதித்துச் - சத்துமசத்துஞ் சதசத் துங்காட்டலாற்-சித்தமிறையே சிவகுருவாமே."''சுத்தசிவன் குருவாய் வந்து தூய்மைசெய்-தத்தனல்கருள்காணுவதிமூடர்-பொய்த்தருகண் ணெல்நடனென்பர்புண்ணியர் - அத்தனிவனென்றடிபணிவாரே", "குரு வேசிவமெனக் கூறினனந்தி - குருவேசிவமென்பது குறித்தோரார் - குருவே சிவனுமாய்க்கோனுமாய்நிற்குங் - குருவேயுளையுணர் வற்ற தோர்தோவே" என்று துதித்து, என்னை யடிமைகொள்ளுஞ் சற்குரு சிகாமணி யெந்தத்திசையாக வெழுந்தருளுமோவென்று பேழ்கணித் துருக்கனைந்து, நாம்பெறத்தக்க பேறெல்லாம் குருபரன் திருவரு ளொன்றேயன்றே அதுபெற்றுல், "சித்திகளெட்டொடுந்தின் சிவ மாக்கிய - சுத்தியுமெண்சத்தித்தூய்மையும் யோகத்துச்-சத்தியுமந்திர சாதகபோதமும் - பத்தியுநாதனருளிற்பயிலுமே" என்றன்பு பெருக வொன்றுந் தோன்றுது உணவிலும் நித்திரையிலும் இச்சையு முயற் சியும் வரவரக்குறைந் தொருநா ளிரவிற் சோர்வுற்றிருந்தாராகப், பெற்ற அன்னையார் தம்மிளமைந்தர் மேனியினைத்து வருவதையும், உண்டி புறக்கங் குறைந்து வருவதையுங் குறிப்பி னுணர்ந்து சிந்தித் திருப்பவர் அன்றுமிகச் சோர்ந்திருப்பது கண்டு வருந்தி அருகணைந்து நின்று, அப்பா! குழந்தாய்! வரவர மேனியினைத்தனை! உனக்கின்று வந்த சோர்வென்னை? உன்னைக் கலிதீர்க்கவந்த கருவூலமென் றெண்ணி யிருக்கின்றேன் ஐயோ! வயிறுகுழைந்து வாடுகின்றதே! உண்ணை வெழுந்திரு ஐயனே! என்று அழைக்கக்கண்ட பெருந்தகையார் குரு மோகங்கொண்ட குணக்குன்றமாதலால் உண்டி வினையிற்சிறிதும் மன வூக்க மின்றித் தாயே! எனக்கின்று பசியில்லை யாதலால் நீர் வருந்தா திரும் நாளையுண்பே னென்று மறுத்தவனைப் போவுழிப்போகவிட்டுச் சிவசிந்தனையோடும் படுத்துறங்கிக்கிடந்தனர்.

திருவெண்காடர் கனவில் சிவாணுக்கிரகம்பெறல்.

அங்ஙனமிருக்க, இவரை முன்னமே தடுத்தாளும்படி திருவருள் செய்திருந்த பெருங் கருணைக்கடலாகிய சிவபெருமானுர், இவரது பருவத்திற்கு மேற்பட்ட விசாரமும், ஒழுக்கமும், அன்பும், அதிதீவர நிலைமையுநோக்கித் திருவருள் சுரந்து, அன்றிரவி லிவரது கனவில்

ஆயிரம்பிறைகண்டதோர் முதுவேதியராய்த் திருமேனி முழுவதும் வெள்ளிமுளைபோன்ற நரையும், அழகின் கடலலைபோலுந்நரையும், திருமுடிநிலவமுதொழுகப் பூசிறைற்போலும் புண்ணியப்பூச்சும், ஒரு தலைமறைத்தபிறைபலதலை வெளிப்பட்டாற்போலும் புண்டரமும், கண் டதீதியொளித்த காளவிடந்தானணிபெற அக்கமணியாய்ப் வெளிப்பட் டுச் சூழ்ந்தாற்போலும் விளங்கும் உருத்திராக்கத் தாழ்வடங்களும், திருநீற்றுப்பொக்கணமும், கையிற்கோலும் மார்பினூலும் அழகை அழகு செய்வதாக அருண்மேனி சாத்தி வந்ததிர்ந்நின்றருளி முன் னே புன்னகைசெய்து மூவர் பிழைப்ப முப்புரஞ்சுட்டதென்ன, அன்று இன்னகைசெய்து மெய்யறிவின்பம் விளைந்து மும்மலப்பிணைக்கறச்சுட் டுக் கனிவருள்செய்து, ஐயா! குழந்தாய்! வெண்காட! மேனி யினைத் தீனையோ! என வருடலும், பிள்ளையார் துணுக்குற்றெழுந்து அக்க னவே நனவாகக் காந்தங்கண்ட இரும்பென்னக் குழைந்துருகித் திரு வடிபற்றிப் பன்முறை யட்டாங்க பஞ்சாங்க விதியிற்பணிந்து கண் ணைற்றித்தலைமுடித்து மணமோந்து அள்ளிமுத்தங்கொள்வராய் முக மொற்றி ஆராதகாதலால் அழுது தொழுது ஆடிப்பாடி இன்னின கைகையோ டிளவெயர்வெழ நாத்தழுதழுக்கத்துதித்துநின்று ஆற்றுமை மேலிட்டுச்சொற்குழறச்சொல்வாராயினர்.

எம்பெருமான்! எங்குற்றது, இங்குவர எத்தவ முடையேன் என்செய வல்லேன், என்செயக்கடவேன், இனிப் பிரிந்தாற்றேன், எம்மிறையே! எம்முறவே! எம்முயிரே! என்னுடலே! என்வாழ்வே! என்னரசே! என்னையா! என்னப்பா! என்றாயே! என்னறிவே! என் றவமே! என்பயனே! என்பயனே! என்குருவே! என்கோவே! என்னு டையாய்! என்னுடையாய்! கைவிடேல்! கைவிடேல் என்று பாதம்பற் றிப் பரிதபித்தலும், வந்த ஐயர், இவர் அன்பு அழுதாரவுண்டாராய்க் களித்து, சிறுவ! என்னைய! நின்னழுத வாசக மினிதினிது. நெஞ்சா ரச் சுவைத்தன மென வின்மொழி கூறி அவர் கருத்திலுக்கிசைந்த வண்ணராக திருக்குறிப்புக் காட்டி நிற்றலும், திருவெண்காட்டடிகள் மீட்டும் வணங்கி நின்று, எம்பெருமானே! இன்றன்றோ நல்லநாள் யான் பிறந்த நாளானது; இன்றன்றோ வென்னுடம்பு நல்லுடம்பா யிசைந்தது; இன்றன்றோ யான் செய்ததின்றவமா பேறுற்றது; இன் றன்றோ என்னெஞ்ச நன்னெஞ்சமாயிற்று; இன்றன்றோ என்னுறவு

கல்லுடவாயேற்றமுற்றது; இன்றேகாணென்னீன்று ளீன்றுளுமாயி ருள்; இன்றேகாணென்குடியு மினியகுடியேயாயிற்று, அப்பனே, "போகம்வெண்டி வேண்டிலென் புரந்தராதியின்பமும், எகநின்கழ லிணையலாதிலென் எனெம்பிரான், ஆகம்விண்டு கம்பம்வந்து குஞ்சி அஞ்சலிக்கணை, ஆகவென்னைகண்டானை யாறுதாகவைபனே" "ஐய நின்னதல்லதில்லை மற்றோர்பற்றிவ்வஞ்சனென், பொய்கலந்ததல்ல தில்லை பொய்மையேன் எனெம்பிரான், மைகலந்தகண்ணிபங்க வந்து நின்கழற்கணை, மெய்கலந்த அன்பரன் பெனக்குமாகவேண்டுமே" "வேண்டுநின்கழற்கணன்பு பொய்மைதீர்ந்து மெய்ம்மையே, ஆண்டு கொண்டு காபினேனை யாவவென்றருளிநீ-பூண்டுகொண்டடியனேனும் பொம்மைதீர்ந்து மெய்ம்மையே - மாண்டுமாண்டுவந்துவந்து மன்ன நின்வணங்கவே" "எய்தலாவதென்றுநின்னை யெம்பிரானிவ்வஞ்ச னேற், குய்தலாவதுன்கணன்றி மற்றொருண்மையின்மையிற், பைத லாவதென்றுபாது காத்திரங்குபாவியேற், கீதலாதுநின்கணென்றும் வண்ணமில்லைபீசனே" "என்னுயிரை யென்னுடலை யென்பொருளை வாங்கிநீயேற்றுக்கொண்டு, நின்னருளைநின்னடியை நின்னடியார் பணி விடையை யெனக்குநேர்ந்து, முன்னியவலம்பின்னியவு மூடமாம் பிறப்பியலும் முழுதும்போக்கி, தன்னியலைவந்தெழுத்தருளி யெனை யடிமைகொண்டருளா யெந்தாயெந்தாய்" என்செல்வமுதலியபாவும் தேவரீரே ஆதலா லவற்றை யேற்றுக்கொண்டருளுக என்று மீட்டும் பலதரம் பணிந்து தம்மை மறந்து பரவசராய் நிற்க; அடிமைகொள்ள வந்த ஐயர் கண்டருளிக் கடாக்ஷித்து, அப்பா! குழந்தாய்! திருவெண் காட! உன்பிரார்த்தனை மிகவும் சுவைபுடையது. நமக்குக் களிப்பை விளைக்கின்றது. உண்மையாற் சிறந்துள்ளது. ஆயினும் இப்பொரு ளைக்கொண்டு யாமென்செய்வது? இந்த மண்ணுலகத்தையே யன்றி விண்ணுலகத்தைதத்தான் தந்தாலும் அதில் எமக்குச் சிறிதும் விருப்ப மில்லை. இவற்றிற்கு மேலாகிய சத்தியவுலகம், வைகுந்தமுதலிய புண் ணிய வுலகங்களும், மகாப்பிரளயகாலத்தில் அழிவதாலும் இவற்று ளெதைக்கொண்டு யார்தான் என்செய்வது; ஆதலால் இப்பொருள், உன க்குச் சிலகாலம்வரையில் சிறிதுவேண்டுவதாக விருக்கின்றது. எனெ னில் குருலிங்க சங்கமங்களை யர்ச்சிப்பதற்குச் சிலசமயத்தி லிதுவு மொரு கருவியேயாம். "அற்காவியல்பிற்றுச் செல்வமதுபெற்று, லற் குபவாங்கேசெயல்", "தன்னதுசாயை தனக்குதவாதுகண் - டென்

னதுமாடென் றிருப்பார்களேழைகள் - உன்னுயிர்போமுட லொக்கப் பிறந்தது - கண்ணதுகாணெனி கண்டுகொளீரோ" செல்வந்தா னப் படிப்பட்டதாயிருக்க, இவ்வுடம்பினைக்கொண்டுதான் செய்யக்கடவ னவற்றைச் செய்வோமெனில் "நெருநலுளனொருவ னின்றில்லையென் னும், பெருமைபுடைத்திவ் வுலகு" "பண்டம்பொய்க்கூனை பழகிவிழு தலா-லுண்டவப்பெண்டிருமக்களும்பின்செலார் - கொண்டவிரதமும் ஞானமுமில்லது மண்டியவருடன் வழிநடவாதே", "ஊனொல்லாங் கூடி யொலிக்கவழுதிட்டுப் - போனீக்கிப் பிணமென்றுபேரிட்டுச் - சூனையங்காட்டிடைக் கொண்டுபோய்ச்சுட்டிட்டு-நீரினில்முழ்கி நினைப் பொழிந்தார்களே" ஆனபடியால். "நாச்செற்றுவிக்குண்மேல் வாரா முன்னல்வினை, மேற்சென்று செய்யப்படும்." ஆகவே உள்ளநாளெல் லாம் மனத்தைவிடயங்களிலே செல்ல விட்டுத் தாமரையிலை நீர்போல லாவது நன்மையல்ல. "ஐவரமைச்சருட் டொண்ணூற்றறுவர்க - ளாவருமைந்தரு மாளக்கருதுவர் - ஐவருமைந்து சினத்தொடேநின் றிடி - லவர்க்கிறையிறுத் தாற்றகிலோமே." "அஞ்சுளசிங்க மடவி யில்வாழ்வன - வஞ்சும்போய்மேய்ந்துதம் மஞ்சகமேபுகும் - அஞ்சினு கிரு மெயிறுமறுத்திட்டால் - எஞ்சாதிறைவனையெய்தலுமாமே" அங் ஙனமிருக்க; கிடைத்தற்கரிய இம்மானுட வுடம்பினைப் பெற்றும், குடி க்கத்தக்க பாலைக் கமரிற்கவிழ்த்தாற்போல மாதர் மயக்கத்திலு ழுக் கின்றனர். "புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு - அண்ணா லதுகண் டருள்புரியா நிற்கும் - எண்ணிலிபாவிக ளெம்மிறையீசனை - நண்ணறியாம னழுவகின்றதோ" ஐயோ! "நினைவதும் வாய்மை மொழி வதுமல்லால் - கனைகழலீசனைக் காணலரிதாம் - கனைகழலீசனைக் காண் குறவல்லார் - புனைமலர்நீர்கொண்டு போற்றவல்லாரே" என்றவண் ணம் உணர்ந்து, "மஞ்சனமாலை நிலாவியவானவர் - நெஞ்சினுள்ளீச னிலைபெறுகாரணம் - அஞ்சுமுதாமுபசார மெட்டிட்டோதும் - அஞ் சலியோடுங் கலந்தர்ச்சித்தார்களே" ஆகையால், சிவபூசைசெய்யாத தேகம் வீணுப் நிலத்துக்குப் பாரமாகவும், குலத்திற்குக் கோடரியாக வும், தன்னுயிர்க்கு நோயாகவும் இருக்கும். "வகையிலாவண்டயன் குன்று, மிசையிலாயாக்கை பொறுத்தநிலம்" ஆதலால் நமது சொல்லைக் கடவாமல், நீ, இந்தப்பொருளைக்கருவியாக வைத்துக்கொண்டு முன்னே சிவபூசை, அடியார்பூசை நடத்திவருவையாகில், பின்னல் நீ யெண் ணியவெண்ணமெல்லாம் பெறுவாயென்று திருவாய் மலர்ந்தருளினர்.

அது கேட்டமாத்திரத்தில், திருவெண்காடர் பாலொடு தேன் கலந்துண்டவரினும் சிறந்து முன்னமே சிவார்ச்சனையில் பெருவேட்கையுற்றிருந்தவர் இங்ஙனம் ஆதியாசிரியர் திருவாய்த்தையால் தாம் பெறுத்தக்க பேறு இதனில் வெரிரன்றுள்ளதென்பது நினைப்பிலுங் கொள்ளாதவராய்க் குப்புற்றுக் கூத்தாடி நகையுமுவகையு மேன்மேலெழு கயந்துகின்று ஆளவந்தார் திருவடியிற் பணிந்து பணிந்தெழுந்து, எம்மரசே! என்பேறுபேறு, யான் செய்த தவமேதவம், என்பாக்கியமே பாக்கியம், என்புண்ணியமே புண்ணியம், என்னென்றுபேசுவேன்? என்னென்றுபேசுவேன்? எழுதமுடியாதே! வட்டிலடங்காதே! என்போல விப்பேறுபெற்றார் இவ்வுலகத்து; என் ஐயனே! இனியடியேனிதற்குச்செய்வதியாது "செய்வதறியாச்சிறுநாயேன் செம்பொற்பாத மலர்காணப், பொய்பற்றும் பேறத்தனையும் பெறுதற்குரியேன் பொய்யில்லா, மெய்யர்வெறியார்மலர்ப்பாதம் மேவக்கண்டுங்கேட்டிருந்தும், பொய்யனேனுன் உண்டுடுத்துங் கிருப்பதானென் போதோறு", "போதோறுநின்பொன்னகர்வாய் நீபோந்தருளியிருணீக்கி, வாதுறினெமன்முலையாளொடுடன்வந்தருள வருள்பெற்ற, சீர்மறையார்கின்பாதருள். சேரக்கண்டுங்கண்கொட்ட,வுரோமயிங்குழல்வேனெகாடியேனுயிர்தானுலவாதே" ஆதலின் அடியேன் எவ்வாறு எதுகொண்டு எவ்விடத்துப் பூசிப்பது கருணை செய்திதுகவென்று விண்ணப்பித்து நின்றனர்.

அப்போது, ஆட்கொள்ளவந்த அடிகளார், திருவுள்ளங்கனிந்து, ஐய! நாளையதினம், திருவோணத்தோடு கூடிய சோமவாரம் மஹாப்பிரதோஷகாலமாயிருத்தலால், அடுத்த திருவெண்காடென்னும் திருப்பதியையடைந்து, சுவேதாரணியப்பெருமானையும், அவரிடம் பிரியாதுறையும் நானாவித்தை வடிவராகிய உமாதேவியாரையும் விதிப்படி திருமஞ்சனமாட்டி யருச்சித்துச் சிவனடியார்களையும் உபசரித்துப் பூசித்து அச்சந்நிதியில் காத்திருப்பையாயின், அங்கே வேதாகம முதலிய கலைஞானமெய்யைத் திரிபற வுணர்ந் தொழுக்கத்திற் சிறந்த தொரு வேதிபர்வந்து, நீ அருச்சித்தற்குரிய தாபரமூர்த்தியாகிய தொரு சிவலிங்கப்பெருமானை யெழுந்தருளப் பண்ணிக்கொடுத்து, நீகூடாவிதிப்படியுனக்குந் திருவெழுத்தைந்தினையு முபதேசித்து, பூசிக்கு முறைமையையும் அனுக்கிரகிப்பார். நீ யவற்றைப் பெற்று நல்லன்போடு பூசித்துப்பரிபாகமுற்று, உலகியற்செல்வமும் அருளியற்செல்வமும் பெய்

றுப் பேரின்பமடைந்து நீடுழிவாழ்கவென ஆசீர்வதித்துத் தடதது அருளமைத்திருக்கரத்தா லவர் நெற்றியிற் றிருநீறுபூனைந்து தலைமேற் கைமலர்சாத்தி அபயமளித்து மறைந்தருளினர்.

கேட்டீர்களோமுனிவர்களே! இவ்வுலகத்திற் சிவகீர்த்தனம், சிவபூசை செய்பவர்கள் பெறக்கூடாத பேறொன்றுமில்லை. அவர்களை நாம் தொழுதெய்வங்களாம். என்றுகூறி உபமன்னிய முனிவர் அப்பால் நடந்த கதையைச் சொல்லலாயினர்.

திருவெண்காடர் தமதுகனவினிலைமை தாயார்க்குரைத்தல்.

கேளும் முனிவர்களே! அப்பால் திருவெண்காடராகிய சிறுவனர், உடனே கண்விழித்து எழுந்து, ஆகாமமிலிட்டி அழுது தொழுது, ஐயனே! ஐயனே! என்பிழைப்புக் கனவளவிலபாயிற்றே! நனவென்றல்லோ நான்களித்திருந்தேன். எம்பெருமான் றிருவுளமிருக்கவாறிதுவானால் என்செய்யக்கடவேன் என்றிரங்கியிருந்தனர். அப்போதுமகனர் அன்றிலாசாமின்றிப்பிரிந்துறங்கின பாதலிற் பெருங்கவலையோடும் கல்ல நித்திரையின்றி அருகே படுத்திருந்த தாயார் அரண்டு விழித்து எழுந்து, மைந்தரைநோக்கி என்செய்கின்றாய் ஐய! உனக்கடுத்தது என்னென்று விறைவப் பிள்ளையாரும், தம்மன்னையை வணங்கித் தாங்கண்டகனவினைக் குறிப்பினி னுணர்த்தக்கேட்ட அவ்வம்மை தம்முள்ளத்தில் அதிக அச்சத்தோடு மன்போடும் பெருங்களிப்பினையடைந்து இவரதுண்மை நிலைமையை யறியும்படி அவற்றையுள்ளடக்கிக்கொண்டு மகனைநோக்கித் துச்சிமோந்து முதுகைத் தடவி, அப்பா! குழந்தாய்! இவ்வுலகிற் பெருஞ்செல்வனும் பேறு பெற்றாய்! உனக்குச் சிவனருள் கிடைத்துங்காலமதித்தது. இது வரையு மூனக்குள்ளிருந்த கவலையை யானறியாத வண்ணமறைத்து வைத்திருந்தனையே ஆயினும் இனிக்கவலையற்று, உனக்காண்டவன் கனவிலே கடாக்ஷித்தபடியே நடத்தி நல்லருள் பெறுதி. ஆனால் ஒன்று சொல்லுகிறேன் பொறுமையோடிங் கேட்டிடுதி.

திருவெண்காடருக்குத்தாயார் சிவபூசைத் திறமுரைத்தது.

அதாவது, சிவபூசை செய்வதென்றால் எளிய காரியமல்ல. அரிய வற்றுளெல்லாம் அரிது. சிவன், தேவரிற் பெரிய மூவராலு மற்றை யாவராலும் இன்னதன்மையனென்று அறிவதற்கரியவன் என்றும், எல்

திருவெண்காடருக்குத் தாயார் சிவபூசைத் திறமுரைத்தது உன
லாக் கலிதானங்கட்குத் தாயாபுள்ள வெதாகமமே இன்னம் அவன்
மகிமையை யறியாது மயங்குகின்றன. அன்றியும், அண்டப்பகுதிக
ளெல்லாம் சிற்றணுவென்ன ஆழிச்சூழலவளிபிலை "கொட்கப்பெயர்க்
குங்குழகன்-முழுவதும்படைப்போற் படைக்கும்பனிமுதியோன்-பனைத்
தலைகாப்போற் காக்குங்கடவுள் - காப்பனைகரப்போன் - சரப்பனை
கருகாக் கருத்துணைக்கடவுள் - திருத்தகும் அறுவகைச்சமயத்தூ
வகைபோர்க்கும் - விதி பெறும்பின்றவிண்ணோர் பகுதி - கிடம் புரை
யுங்கிழவோன்-சொற்பதங்கடந்தநிகரில்லோன் - உள்ளத்துணர்ச்சியிற்
கொள்ளவும் படாதவன் - கண்முதற்புலனுற்காட்சியுமில்லோன் - விண்
முதற்பூதம்விளிப்படவகுத்தோன்" அன்றியும், இவன், "தினைமு
கன்சென்றுதினைக்கொளித்தும் - மூலறபுளியொற்றி மூபன்றவர்க்
கொளித்தும் - ஒற்றுணமெகாண்டி சோக்குமுள்ளத் - தற்றவர்வருந்த
வுறைப்பவர்க்கொளித்தும்-இத்தந்திரத்திற் காண்டி மென்றிருந்தோ
ர்க் - கத்தந்திரத்தி னவ்வாயிலைளித்தும் - மூனிவறசோக்கி நனிவர
கல்லி - யாளனைத்தோன்றி யலிபெனப்பெயர்ந்து - வாணுதற் பெண்
ணைவளைத்துஞ்சேண்வயின் - ஐம்புலன்செலவிதித் தருவரைதொ
றும்போய்த் - தற்றுணைதுறந்த வெற்றுயிராக்கை - அருந்தவர் காட்சி
யுட்டிருந்தவளைத்தும் - ஒன்றுமன் மிலையென்றறிவளைத்தும்-பன்
மேடபயிறுறு மின்மேறுபயிறுறும் - ஒளிக்குஞ்சோதனக்கண்டனம் -
ஆர்மிறர்மி ரண்மலர்ப்பிரமனையலிற் - றடீசுயிரிகின் - சுற்றுமின் சூழ்
மின்றொடர்மின்விடேன்மின் - பற்றுமிலனென்றவர் பற்றுமுற்றிறளித்
தும் - தன்தினைவிலான்றதின யானதன்மை" உணர்த்தவணைப்பதி
மன்றி மெய்றுவையாள் முதியாரிதனைப் பிறரியார் யாவருஞ் சொல்லு
கின்றார்கள். அற்றங்காணலாகாது.

தீயோர் இன்னும் முலைப்பாலை மணக்கும் வாயினை யுடைய சிறுகுழ
ந்தை, இரவில் தான் தழுவி யணைத்தலை யினையே தழுவலாயினும்,
தனித்திருக்கின்றபோது மென்றாள் விடாது அழுகின்ற பருவத்தை
யுடையவன்; பத்தி, வைராக்கியம், அறிவு, ஆசாரம் இவைகளி லொ
ன்று குறைபடினும் சிவபூசை முற்றுப்பெறாது. உலகத்தையெல்லாம்
பெற்ற மாதாவாகிய பார்வதியாராலேயே அப்பூசை நிறைவேறுவது
அரியதாம். அவர் செய்யும் சிவபூசையையே சோதிக்கும்படி முன்னே
சிவபெருமான் கம்பாநதியைப் பெருகிவரச்செய்தனராம். இன்னமும்

பெரியோர்க ளதைச் சொல்லிச் சொல்லி யேங்குகின்றார்கள். மஹா தேவிக்கே யிவ்வகையாலல் நாமெல்லாம் எவ்வளவு. அதுவுஞ்ச. பூசை செய்வதற்குமுன் ஸ்ரீபஞ்சாக்ஷர செபத்தால் சித்தசுத்திசெய்து கொள்ளவேண்டும். மந்திரங்களுள்ளே அரசாயுள்ளது ஸ்ரீபஞ்சாக்ஷரம். எப்படியென்றல், எல்லாமந்திரங்களும் வேதத்துள்ளே யடைந்துள் ளது. அவ்வேதமெல்லாம், இருக்கு, யஜுசு, சாமம் என்ற மூன்றுவகைப் படும். அதர்வணம் இவற்றுளடங்கும். அம்மூன்றுவேதத்துள் - அறம்- பொருளின்பமென்ற புருஷார்த்த மூன்றிலே பொருள் எப்படி சிறந் ததோ அப்படி யஜுர்வேதம் சிறந்தது. அவ்வேதம்-ஏழுகாண்டமாம். அவ்வேழுள்ளே நடுக்காண்டத்து நடுவேயுள்ளது ஸ்ரீருத்திரம் என்றமந் திரம். அம்மந்திர நடுவேயுள்ளது அந்த சிவபஞ்சாக்ஷரம். ஆதலால், "மந்திரமான்மறையாகிவானவர்-சிந்தையுளின்றுவர் தம்மைபாள்வன- சென்தழலோம்பிய செம்மைவேதியர்க் - கந்திபுண்மந்திரமஞ்செழுத் துமே"என்று மஹாவாக்கியம் பிறந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஸ்ரீபஞ் சாக்ஷரத்தியானம் செய்ய மஹாமுனிவர்களே அகாத்தியம் என்று பயப்படுவார்களாம். நீயோ, "காலைமலைமாடு, கடும்பகற்பசி, நிசிவேலை நித்திரை" இவைகளாற்றுவக்குண்ட சிறுகுழவி. என்செய்வாய். இது போக, சிவபூசைக்குரிய திருமஞ்சனவகை, திருப்பள்ளித்தாமபத்திர புட்பம், நிவேதனத்திரவியம் இவைகளைச் சுத்தமுள்ளவைகளாகத்தேடு வதுமிகவருமை. எனென்றல், முன்னாளிலே சுத்தமானதீர்த்தம் வேண் டுமென்று மஹாரிஷிகளெல்லாம் பெருந்தவஞ்செய்த கதைக ளொரு கோடி நாம் கேட்டிருக்கின்றோம். சண்டேசுரப் பிள்ளையார் சுவாமி திருமஞ்சனத்திற்காகச் சேகரித்துவைத்த பாற்குடத்தில் பிதா கால் தீண்டிற்றென்று, மழுவாலெறிந்தார். இதுவொன்றே இவ்வாறனேக முண்டு. அருச்சிப்பதற்குப் பழுதற்ற பத்திரபுட்பம் பெறுமல் சீர்கா ழியில் சிவபூசை செய்பவந்திருந்த தேவேந்திரன் ஸ்ரீ கணேசர் திரு வருளால், அகத்தியமுனிவர் கைலாயத்திலிருந்து சிவாணுக்கிரகத்தாற் கொண்டுவந்திருந்த காவிரியாற்றை எப்பாடு பட்டுக்கொண்டுவந்தான். மடங்கிதழ், மூடங்கல், வாடிவதங்குதல், மயிர்ச்சிக்குண்டல், மூடங்கு காற்சிலம்பிக்கூடு, புழுக்கடி முதலாகிய பழுதுகள்மலரிலிருந்தாற்சிவ பூசைக்காகாதென்றெண்ணி, சுத்தசன்மார்க்கசிவயோகமுனிவராகிய ஆழமுனிவர்கைகால் நகங்கடோறும் கண்களையும், மரத்திலேறி மலர் பறித்தல் அசுத்தமென்றுதாவிப்பறிக்கப்புலிக்காலையுந் தவஞ்செய்து

திருவெண்காடருக்குத் தாயார் சிவபூசைத் திறமுரைத்தது. உகு பெற்று விபாக்கிரபாதனென்ற திருநாமத்தோடும்விளங்குவதுகேட்டிலை போ? விஷ்ணு, முருகனையனர், சிவகோசரியார் கதைகளையும் விசாரிப் பாய். நிவேதனத்திரவியங்களுடைய சிலாக்கியத்தைப்பற்றிய சரிதத் துள், இளையான் குடிமாறனர், தென்முளைவித் தமுதாக்கியதும், அரி வாட்டாயனர் செங்கெலரிசி மாவடிகீரை கமரில்விழ வூட்டியறுத்ததும், கோட்புலியார் சம்பாதெற்கோட்டை யழித்த வுறவினரைத் தண்டித் ததும், சிறுத்தொண்டதேவர் கறிபழுதுக்குத் தக்கது வேறுகிடையா மைபற்றித் தமது மகனை யறுத்தாட்டியதும் நீபலதரமும் கேட்டிருக் கின்றீரே. தாபதிப்பெருமைக்குங்கிலியக்கலயனரும், கணம்புல் லரும், கலியனரும், நமிநந்தியடிகளரமேசான்று.

ஆதலால், அப்பெரியோர்களைப்போலத் திருமஞ்சனம் திருப்பள் ளித்தாமம் நிவேதன பதார்த்தமுதலியவைகளைச்சிரத்தையோடும் புனி தமாகவும் தக்கதாகவும் சேகரிப்பதென்ற வுன்னிளம் பருவத்திற்கு அசாத்தியம். தக்கமுயற்சிசெய்ய வுன்மேனிதாங்காது. ஆனபடியால் உனக்கு இவ்விளம்பருவம்போய்க் குமாரப்பருவம் வந்தபோது உன் னெண்ணப்படி சிவபூசைச்செய்ய முயல்வது தகுதியென்றார்.

அங்ஙனம், தாய்வாக்கியத்தினைக் கேட்ட திருவெண்காடர், புன்முறுவலோடு அன்னையை வலம்வந்து பணிந்து நின்று, தா யே! எனது சிறுவிண்ணப்பத்தினைக் கேட்பீராக. தேவரீர் கூட்ட ளையிட்டவுண்ணம், சிவன்பெரியோன் என்பதிலும் அரியோன் என்பதிலும் எள்ளளவும் சந்தேகமேயில்லை. அவ்விடயத்தில்வே தாகமங்களே சத்தியஞ்செய்து முறையிடுகின்றது. அன்றியும், இவ் வுலகம் அவ்வுண்மையறிவதிற்படும்பாடு நாம் கண்டிருக்கின்றோம். ஆதலும், "பத்திவலையிற்படுவோன்" என்றும், "அளவறுப்பதற் கு அரியவன் இடையவர்க்கு, அடியவர்க்கு எளியான்" என்றும் பெரியபெரியோர் அனுக்கிரகித்திருக்கின்றனர். அன்றியும், "அன்புசிவமிரண்டென்பாறிவிலார்-அன்பேசிவமாவ தாருமறிகிலர்- அன்பேசிவமாவ தாருமறிந்தபின்-அன்பேசிவமா யமர்ந்திருந்தாரே" என்றும், "என்பெலிறகா யிறைச்சியறுத்திட்டுப்-பொன்போற்கன லிற் பொரியவைறுப்பினும்-அன்போடுருகி யகங்குழைவார்க்கன்றி-என்போன்மணியினை யெப்தவொண்ணுதே" என்றும், "அன்பினுள் ளான்புறத் தானுடலாயுளான்-முன்பினுள்ளான் முனிவர்க்கும்பிரான

வன் - அன்பினுள்ளாகி யமருங் அரும்பொருள் - அன்பினுள்ளார்க்கே யணைதுணையாமே.” என்றும் பெரியோர் மந்திரவாக்கியம் கூறியது. ஆகவே, “தாணெருகாலஞ் சயம்புவென்றேறத்தினும் - வாணெருகாலம் வழித்துணையாய்நிற்கும் - தேணெருபாற்றிகழ் கொன்றையணிசிவன் - றாணெருவண்ணமெ னன்பினின்றானே” என்ற சிந்திப்பு, அச்சிவ னருளா லென்னெஞ்சத்தி லுண்டாயிருக்கின்றது. அதுவுமன்றி, சிவ பூசைசெய்வதற்குச் சாதியாவது, ஆச்சிரமமாவது, தரவியமாவது காரணமாவதில்லை, தேவர் முனிவரொழிய மானுடருள்ளே பிராம ணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற நாற்சாதியாருள் யார் தான் பூசிக்கவில்லை. பிரமசாரி முதலியவர்களுள் யார் பூசியாதவர். தீண்டாத பஞ்சமத் திருமேனியடைந்த திருநாளைப்போவார் அருக் சியாதொழிந்தாரோ? மானதபூசை விடாதுசெய்தார். மானுடருக் க்கட்டும் பசு, புலி, யானை, நரி, குரங்கு, கருடன், வலியன், நாகா, ஆமை, பாம்பு, சிலந்தி, நண்டு, எறும்பு, முதலிய மிருகம், பறவை, நீர்வாழ்வன, ஊர்வனவுமாகிய சிற்றுயிருரும் பூசித் தருள்பெற்றனவென் று கேள்விப்பட்டுள்ளோமே. இச்சிற்றுயிர்வர்க்கங்களெல்லாம் அன் பன்றி வேறு என்ன பொருளைக்கொண்டு பூசித்தன. பரிபூரணனை சிவ னுக்கு யாஞ்செய்யுஞ் சுத்தியும் புனிதமும் எவ்வளவினவாம். “பொ ருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள்போல்விளங்கச் - செருப்புற்றசிரடி வாய்க்கலசமூனமுதம் - விருப்புற்றவேடனர் சேடறியமெய்குளிர்ந் தங் - கருட்பெற்றுநின்றவா தோணேக்கமாடாமோ” என்று இழிந்த கொலைபயிலும் வேடசாதியிற் பிறந்த கண்ணப்பதேவர், செருப்புக்கா லால் நிருமாலியங்களைந்து, வாயெச்சிலோடு கலந்த நீரா லபிடேக மாட்டித் தாழ்ந்த வூன முன்னே தாமெச்சிற்படுத்திச் சுவைபார்த் தூட்ட, அப்பூசைக்கு உவந்துண்டு பெருமானவர்க் காறுகாளில் அணுக்கிரகஞ் செய்து திருவடிநீழல்கொடுத்த பெருமையைப் புகழாத மந்திரங்களுண்டோ? சிலந்தி வாயெச்சினூலாற் பந்தலிழைத்துக் கோச்செங்கண்ணாராகப் பிறந்து கதியடைபவில்லையோ? கோயில்விள க்கு நெய்யைத் திருடப்போன எலிவால் அவ்விளக்கணையாமே தூண் டியதான் மாவலிச்சக்கரவர்த்தியாய் மூவுலகாண்ட கதை யறியாதா ருண்டோ? மூசுக்கலையாகிய குரங்கொன்று அன்பு பத்தி ஒன்று மறி யாது வெறும் வில்வத்தழையைச் சாதியியற்கையாற் பறித்தெறிந்தும் மூவுலகும் மெச்சு மூசுகுந்தனைகப் பிறந்து முத்திபெற்ற செய்தியை

திருவெண்காடருக்குத் தாயார் சிவபூசைத் திறமுரைத்தது. நீக மறந்தவருண்டோ? பாவியன் சிறுவனென் றென்னைத் தடுக்கின்றீர். ஐயோ! சிவபூசைசெய்து, எல்லாவுயிங் கொல்லுகின்ற எமனுடைய யிரை வாங்கிய மார்க்கண்டேயமுனிவர் பாலரன்றி விருத்தரோ? உத்தானபாதராஜன் மகனை துருவன் டாற்றுந்தாய்க் கொடுமை சகியாது போய்ச் சிவபூசை செய்து அழியாத வுபர்ந்த பதம் பெற்றகாலம் பாலியமன்றிக் கிழவயதோ? நாரதமுனிவராலே தனக்கு இடர் பயமுள்ளதென்று கேள்விப்பட்ட கிரகபதி என்னும் பிராமணகுமாரன் வழுவயதில் சிவபூசைசெய்து ஆண்டவன் திருவருளால் அக்கினிபதம் பெறவில்லையோ? வியாக்கிரபாத முனிவர் திருமகனை ஸ்ரீ உபமன்னியர் சுவாமியிடத்திற் பாற்கடல் பெற்றது எந்தக்கிழவயதிலென்று நினைக்கிறீர்? சிசுப்பருவத்திலல்லவா? சுகமுனிவர் கருவிலே தானே யோகமார்க்கத்தால் மானதபூசை செய்யவில்லையா? புலோமருடைய பெண் தாய்வயிற்றிலே சிவத்தியானத்துடனிருந்து வெளிவந்தபோது பூருவஜானமுடையளாய் நாபிக்கொடி யறுப்பதன்முன்னே யாவரும் அதிசயிக்கும்படி தாயை யழைத்துச்சிவபூசைசெய்தற்குரிய திருமஞ்சனம் பத்திரம் புட்பமுதலிய உபகரணங்களைக் கொண்டுவரும்படி சொல்லி வரவழைத்துப் பூசிக்கவில்லையா? அம்மணீ! நீர் என்தேகந் தாங்காதென்று எண்ணித் தடைப்படுத்தவேண்டாம்; பிள்ளைகட்கு நன்மார்க்கம் போதித்து நல்வழியிற் செலுத்துவது தாய்தந்தையர் கடன், தாங்கள்செய்த முன்றவைப்பயனல் அந்தமக்கட்குத் தம்முயற்சி யின்றி நல்ல புத்திபிறந்து நற்கருமஞ் செய்யத்தொடங்கினல் தடுப்பதுண்டோ? அம்மா! என்னைத் தடைப்படுத்துவது தக்க தல்லவென்று மீட்டும் பணிந்து நின்றார்.

அதுகண்ட அல்வம்மையார் தம்முள்ளே பெருங்களிப்பினையடைந்தவராய்த் திருமகனைநோக்கி, ஐயா! உன்னெண்ணப்படியேயாக; ஆயினும், பூதசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, ஆன்மசுத்தி, மூர்த்திசுத்தி, என்னும் பஞ்சசுத்தியும் செய்தபினன்றிச் சிவபூசை செய்யலாகாது. அப்பஞ்சசுத்தி செய்வதற்கு மந்திரநாயகமாயுள்ள ஸ்ரீபஞ்சாக்ஷரம் சித்தியாயிருக்கவேண்டும். ஆதலால், முதலில் சமயதீக்ஷைபெற்று, எவ்வளவு தீவரணங்களும் அதிமபடிகம் ஒருவருடகாலமாயினும் பஞ்சதருமத்தோடு தினம் பன்னீராயிரவுருவாகச்செபித்தால் மந்திரசித்தி யுண்டாம். அப்பால் சுவாமினியைப் பூசிக்கத்தக்க தரம்வரும். இப்படி வே

தாகமங்கள் விதித்தன. பஞ்சதருமமாவது, விபூதிதாரணம், உருத்திராக்ஷதாரணம், ஸ்ரீருத்திரத்தியாக பாராயணம், சிவதரிசனம், சிவநாம வேதனப் பிரசாதங்ங் கொள்ளல் என்பலவகளாம். இவற்றுள் மாதர்களுக்கு ஸ்ரீருத்திர பாராயணம் கூடாது. ஆனாலும், அந்த உருத்திரத்தின் இதயமாயிருக்கிற ஸ்ரீபஞ்சாக்ஷரத்தியானம் கூடும். இதை பிரமா விஷ்ணு உருத்திரர் மகேச்சுரர் சதாசிவமூர்த்தியும் தியானித்துக்கொண்டிருக்கிறார்கள். மஹாமாதாவாகிய உமாதேவி, ஸ்கந்தர், கணராஜர், நந்தி, பிருங்கி, பிங்கிருடி, வாணாசுர், பானுகம்பராதிபிரமுக நாதீசுவரர்களும், இந்திரன்முதலிய உலகபாலகரும், வசு, உருத்திரர், ஆதித்தர், மருத்துக்களுமாகிய முப்பத்துமுக்கோடி தேவரும், முனிவரும், அசுரரும், யக்ஷரும், சித்தரும், கருடரும், காந்தருவரும், வித்தியாதரரும், கின்னரரும், கிம்புருடரும், குய்யகருமாகிய மற்றெல்லாக் கணங்களும் நித்தமும் தியானிக்கின்றார்கள். இதுமந்திரசித்தி ஒன்றைத்தான்கொடுக்குமென்று நினையற்க. "துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்திலும், நெஞ்சகனைகந்து நினைமிறைடாறும், வஞ்சகமற்றடி வாழ்த்தவந்தகூற், றஞ்சவுதைப்பனவஞ்செழுத்தே" என எடுத்தவெல்லாமுபாயமுமிதுவென்று விதித்திருக்கின்றது. இப்பிறவியிலும், "தொற்றுணைவேதியன்சோதிவானவன் - பொற்றுணைதிருந்தடிபொருந்தக்கை தொழுக் - கற்றுணைபூட்டியோர்கடலிற்பாய்ச்சினும் - நற்றுணையாவதுநமச்சிவாயவே" என்றனுபவமந்திரவாக்கியமுமுண்டி. கல்லோடுகம்மைக்கட்டிக்கடலிலிட்டாலும் அவ்வைந்தெழுத்தைத்தொண்டிபிழைக்கலாம். "காணேமேயாதவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்" என்று அடிகள் அருளப்பாடிருந்தால்வேறுன்னசொல்லலாம். "ஓதிய நம்மலமெல்லா மொழித்திட்டவ்-வாதிதனை விட்டிலையருட்சத்தியாற்-றீதில்சிவஞானமோகமேசித்திக்கும் - ஓதுஞ்சிவாயமலமற்றவைண்மை மே" எனவும், "நமவென்னு நாமத்தை நாவிலொடுக்கிச் - சிவவென்னு நாமத்தைச்சிந்தையுளேற்றிப் - பவமதுதீரும் பரிசுமதற்றால் அவமது தீரு மறுபிறப்பன்றே" என்றது திருமந்திரம். இதனைச் சித்திடைற்ரூர் சரித்திரங்களெவ்வளவென்று கூறுவேன். அக்கதைகளைக்கூறுந புராணமில்லை. ஆதலால், நீயும் நல்ல குருவினிடத்தில் அப்பஞ்சாக்ஷரத்தை உபதேசமுறையிற்பெற்றுச் சிலகாலம்அதனையனுட்டித்துப்பின் சிவபூசை செய்கவென்று கூறினர். கேட்டீர்களோ முனிவர்களே! இவர்களன்றே தாயும் பிள்ளையுமென்று சொல்வதற்குத் தகுதியான

திருவெண்காடர் சிவபூசைசெய்ய தாயாரிடம் விடைபெறல். கூட

வர்கள். இப்படிப்பட்ட அறிவும் துணிவும் யாருக்குண்டாம். இவர் கள் சரித்திரங்கேட்பதே நமக்குப் பெரிய விலாபமாம்.

திருவெண்காடர் சிவபூசைசெய்வதற்குத் தாயாரிடத்தில் விடைபெறுதல்.

கேளும் முனிவர்களே! அப்பால்! பெற்ற வன்னையார் சொல்லிய வாக்கியத்தைக்கேட்ட திருவெண்காடர் அத்தாயார் திருமுகநோக்கி அம்மணீ! தேவரீர் கூறியவெல்லாஞ்சத்தியமே! ஆயினும் வேதாகமம் சிவபூசைக்குக் காலவரையறுத்தது, கேவலம் நிரதிகாரிகளாகிய ஆபற் சைவர்களுக்கன்றிச் சரதிகாரிகளாகியசுத்தசைவர்களிலும் மரணபயங் கொண்ட தீவரர்களுக் கல்லவென்பது தேவரீருக்கே தெரிந்த விடயம். நீரும் உமது கணவனாரும் பரம்பரையிற்றூனே சுத்தசைவர்கள். அன் றியும் அளவிறந்த சிவபுண்ணியமுடையவர்களாய்ப்பரிபாக முற்றுத் தவமொருவடிவ மானீர்கள். உங்கள் சார்பினிற்பிறந்த நான் இப்போ து எவ்வளவு அடக்குவனேயாயிருந்தாலும் தேகம் நிலையல்லவே "அன் றறிவோமென்னுதறஞ்செய்க மற்றது, பொன்றுங்காற்பொன்றுத் துணை" என்று மூதறினர் திருவாணையிருக்கின்றதால் காலம் வீணைக் கழிக்கலாகாதென்ற பயத்தாற் பிடிக்கப்பட்டவனையிருக்கின்றேன். இதுவரையில் விவ்வுலகத்தில் ஆபத்தையடைந்தவர்களெல்லாம் சிவபூ சையாலவ்வாபத்தையொழித்துச் சுகமடைந்தார்களென்று எல்லாப் பெரியோராலும் நூல்களாலும் கேள்விப்படுகின்றோம். ஆதலால், இன் னம் என்னை யிவ்விதப்பிரசங்கத்தால் மனநிலை சோதிப்பதற்கு முயலா மல், பெற்றுவளர்த்த கருணையோடு என்னை அனுக்கிரகிக்கவேண்டும். இனியென்னையிர்தரியாதென்று பலமுறைநமஸ்காரஞ்செய்து மீட்டுஞ் சொல்லுகின்றார்.

அம்மணீ! மற்றொரு செய்தி கேளும். முன்னொரு காலத்தில் நமவனுகிய யமதருமராஜன், நரகவாசிகளை விசாரித்து வருகையில், அவருட் சிலர் தீவாய் நரகில் விழுந்து கண்வெந்து, முகந்தீந்து, உடம்பெல்லாங் கொளுந்துண்டு, நாவறந்து காகசோகப்பட்டு அடிக் கடி மயங்குவதும் தெளிவதுமாயிருந்தார்கள். சிலர் ஈர்வாளப்பு மய மான நரகில் கண்பொபரக் காது துருவுண்டு நாவறுபட்டுப் பற்றகர்ந்து உடம்பெல்லாங் குத்துண்டு புண்பட்டுச் சீழும்புண்ணீருமொழுகப் புழுக்கள் சோரத் துடிதுடித்துக் குடர் நடுங்கப் பயத்தான் மூர்ச்சிப்

ப்தும் அடிக்கடி யெழுந்திருப்பதுமாக விருந்தார்கள். சிலர் பேரிருட் டறையில் ஒருவர்க்கொருவர் தலையோடு தலைதாக்கித் தோள் துடை கால் முதலிய வுறுப்புக்களொன்றோடொன்று தாக்கி முறிந்துஞ் சிதை ந்தும் தகர்ந்தும் நசுங்கியும், வழிதுறை தெரியாது குழிவீழ்ந்தும், மேடுமுட்டியும், சேறுபாய்ந்தும், பரன்முள்ளிற்புரண்டும், சுவரின் மோதியும் சோர்ந்தலைந் தலைதிப்பட்டிருந்தனர். சிலர் மலம்புழு முதலி யவற்றை யருவருப்போடுண்டும் பசி தணியா துடம்பலுக்க வருந்திப் பதைபதைத்துச் சோர்ந்து கிடந்தனர். சிலர் பலபல நோய் நலிக்கவுப சரிப்பாரின்றிப் பாம்பு தேள்முதலிய விஷசெந்துக்கள் வருத்த கொசு மூட்டை யெறும்பு முதலியவைகளா லிமிசையுற்றுக் கணமேனும் இளைப்பாறுதற்கிடமின்றி யுழன்று வருந்தியும் அந்தோ ! அப்பா ! அம்மா! ஐயா ! வென்று பேரிரைச்சலிட்டுத் தலை யடித்துக்கொண்டு மிருந்தனர். இங்ஙனம் அந்தரக பேதங்களில் வருந்துகின்ற வருத்தத் தினை நெஞ்சால் நினைப்பதற்கும், வாயால் வருத்துக் கூறுவதற்கும், கண்ணாற் காண்பதற்கும் அந்த தண்டகர்த்தாவாகிய கூற்றுவனுக்கே சகியாமல், உடனே சித்திரகுத்தரென்னுங் கணக்கரைத்தூதுவரால் வருவித்து இவர்கள் என்ன தினைபெப்போது எவ்வளவு செய்தனர், இத்துன்பத்தினை எவ்வளவுகாலமாகவனுபவிக்கின்றனர். இவர்களுக்கு எப்போது விமோசனம். ஐயோ! எனக்கே பார்க்கவுங் கேட்கவும் சகி யாமற் பரிதாபத்தை விளைக்கின்றதே! வினைகொடிதுகொடிது. ஆ! ஆ! இதோ இவர்களைக்கண்ட மாத்திரத்தில் அத்துன்பமுழுவதும் நானே படுவோனுயினேன், ஆதலால், நீங்களிவர்கள் கணக்கினைப்பார்த்து வருத்துரைமின்க ளென்று கூறக்கேட்ட, அக்கணக்கரும் வந்தித்து அவர்கள் வினையே டெடுத்தாராய்ந்துரைப்பாராயினர். கேளும்! தரும ராஜனே ! அந்தத்தீவாய் நரகத்து வருந்துவோர்கள், நல்ல கல்விப் பொருள் செல்வப் பொருளிரண்டினைத்தேடியும், அதுகொண்டு சிவ பூசை தோத்திரம் தியானம் திருப்பணி யிவற்றைச் செய்யாமலும் சிவநாம சங்கீர்த்தனம் கேளாமலு மிருந்து தம்வாழ்நாள் முழுவதும் உண்டும் உடுத்தும் பூண்டும் களித்தும் வீணை கழித்த பாவியர்கள். பக்கத்தில் ஈர்வா ளெரியம்பால் வருத்தப் படுகின்றவர்களோ வெனில் சிவ நிந்தை குருநிந்தை அடியார் நிந்தைசெய்கின்ற பாதகர்களோடு நண்புகொண்டும், சைவதூஷணையைக்கேட்டு மனம்பொறுத்தும் அத் தூஷணைசெய்பும் அவர்களோடு பழகியும், மருவியும், அவர்கள் தங்கு

திருவெண்காடர் சிவபூசைசெய்ய தாயாரிடம் விடைபெறல். கூடு

மிடத்திருந்தும், அவர்களை யுறவாகக்கொண்டும், அவர்களைப் பார்த்

தும் அவர்களோடு விழைந்து பேசியும் வயிறுவளர்த்துத் திரிந்த மகா

பாவியர்கள். இருட்டறை கிடந்த கொடியோர், வேதம், ஆகமம், புரா

ணம் மிருதி முதலிய கலைகளை நன்கோதி யுணர்ந்தும்அவற்றினுண்மை

யுணராது, மாயைவயப்பட்டு ஆணவத்தராகித் தருக்கித்து, உண்மை

யொருக்கால் நெஞ்சுட்டோன்றிய வழியும் கல்வி முதலிய செருக்கால்

விழுங்குற்றவராகிச் சிவநிந்தை செய்து சைவதூஷணைக்குச் சிறிதும்

வாய்கூசாது ! " யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகி யெங்

கண், மாதொருபாகனுரும் வருவர் மற்றைத் தெய்வங்கள், வேதனைப்

படு மிறக்கும் பிறக்குமேல் விளையுஞ் செய்பு, மாதலா லனைவிலாதா

னறிந்தருள் செய்வனன்றே" என்றவுண்மையைக் குருமுகத்தாலறி

யாது, பேத பாவனையால் அறிவு மயங்கி, என்றெய்வம் உன்றெய்வம்

என்று பிரித்தும்; பெரிது சிறிது என்று தருக்க வாதங்கள் செய்தும்,

கொடுவினை விளைத்து வாழ்நாள் வீணாளாகச் சிவனருள்வேண்டுமான்ம

கோடிகளைப் பெருந்தேவ ரென்று மருண்டு, சிவனடியார்களைப் பிழை

கூறி யுழன்ற பெரும்பாவிகளாம். மலம் புழுக்களைப் புசித்துப் பசியால்

வருந்துந் தீயோர், கடவுளில்லை, முத்தியில்லை, சொர்க்க நரகமில்லை,

அறம்பாவமில்லை, ஆன்மாவென்ப தொன்றில்லை, இவ்வுடம்பினையோம்

புவதே பொருளென்று "எவ்வுயிரு மீசன் சந்நிதியேயாகும்" என்ற

படி. சிவன் கோயிலென்று வேதாகமங்களாற் கூறப்பட்டுள்ள பலவுயிர்

களையும் கொன்று அவற்றின் ஊனைத்தின்று ழுலும் கொடியராயினை

ராம். நோயாலும் விஷ சொந்துக்களாலும் வருந்துகின்ற பேதையர்,

"தானலாதுலக மில்லைச் சகமலாதடிமையில்லை" என்ற தமிழ் வேத

மாகிய தேவாரத்தின் ஆணையைக் கடைப்பிடித்து, எல்லாவுயிர்களும்

பரமேசுவர னடிமையாதலால் முற்றுக்கும் அடிமை என்று அடி

மைத்திறஞ்செய்ய வறியாமற்போனதும், அதிகார பேதம் நோக்கி

"மாலற்நேய மலிந்தவர்வேடமும், ஆலயந்தானு மரனெனத்தொழுமே"

என்றதனையாவது கடைப்பிடித்துப் பத்திசெய்யாமல் சிவகாருணியம்,

பற்றறுதி, கடவுட்பத்தி, மெய்புணர்வும் அமைந்திருந்தமை கண்ணுரக்

கண்டும் காதாரக்கேட்டும், அழுக்காறு காரணமாக நல்லடியார்களுக்

கும், சிவாலயங்களுக்கும் பலதீங்குகளை விளைவித்துப் பெரியோர் மன

ம் வருந்தும்படியான தீமைகளைத் தாமேசெய்தும் பிறரைக்கொண்டு

செய்வித்தும் செய்வார்க்குத் துணைபோகியும் இருந்து வாழ்நாளைக்

கழித்த இழிந்த பிறப்பினராம். கேளும் காலாதனே! இவர்கள் எப் போது இந்நாகில் வந்தாரெனில் நாமறிந்தபடியல்ல, முன்னைந்தகற் பமோ தெரியவில்லை. இக்கணக்கு எங்களாலெழுதப்படுவதல்ல. தரும தேவதையா லெழுதப்படுவது. அது என்றும் நித்தமாயுள்ளதாதலால் இவ்வுண்மை அத்தருமதேவதைக்கே தெரியும். இவர்களுக்கிந்த நரக வேதனை யொழிவுகாலம் இக்கணக்கில் வெளிப்பட்டதன்று. ஆலைல்கற் பாந்த விமோசனம் என்றிருக்கிறது. அது எந்த கற்பாந்தமோ வெ ன்று சொல்லக்கேட்ட தருமராஜன் திடுக்கிட்டு நடுநடுங்கி யுடல்பதற நாக்குழற வஞ்சியோடி யப்பாவிகளைப் பார்த்தேதாடம் பரிகாரமாம் படி சிவத்தியானம் செய்யலாயினர் என்று ஆகமங்களுள் சிவநிந்தை செய்வா ரிழிவுகூறுங் கண்டங்களிற் கூறப்பட்டுள்ளன.

சிவபூசையாகிய பெருந்தவம் எளிதிற்கிடைப்பதலல. தாயே! அதுவும், "தவமுந்தவமுடையார்க் காகுமவமதனை, யம்திலார்மேற் கொள்வது" என்று பெரியோ ராணையிட்டிருப்பதால் சித்திப்பது அருமையே. ஆதலால் முன்செய்தவக்குறையா லித்தனைகாலம்வீணை போய்விட்டது. "பெரும்பற்றப் புலியூராளைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே" என்றது தமிழ்வேதமாதலால் போனநாள் யமனுடைய நாளாகப்போயினும் இனியுள்ள நாளாவது நம்முடைய நாளாகும்படி சிவபூசை செய்வோமே. சிலர் சிவபூசை மோக்ஷத்தையன்றோதருவது அதனைப் பின்பு பார்த்துக்கொள்வோம், இப்போது நன்றுப்பப் பொரு ளைத் தேடிப்புண்டுடுத்துப் பூண்டு இம்மைச் சுகத்தை யனுபவித்தொ ழிப்போமென்று, காலைதொட்டு மாலையளவுங்கடாப்போ லுழைத்தும் உழைப்புக்குத் தக்க கூலிபெறாது அரிதே சிறிது பெற்றுவந்து, அச் சிறிதுந் தங்குடும்பப் பாதுகாப்புக்கே பற்றாது "துப்புரவில்லார்து வரத் துறவாமை, யுப்பிற்குங் காடிக்குங் கூற்று" என்ற பெரியோர் வாக்கியத்தை நினைத்து நினைத்து இரவெல்லாம் உறக்கமின்றி வருந் திக்கிடந்து விடிந்தளவில் வேம்புதின்னும் புழுப்போல விணவசத்தாற் மயங்கி மீட்டும் பழையபடி உழைத்து வருந்துவர். அந்தோ! அது அவர் முன் சிவபூசை செய்யாதகுறை. "இலர்பலராகிய காரணோநம் பார், சிலர் பலர் நோலாதவர்" என்றபெரியர் வாக்கியம் வீண்போ மோ? அப்படிக்கின்றி சென்மாந்தரத்தில் நீங்கள் நல்ல சிவபூசைசெய் திருந்தபடியால், இப்போது உங்களுக்குக் குறைவற்ற செல்வம் ஆண் டவன் அனுக்கிரகம் செய்திருக்கிறார். ஆகையால் உங்கள் வயிற்றிய்

பிறந்த அடியேனும் இன்னும் மேலான செல்வத்தைப் பெற முயற்சி செய்ய விரும்புகின்றேன், அம்மே! இதற்கு நீர் தடைபுரிவது தருமமோ! தகுதியோ! மக்களுக்கு ஆக்கம் தேடுவதன்றோ பெற்றோர் கடன். ஆதலால் இனிமறுத்துத்தேவரீர் ஏதேனு மொன்றுகூறுவதாயிருந்தாலு மென்யாக்கை நீங்கும்போலும் என்று அஞ்சலி செய்து நின்றார். அப்போது, ஞானகலாம் பையாகிய அவ்வுத்தமத்தாயானவர், மகளர் வார்த்தைகேட்டு வியப்பும் பேரானந்தமு மடைந்து, இவனுக்கு இவன்றாத்தின் மேம்பட்ட அறிவு சேர்ந்தது பூர்வபுண்ணிய மென்பதற்குச் சந்தேகமில்லை. இவன் கொண்ட கருத்து இவனளவிற் படவுவதன்றி, "மூவேழ்சுற்றமுமாணுறு நரகிடை யாழாமேயருளாசே போற்றி" என்ற மந்திர மொழிப்படி பெற்ற தாய்தந்தையளவுமே யன்றி யவர் முன்னோர் மூவேழு காலுக்கும் பெரும்பேறுகத் தக்கதே யாம். எந்த குலத்தில் எவனுக்கு ஈசுரபத்தி, அறிவு, ஒழுக்கம், சிவ காருணியம் சிறந்திருக்கின்றவோ அக்குலந்தான் பெரியதென்று பெரியோர் கூறுகின்றனர். அச்சைவன்பிறப்பே யுயர்பிறப்பு. அவன்றான் உலகத்திற் பிறந்தவன். சாகாமணிதனுமவனே ஆதலால், இவன் கனவு கண்டதிற் பழுதின்று. உண்மையே இனி நாம் தடைசொல்வது தகுதி யல்லவென்று துணிவுற்று, மைந்தர்திருமுகநோக்கி, ஐய! வெண்காடா! அஞ்சற்க! கவலற்க! உன்கனவின் வண்ணம் திருவெண்காட்டினையடைந்து, செய்கடன் முடித்துச் சிவதரிசனஞ் செய்து உன்னுடைய வருமளவும் காத்திருக்கக் கடவையாகவென் றருளிச்செய்தார் அப்போது, அவர்கவி விடிந்தாற்போலும் போதுவிடிந்தது. சூரியனு முதயமாயினன்.

திருவெண்காடர் ஆசிரியரைநாடித் திருவெண்காடு சேர்தல்.

உடனே ஞானகலையம்மையார் எழுந்திருந்து காலைச்செய்கடன் கழித்து, சகலகலைகளு முணர்ந்த பெரியரைத் தருவித்து அருச்சித்து பசரித்து, அவர்களுக்குத் தம்மகனர் கனவைக்கூறக் கேட்ட அச்சான்றோர் அதிக ஆச்சரியமும் களிப்புமடைந்து, அவ்வம்மையாரை நோக்கி, அம்மே! உமது புதல்வர் சாதாரணமான மானுடதேகியல்ல ஏதோ காரணதேகியாயிருக்கவேண்டும் பெருந்தேவர்க்குமரிய சிவனருள் இச்சிறுவயதில் வருந்தாது பெற்றனர். இவர் மகவும் அல்ல. பெரியரிற்பெரியர். ஆதலால் இவர் கருத்தின்வண்ண மிசைவிப்பதே கடனென்றார்கள். அப்போது செய்கடன் முடித்திருந்த வெண்காடனர்,

உடனேதம்மருமைத் தாயாரைத் திருவெண்காட்டுக்குப் போகும்படி முன் செலுத்திப் பின்னே சிவார்ச்சனைக்குரிய திரவியங்களோடு தாமும் அங்கிருந்த சிவநேசப்பெரியோருமாகப் புறப்பட்டுச்சென்று திருவெண்காடென்னும் அத்தெய்வத்திருப்பதியையடைந்து, காவேரி சங்கமுகத்துறையினீராடி விபூதி உருத்திரசாதனமணிந்து உள்ளன்பு மிகச் சென்று சங்கமேச்சுரனை விதிமுறையே தரிசித்து வணங்கி அடியார்களைப் பூசித்து அவர்கள் வெறுக்கும்படி வேண்டுவனவற்றைக்கொடுத்துபசரித்து, அவர்கள் இன்முகத்தையும் அருளப்பாட்டையும்பெற்று மாடவீதிவலம்வந்து ஆலயத்தையடைந்து கோபுரவாயிலைப்பணிந்து சென்று முக்குளநீரிற் சங்கற்பவிதிசெய்து மூழ்கிப் பலதானங்களையுஞ் செய்து பட்டுடுத்துத் திருவெண்ணீறுத்தூளனஞ்செய்து திரிபுண்டரமாகத் தரித்து, சிரம் கண்டம் மார்பு தோள் முன்கையிலும் விதிப்படி உருத்திரசாதனமும் புனைந்து சிவத்தியானத்தோடும் சைவவேதியர்கள் புடைசூழக் கோயிலுட் புகுந்து வலம்வந்து கணபதி சந்நிதிசென்று விசேடமாகத் திருமஞ்சனம் செய்வித்து பத்திரபுட்பங்களாலும் அறுகாலும் அருச்சித்து, இலட்டுக முதலிய அபூபவர்க்கங்களும், அவல், கடலை, பொரி, எள், கரும்பு வாழை, தெங்கு முதலிய பலவகைகளுமம் வைத்து நிவேதித்துத் தூபதீபாராதனைகளை நடத்தி வணங்கித் தோத்திரம்பண்ணி நிர்விக்கினமுண்டாம்படிப் பிரார்த்தித்து அருள்விடைபெற்று, சிவனடியார்கள் பந்துக்கள் தாய்முதலியவர்களோடு சிவசந்நிதானத்திற்குவந்து திருநந்தியைப்பணிந்து சென்று அவ்வாறே சுவாமிகளையும்மஹாதேவியாரையும் அருச்சித்துப்பணிந்து ஆசிரியர் வரவுநோக்கி நின்றனர்.

அப்போது அங்கே பிவர் கனவு நனவாகக் கோடிமன்மதரும் வெட்கப்படும்படி, முருகப்பிள்ளையார் தமது ஷண்முகங்களையுங்கரந்தோர் வடிவெடுத்தாற்போலும் அழகிய திருமேனியுடையராய்ச்சடைமுடி விளங்க, அனையின் முஞ்சிப்புல்லைரஞாணும் மார்பில் முப்புரிநூலும் மான்றோலும் பிரகாசஞ்செய்ய, விபூதி உருத்திரசாதன முழுவதும் பேரழகுசெய்ய, வேதாகமம் முதலிய கலைகளை முற்றுமுணர்ந்த தன்மை வெளிப்பட, வேதமந்திர பாராயணஞ்செய்யு நாவினராய்ச் சைவவேதியப் பிரமசாரியொருவர் வந்து திருவெண்காட்டுப் பிள்ளையார் எங்கே யெங்கே யென்றங்கிருந்தவர்களை விலுவிக்கொண்டே ஆலயத்துள்ளே பிரவேசித்தார். பிரவேசித்தவளவில் அங்கிருந்த அந்த

ணர் யாவரும் கண்டு, பேரன்பும், பெருவியப்பு முடையரா யெதிர்சென்று, ஐயோ! தேவரீர் எங்கு நின்று மெழுந்தருளுகின்றீர், திருவெண்காடனைத் தேடுகின்றீர் யாதுகாரணம் என்று விளவ, அம்மறையவர் குலக்கொழுந்து, அந்த பிராமணேத்தமர்களை நோக்கி, ஐயரே! நீவிர் அறியலாகாத தொன்றுமில்லை; ஆயினும், எம் வரலாறு முற்றும், சிறுவராகிய திருவெண்காடர்பால் யாமடைந்த வளவில் தெரிந்து கொள்ளலாமே யென்று சொல்லிக்கொண்டே வருகையில், எதிரே அப்பிள்ளையார், தம் அன்னையாகிய ஞானகலை அம்மையாரோடு, சிவபெருமான் றிருமஞ்சனம் அருச்சனை முதலியவற்றிற்குரிய திரவியங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கக்கண்டு, அவர் முகக்குறி, தேகவளம், செயலின்றிருத்தம், ஒழுக்கமுதலியவற்றாலே யிவர்தாம் வெண்காடனென்று எளிதிலுணர்ந்தவராய் மனமகிழ்வோடு மின்முகங்காட்டி மாதுரியமான சொல்லால், ஐய திருவெண்காட! உன்னைப் பார்க்கவேண்டு மென்னும் விருப்பத்தாலே யிங்குவந்தோம். உன்னெண்ண முழுவதும் யாமறிந்துள்ளோம். அக்கருத்து நிறைவேறுங்காலமடுத்தது என்று சொல்லி எதிர்நின்றனர்.

திருவெண்காடர் குருதரிசனஞ் செய்தல்.

அவ்வளவில், அத்திருவெண்காடர் அக்கோலமுற்றுநோக்கி அவர் திருமுகக்கருணைபெற்று, நாடம் கனவிற்கண்டபடி, நம்மையாள வெழுந்தருளிய கருணையுருப்போலும்; எம்பொருட்டு வடவாலநிழலினிருந்த பரமகுரு விவ்வண்ணமெழுந்தருளியபடியோ? என்றெண்ணி, ஆராமையும் அன்புமேலிடக்கண்களில் ஆனந்தநீர் பெருக,நெக்குருகி,உடல் புளகம் போர்ப்ப நெஞ்சங்களைந்து; அடியற்ற பனைபோல அவர் திருவடிகளில் விழுந்து பல்லாயிரமுறை அட்டாங்க பஞ்சாங்க விதியால் வணங்கிச்சொல்லைகயறியாது சொற்குழறத் தேம்பித்தேம்பி, எம்முடையாய்! எம்பெருமானே! தேவரீரைக்காணப்பெற்றேன்? என்னுரைக்கேன்? என்செய்கேன்? எம்மவர்நல்லோர்; பிழைத்தனர்; யானுமுய்ந்தேன் உய்ந்தேன். இனி யென்னையு மென்னுடைமையையும் தேவரீர்க்குரிய வாக்கிக்கொண்டு, என்னை யென்செய்யத் திருவுள்ளமோ அதுசெய்தருளுக. கழிந்த விரவிலே யான் கண்ட கனவு நனவாயிற்றே! என்னரசே! உமக்கு யான் புகலாயினேன் என்று மீட்டும் பணிந்தார்.

அப்போது, அவ்வாசிரிய மணி அவரன்புக்குருகி மனங்கனிந்து அவரைமுற்றுநோக்கிச்சொல்லுவார். ஐயா! யாமிருப்பது வியாக்கிர

புரம். நேற்றிரவு இங்கு வந்தோம். எமது கனவின் கண்ணே சைவ வேதிய ரொருவர் வந்து நாளையுதயகாலையில் சுவேதாரணிய மஹா க்ஷேத்திரத்திற்குச் செல்வாயாயின், அங்கே திருவெண்காடன் என் னும் பெயரையுடைய ஆறுவயதுள்ள சிறுவனொருவன் தாயும் சிவன டியவர்களும் புடைசூழவந்திருப்பன், அவனுக்குச் சைவதீக்ஷைசெய்து, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைக் கிரமப்படி யுபதேசித்து, இந்த சம்புடத்தை அவ னிடத்தில் கொடுப்பாயாக. இதனுள்ளே, பூர்வசன்மத்தில் அவன் பூசி த்த ஆன்மார்த்த மாகிய சிவலிங்கமூர்த்தியிருக்கின்றது. இச்சம்புடம் திறந்து பார்க்கத் தேவராலும் முடியாது. அவன் கைப்பட்டாலுடனே திறக்கும். ஆகையால், இதையவனிடத்திற்கொடுத்து, பூசைவிதியையு முணர்த்தி யோர்மண்டலங்காறு மவனுடனீயு மிருத்தி யென்று விதித் தார். அப்போது, அவனை யான் நோக்கி, நீர் யார் எங்கிருப்பதென்று வினவினேன். அதற்கவர், "யாமெங்கு மிருப்போமாயினும் இப்போது, சிவைமாதேவியின் இதயகமலத்து வெளிப்பட்ட மத்தியார்ச்சனமென் னும் இடைமருதில் வசிப்போம். யாமோகேகன்" என்று சொல்லி மறைந்தனர் அப்பா! திருவெண்காட! உன் பொருட்டால், படைத் தற்றொழிலுங் காத்தற்றொழிலுஞ்செய்யும் இருபெருந் தேவராலுங் காணரிய பெரியபெருமான் எனக்கும் எளியராய் வந்தருளினர் என்று சொல்லியாவரும் பார்த்ததிசயிக்கும்படி பட்டுப் பரிவட்டஞ்சாத்தி மூடி வைத்திருந்த சம்புடத்தை ஒரு வுயர்ந்த பீடத்தின்மே லெழுந் தருளப்பண்ணி மேலே மூடியிருந்த கவுசினையை வாங்கினர். அப் போது அங்கிருந்தவர்கள் யாவரும் அதிக காந்தியுள்ள பொன்னொ கிய வச்சம்புடக் கோயிலக்கண்டுலகந்தான்றாது பிரமைகொண்டவர் களாயினர்கள். திருவெண்காடரோ, அக்கோயில் வயத்தராய்க்காந் தம்பற்றிய இரும்புபோ லொன்றுந் தோற்றமின்றித் தம்மை மறந்து தறிபோல் அசையாது நின்று பின்னொருவாறு சிறிது தெளிவு வந்தவு டனே, குருவின் றிருவடிகளிலே பலமுறை பணிந்து பொன்மாரியோடு இன்பக்கண்ணீர் மாரியுஞ் சொரிந்து துதித்து நின்றார்.

கேளுறும் முனிவர்களே! சிவஜாலத்தை யாரறியவல்லவர்கள். வே தாகமங்களே அறியாவானல் அரியயனிந்திரன் முதலிய தேவர்களோ அறியவல்லவர்கள் என்றுசொல்ல, முனிவர்கள் வியப்படைந்துமேல் நடந்ததைவினவ வுபமன்னியர்சொல்லத்தொடங்கினர்.

திருவெண்காடர் சிவதீக்ஷைபெற்றது.

முனிவர்களே! பின்பு, அப்பிரமசாரியராய் வந்த தேசிகோத்தமன், மாணைக்கராகிய திருவெண்காடரது அதிதிவரத்தை யறிந்து, அங்கிருந்த சிவதேசர்களாகிய அந்தணர்களது அனுஞ்ஞையைப்பெற்றவராய் அம்மறையவர் கூட்டத்துடன் திருவெண்காடரையும் அழைத்துச் சென்று சாவித்திக்கனையடைந்து சைவதீக்ஷா சங்கற்பம் சொல்லி மீட்டு மம்ஸ்நானம் செய்வித்து, மூக்குள நீரிலும் முழுகப்பண்ணி விதிப்படி திருவெண்ணீறு உருத்திராக்கமணிவித்துச் சிவசன்னிதியிலழைத்துச் சென்று, பூரீபஞ்சாக்ஷரத்தை உபதேசித்துப் பின்பு, சைவசம்புடத்தை யெழுந்தருளச்செய்து அவ்வாசிரியன் அதன் மகிமையைத் தெரிவிக்கும்பொருட்டு அங்கிருந்த அந்தணரொவ்வொருவரையு மழைத்து அதைத் திறக்கும்படி எவ்வதிலும், அவர்கள் ஒவ்வொருவருஞ் சென்று தங்களாலியன்றமட்டில் திறக்க முயன்றும் திறவாததாகக் கண்டு மனஞ் சோர்ந்தாற்போலக் கையுஞ் சோர்ந்து நின்றார்கள். அப்பால் சுத்த கிரியாதீக்ஷா குருவாய் வந்த வைதியர்குலமணி திருவெண்காடரை நோக்கி திருவெண்காட்டையப! நீ சென்று திறப்பாயாக வென்று திருவுளம் பற்ற, அவரும் அவ்வாசிரியராணை தலைமேற்கொண்டு சென்று, வெண்காடுடையாரையும் அவரிடம் பிரியாப்பிரமவித்தியா நாயகியையும் பணிந்து பூரீபஞ்சாக்ஷரத்தியானத்தோடு அப்பெட்டகக் கோயிலை வலம் வந்து பணிந்து தமது திருக்கரத்தாலக் கோயிற் காப்பினைத் தொட்டார் அவ்வளவில், அக்கதவந்திருக்காப்பவிழ்ந்து திறப்புற்றது. அதில் கோடி சூரியர் உதயமாயிற்றோலும் பேரொளியவாய்க் கண்டவர்கண்ணையும் மனத்தையுங் கவரத்தக்க வழகினவாய்ச் சிவலிங்க மூர்த்தியொன்றும், விநாயகமூர்த்தியொன்றும் தெய்வமந்தாரப்பூக்களால் பூசிக்கப்பட்டிருந்தன. அக்காட்சியைக் கண்ட யாவரும் பெருவியப்புமானந்தமுமடைந்து, இம்மூர்த்தம் மாணிக்க மூர்த்தமோ? நவமணி குயின்றவோ! கடவுண் மணியாலியன்றவோ? முன் அடிமுடி தேடிவார் காணவெழுந்த சோதிப்பிழம்போ, இந்திலவுலகத்தவோ? தேவருலகத்தவோ? கைலயகத்தவோ? என்று ஐயமுற்றுத் தம்வாயில் வந்தவாறுதுதித்துத் திருவெண்காடர் தவத்தையும் அவர் பெற்றுக்கொண்ட பேற்றினையும் குறித்து மிகப்புகழ்ந்து கொண்டாடினர்கள்.

பின்பு, பிரமசாரியாக வந்த ஆசிரியர், மாணைக்கனை நோக்கி ஐயா? இன்றுநற்றினமாதலால், உன்னுடைய ஆன்மார்த்தத்தினைப் பூசிக்கக் கடவை. இப்பூசை செய்வதற்கு முன் இத்திருவெண்காடுடைய நாயகனையும், உலகெலா மீன்ற ஞானவித்தை முதல்வியாகிய பெருமாட்டியையும் விதிமுறையே பூசை செய்வித்திடுக. நீ முன்னை முயன்ற புண்ணியம் மிகப் பெரிதுகண்டாய். அதனாலன்றே? இன்று ஆவணித் திங்களும், திங்கட்கிழமையும், ஓணமும், பதின்மூன்றாநாளுங்கூடிய மஹாப்பிரதோஷகாலம்வாய்த்தது. இதில்விதிப்படி பிரதோஷகாலத்தில் மஹந்நியாச பூர்வமாய் ஸ்ரீருத்ராபிஷேகஞ் செய்விப்பது சிறந்ததென்று வேதாகமங்களால் விதிக்கப்பட்டிருக்கின்றது. சிவபூசையைச்செய்வதற்கு முன் சிவனடியாளைப் பூசிப்பதே சிலாக்கியமாம். இறைவன் அடியவரைப்பூசிக்கின்றவர்களை நன்றுயறிவார். "ஏறுடையாயிறைவாவெம்பிரா னென்று - நீறிடுவாரடியார் நிகழ்தேவர்கள் - ஆறணிசெஞ்சடையண்ணலிவரென்று - வேறணிவார்க்கு விணையில்லை தானே" என்றதுதிருமந்திரம். ஆதலாலிவ்வண்ணம் சிவனடியாளையும் சிவபெருமானையும் பூசிக்கத்தொடங்குமுன் சங்கற்பஞ்செய்து நீராடி நித்தியக்கடன்முடித்து, "புற்றில்வாளரவமஞ்சேன்பொய்பற்கமெய்புமஞ்சேன் - கற்றைவார் சடையெம்மண்ணல் கண்ணுதல்பாதநண்ணிமற்றுமோர் தெய்வந்தன்னை யுண்டெனநினைந்திதம்பெம்மாற் - கற்றிலாதவரைக் கண்டாலம்ம நாமஞ்சுமாறே" என்றது மந்திரவிதியாதலால் வேறு தேவருளராகச் சிந்திக்குஞ் சித்தவிகாரமின்றி "பிணியெலாம்வரினுமஞ்சேன் பிறப்பினை டிறப்புமஞ்சேன் - றுணி நிலாவணியினன்றன்னெழும்பரோ டுழந்தியம்மா - றணிநிலம்பினைந்துங் காணுச்சேவடிபரவிவெண்ணீ - றணிகிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே" எனவும் "இணங்கிலாவீசனேசத்திருந்தசித்தத்தினேற்கு - மணங்கொள்சீர்த்தில்லைவாணன் மணவடியார்கள் வண்மைமக் - குணங்களைக் கூருகீறிற் கோடைழுவாய்ச் சீற்றக்குண்டப் பிணங்களைக்காணு கண்வாய்ப்பேசாதப் பேய்களோடே" எனவும் "எட்டிருவிரவியென்னையாண்டவனீண்டுசோதி - விட்டிலங்கலங்கற்றில்லை வேந்தனைச்சேர்ந்திலாத - துட்டனைத் தூர்த்தவார்த்தைதத்தொழும்பனைப் பிழம்படுபேசும் பெட்டனைக்காணு கண்வாய்ப் பேசாதப் பேய்களோடே" எனவும் முதுமொழிமந்திரங்கள் விதித்தலால் அக்காலத்தில் அடியவர்களல்லாத [illegible]

வுதல், அவரோடுவார்த்தையாடல் முதலியவற்றை யொழித்து, ஒரு மைப்பட்டமனத்தோடும் பூசிக்கக் கடவையென்றருளிச்செய்தார்.

திருவெண்காடர் சிவபூசைசெய்தல்.

திருவெண்காடரும், தமதுகிரியா குருவின் கட்டளையின்படி நீராடி நித்த கருமமுடித்து நியமமுடையராய் அந்தப் பிரதோஷகாலத்திற்றே னே ஸ்ரீசுவேதாரணியப் பெருமானுக்கும், அவரிடம்பிரியாஞானவித்தி யாங்குணையாகிய மஹாதேவியாருக்கும் மஹந்நியாச ருத்ராபிஷேகம் செய்விக்கவேண்டி எல்லாக்கருவிகளையுஞ் சேகரிப்பித்து பல்லாயிரம் ஆநிலைசவ வேதியர்களை வரவழைத்து, ஸ்ரீருத்ரசமகசம்கபாராயணம் செய்யச்செய்து ஆயிரங்கலசம், ஸ்நபனம்வைத் தருச்சிப்பித்து, சுகந்த ஜலம், நெய், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், பழச்சாறு, இளநீர், பால் தயிர், தேன், கலவைச்சாந்தம், பனிநீர், ஸ்நபனமுதலியவற்றாலபிஷே கஞ் செய்வித்து, பட்டுப்பரிவட்டத்தாலும், முத்து, பவளம், மாணி க்கமுதலிய மணிகளாலலமைத்த ஆபரணங்களாலும், முல்லை, மல்லிகை செவ்வந்தி, மரு, கொன்றை, தும்பை, வில்வமுதலியவற்றாலமைத்த இண்டைமாலை, கண்ணி, தொடையல், பிணையல், முதலியமாலைகளா லும், நீறுசாந்தக் கலவையாலும் பூசனைவித்து, நால்வகையுண்டி யாறுவகைச் சுவையுமுடைய பாலின்னடிசில் நறுநெய் கறிவகை பண்ணிய வகை பழவகை தண்ணீர், நல் வாசத்தோடுகூடிய அடைக்காயிலை முதலியவற்றை நிவேதித்து, தூபதீபம், கவரி, குடை, ஆலத்தி, கண்ணாடி, ஆடல், பாடல், வாத்தியமுதலியவுபசார வகைகளிற்குறைவொன்று மில்லாதபடி நிறைவேற்றிச்சிவாக்கினியை யும்மூம்பிப்பூசித்து, சிவனடியார்களையும் அவ்வாறே வருவித்துத் திரு வடிவிளக்கிப் பாததீர்த்தம் புனிதமாம்படி யுட்கொண்டு அவர்களுக்கு இன்சொல் முகமன்டலவுங்கூறி வேண்டுவார்வேண்டும் வகையால் அவ ர்களை முன்னே தேவரமுதினுஞ் சிறந்த பல்வகையுண்டியாலுமுண் பித்துமுகவாசந் தருகவித் தாம்பூலம் புஷ்பசந்தனமாலைஆபரணங் களால் அவர் மனங்களிக்கச்செய்து, மேல் வேண்டியவைகளையும் வெ றுப்பக் கொடுத்து வணங்கி அவர்களருள்விடைபெற்றுப் பின் தமது ஆண்மார்த்தமா யெழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமானைத் தங் குருவருணையாலருச்சிக்கலாயினர்.

சேளுடம் முனிவர்களே! பின் திருவெண்காடர் குரவேலைடருக் கை சேர்ந்து காலலம்பி ஆசமித்துப் பூசை மடங்குறுகி ஆசிரியனை

யோர் பீடத்தெழுந்தருளப்பண்ணியருச்சித்து, அருள்பெற்றிருந்து, ஆசமனமும் பிராணயாமமுஞ் செய்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தைத் தியானித்து பஞ்சசுத்தி முடித்து, அருக்கியமமைத்துப்பின் விக்கினேசுவரமூர்த்தியோடு ஆன்மார்த்தமாகியவுடையவனை அபிடேகமுதலிவைகையிலெழுந்தருளப் பண்ணியருக்கிய தூபதீபநைவேதனம் பண்ணி யுபசரித்துத் தாம் செய்யும் அருச்சனைக்குத்திருவுள்ளஞ் செய்யும்படி பிரார்த்தித்து முதலில் அந்தரியாக பூசை செய்து, எம்பெருமானே புறம்பிலும் என் பூசையைக் கொண்டருள்கவென்று விண்ணப்பித்து, தைலம் பஞ்சகவ்வியம் பஞ்சாமிர்தம் கலவைச்சாந்தமுதலியவற்றாலும் அன்புமயமாகியசுத்தநீராலுந் திருமஞ்சன மாட்டுவித்து, ஒற்றுடை சாத்தி வெண்பட்டுமுதலிய பரிவட்டங்களாலும், முத்துமுதலிய மணிப்பணிகளாலும் அலங்கரித்து வெண்ணீறு சாந்தஞ்சாத்தி முல்லை யாதிவெண்மலர்க்கண்ணி, இண்டை, தொடை, ஓலியல் முதலிய நறுமலர்மாலை சூட்டி அட்டபத்திரங்களாலும் பூக்களாலும் அருச்சித்து, ஆன்ம நிவேதனமாகச் சுத்தபோனகவகைகளையும் தாம்பூலத்தையும் நிவேதித்து, உயிர்வாசமாகத் தூபதீபம் கருப்பூரவாலாத்திகவிருடை கண்ணெடிமுதலிய பணிமாறி, அன்புபெருக ஆடல் பாடலோடத்துவார் ஒன்றும் வைகுகாணுராய் மயங்கி யருள் வழிப் பட்டு நின்றார். அப்போது, சிவானுக்கிரகத்தால், திருவெண்காட்டையே! எல்லாக் கலைஞானமும் உன்பாலாக என்று ஓரசரீரிவாக்குண்டாயது. அதுகேட்டங்கிருந்தார் யாவருந் பெருவியப்பினையடைந்து, இப்பிள்ளையார் முருகப்பிள்ளையார் திருவவதாரம்போலும் என்று துதித்தார்கள். உடனே திருவெண்காடர்தம்மையாருடையவைவையைத் துதிக்கலாயினர்.

தோத்திரம் - வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா.

அளவையில்பேரருட்கடலேயம்மையப்பாவணைத்துடையாய்
களவறுவானேரரசேகாலனைமுற்காய்ந்தானே
துளவநறுந்தாருடையான்றன்றலைத்தான்றுணைக்கி
வளமருவுமலைமகளைமணந்தபிரான்வாழியவே. (க)

இன்னரசேயெனவுலகுவழுத்துமெம்மானெனக்குனிரு
பொன்னடியல்லால்வேறுபுகலிடமுமுண்டுகொலாம்
நன்னயமென்சருப்பிருக்கவையிரும்பைமல்வார்போற்
பின்னையொருதெய்வத்தைப்பேசறியேன்பேயேனே. (உ)

இவையிரண்டுந்தரவு.

மலையனையன்றிருப்பாவைமகிழ்ந்தமணவாள
புலையறிவிற்புதுத்தொழும்பென்புத்தடிமைகொள்ளுதியோ. (க)
முன்னஞ்சாமதனம்புமுரணழித்தமெய்யாவின
னன்னெஞ்சேயிரவுபகலெண்ணிநீகிடவாயோ. (உ)
யானேதும்பிறப்பஞ்சேனிறப்பதற்கென்கடவேனென்
றுணுதபோறிரருளிரருளாலே. (ங)
என்செய்கேனெண்ணரியபிறப்பினுக்குமிருமிக்கோன்
முன்கொள்ளப்பின்றொடருமுழுமரணத்துயர்க்குமையா. (ச)
இன்னுயிர்க்குப்பிழையிழையாதினியனவேசெயிற்செய்துன்
பொன்னடிப்பூசனைமறவாப்பொய்யிலன்புமருளுதியோ. (ஞ)

இவையைந்தும்தாழிசை.

எணையடிமையினினிதுடையவவுலகினி
னிணைநிகர்பவரிலையெனிலுயர்பவரொவர். (க)
பலவுலகுகுவியபனைமகிழ்பலவை
வுலைவறுபவமபலொருவுநர்பிறவொவர். (உ)

இவையிரண்டுமராகம்.

குடம்படமாக்கடலினைடக்குளித்தவென்றனை
யிடந்திகழுருட்கணைபெற்றவேண்டுமால். (க)
என்னுடையடிமைவேண்டாவனைக்கெனில்
பின்னனைக்கவருளர்பேசவேண்டுமால். (உ)

இவையிரண்டும் ஈரடியம்போதரங்கம்.

தாயினுடிகப்பெருந்தயாவினல்லையே
மாயிருமுலகினுமருவுமெல்லையே
நோயுறுவினைடப்பகைதொடிக்கவல்லையே
ஆயுறுசுகம்விளையண்ணலல்லையே.

இவைநான்குஞ் ஈரடியம்போதரங்கம்.

எளியேழுக்குறவுநீ யாவர்க்குமிறைவனீ
யளியேயோடுகாப்பவனீ யுறவாழியங்கடனீ

முழுமதியிற்சுந்தரனீ முன்னமுன்னச்சுவைப்பவனீ
கெழுமுமையாள்பாகனீ கெடிலவில்வெண்காடுடையவனீ.

இவையெட்டம்போதரங்கம்.

புகலுநீ புண்ணியநீ போதநீ நாதனீ
தகவுநீ சார்புநீ சற்குருநீ சயம்புனீ
விடையைநீ வேதியநீ மேதினிநீ வேதமுநீ
யுடையைநீ யுணர்வுநீ யுரியைநீ பெரியைநீ.

இவைபதிணறம்போதரங்கம்.

எனவாங்கு-இது தனிச்சொல்.

முதுவர்கூறியமுழுமொழியல்லதைப்
புதுமெழிவேறுபுகன்றன னில்லை
யாதலினீயவெள்ளை
போதைபுகலெனப்பெரிதளித்தருளே.

இதுசரிதகம்.

என்று பாடி, ஆனந்தக்கூத்தாடி அழுதுதொழுதார். இதனைக் கண்டோர் யாவருங்களிசிறந்தனர். அப்பால், திருவெண்காடர் உத்தரபூசை முடித்துப் பெட்டகக்கோயிலுள் உடையவனையும், மூத்த பிள்ளையானையும் எழுந்தருளப்பண்ணித் தமது நெஞ்சம் போன்ற தோர் சுத்தக்காப்பி லிருந்தருளப்பண்ணி, நிவேதனமான பிரசாதத் தாலும் ஏனைய சிறந்த பொருள்களாலும் தம்மாசிரியனைப்பூசித்துக் களிக்கச்செய்து, அவர் கட்டளைபெற்றுத் தாயாரும் சுற்றத்தாருமுட னிருந்துண்ணச் சிவப்பிரசாதத்தினை யுட்கொண்டு நீறணிந்து, ஐந்தெழுத்தெண்ணி அலைவற்ற சிந்தைய ராயினர். சூரியாஸ்தமனமும் மாய்விட்டது.

திருவெண்காடர் தாயாரோடு மகேசுரபூசைக்காக வுசாவுதல்.

அப்பால், அவ்வசியகுலதீபமாகிய வெண்காடர், தமது குரவனுருக்கும், சிவநேசச்செல்வராகிய அந்தணர் முதலிய அடியவர்களுக்கும் மிகுந்த தகுசனை கொடுக்கவென்றெண்ணி அன்னையாரிடஞ் சென்று வணங்கிநின்று, தாயே! தேவரீர் கருணையினால் செய்து முடிக்கவேண்டுவன வெல்லாவற்றையுஞ் செய்து முடித்தவனாயினேன்.

திருவெண்காடர் தாயாரோடு மகேசுரபூசைக்காக வுசாவுதல். சன

ஆயினும் சிறுகுறை யொன்றுள்ளது அதனைக்கேட்டிடுதி. என்னெ
னில், வேதாகமங்கள் சிவலிங்க மூர்த்தத்தினை யிரண்டு வகையாகப்
பிரித்துவைத்தன. அவற்றுள் ஒன்று தாவரமூர்த்தி யெனவும், மற்றொ
ன்று சங்கமமூர்த்தி யெனவும் பேர்பெறும். தாவரமூர்த்தி, சிதம்பர
மென்னும் கோயில் முதலிய மஹாக்ஷேத்திரங்களில் பரார்த்தமெனவும்,
அன்போடு பூசைசெய்பவர்களாகிய அடியார்களிடத்தில் ஆன்மார்த்த
மெனவும் கூறப்பட்டெழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமானும்.
தாவரமென்றலும் ஸ்திரமென்றலும் பொருளென்றே. சங்கமமூர்த்தி,
அச்சிவபெருமானே இரவுபகலொழியாது இதயக்கோயிலில்வீற்றிருக்க
ச்செய்து நம்மை யடிமைகொள்ளும் பெருமக்களாகிய அடியார்களாம்.
அவர்கள்தான் வேதம், வேதாங்கம், ஆகமம், புராணமுதலிய கலைக
ளெவற்றினுக்கும் பிறப்பிடமானவர்கள். எல்லாத்தருமங்களும், ஆசா
ரங்களும், செல்வங்களும், இன்பங்களும் அவர்களிடத்திலிருந்தே யிவ்
வுலகம் பிழைக்க வெளிப்பட்டன. சங்கம மென்றலும் சரமென்றலு
மொரே பொருள். ஆகலால், தாவரலிங்க பூசையிலுஞ்சிறந்தது சர
லிங்க பூசையாம். "படமாடக்கோயிற் பகவற்கொன்றீயில், நடமாடக்
கோயி னம்பர்க்கங்காகா, நடமாடக்கோயி னம்பர்க்கொன்றீயிற், பட
மாடக்கோயிற் பகவற் கதாமே", என்ற மந்திரமே சாகூதி நாம் தரும்
பொருள் தினையளவினதாயிலும் "கண்டதுகண்ட தேபாதனர் தாம
கிழ்ந், தண்டது மூன்று புவனமு மூண்டது, கொண்டது மூன்று பு
னமுங்கொண்டதென், றண்டரை நந்தியெடுத்துரைத்தானே" ஆத
லால் இங்குவந்துள்ள சைவமாகேசுரர்களாகிய வேதியர் முதலியயாவ
ரையும் அருச்சிப்பது கடனாக விருப்பதால் அதற்கான பொருள் சே
ரித்தருளவேண்டுமென்று விண்ணப்பித்தார்.

அதற்கவ்வம்மையார் மைந்த! நீகூறியதெல்லாமுண்மையே, ஆயி
னும் இதுவரையும் நம்மிடத்திருந்த பொருள் முழுவதும் செலவாய்
விட்டது. இனிக்கடன்வாங்குதலொழிய வேறுவழியுமில்லை. என்
செயக்கடவேம் என்று கூறினர். அப்போது திருவெண்காடர் மனங்
கலங்குற்று, ஐயர் அன்று கனவிலே "உனக்குப் பொருள் சிறிது சில
காலம் வேண்டுவதுதான்" என்று சொன்ன தண்மையாயிற்று. என்
செய்வது, "ஒண்பொருள் காழ்ப்பவியற்றியார்க்கெண்பொரு, ளேனை
யிரண்டுமொருங்கு" என்ற பெரியோர் மொழிபொய்யல்ல. இப்போது

தக்கூணை கொடுக்கவேண்டுமே, என்னகொடுப்பது? யாது செய்வது? எவ்விடத்திற் கடன் கேட்பது? யார் நமக்கு வேண்டிய அவ்வளவு பொருள் கடன் கொடுப்பார்கள்? கடன் வாங்குவதற்கும் வயது சாலாவிளம்பருவம் உடையவனுயிருக்கின்றேன், "சிச்சி" இல்லாமை மிகக்கெட்டது. "இன்மையுளின்னுதியாதெனி னின்மையி, னின்மையே யின்னுந்து" என்ற துண்மையே யன்றே! என்று பலவகையாலும் நெஞ்சுகவல்படச் சிந்தித்துத் தேறும்வகையும் தேற்றுவாருமின்றி நைந்து வருந்தி, தமதுள்ளுறவாகிய கடவுளுக்கு விண்ணப்பித்துச் சிவத்தியானத்தோடு நிலத்துப்படுத்துறங்கினர். அவர் அன்னையார் ஞானகலாம்பையாரும் மகனர் மனக்கவலைநோக்கித்தாமும் கவலையுற்றவராய் அவரருகே நித்திரை செய்தார். மற்றைய வேதியர்முதலிய யாவரும், ஆலயமண்டபத்திலும், சோலை நந்தவனங்களிலும், மடங்களிலும் இச்சைவழியே சிவத்தியானத்தோடுந் சயனித்திருந்தனர்கள்.

திருவெண்காடர்மகேசுரபூசைக்குத்திரவியம்பெறல்.

கேளுமுனிவர்களே! அப்பால் எல்லாம் வல்ல கடவுளானவர், அவ்வெண்காடர் மனக்கவலையறுக்கத் திருவுளங்கொண்டு, அன்றிரவு அவர்கனவில், முன்னேவந்தாற்போலும் விருத்தராகிய சைவவேதியர் திருவடிவோடு கோலுன்றி வந்து, எதிர் நின்று ஐய! திருவெண்காட! அஞ்சற்க. நெஞ்சக்கவலையொழிதி. நீ நமதன்பர்கட்கு இனியை யாதலால் எமக்கும் இனியை; ஆகவே நீ வேண்டும் அளவானபொன், மணி, பூண், ஆடை முதலிய வெல்லாம் குறைவறக் கொடுத்தோம். அவையெல்லாம் உன்மனை யகத்துள்ளன. அவற்றுள் நமதன்பர்கள் வேண்டியவைகளை வேண்டியவாறு வெறுப்பக்கொடுத்து நீ வேள்விப் பயனைப் பெறுதியென்று திருவாய்மலர்ந்தருளிப் போக்குக்காட்டி மறைந்தனர். அப்போது, திருவெண்காடரும் அக்கனவிற்றானே தொடர்ந்தோடி, எம்பெருமான்! எங்கெழுந்தருளுவது, இவ்வாறு கைவிட்டுப்போவதும் அருளியல்போவென்றரற்றி மறைந்தமைக்கு வருந்தி, உடனே விழித்தெழுந்து சிந்தித்திருந்தார். அப்போதருகே சயனித்திருந்த அவரன்னையார் அரண்டெழுந்து மகனைநோக்கி ஐயா! பகலெல்லாம் சிவர்ச்சனை காரியத்தில் அலந்த நீ இப்போது சிறிதுநேரமாயினும் அசைவற்றிராது, என்னகவலோடு இருக்கின்றுயென்றார். மகனரும் எழுந்தவரை வணங்கித் தாங்கண்டகனவினைக்கூறக்கேட்டுள் எழுவந்து கடவுளருளைவாழ்த்தி அப்போது விடியுந்தருணமாயிருந்த

திருவெண்காடர் மகேசுரபூசைசக்குத் திரவியம் பெறல். சக தால் சூரியவுதயத்தை யெதிர்பார்த்து மைந்தரோடு மிமையாது காத் திருந்தார்.

அத்தருணத்தில், காவிரிப்பூம் பட்டினத்து இவர்கள் குடிவாழ் மனையிற்காவல்பூண்டிருந்த மெய்க்காப்பாளருட் சிலரோடிவந்து அவ் வம்மையாரை வணங்கி நின்று அம்மணீ! தாங்கள் பூட்டிட்டுக்கா வல்லைவத்திருந்த தங்கள் மனையுள்ளே அரை யிரவிலோர் பெருஞ் சோதியுண்டாய் இன்னதென்று எங்களால் மதிக்கவொண்ணாத வகையாயிருந்தது. எங்கள் கண்களுங் கூசின. ஆகவே, இவ்வதி யின்னமாறவில்லை என்றார்கள். அதைக் கேட்டமாத்திரத்தில் அவ் வுத்தமமாதரார், தமது மைந்தர் கலவுண்மையாம் போலுமென மதித்து எழுந்தனர். சூரியனுமுதயமானன். உடனே காலக்கடன் முடித்துப் புதல்வராகிய திருவெண்காடரோடுங் காவிரிப்பூம்பட்டி னம் வந்து மனைபுகுந்து வாயிற்காப்பு நீக்கி உட்புகலும், இந்திரனக ரும், அளகையும்போலும் நிதிக்குவையலால் கால் வைக்க எள்ளிட மும் பெறாது நிரம்பியிருக்கு மாளிகையறையிட முதலியவற்றைக் கண்டச்சமும், அன்பும், ஆனந்தமும், வியப்பும்பெருக, அங்கிதி சிவப் பிரசாத மாகையால் கிரமப்படி அருச்சனை செய்து தூபதீப நிவேதன ங்களா லாராதித்து வணங்கி, அதினின்றும் அப்போதைக்குத் தமக்கு வேண்டுமளவு பொன்னும், நவமணிகளும், ஆடையும், பூண்களும் மற் றவைகளுங்கொண்டுபண்டியேற்றித் திருவெண்காட்டுக்குமுன் செல்ல வனுப்பிப்பின்னே தாமும் மைந்தருமாகத் தம்மாளிகையைத்தாழிட்டு முத்தரித்து மெய்க்காவல் வைத்துப்புறப்பட்டுத் திருவெண்காடு வந்து சேர்ந்து, அத்திரவியத்தையெல்லாம் அவ்வாலயத் தொருபுறத்திற் கருவூலஞ் செய்தமைத்து வைத்து, மகனைநோக்கி, ஐய! இனி நீ உன்னெண்ணம் போலும் குருபூசையும் மகேச்சுரபூசையும் செய்க வென்று சொல்லினர்.

உடனே, திருவெண்காடர், விதிப்படி நீராடித் திருவெண்ணீறக் கமாலைபுனைந்து நித்தக்கடன்முடித்து, தமது ஆசிரியரையும் அந்தணர் கள் முதலிய சிவனடியார்களையும் நல்ல ஆசனங்களில் எழுந்தருளப் பண்ணி, பாதபூசைசெய்துபாதோதகமுட்கொண்டு, அவர்களனைவர்க் கும் சாதனிகடுக்கன் குண்டலம், கழுத்தணி கண்டிகை ஆரம் பத க்கம், கையணிவளையாழிமோதிரம், அரைஞாண்காலணி பாதுகை,

பொன்னுடை, பட்டாடை, பருத்தியாடை, பூசாபாத்திரம், அடுக்களை பாத்திரம், திரவியம், பசு, விளைநிலம், ஆளடிமை முதலிய பலவும் வேண்டுவார் வேண்டியபடி வெறுப்பக்கொடுத்து வணங்கி உபசரித்து, குரவர் நீங்க மற்ற வேதியர்களைத் தத்தமிடம்போக இனிய வார்த்தை சொல்லி யனுப்பிய பின்பு, தம்மாசிரியரிடம் மீட்டும் வந்து பணிந்து நின்று, எம்பெருமானே! தேவரீர், கருணையால் எல்லாம் நிறைவேற்றினவனையினேன்; யானும் என் குலமும், என் முன்னோரும் ஒருங்குய்ந்தோம், இனியாதொரு குறையுமில்லை. என் மனக்கவலை யெல்லாம் ஒழிந்தது. ஆயினும் இனி முன்னுக்கு அடியேன் செய்யத்தக்க பணி விடையாது? அதனைக் கட்டளையிட்டருளவேண்டுமென்று பிரார்த்தித்து நின்றார். அப்போது அவ்வாசிரியர் அவரைநோக்கி, ஐய! நீகுறை முடிக்க வந்த தேகி. உன் சார்பில் வாழ்பவர்க ளனைவரும் சிவன் முத்தரே யாவர் ஆகவே உனக்குப் புதிதாக வுணர்த்தக் கிடந்தொன்று மில்லை ஆயினும், நீ நம்மை விளவியதால் உணர்த்துவ தொன்றுண்டு. அதாவது, "எதுக்களாலு மெடுத்த மொழியாலுமிக்குச் -சோதிக்கவே ண்டா சுடர்விட்டுளனெங்கள்சோதி - மாதுக்கநீங்கலுறுவீர் மனம் பற்றி வாழ்மின் - சர்துக்கள்மிக்கி றைறியேவந்து சார்மின்களே" எனவும், " அடியேனதிவள் விருவீருமிருப்பதாலடியேயனன் அடியார் நடுவுளிருக்குமருளப்புரியாய்," எனவும், "அரியவற்று ளெல்லாமரிதே பெரியாரைப், பேணித்தமராக்கொளல்." எனவும் மறைவாக்கியங்கள் விதித்தலால், இரவுபகலாழியாது சாதுசங்க மொன்றேனமாத்திரம் உறுதியாகப்பிடித்து அவர்களிடத்திலன்பு செய்துவரக்கடவை. இதன் மேம லுனக்கு யானறிவிக்கத்தக்க தொன்றுமில்லையென்றார். இங்ஙனம் கூறிய குருமொழியானது திருவெண்காடர் திருவுள்ளத்துப்பசுமரத் தாணி யறைந்தாற்போலும் பதிவுற்று, அதுமுதல் நாள்தோறும் உண் மையான அன்பும் பத்தியும் வளர்பிறையின் கலைபோல வளர்ந்து ஓங்க குருபூசையும், சிவபூசையும், அடியார்பூசையும் கண்டவர்கேட்டவர்க ளெல்லாம் அதிசயிக்கும்படி நடத்திவந்தார். அவ்வருமைப்பாட்டினைச் சிவனன்றி உணர வல்லவர்க ளுலகத்தொருவருமில்லையாயினர். தேவரும் முனிவர்களே! இக்குருலிங்க சங்கமபத்தி செய்ய வல்ல பெரியோ ளைக்காண்பதும், அவன் சரித்திரங்களைக்கேட்பதும், அவனடிநிழலை கொள்வதுமே இம்மானுட வுடலெடுத்ததற்குப் பயன் என்று சத்திய மாக வுணரக்கடவீர்கள்.

திருவெண்காடர் திருமணம்.

கேட்பீர்களாக, அப்பால் சிலநாளிருந்து, ஆசிரியராகவந்த பிரம சாரி வேதியர் தம்மிச்சைபோன வழி சென்றபின், திருவெண்காடர் குருவருள் நெறிதவறாது, குருலிங்கசங்கமபத்திணை நடத்திச் சகல கலாஞானத்திலும் ஆன்றோராய்ப் பிறர்தம்மை யித்தன்மைய ரென்று தெரியாவண்ணம் நீறுபூத்தநெருப்பேபோல வொழுகும் நாளில், இவர்க்குத் திருமணஞ்செய்யத்தக்க காலப்பருவம் வந்தது. வாலும் இவரை ஈன்றெடுத்த தாயாரானவர், கண்டு சிந்தித்துத் தம்மரபுக்கு ஒத்த மரபு, ஒழுக்கம், செல்வம் முதலியவற்றால் குறைவற்ற குடியிற்பிறந்து, நற்குணை, நற்செய்கை, அறிவு, ஆசாரம், அடக்கம் அழகு, கற்புடைமை முதலிய அமைந்த கன்னி எங்குள்ளாள் என்று ஆராய்ந்துகொண்டிருந்தார்.

அப்படியிருக்க அக்காலிப்பூம் பட்டினத்திற்றானே உத்தம வேளாண்டலைமை சிறந்த வசியகுலத்திற்றோன்றி, அறிவால் அனந்தனையும், சுத்தத்தாலக்கினிதேவனையும், சம்பத்தால் அளகைக்கோனையும் ஒத்த சிவ சிதம்பர செட்டியா ரென்பாரொருவர் தம் மரபுக்கொத்த மரபிற்பிறந்து அழகால் இலக்குமியையும், கற்பாலருந்ததியையும் வென்ற மதுர சீலையாகிய சிவகாமியம்மை யென்னுமணங்கியாரோடு கூடித் தங்குலவொழுக்க மாறுபடாதவகையாலில்லறதருமம் வழுவாது நடத்திச் சிவநேசரும், அடியார் பத்தியுமே தமது பெரும்பேறாக வழுவாது பாதுகாத்து வாழ்ந்திருந்தார். அவரும் அவர் பத்தினியாரும் அருந்தவம்பலசெய்து, உலகத்துள்ள அழகுந் தவமுந் திண்டிடாரு வடிவெடுத்தாற் போலவோர் பெண்கொடியைப்பெற்றுச் சிவகலையம் மை யென்று பேரிட்டுச்சுற்றத்தார் அயலார் யாவரும் வியக்கும்படி தஞ்செல்வத்திற்கேற்ப அருமை பலசெய்து வளர்த்துவருகாளில், அத்தவக்கொழுந்தாகிய சிவகலையென்னும் பெண்ணரசு அழகு, அறிவு, அடக்கம், ஆசாரம், அன்பு, தவம், பொறுமை, தயவு, ஈகைமுதலிய தம்மியற்கைக் குணங்களெல்லாம் கேட்டோர் யாவரும் விழையும்படி ஒருங்குகூடி யுடன் வள வளர்ந்து பெற்றோர்க்கின்பம் பெருகத் தளர் நடைப்பருவம் கடந்து பேதைப்பருவத்தாண்டிப் பெதும்பைப்பரு வஞ்சென்றது. அதுகண்டு பெற்றோரிருவரும் தமது திருமகளுக்குத் தக்க கொழுநன் யாரென்று, தம்முள்ளே யெண்ணி யெண்ணிப் பின் திருவெண்காடராகிய தமது ஐயர் திருச்சாரற்முணர்ந்து இவரே

யிப்பெண்ணுக்குரிய மணவாளரம்பி யாவனென்று நிச்சயித்திருந்தனர்கள்.

அக்காலத்தில், திருவெண்காடர் அன்னையார் அச்செய்தியுணர்ந்து தம்மரபிற் றக்க முதியோனைச் சிதம்பரசெட்டியார்பால்மகட்பேசவிடுப்ப, அவர்களுஞ்சென் றவனைவினவினர்கள். உடனே அச்செட்டியார் மகட்கொடுப்ப நேர்ந்து, செய்தி அனுப்பி, மற்றொருநாளில் கணிதநூல் வல்லோனை வருவித்து, நம்பிக்கும் நங்கைக்குந் தக்க மணவினைக்குரிய நாளுமோரையும் நிச்சயித்து, சுற்றத்தினர்க்கும் நண்பினர்க்கும் மணஓலிபோக்கித் திருக்கலியாணமண்டபம் சிறப்பாகச்செய்து வாழை கமுகு தெங்கு நாட்டிப் பூவாலும், ஆடைகளாலும்,மணியாலும், கவரி கண்ணாடி விளக்கு பாலிகை முதலியவற்றாலும் அலங்காரஞ்செய்வித்தனர்கள். இச்செய்திகேட்ட அவ்வூரிலுள்ளார் யாவரும் அம்மணத்தினைத் தங்கடங்கண் மணம்போல வெண்ணித் தத்தம் மனை மாளிகை முதலிய வற்றினையும் அலங்கரித்து மாதருஞ் மைந்தருஞ் தாங்கடாங்கள்தப்முள்ளே களிசிறந்து மணவலங்காரம் புனைந்து, மங்கலங்கொண்டாடினர்கள். பின்பு குலமுதியோர் திருவெண்காடனர்க்கு முன்னாளே விரதசமாவர்த்தனம் செய்து, காப்புத்தரித்து, முளைபரப்பி மறுநாட்காலை வாசநீராட்டி வெண்பட்டாடை புனைவித்து, கடுக்கன் ஓட்டு கழுத்தணி யாரம் பதக்க முதலியனவணிவித்துக் கையணிமோதிரம்பிறவும் பொன்அரைஞாண்பட்டிகையுந் தரிப்பித்து, தலைப்பாகை சூடி, பூமாலை தொடையல்வேயச்செய்து, அழகுக்கழகு செய்வதுபோ லணிவித்தார்கள்.அப்பால் அவ்வகியகுலமணிவிளக்கானவர் திருவெண்ணீற்றுப் புண்டரமணிந்து தமதான்மார்த்த பூசைமுடித்து உடையவர்பால் விண்ணப்பித்து விடைபெற்றுச் சென்று சங்கமேச்சுரனையும், சாயாவனப்பெருமானையுந், திருவெண்காட்டிறைவனையும் சென்று பணிந்து மருதவாணனைத்தியானித்து நண்பினர் சுற்றத்தார் மிகுகளிப்போடு புடைசூழ்ந்து வர,மத்தளம்,சச்சரி,யாழ்,வீணை, குழல் முதலிய துளைக்கருவி, பேரிமுதலிய வாத்தியங்கள் முழங்க மாதர்கள் நடநஞ்செய்யச்சிவிகையேறி ஊர்கோலமாகச்சென்று சிதம்பரசெட்டியார் மனையருகாக வந்து சேர்ந்தார்.

அப்போது, சுமங்கலிகள் அஷ்டமங்கலத்தோடெதிர்வந்து செந்நீராலத்தி சுற்றிக் கண்மிச்சல் போக்கப் பிராமணர்கள் ஆசீர்வதிக்கச்சிவிகைவிட்டிழிந்து வலத்தாள்

முன்வைத்து கடிமணமண்டபத்தில் பிரவேசித்தவளவில் கடன் முழக்கம்போலப் பலவாத்தியங்கள் முழங்கின. அப்பால் நமது வெண்காட்டையர் சென்று கலியாணபீடத்தில் வீற்றிருந்தனர். சிதம்பரசெட்டியார் சுகந்த மங்கல நீராட்டிப் பட்டுடுத்துப் பலவகை மணிக்கலன்களால் பேரணிசெய்து வைத்திருந்த தமதுகுமாரத்தியாரை அச்சபையிலுள்ள பெரியோராணைபின்படி நல்ல முகூர்த்தத்தில் சுமங்கலிகள் மங்கலம் பாடிச் சூழ அழைத்து வந்து கலியாணபீடத்தில் நம்பெரியோராகிய வெண்காடர் வலப்பக்கத்திருக்கச்செய்து, பத்தினியார் விதிப்படி யருச்சிக்கப்பட்ட கலசநீர்வாக்க வெண்காட்டு நம்பிகள் பாதம்விளக்கி வரபூசைசெய்த பின் சங்கற்பித்து உபயகுலங்கோத்திரம் சூத்திரங்கூறி நம்பிகள் கரத்தில் நங்கையார் கரம்வைத்து "யான் தவத்தாலீன்ற இக்கன்னியை வெண்காடரோ தேவர்கள்காண வடமக்களித்தேன் ஆதலால் நீர் இல்லறக்கிழமைபூண் டெமர்க்கு இருமையும் அளிப்பீராக" என்று தாரை நீர் சொரிந்து வாழ்த்திரை. சுமங்கலிய முதுமாதர் பல்லாண்டு கூறினர். அந்தணர் முதலிய பெரியோர் ஆசீர்வாதஞ்செய்தனர். அப்பால் புரோகிதர் மணவினை விதிப்படி மாங்கலிய தாரண முடிப்பித்து ஓமாக்கினியையும் நாந்திதேவர்களையும் பூசித்துப் பொரியிடுதி பூரணாகுதி முடித்து "சத்தபதி" யென்னும் அம்மி மிதித்தலையுஞ் செய்து தீவலம் வந்து தம்பதிகள் வணங்கயாவரும் மங்கலம்பாடி வாழ்த்தி அத்தம்பதிகட்குப் பால் பழமூட்டிக் களிகொண்டாடினர்கள். சிதம்பரசெட்டியாரும் அந்தணர்முதலியோர்க்குப் பொன்னுடை நவமணிகள் முதலியவற்றைத் தாம்பூலத்தோடும் கொடுத்துப் பூசித்து, பின் அந்தணர் முதலியோர்க்கும் தம்பதி சுற்றாண்பிரானராதியர்க்கும் அறுசுவையுண்டியாலும் ஏனையதாம்பூலஞ் சந்தனம் புட்பம் முதலியவற்றாலும் உபசாரஞ் செய்து, அவரவர்க்குத்தக்க பரிசெல்லா நிறைவேற்றிக் கலியாணவிழாக்கொண்டாடினர். சுற்றத்தார் யாவரும் மகிழ்சிறந்தனர். கண்பினர் அயலவர்முதலியோர் பேராநந்தமடைந்தனர். இவ்வண்ணம் நான்கு தினமும்கிரமப்படி ஓளபாசனைதிகளை நடத்தி ஐந்தாநாள் மங்களஸ்நானமு முடிந்தது.

பின்பு அப்புதுமணவாள நம்பியும் மணட்டியான நங்கையோடு சர்வாலங்காரமுடையவராய் ஒக்கல் நண்பினர் சூழ்ந்து வரப் பெரியோர் ஆசீர்வதிக்க மங்கலவாத்திய முழங்கச் சிவிகையேறி மணக்

கோலத்தோடு தம்மனைபுகுந்து அங்குவந்திருந்த அந்தணாதி பெரி யர் சுற்றம் நண்பினர் யாவரையும் உண்டிவினையாலும் மற்றை அணி பூணுடை முதலிய பலபரிசாலும் களிக்கச்செய்து தத்தமிடஞ் செல்ல விடுத்துத் தாம் தம்மனைவியாரோடும், அன்னையாரையும் ஆட்கொள்ள வந் தெழுந்தருளி யிருக்கும் ஆன்மார்த்த உடையவரையும் காலந்தவ றாது பூசித்து, "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கறுனென்றாங், கைம்புலத்தாறோம்பறலை." என விதித்தவண்ணம் இருவர் கருத்து மொத்து ஐம்பெரும் வேள்விகளையும் வழுவாது நடத்திக் குடிமுறை பிறழாது பல்வேறு தேயத்துந் தீபத்துநிகழும் வாணிப விருத்தியை யுஞ் செய்து வந்தனர். இவர்கள் இல்வாழ்க்கைத் திறத்தினைக்கண்டு வியவாதாரொருவரு மில்லையென்பாரேனன், இல்வாழ்க்கையை விரும் பினவர் யாவர்க்கும் இத்தம்பதிகள் எடுத்துக்காட்டிலக்கியமாய் அவ் வாழ்க்கை விதியினியலை விளக்கிநின்றார்கள். கேட்டீர்களோ முனிவர் களேயென் றுபமன்னிய முனிவர் கூறினர்.

முனிவர்கள் உபமன்னியரையையம் விலுவுதல்.

இங்ஙனம் உபமன்னிய மஹாமுனிவர் வாக்கியத்தைக் கேட்ட முனிவர்கள் பெருங்களிப்பை யுடையவர்களாய், சுவாமீ! திருவெண் காடர் திருவவதாரமும், அவர் கிரியாதீக்ஷை பெற்றுச் சிவபூசை செய் யும் பேறு பெற்றதும், அவர்திருக்கல்யாண விபவமுங் கேட்டுப் புனி தராவேனும். சிவசரித்திரத்தினும் சிவனடியார் சரித்திரம் மிகவும் மங் களமாயுள்ளது. இனி, மூவர், தேவர், மானிடர் முதலிய சராசரிர்களுக் கும், புன்மரமுதலிய அசராசரிர்களுக்கும், பதியாவார் பரமசிவம் எல் லாப் பொருளிலேயும் கலந்திருந்தும் அவற்றுளொன்றேனும் தாக்குத லற்று அவைகளை முழுவதும் நடத்துவிக்குமத்தலிவர் மண் முதலிய முப்பத்தாறு தத்துவங்கட்கு மப்புறப்பட்டவர் என்றும், மூலப்பிர கிருதி விஷ்ணுவென்றும், புருடதத்துவம் உருத்திர மூர்த்தியென்றும், இப்பிரகிருதியும் புருடனும் ஆண்பெண்வடிவிற் கூடியகூட்டம்உலகப்ப டைப்பினுக்குக் காரணமாயிற்றென்றும், இக்காரணங்கடந்துநின்றஅவ் விறவைர்தமக்குத் தாமேவயப்பட்டவராய்த் தமக்குமேலொருதலிவரு மில்லாதவராயும், அன்பர்க்கருளத் தம்மருளிச்சையாற்றிருமேனிதரிப் பதல்லது புவன போகங்களை அனுபவிக்கின்ற எம்போல் மலபாகதேக முடையரல்லராயும், கல்வியாதிய காரணமின்றி இயல்பாகவே எல்லா மொருங்குணர்ந்த பேரறிவினராயும், மலபாசங்களோடு என்றுங் கல

வாதவராயும் தம்மை நினைப்பவர்க்கெல்லாம் இன்பம் விளைக்கின்ற பேரின்ப மூர்த்தியாயும், அணுவிலண்டமும் அண்டத்து ளனைத்தும் அடைத்த அளப்பரிதாமாற்றலுடையராயு முள்ளவரென்றும்வேதாகம முதலிய கலைகளெல்லா முறையிடுகின்றன. அன்றியும் பிரகிருதியாதார மாகும் புருடதத்துவ சொரூபியாகிய உருத்திர மூர்த்தியும் ஒரு கற்ப த்தில் விஷ்ணுமூர்த்தி நாபிக்கமலத்திற் பிறந்த பிரமதேவன் தனக்கு உலகத்தைப் படைக்குந்தொழில் கைகூடாமல்.வருந்தித் தபஞ்செய்த காலத்தில் சிவாணுக்கிரகத்தால் அப்பிரமன் நெற்றியில் அவதரித்தா ரென்றும், அப்பிரம விஷ்ணுமுதலிய தேவர்கள் யாவரும், சாபமுத லிய காரணங்களால் மானுடயோனிகளிலும், திரியக்குயோனிகளிலும் பிறந்ததாகவும் கூறியுள்ளது. அல்லாமல், அவ்வேதாகம முதலிய கலை களெல்லாம் சிவபெருமானேயென்றும் பிறந்திறவாதவன் என்று சொல் வதுமாத்திரமோ? அவரது ஆயிர நாமங்களிலேயன்றி எவ்விடத்து அவரைக் குறிக்கவேண்டுமாயினும் அவ்வவ்விடங்களிலும் பிறப்பிறப் பிலானென்பதே அவர்க்கு யோகரூடப்பெயராக வழங்கி வருகின்றது. இச்செய்தியாரு மறிந்தபடி. இங்ஙனமிருக்க அவ்விறைவர் திருவெண் காடனுருக்கு எவ்வாறு புதல்வராயினர் என்பது பெரியதோரையம். அஃதங்ஙனமாக ; அவரிருக்கும் காவிரிப்பூம்பட்டினத்திற்கடுத்துச் சாயாவனமுந் திருவெண்காடுமாகிய திருப்பதிகளிருக்க அச்சம்பந்த மான திருநாமங் கொள்ளாது மருதவாண னென்னுந் திருநாமத்தால் அவ்விறைவர் வந்து அவர் மகவாசை தீர்த்து, அருளுஞ்செய்ததற்கு நிமித்தம் யாது? இவற்றை விளங்க வெங்கட்கருள்செய்யவேண்டுமென் று விண்ணப்பித்தார்கள். அப்போது, அவர்களை நோக்கி உபமன்னியர் சொல்லலாயினர்.

இருடிகளுக்குமுன் பிரமன் உபதேசித்தது.

ஓ ! முனிவர்களே ! உங்கள் விருப்பம் சிறந்தது. இது மோக்ஷத்தை விரும் முயற்சி செய்வார் முன்னே அறிந்துகொள்ள வேண்டுவதாக விருக்கின்றது. ஆகையால் ஞாபகத்தோடுங்கேட்பீர் களாக. முன்னொருகாலத்தில் மெய்ப்பொரு ளின்னதென்று அறியவிருப் பமடைந்த முனிவர் பலர் ஐம்பொறியின் வழியே புலன்களை நுகரச் செல்லவொட்டாது மனதை யொருவழிப்படுத்தி, அந்த திருவிடை மருதூரின் கண்ணே அருந்தவ நெடுங்காலஞ் செய்திருந்தனர். அப் போது பிரமதேவன் அவர்கள் தவத்தினுக் கிரங்கி, சரச்சுவதி தேவி

யோடு அவர்களுக்கு வெளிப்பட்டுத் தரிசனை கொடுத்தார். உடனே முனிவர்கள் கண்டுவணங்கித் தொழுது, எம்பெருமானே அறியாமை யான விருளிற் கிடந்து, வாத தருக்கமென்னுஞ் சுவரின் மோதித் தலை பிளக்க வருந்துகின்றஅடியோங்களுக்குள்ளஜயத்தினைத்தேவரீர்அன்றி விளக்குவார் பிறரொருவருமில்லாமையால் எங்கள் குறையைத் தீர்த் தருளவேண்டுமென்று பிரார்த்திக்கப் பிரமதேவனும் அவர்கள் விண் ணப்பத்தினைத்தம்முள்ளங்கொண்டார். அக்குறிப்பினையறிந்த முனி வர்கள் உடனே கேட்கலாயினர், ஐயா! தத்துவங்களை யெல்லாம் அசைப்பித்து எவ்வகைத் தொழிலையும் நடத்துவோன்யார்? மே லானது யென்ற பொருட்கெல்லாம் மேலானவன் யார்? ஒருபொ ருளை விரும்புதலும் ஒரு பொருளை வெறுத்தலுமில்லாத பரமேச் சுரன் யார்? பிறவிக்குக்காரணமாகிய பற்றுக்களெல்லா மியல்பாகவே கடிந்துநின்ற பரிசுத்தன் யார்? வேண்டுவார்வேண்டு மபொருளெல்லாங் கொடுக்கவல்லனுகிப் புகழாற் பூசிக்கப்படுபவன் யார்? முடிவில் எங்கே ஒடுங்குவது? இந்த மஹா பூதங்களெல்லாம் யார்க்கு வசப்பட்டடங்கி நிற்கின்றன. எவற்றையும் ஆட்டுவிப்பான் யார்? அவனை நாங்களெவ் வாறு அறியலாம். எவ்வகை முயற்சியாற்காணலாம். இச்சந்தேகத்தை இவ்வுலக பிதாவாகிய தேவரீர் தீர்த்தருளவேண்டுமென்று மீட்டும்பணி ந்தாகள்.

அப்போது பிரமதேவன் மிகமகிழ்ந்து சிவத்தியானஞ் செய்து கண்களில் ஆனந்த நீர் பெருக, மயிர்ப்புளக மரும்ப, அஞ்சலியத்த ராக வெழுந்து நின்று அம்முனிவர்களை நோக்கிச் சொல்லத்தொடங் கினர். ஓ! முனிவர்களே! நித்தியமாயுள்ள வேதாகமங்கள் எல்லாம், நீங்களிப்போது விணவிய வொருவனை யறியவேண்டித், தன் வயத்த னுதல், தூயவுடம்பினனுதல், இயற்கை யுணர்வினனுதல், முற்றுமுணர் தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவி லாற்ற லுடைமை, வரம்பிலின்பமுடைமை யென்னும் எண்குணங்க ளைப் பற்றித் தேடித்தேடிச் சென்றும் உண்மை யறியாது அலுத்து நின்றுவிட்டன. இன்னமுந் தேடு நிலைமையிற்று னிருக்கின்றன. இவ் வுண்மையை அனுபவமாகக்கண்டு சுகமடைந்தோனே வித்துவான். அவன் ஒன்றற்கும் தன்னெஞ்சில் அஞ்சான். அதுநிற்க.

அவ்விறைவனை "ஒருநாமமோருருவ மொன்றுமில்லான்" என வும், "அவனருளே கண்ணுகக்காண்பதல்லா, லிப்படியனிவ்வுருவ னிவ்

வண்ணத்தா னிவனிறைவனென் றெழுதிக்காட்டொணாதே" எனவும் மறைமொழி யுள்ளனவாயினும், "வசி" என்பது வசத்திலுள்ளது என் னும் அர்த்தமுடையது. எனவேதனக்குள்ளடக்கியது என்றபடி. இலக் கணையால்விரும்பத்தக்கது, எனவும், ஒளியினை யுடையது, எனவும் பொருள்படும். அது ஹிம்சி என்னுஞ் சொல் எழுத்து நிலைமாறி சிம் ஹம் என நின்றாற்போல எழுத்துநிலை மாறிச் சிவனென நின்று அந்த இறைவன் றிருநாமமேயாகியோகரூடியால் வழங்குகின்றது. ஆதலால், முனிவர்களே! நீங்கள் விரிவியவிலக்கணமுடைய தலிவன் சிவனே பாம் அனைவனவும் நிற்பனவுமாகிய வெல்லாவற்றுணின்றும் நடத்த லாற் கடவுளெனவும், குணங்களையும், மனமுதலிய கரணங்களையும், புலன்களையும், பூதங்களையும், பொறிகளையும், மற்றைத் தத்துவங்களை யும், அரிபிரமரிந்திரர் முதலிய யாவரையும் முதலிலே தானே தோற் றுவித்தலால் அம்மயப்பனென்றும், "முழுவதும் படைப்போற் படை க்கும் பழையோன் படைத்தவை, காப்போற்காக்குங் கடவுள் காப்ப வை, கரப்போன் கரப்பவை கருதாக்கடவுள்" என்றும், தனக்குயர்வும் ஒப்பு மில்லாமையின் "ஒருவனென்னு மொருவன் காண்க" என்றும் எல்லாப்பொருளையும் உடைமையால் ஈசனென்றும், உற்பத்தி நாச மென்பது என்றுந்தனக் கின்மையால் அரன் என்றும் அவ்வேதாமங் கள் துதிக்கின்றன. அன்றியும், மோக்ஷத்தை விரும்புவோரெல்லாம் ஞானகாசமே வடிவமாகவுடைய அச் சிவபெருமானையே தியானிப் பார்கள், தியானபலத்திலவர்கள் ஞானியராவர். என்னை முதலிற் புத ல்வனைப் பயந்தோர் அச்கடவுளையாம். பாலிலேசுவையும், மணியிலே ஒளியும், எல்லாப் பொருளிலும் ஆகாயமும் எப்படி கலந்துள்ளவோ அப்படி எல்லாவண்டங்களிலும் அச்சிவன் பரிபூரணமாகக் கலந்திருத் தலால் "சிவமயம்" என்றருடியு முண்டாயிருக்கின்றது. "ஒருவர்"என் னுஞ் செந்தமிழ்ப் பெருவழக்குச் சொல் அவ்விறைவனையே பொரு ளாகவுடையதென்பது கற்றுணர் புலவரால் அறியத் தக்கது. அச்சொல் மற்றெக்கடவுளர்க்குஞ் செல்லாது. "தோலுந்துகிலுங் குழையுஞ் சுருடோடும், பால்வெள்ளை நீறும்பசுஞ் சாந்தும் பைங்கிளியுஞ், சூல முந்தொக்கவினையு முடைத்தொன்மைக், கோலமேநோக்கிக் குளிர்ந் தாதாய் கோத்தும்பீ" என்றலின். சூரியனிற் சோதியும், சந்திர னிற் குளிர்ச்சியும், ஆகாயத்திற்கலப்பும், காற்றில்வன்மையும், தீயில் வெப்பமும், நீரிற்குளிர்ச்சியும், மண்ணிற் றிண்மையும் வைத்துலகு

தொழிற்பட்டு வரவமைத்தோ ரவரே யென்பதற்கு வேறு அளவை நாம் கூறவேண்டுவதில்லை; மேல் அச்சிவமென்ற சொற்பொருளொன்றே யுணர்த்தும். கடவுளில்லை யென்று வாதிக்கும் நாத்திகரும் அச்சொற் பொருளைத் தேற விசாரிக்கு மிடத்தில் அங்கடங்குவர். திரிபு, கேடு, இல்லாத தென்பது "இயற்கை" ஆம் ஆகவே, அவ்வியற்கை யென் பதே அச் "சிவம்" என்று உணரக்கடவீர்கள். எங்ஙனமென்னில், இயற்கையுளடங்காத மதவாதிக ளுலகிலொருவரு மில்லை. ஆதலால் அவ்வடங்குதலே "வசி" ப்பொருளாலை "சிவம்" என்பதே "இயற் கை" என்றவாறும். இனிப்பிரமம் என்பதும் சிவமென்பதும் ஒரு பொருட்கிளவி. நிலம், நீர், தீ, காற்று, வெளி, சூரியன், சந்திரன், உ யிர் என்ற எட்டும் அக்கடவுள் திருமேனியென்று வேதாகமங்கள்கூறு மாலை இவற்றுளடங்காதது? இவ்வெட்டு னுபகாரத்தைதவெண்டாத தது? ஆகவே யார் என்ன உபாசனை செய்தபோதிலும் சிவனை பாசித்தபடியாம். ஆதலாற்றான் "விரிவிலா வறிவினர்கள் வேறுருசம யஞ் செய்து, எரிவினற் சொன்றேனும் எம்பிரான் கேற்றதாகும்" என்று தமிழ்வேதங் கூறியது. இக்கடவுள் எல்லாவற்றிற்கும் வித்தா யிருத்தலால், இவரை முற்கூறிய பெயராலேயன்றி வேறு எக்கடவுள் பெயரால் எப்பொருளின் பெயராற் கூறினுங் குற்றமில்லை. எல்லாப் பெயரும் அவர் பெயரேயாம். எல்லாவடிவும் அவர் வடிவேயாம். எல் லாக்குறியும் அவர் குறியே யாம். யார், யாரைத்தொழுதாலும், எதை உபசரித்தாலும், அச்சிவனைத்தொழுதது முபசரித்ததுமாகவே முடி வில் முடியும். இக்கருத்தாலன்றோ முன் அருச்சுனன் பாரதப் போர் பதின்மூன்று நாளிரவிற் கண்ணனைப் பூசித்த தவ்வினைவினைப்பூசித்த வாறுபிற்று. அன்றியும் இவ்வுலகத்தில் பசுவின் கன்று கட்டிடம் கட்டுத் தறியும், நென் முதலியவற்றை யளக்குங் கருவியாகிய மரக்காலும், புற் றும், பலகையும், மண்ணும், கல்லும் இவைபோல்வன பிறவும் சிவக்குறி யேயாயிற்று. உண்மையை ஆராய்ந்து பார்க்கு முணர்ச்சியில்லாதவர் என்றும் ஒன்றும் உணராதவரே யாவர். இவ்வினைவனை வைதாலும் அவர்க்கு வாழ்த்தேயாம். முன் வனவாசகாலத்தில் அந்த அருச்சுனன் பாசுபதப்படைவேண்டித் தவத்திற்குச் சென்றிருந்தபோது அவனிடுக் கண் களையும்படி அவ்வினைவன் வேடவடிவத்தோடு வந்து பொய்ப் போர் புரிந்தகாலத்தில், அப்பாண்டவர் நடுவன் கடவுளென்றறியாது வில்லாலடித்த அடியும், மதுரையில்திருவாதவூரடிகள் பொருட்டு வர

முனிவர்கட்குப் பிரமன் இடைமருது மான்மியங்கூறியது. நிக

விடுத்த வைகைப் பெருக்கை யடைக்கும்படி பிட்டுவிற்கும் வந்தியார் ஆளாக வந்து அரிமர்த்தன பாண்டிய ராஜனுற் பட்ட பிரம்படியும், சாக்கியர் கல்லடியும் அருச்சுனையாகவே முடிந்தவன்றே? உண்மை யறிந்த பெரியோர்கள் தாய், தந்தை, உடன்பிறந்தார், மனைவி, மக்கள், சுற்றம், நட்பு, அயலார், பகைவர் என்ற கூட்டந் தம்மைச்சேர்ந்தகால த்தில், அக்கூட்டத்துள்ளாரை யெம்மவர் என்ற பந்த நினைவாற் பா ராமல் இவர்கள் எம்மைமப்பரிபாகப்படுத்திப் பிழைப்பிக்கவந்த சிவ வடிவாகிய குருலிங்க சங்கமமேகாலத்துள்ளவர்களென்றே கொள்வார் கள். இக்கருத்தை அறுபத்து மூன்று நாயன்மார்கள் முதலிய பெரி யோர் சரித்திரத்தா லறிவீர்களாக. அவ்வேதாகம முதலிய கலைகளும், நானும், விஷ்ணுமுதலிய எல்லாத்தேவரும் அவ்விறைவனது அனந்த சத்திகளுள் ஒவ்வொன்றே யாவேம். இதற்கு வேதாகமமே சாகூி. அன்றி அனுபவத்தாலேயு மெளிதிலுணரலாம். இக்கருத்து, அடங்கு வதும், அடக்குவதும், அடங்கிக்கொள்வதும், அடக்கிக்கொள்வதும், என்? எது நிமித்தம் என்னு நடு நிலைமையோடு ஒவ்வொரு வஸ்துவை யும் பற்றி விசாரித்தறிவார்க்கு வெளிப்படும். கேளும் முனிவர்களே! இவ்விடயத்தி லின்னம் சொல்லப்புகுந்தா லென்னுள்போதாது. அது நிற்க.

முனிவர்கட்குப் பிரமன் இடைமருது மான்மியங்கூறியது.

இனி இத்தலவணைப் பூசிப்பவர்க்கு எவ்விடத்திலும், எக்காலத் திலும் எவ்வருவத்திலும், எப்பெயராலும், தாம் அறிந்த எவ்வகை யாலும் பூசிக்கலாம். இன்னவிடத்தி லிக்காலத்தி லிவ்வடிவத்தி லிப் பெயரா லிவ்வாறு பூசிக்கவேண்டுமென்னும் நியமம் வேண்டுவதில்லை. எனெனில், உலகத்தின்கணுள்ள எல்லாவிடமும், எல்லாக் காலமும், எல்லாவடிவமும், எல்லாப்பெயரும், எல்லாத்தொழிலுமுடையா னவ் விறைவனே யன்றே? எழுத்தின் மணமறியாத வேடர் குடிப்பிறந்த கண்ணப்பதேவர், எச்சின் மயங்கச் செய்த திருமஞ்சனமும், சூடிக்கந்த திருப்பள்ளித் தாமமும், சுவைகண்டறிந்த ஊனமுதும் அவ்விறைவர் மகிழ்ந்து கொண்டருளியவன்றே? ஆகவே உண்மை அன்பே பூசை யாவதன்றி வேறில்லை. "அன்பினுள்ளான்புறத்தானுடலாயுளான்-முன் பினுள்ளான் முனிவர்க்கும் பிரானவன்-அன்பினுள்ளாகி யமரு மருமம் பொருள் - அன்பினுள்ளார்க்கே யணைதுணையாமே." என்ற மந்திர விதிசான்று.

ஆயினும், சன்மாந்திரத்திற் செய்த முழுப் புண்ணியர்க்கன்றி அத்திறம் வாய்ப்பதரிது. ஆகவே, புத்தடிமை செய்யமுயல்வார்க்கு என்றே அச் சிவமுணர்ந்த பெரியோர் வகுத்தமைத்த இடம், காலம், உருவம், மந்திரம் செய்வகை முதலியன சிலவுள்ளன. அவற்றுள். உருவத்தினை முன்னுணர்த்தி யேனையவற்றைப் பின்னுணர்த்துகின்றும். ஓ! அந்தணாளரே! கேண்மின்கள்.

அவ்வகண்டாகார சிவத்தினிடத்தில் விளக்கொளிபோற்பிரிவற் றிருந்த சிற்சத்தியுணின்றும் பராசத்தியார் வெளிப்பட்டனர். அப் பராசத்தி அனுக்கிரக ரூபியாம். ஆதலால் பத்தியானினைப்பவர்கணி னைத்தவண்ணம்காட்சிதரும். அப்பராசத்தியார், குணங்குறியற்றவற் றிற்குங் காரணமுமாவர். இயற்கையறிவினர். நித்தமானவர். இச்சா ஞானக்கிரியை வடிவாக வெளிப்படுவர். சுஷ்மம்—அவ்வியக்தம்—வெ ளிப்படாதது. அசுஷ்மம்—அமிர்தம்—நாசமற்றது. இவ்விரண்டு வடிவு மும் அவர்தான். யாவற்றையு மளித்ததாயாதலால் உமை யென்றும் கூறப்படுவர். சந்திரனுங் கிரணமும் பிரிவற்றிருந்தாற் போலும் அச் சிவசத்திகள் பிரிவற்றுள்ளன. இவற்றை வேறுபிரித்தெண்ணுவோன் பாவியாம். பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன், என்னும் பஞ்சகருத்தாக்களையும் கட்டிலாகக்கொண்டு வீற்றிருப்பார். ஆண்மாக்களுள்ளக்கமலத்தில் வீற்றிருப்பார். கோடிசூரியருதயமானாற் போலும் பேரொளியுடையார், ஆன்மாக்களுக்குப் பந்தமுத்தியிரண் டிடத்து முண்டாகும் இச்சையையே பாசமாகவும், துன்பவினைகளை யொழிப்பிக்குங் குரோதத்தையே அங்குசமாகவுமுடையவர். ஆருளி னாலே நமது பயத்தை யொழிக்குங் குறியுடைய கரத்தையும், வேண் டும் வரத்தைத் தருங் குறியுடைய கரத்தையும் உடையவர். தத்துவங் களை யுணரு முணர்ச்சி, சீவனுகிய தன்னையுணரு முணர்ச்சி, சிவத்தை யுணருமுணர்ச்சிக்குங் காரணமான சூரியன், சந்திரன், அக்கினி என் னு முச்சுடரையுங் கண்களாகவுடையவர். விஷயங்களைப்பற்றுத சுத்த சத்துவ வைராகமாகிய செவ்வண்ணமுடைய தோயாப்பூந்துகிலுடை யவர், அடியார் இச்சித்தவண்ணமருளும் பெருந்தயாளு. காணக் கருதவினிய அழகின் பேருருவானவர். "பெருந்தன நாயகி" என்னும் திருநாமமுடையார். எப்பொருட்குந் தலைவி. எல்லா வண்டங்களினுட் புறத்து மப்புறத்தும் வீற்றிருப்பர். காயத்திரி தெய்வமாய்ச் சூரியனி கயத்தில் அமர்ந்திருப்பவர். எவ்வகையணிகளுக்கும் ஓரணியாயுள்ள

முனிவர்கட்குப் பிரமன் இடைமருது மான்மியங்கூறியது. சூக

வர். எண்ணிறந்த மந்திரங்களும் தம் வடிவமாகக்கொண்டவர் அம் மந்திரங்களேதாமிருக்கும் பீடமாகவமைத்தவர். "சருவாங்கசுமங்கலை. சருவவித்யாகாரணி. சருவ ஞானங்குரை. சிவஞானப்பிரதாயினி. சந் திரமண்டலவாசினி. நித்தியகலியாணி. நித்யசுந்தரி. அமிர்தகிரணமுக மண்டலி. தயாரசபூரிதவிலாசலோசனி. ஜராமரணநாசநமெனக்திகை. ஸ்துதிப்பிரிய சுரோத்திரி. மதுரவாக்குவிநோதினி. நித்தியமாங்கலிய சங்கக்கிரீவை. ஆதித குசவல்லி. பிரமாதி ஜகத்தி ஞதாரவுதரை. பஞ் சதசாக்ஷரீமந்திரார்ச்ச நாநுக்கிரகபதுடபாதா. சோடசாக்ஷரீமந்திர மகாமூர்த்தி. சருவஜகன்மஹாமாதா. சருவைசுவரியகாரணி. மஹாரா ஜை. மஹாதேவி. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹார, திரோபவானுக்கிரதா யினி. சர்வதந்திரேசுவரி. சர்வபந்திரேசுவரி. சர்வந்திரேசுவரி" என்று வேதங்களாற்றுதிக்கப்பட்டவர். "திரிபுரை சுந்தரி பந்தரி அந்தரப்-பரி புரை நாரணியாம்பால்வண்ணத்தி - யிருள்புரையீசை மணிவண்மனி யென்ன-வருடலவாய் நிற்குமா மாதுதாமின" "தாளணிநூபுரஞ் செம் பட்டுத்தாணுடை, வாரணி கொங்கைமலர்க் கன்னல்வாளிவில், ஏரணி யங்குசபாசமெழின்முடி, காரணிமாமணிக்குண்டலக்காதிக்கே" "அவ ளையறியாவமரு மில்லை, யவளன்றிச் செய்யுமருந்தவமில்லை, அவளன் றி யைவராலாவதொன்றில்லை, அவளன்றியூர்புகுமாறறியேனே" என் றது மந்திரவாக்கியமும்.

இனி, இப்பராசத்தி நிலைமையை "போகஞ்செய் சத்திபுரி குழ லாளெனும் - பாகஞ்செய்தாங்கே பராசத்தியாய் நிற்கும். ஆகஞ்செய் தாங்கே யடியவர் நாடொறும் - பாகஞ்செய்ஞானம் படர்கின்றகொம் பே', என மந்திரங்கூறியதால்அப்பெருந்தனாயகி(பிருஹத்குசாம்பா) உள்ளமாகிய தகராகாயத்தில் சுவயம்பு வாகிய பரமசிவம், "மஹாலிங் கமூர்த்தி" என்ற திருநாமத்தோடும் யாமனைவரு மூய்யும்படி சிவலிங்க மாக வெளிப்பட்டனர். அங்ஙனம் வெளிப்பட்ட கூத்திரந்தான் திரு விடைமருதூர். சிதம்பரத்துள் உலகுவடிவான விராட்புருடனுடைய இதயத்து வெளிப்பட்ட சிதாகாயமூர்த்தியாம். அவ்வாறன்றி அவ்வுல கையெல்லா மீன்ற அம்மையாகிய வுமாதேவியா ரிதயமாகிய தகராகா யம் திருவிடை மருதூரென்று லதனினுமிது சிறந்ததாமன்றே. அன் றியும் சிவபெருமான் சிதம்பர தலத்துள்ளே சிதாகாயவடிவமாய் எழுந் தருளி யிருப்பர். இந்த கூத்திரத்தில் மஹாலிங்கவடிவமாக வெழுந் தருளி யிருப்பர். அந்த காரணத்தினாலே மற்றையதிருப்பதிகளிற்

கொண்டிருப்பதுபோலவேறுதிருநாமங்கொள்ளாது, இத்திருப்பதியில் "மஹாலிங்கம்" என்ற திருநாமஞ்சிறப்பாகக்கொண்டருளியது. இத் திருநாமம் மற்றெந்தத் திருப்பதியிலுமில்லை. இம்மஹாலிங்கப் பெரு மான் என்று மொருபடித்தா யெழுந்தருளியிருந்து, பிரமனுகிய வென் னுலும் மற்றையதேவர் முனிவர்களாலும் பூசிக்கப்படுவர். "இருண் மலமொழிக்கு முக்கணிறையவன் குணமொன்றில்லான், பொருணிறை குணங்கட் கெல்லாம் பொருந்துமாதாரமானன், அருள்சதாசிவனீறில் லான் ஆப்ந்திங் குறிவிகாரம், மருவிலான் குணத்தையாக்கி மூவரை வகுத்தான் மன்றே" "வலத்தினிலென்னே அந்த வாமத்தில் அரியை மத்தித், தலத்தினி லுருத்திரப்போர்த்தனயை யளித்தியாரென்னப், பலத்துறுதந்தையாம் நீர் பாலகர் தொழிலோர் மூன்றும், நலப்படப் பெற்றே மும்மை நயந்தனைப்பூசைசெய்மின்" என்று, "பூசைசெய் திறத்தை யன்று புண்ணியன் உரைத்தான் மூவர்க், கீசன்முன் சொன் னவண்ணம் இயம்புவனுங்களுக்கு, நேசமாமுனிவீர்கேண்மின் நிமலி னையு முன் பூசித்து, ஆசையால் மகாலிங்கத்தைப் பின் பருச்சித்தல் வேண்டும்" "எனெனில் மகாலிங்கம் முன் சத்தியாதாரமாகத்தான் வெளிவந்ததாலே சயம்புவாம் அத்தலிங்கம்" சிருட்டி, திதி, சங்காரம் திரோபவம், அனுக்கிரகமென்னும் பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்வதற் குப் பிரமா விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் என்னும் ஐந்துதலைவர்களுடைய தோற்றத்திற்கும் எழுவாயாகவிருக்கது. அன் றியும், ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசா தம் என்னும்பஞ்சப்பிரமங்களும் அம்மகாலிங்கத்திற்முன்றின. இவற்றுள், ஈசானம், ஆதியும் மகத்துமாய்ப் பிரகிருதிக்கு அதிகாரி யாய் ஆன்மாவைப்பற்றி நிற்கின்றது. அது மஹாலிங்கமென்னப்பட்டு இம்மூவுலகத்துள்ள இலிங்கமூர்த்திகளெல்லாந் தோற்றுமிடமாம். தற் புருடம், அவ்வியத்தத்திற் கதிகாரியாய் முக்குணம்பற்றி நிற்கும். இ தில் தருமம் முதலிய எட்டு அங்கங்களோடும் கூடி புத்திதத்துவம் பிறக் கும். அகோரம், அவ்விலிங்கமூர்த்தியிடமாகவுற்றமுற்றிருக்கும். வாம தேவம், அகங்காரதத்துவத்திற்கதிகாரியாயிருக்கும். சத்தியோசாதம் ஒளிப்பிழம்பாய் மனமென்னுத் தத்துவத்திற் கதிகாரியாயிருக்கும். இந்த பஞ்ச பிரமலிங்க மூர்த்திகளும் இம்மஹாலிங்கத்தினுக்கு ஒரு குரோசத்துள்ளே அமைந்துள்ளன. இப்பஞ்சமூர்த்திகளையும் மூபா சித்தவர்களுக்கு எல்லாநன்மையுமுண்டாம். நன்மைக்கே வித்துஇவை

முனிவர்கட்குப் பிரமன் இடைமருது மான்மியங்கூறியது. கூக

யாதலால், இவ்வுலகெல்லாம் தேவதேவராகிய சிவபெருமானுர் பஞ்ச மூர்த்தவடிவமாம். சூத்திரிகன் பாவையைக் கயிற்ரு லாட்டுவதுபோ லும் இறைவனும் அறம்பாவமென்னுங் கயிற்ரூற் கட்டி யாட்டுகின்ற னர். எவ்விடத்துள்ள சிவகுறியும் இம்மகாலிங்கத்துட்டோன்றியவே. இம்மூர்த்தியை வழிபடுவோர்க்குத் துக்கமென்பதொன்ரும்பொது மூண்டாகாது. இத்திருப்படிதியிலுள்ள தருமும்பும் சிறுகல்லும் சிவமய மே யென்று பெரியோர் கூறுவர். அண்டத்துளாகிய விப்பூமி தன்னு ளிம்மகாலிங்கத்தைத்தொண்டு நுக்கின்றது. இவ்விடைமருதீச ரெப் பொருளுந்தாமேயாவர். இவ்வண்டமைபுள்ளவாயுளார்ந்தவண்பிறப்பு இறப்பு என்னுந் துன்பத்துளென்ரும் அகப்படான். பொன்மயமாகிய விம்பிரமாண்டமும், அதனுட்பாலிருக்கும் ஆண்பெண்ணன பிராணி களும் தோற்றுதிட மிம்மகாலிங்கமேயாம். பெருந்தன வல்லிபாகன், பிரமசி, வெள்ளியாடையுரி, விரிபொற்சடையோன், அங்கண்மலரோன், அருண்மேனியாடிணன், ஆரையாடராயகி யபமலைவள் வெளியில், நீள் ஒளிக்கொழுந்தாய் நின்றனன் ஆதலின், மேருவுண்ணீர் மரத்தின்கிளைகட் கெல்லா மாயவாறுபோல இந்த மகாலிங்கத்தை யருச்சித்தால் நடப் பனவும் நிற்பனவுமாகிய எல்லாவுயிர்த்தொகைகளும் திருத்தியுற்றுச் கினர்ச்சியை யடையும். இச்சிலருமியின் பெருமையை மாயவன் அறி யான், வானவர் அறியார், ஆயிரமணி முடிச்சேடனும் அறியான், சன காதியோகியர் தாமுமறியார். மயங்கும் பிறப்பின் மாயிடரறிவரோ, அருவமாய் உருவமாய் அருவுருவமுமாய், முதல் நடுமுடிவிலா முழு முதலாகி, அறிவை மயமாய் ஆருயிர்க்குயிராய் தாணுவாய் அமர்ந்த நற்பரன்மகிமையை, அவன் ஒரு பாடற்பின் அடங்கியுரைத்தவர், யாவர் தாம் அறிவார் யாதுகாண்குவர்கள். சதாய்புகமா பிரக்தானைக்கொ ருடகல், என்பாமாயுள் இலங்கு அரிக்கு ஒருபகல், அவ்வரி ஆயுள் அரனுக்கு ஒரு பகல் அவ்வரன் ஆயுள் சதாசதாம்பகல், அவ்வீசன் ஆயுள் அருள் சதாசிவன் பகல், ஆனைடயிலைறவனுக்கு அளவொன் றில்லை. ஆதல் அளவிடல் அரிதன்கள் அறிவரோ? அவ்விறைவன் எழு ந்தருளிய இந்தத்தலத்தில் வசிக்கும் பாக்கியசாலி என்பிறன எவ்வகை யுயிர்களும் பிறப்பிறப்பில்லாத சிவலோகவாசிகளான வருந்திரசணந்தி பர்களேயாவர்கள். இந்தத்திருப்படிதியில் வந்திறந்தவர்கள் இந்திரன் விஷ்ணு முதலிய தேவர்களாலும் அடைதற்கு அருமையாகிய சிவ லோகத்தை எளிதில் அடைவார்கள். மண்ணுக்கு மேல் சுவர்க்கம்,

அதற்குமேல் சத்தியவுலகம், அதற்குமேல்விஷ்ணுபதம், அதற்குமேல் சிவலோகமாகியவுருத்திரவுலகம். இங்கு வசிப்பவர்களும் அவ்விடம் பெற்றவழிதான் அழிவின்றி வாழ்வார்கள். அவ்வாறு உமாதேவியாருக்குசிவபெருமான் அனுக்கிரகித்திருக்கிறார். ஆதலால்முனிவர்களே! பூருவபுண்ணிய பரிபாக மடைந்த சுத்தான்டாக்களாகிய சத்தியபத்தியுடையவர்கள்இவ்விடத்தில் சிவபெருமான், மஹாதேவியார், கணபதி, முருகப்பிள்ளையார், சண்டேசப் பெருமான் என்னுமும்பஞ்சமூர்த்திகளையும் இயன்றளவில் உள்ளன்பு பொருந்த, பிறர் மதிக்கவென்றண்ணல் தாம் உய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு பூசித்துக்கடைத் தேறுவர்கள் என்று சொல்லிப் பிரமதேவர்* மத்தியார்ச்சுனப்பெருமானை வணங்கி அருள்விடை பெற்றுத் தமதுலகமே போயினர்.

திருவெண்காடர் மைந்தரின்றி வருந்தல்.

கேளும் முனிவர்களே? சிவபெருமான், மெய்யன்பர்பாவனைவசப்பட்டவர். "மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார், நிலமிசை நீடு வாழ்வார்" என்ற வேதவிதி சத்தியம். அன்பு வழிஅறியாதமன்மதன் இட்ட தாமரைப்பூ, முல்லைப்பூ, மாம்பூ, அசோகம்பூ, நீலப்பூ என்னும் ஐந்து வகைப்பூவும் பாணமாகி முடிவில் அந்த மன்மதனுயிருக்கு உலையாய் நின்றன. இன்றும் அவன் அனங்கனெனியொழிந்தான். அன்பின் வழிநின்ற சாக்கியர் இட்டகல்லே மலராகி அவரை என்றும்அழியாவற்ற வின்பத்தை யுடைய சிவலோகத்தேறப்பண்ணிற்று. ஆதலால் அடியார் மனக்கோயில் வீற்றிருக்கும் சிவபெருமானைத் திருவெண்காடனெறிரவும் பகலும் மறவாத நேசம் வைத்துப் பூசித்து வாணிபத்தின் மிகச்சிறந்து கற்புக்கரசியாகிய தமது மனைவியாரோடு பெருஞ் செல்வராய்ப் வாழ்ந்துவருநாளில், அவர்க்கு வயது முப்பதுசென்றதாக அதுவரையும் மக்கட்பேறில்லாமையால், மனந்தளர்ந்து வருந்தி கொண்டு "படைப்புப்பலபடைத்துப் பலரோடின்றி, முடைப்பிண்டருஞ் செல்வராயினுமிடைப்படக், குறுகுறுநடந்து சிறுகை நீட்டி, யிட்டுந் தொட்டுங் கௌவியுந்துழந்து, நெய்யுடையடிசின் மெய்ப்பட விதிர்த்து, மயக்குறு மக்களையில்லோர், பயக்குறுவிலர்தாம் வாழுநாளே" என்று சிந்தித்து, பின் ஒருவாறு தெளிந்தமது குறைவைத் தம்மையாளாகவுடைய திருவிடை மருதாருடையாருக்கு விண்ணப்

---

* "மத்தியார்ச்சுனம்" என்பது வடமொழிப்பெயராம்.

பித்துப் பலவகைத் தானமுதலிய செய்கடனை நிறைவேற்றி வந்தனர்.

அக்காலத்தில், பிரமாமுதல் சிறுபுழுவீருகிய வுயிர்கள் தோறும் நிறைந்து நின்று அவ்வவர்க்கும் புவனபோகங்களை ஊட்டுவிக்கும்அம்மையப்பராகத் திருவிடைமருதூரிலமர்ந்த அருளாளர் திருவெண்காடர் விண்ணப்பத்தைத் திருவுளமேற்று அவர்க்குத் தாம் முன் அனுக்கிரகித்திருந்தபடி அருள்செய்பவென்று கருணைவைத்தார். அப்போது அந்த மறைநாற்றிசைத்தில் தம்மை மறவா துள்ளன்போடும்வழிபட்டு வரும் "முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார்" ஆகிய ஆதிசைவரும், நால்வேதங் கணைகண்டவரும், ஆகமப்பெருங்கடல் கடந்தகேணி போல்வாரும், சகல சாத்திரங்கட்கும் கருவூலம்போன்றவரும், நல் லொழுக்கமே வடிவானவரும், சிவபத்தி அடியார் பத்தியன்றி மற் றெற்றென்று மறியாதவருமாகிய சிவசருமனென்னும் அந்தணர் குல மணியானவர், கற்புக்கரசியும், அழகுக்குஅணிகலமுமான சுசீலயென் னும் மனையியாரோடும் இல்லறம் வழுவாது நடத்திக்காலங்கடோறும் பெருந்தன தானதியானவரும், அவையிடம் பிரியா மகாலிங்க நாதரை யும் விதிப்படி அருச்சித்துவரும் நியமமுண்டவர் தமது பெருஞ் செல்வத்தை யெல்லாம் அச்செல்வம்விரும்புபவனென்று சிவார்ச்சனைக் கும் அடியார் மெய்க்கரு ணைக்கு மாத்திவந்தனர். இங்ஙன மொழுகு நாளில், அவர் அன்பினிலையைமையாரவர்க்கும் வெளிப்படுத்துவாராய்ச் செல்வமுமையாட பெருமான் அவர் செல்வத்தினைப் பூசணைகழித்த சந்தி ரன் சூலபாணியென்பதைத் திருவுளம் வைத்தலும், அது, புலாலுண் பார்தவம்போலாயிற்று. அங்ஙனமாயும் சிவசருமர் தம்முள்ளன்பும் உத்தமரும் சூழ்வினைத்தி மேன்மேலும் பெருகினர் சிவார்ச்சகர் உதய காலத்து மஞ்சனியாலய தேவத்தி, நல்லவேள! இன்று சிவார்ச்சனைக் குரிய பூமாலைகளைக் கொடுத்திடுதி என்ன, அவ்வம்மையார் வணங்கி, என்னையையே! குழல்வைத்தட்காக எடுத்துவைத்த சிலபண்டங்களி ருக்கின்றன. அவற்றைக்கொண்டு இன்னமுதுக்குச் சிவபூசை முடிக்கலா மென்றார். அதுகேட்ட சிவசருமரும் மனக்களிப்போடு அவ்வுபகர ணங்கொண்டு கோயிலையடைந்து வழக்கப்படி திருமஞ்சன நிவேதன முதலியவைப்பை முடித்து, அடியார் பூசைசெய்யும்படி மனைக்குத் திரு ம்புகாலையில், மத்தியார்ச்சனைப் பெருமான் பசியால் பீடிக்கப்பட்ட

திருவெண்காடர் சரித்திரம்.

ஒரு விருத்த வேதியராகிவந்து சிவசருமரை நோக்கிப் பசிக்கன்னமிடு தியோ என்ன, அவர் அவ்வேதியரை மனைக்கழைக்க, ஐயர் மனைபோ மளவும் பசிபொறுக்கலாற்றே னெனச், சிவசருமர் அவ்விடத்திற்றனே அவ்விருத்த வேதியரை உண்டி முதலியவற்றாலுபசரித்தார். அவ்வள வில் அந்த விருத்தர் நூற்றுவர்க்காம்படி சேகரித்திருந்த வெல்லாவற் றையுந் தாமொருவரே யுண்டிவைப்பாறி மறைந்தார். சிவசருமர் உட னே கடவுளென்றறிந்து போராநந்த மடைந்து, மருதவாணரைப்பல் காற்பணிந்து துதித்தாடிப் பாடிக்கொண்டிருக்கையில், பரிசனர் வந்து சிவனடியார் பலர் மனையிற்பசியோடு வருந்திக்காத்திருக்கின்றன ரெ னத் திடுக்கிட்டு மனைக்குப் போதலும் மனைவியார் கண்டு, தலைவரே நிவேதனமான சிவப்பிரசாத மெங்கே, அடியார் பலர் பசியோடு வருந் திக்காத்திருக்கின்றனரே யெனக்கேட்டுச் சிவசருமர், பெண்ணைநிலே தன வழுது மருதவாணர்க்கே யோக்கியமானதாயிற்றுன, அக்குறிப் பை யுணர்ந்த அக்குலமகள் எதோ இதுவோர் சிவலீலையாக விருக் கின்றது, எல்லாம் பொறுத்தறிவோம் இப்போது சிவனடியார்கள் பசி யாற்றும் வகை தேடுவதே முறையென்றெண்ணி, உடனேகணவரைப் பார்த்து, என்னுடையவரே! நாமும் குழந்தைகளும் பட்டினியிருக் கினு மிருக்கலாம் வந்த சிவனடியவர்கள் பசித்திருப்பது முறையல்ல; இவ்விடத்து மறுபடியும் சமைப்பதற்கும் வேறு உபகரணங்களில்லை. காலமோ பகலுக்கு அதிகரித்து விட்டது. ஆதலால் இந்த மங்கலியத் தையாவது மாறி வந்த விலைப்பொருள் கொண்டு அமுதுபடி கறிய முது முதலியவற்றைச் சேகரித்து வந்தால், அடியவர்பூசை செய்யலா மென்று தங்கழுத்திலிருந்ததைக் கழற்றிக் கொடுக்க, சிவசருமர் வாங் கிச்சென்று, அவ்வாறேவேண்டுவனவற்றைத் தாக்கொண்டவ்வம்மை மறுபடிபாகங் செய்து, அடியவரை யமுதூட்டியுபசரித்துச் செலுத் தித் தாமுமக்களுமுண்டவ்விரவு சிவதரிசனஞ்செய்து வழக்கப்படி சய னித்திருந்தார்கள். உதயகாலத்தில் துயிலுணர்ந்த சரீலயாரும் சிவ சருமரும் எழுந்து சிவத்தியானஞ்செய்து முடித்து இன்னைறக்கு என் செய்வோ மென்று சிந்தித்திருக்கையில், கற்பின் கிழத்தியாகிய அச் சுசீல யம்மையார்க்கொரு ஞாபகம் வந்து, ஐயோ!! நமது ஆண்டவர் "வேண்டுவார் வேண்டிற்று மீயும் விண்ணவராம்" அன்றே? அவரி டத்து என்? தேவரீருக்குள்ள குறைகளைக் கூறலாகாதெனச் சிவசரு மரும், நல்லது ஆலயத்துப் போவதற்கு வெறுங்கையாலைப்படி கூடு

மென, அவ்வம்மைபார் கேட்டு, எம்பெருமான் இன்றைய பூசைக்கு வேண்டுவன குறைவில்லைகொண்டுசெல்லலாம்என்றுசொல்ல, உடனே யெழுந்து காலக்கடனைக்கழித்து, நித்தியஞ் செய்யு மான்மார்த்தபூசை, தீக்கடன் நிறைவேற்றி ஆலயம் போய் நியமப்படி மருதவாணரையும், பெருந்தனாயகியையும், திருமஞ்சனம், அருச்சனை, நிவேதன முதலியவற்றால் குறைவறப்பூசித்துத் துதித்து வணங்கிவழிபட்டு, நிவேதனமான, அன்னம் வியஞ்சனம் அபூபவருக்க முதலியவைகளை அடியார்களுக்கு ஆம்படி தமது திருமனையிற் சேர்ப்பிக்கப் பரிசாரகர் கட்குத்திட்டஞ்செய்தனுப்பிவிட்டுத்தாம், ஸ்ரீ பஞ்சாக்கரத்தியானத்திலிருந்தார்.

இருக்கையில், அப்பரிசாரகர்கள் அவற்றைத்திருமடப் பள்ளியில் வைத்துவிட்டுத் தங்களுச்சிக்கடன் முடிக்கும்படி அவ்வாலயத் தருகுள்ள காருணியாமிர்த தீர்த்தத்திற்குப் போயினர். அப்போது, மருதவாணர் முன்போல ஓர் விருத்தவேதியர் வடிவாய்ப் பரித்துவரக் கண்ட சிவசருமரும் பெருங்களிப்புட னெதிர்சென் றுபசரித்தழைத்து வந்து திருவடி விளக்கிப் பாதோதக முட்கொண்டு பூசித்து, ஒருபீடத் திருக்கப்பண்ணிப் பரிகலந் திருத்திவைத்து நிவேதனப் பிரசாத வமுதுபடைக்க, அன்றும் அவ்வமுது முதலியவற்றுள் சிறிதும்மீதியாகாதபடி முற்றும் புசித்தருளிக்கைகால் சுத்திசெய்து, ஓரிடத்திருந்து இளைப்பாறுபவராய் வீற்றிருந்தருளினர். அங்ஙன மிருக்க, இறைவராகிய அந்தணர் பெருந்தகை, மனைவியார் வேண்டுகோளால் செல்வத்தை விரும்பிக் கேட்கும்படி எதிர் நிற்கும் சிவசருமர் கருத்தை யுணர்ந்து, வேள்வியில் அவியமுதுண்ணுமவர் அன்பமுதுண்டமையால் அச்சிவசருமருக்குப் பெருஞ்செல்வமளிக்கத் திருவுளத்தடைத்து, ஓப் சிவசருமரே! அந்தணர்களாகிய சிவன் அடியர் அனேகர் உமது மாளிகைக்கண்ணே பசித்திருக்கின்றனர். அவர்கள் மனம் புலர்ந்து செல்வார்களானால் உமது பிதிரர்யாவரும் நரகமடைவர்; ஆதலால் விரைவாக மனைக்குச் சென்று அவர்களை உபசரித்தனுப்புமென்று சொல்லி அங்ஙனே மறைந்தருளினர்.

மறையவே சிவசருமர், தாயைப்பிரிந்த விளங்கன்றுபோற்றடித்துப் பூமியில் விழுந்து மூர்ச்சித்துப் பின் தெளிந்தெழுந்து, அரசே! ஐயா! கருணையா! என்னையுமோர் பொருளாகக்கொண்டெழுந்தருளிவந்து, நிவேதித்திட்ட சிறு பொருளைப் போன்பமுதாக அமுது

செய்தருளிய தேவரீர் இவ்வண்ணம் என்னை வருந்தும்படிவிட்டுப் பிரிந்துபோவதும் அறமோ! அருளோ! என்செய்கேன் என்செய்கேனென்று ஆராமையால் அரற்றிப் பலவாறு துதித்து, ஆண்டவனைப் பூசிக்கப்பெற்ற பேற்றிறற் களித்தாடிப் பரவசராய்ப் பின் தெளிந்து, மனைக்குச் செல்லும்படி பிறைவரிட்ட கட்டளையை மறுக்கவஞ்சி, பெருமான் சந்நிதியிற் பலமுறை பணிந்து எழுந்து விடைபெற்றுத் துணிந்து மனைக்குச் செல்லலுற்றனர். அத்தருணத்தில் முன் நிவேதனப் பிரசாதத்தைத் திருமடப்பள்ளியில் வைத்து, மாத்தியாணீசஞ் செய்யச்சென்ற பரிசாரகர்கள் வந்து பார்க்கத் தாம்வைத்த பதார்த்தங்களொன்றுமின்றி வெறும் பாத்திரங்களே யிருக்கக்கண்டு பயந்து சிவனடியவர்கள் பசியோடு காத்திருப்பார்களே என்செய்வோம் என்றஞ்சி, வெளிவிட்டுச் சொல்லமாட்டாதவர்களாய், யாமெடுத்தனர், யார்புசித்தனர், எதாயிற்று என்று எண்ணி யெண்ணி ஒன்றும் தோன்றுமல் கலக்கமுற்று வேறுவகை காணுதவர்களாய்ச் சிவசருமருக்கு விண்ணப்பித்தனர். அது கேட்ட சிவசருமர் நடந்த உண்மையைச் சிறிதும் வெளிப்படுத்த மனமில்லாதவராய் ஒன்று மறியாதவர்போல, சிவலீலைக்கு நாம் என்செய்வோமென்று சொல்லி அவர்களையழைத்துக்கொண்டு வருகையில், மனைக்கண்ணே சிவனடியவர்களும், அறக்கிழத்தியாரும், மக்களும் பசியோடுகாத்திருப்பார்களே என்செய்வது, பெருமான் திருவுளம்போலாக என்று சிந்தித்து மெல்லமெல்லச் செல்லலுற்றனர். இவர் செய்தியிதுவாக.

முன்னே இச்சிவசருமனை அடியவரோடு அமுதுகொள்ளும்படி மனைக்குப்போகவென்று கட்டளையிட்டு மறைந்த மருதப்பெருமானார், தாம் சிவசருமராகவும், பிரமதகணத்தலைவர்கள் பரிசாரகர்களாகவும் திருவுருவந் தரித்து நிவேதனப் பிரசாதங்களை வழக்கப்படி பாத்திரங்களிலெடுப்பித்துக்கொண்டு, இவர் வருதற்கு முன்னே இவர் மனைக்கேகி, சுசீலையம்மையார்கையிலளித்துச் சிவனடியவர்கள் அமுது செய்யப் பரிகலந்திருத்தி யிடம்பண்ணுதி யீதா வருகின்றேனென்று போக்குக்காட்டி மறைந்துவிட்டனர். சுசீலையாரும் உண்மையாகத் தமது கணவர்தாம் எழுந்தருளினவொன்று எண்ணி, வழக்கப்படி இடம்பெறத்திருத்திவைத்துத் தமது கணவனார் வரவை யெதிர்பார்த்துத் தலைக்கடைக்கு முள்ளுக்குமாக ஆடை நெய்வோன் குழல்போலுலாவி நின்றனர்.

அக்காலத்தில், அடியவனை அழுது செய்விக்கும் வகை என்ன வென்று சிக்கையோடு பரிசாரகர் புலம்பும்போது மெல்ல மனைய ருகே சென்றும் சிவசருமனை அவர் தருமபத்தினியார் நோக்கி, இதோ வருகின்றேன் எனக்கூற தூணைத்ருப் பரிகலந்திருத்தென்று சிவநிவேத னப் பிரசாதங்கொடுத்துச் சென்றவளை நோமாயிற்று, அடியவ ரணவரும் பசித்திருக்கின்றோமே யென்ற தம்மில்லறக்கிழத்தியார் சொற் கேட்டுப் பெருவியப்படைந்துள்ளே சென்று பார்க்கையில் கோயிலில் விருந்த லிங்கபெருமான் தாம் அழுது செய்வித்த பதார்த்தங்களினும் எண்மடங்கதிகமான சுவை, மணம் அளவு முதலியவற்றுற் சிறந்த அமுதமை யமுது வகைகளிருக்கக்கண்டு, இது நம்மை யடிமையாக வுடைய இறைவருகளைர் நமக்கருளிச் செய்த தாகுமென அவ்வர வாற்றை மனைவியர்க்குந் தெரியவுரைத்தருளி, அப்பிரசாதத்தினை மருகளாணரைகளை கருதிப் தூசித்து மும்முறை வலம் வந்து பணிந்து பெருங்களிப்போடு சிவனடியவர்களை யுண்பித்துபசரித்தனுப்பிச் சே டப்பிரசாதத்தினைத்தாம் மனைவிமக்கள் சுற்றம் பரிஜனர் முதலியவர்க ருடன் உண்டு பெருமகிழ்வெய்தினர், இறைவர் தமக்கருளிய வருளப் பாட்டினையெண்ணி யெண்ணி யேமாப்புற்றிருந்தார். வடபூனிலுஞ் சிறந்தகற்பை யுடைய அவர் மனைவி சுசீலையார் பெண்பாலாகளின் இங்ங னம் அருள் பெற்ற பெருமாண் பெற்று பொருள் அணுக்கிரகிக்கலாகா தெனென்றெண்ணி யேனைத்திருந்தனர். இங்ஙனமிருக்க.

சிவசருமர் கதைத்திரம்.

வழக்கம்படி அன்றிரவு கழிந்து விடியற்காலமாகுந் தருணத்தில் சிவசருமர் கனவிலும் அவர் மனைவி சுசீலையார் கனவிலும் விருந்த வெதிரபாலமெழுந்தருளி, கம்பளன் பிருந்த பேரன்பையுடையீர் கோயிலரு கான கருங்கலினாற்சிந்த சித்தக் கலையினல் சீழுண்டையுள்ள வில்வமரத் தடியில் நம் ஒரு சூழலை யிழையாகவிருப்போம். நம்மை நீங்கள் எதிர்நோக்கியவண்ணமே யிருப்பதும் பாட்டனைத்தில் மகவில்லாமல் வருந்தி அதற்கையால் செய்யும் திருவெண்காடர் என்னும் சிவபுல மணியையாருளரென்று. அவர் கம்பிடத்தில் மெய்யன்புடையார் அவ ருக்கு நம்மை யெதிர்நோக்கலை யென்றெற்று நம் வழமை தீர்த்து இருமை இன்பமும் அவர்களென்று திருவாய் மலர்ந்தருளினார். அதுகேட்டுச் சிவசருமர் கேயிலிட்ட பழுப்போற்று நெடுநேரம், பிரம விஷ்ணுக்களும் சேவகமும் பெறுதற்கரிய பெரும் பொருளாகிய எம்

செய்தருளிய தேவரீர் இவ்வண்ணம் என்னை வருந்தும்படிவிட்டுப் பிரிந்துபோவதும் அறமோ! அருளோ! என்செய்கேன் என்செய்கேனென்று ஆராமையால் அரற்றிப் பலவாறு துதித்து, ஆண்டவனைப் பூசிக்கப்பெற்ற பேற்றினுற் களித்தாடிப் பரவசராய்ப் பின் தெளிந்து, மனைக்குச் செல்லும்படி யிறைவரிட்ட கட்டளையை மறுக்கவஞ்சி, பெருமான் சந்நிதியிற் பலமுறை பணிந்து எழுந்து விடைபெற்றுத் துணிந்து மனைக்குச் செல்லலுற்றனர். அத்தருணத்தில் முன் நிவேதனப் பிரசாதத்தைத் திருமடப்பள்ளியில் வைத்து, மாத்தியானீகஞ் செய்யச்சென்ற பரிசாரகர்கள் வந்து பார்க்கத் தாம்வைத்த பதார்த்தங்களொன்றுமின்றி வெறும் பாத்திரங்களே யிருக்கக்கண்டு பயந்து சிவனடியவர்கள் பசியோடு காத்திருப்பார்களே என்செய்வோம் என்றஞ்சி, வெளிவிட்டுச் சொல்லமாட்டாதவர்களாய், யாமெடுத்தனர், யார்புசித்தனர், எதாயிற்று என்று எண்ணி யெண்ணி ஒன்றும் தோன்றுமல் கலக்கமுற்று வேறுவகை காணுதவர்களாய்ச் சிவசருமருக்கு விண்ணப்பித்தனர். அது கேட்ட சிவசருமர் நடந்த உண்மையைச் சிறிதும் வெளிப்படுத்த மனமில்லாதவராய் ஒன்று மறியாதவர்போல, சிவலீலைக்கு நாம் என்செய்வோமென்று சொல்லி அவர்களையழைத்துக்கொண்டு வருகையில், மனைக்கண்ணே சிவனடியவர்களும், அறக்கிழத்தியாரும், மக்களும் பசியோடுகாத்திருப்பார்களே என்செய்வது, பெருமான் திருவுளம்போலாக என்று சிந்தித்து மெல்லமெல்லச் செல்லலுற்றனர். இவர் செய்தியிதுவாக.

முன்னே இச்சிவசருமனை அடியவரோடு அழுதுகொள்ளும்படி மனைக்குப்போகவென்று கட்டளையிட்டு மறைந்த மருதப்பெருமானர், தாம் சிவசருமராகவும், பிரமதகணத்தலைவர்கள் பரிசாரகர்களாகவும் திருவுருவந் தரித்து நிவேதனப் பிரசாதங்களை வழக்கப்படி பாத்திரங்களிலெடுப்பித்துக்கொண்டு, இவர் வருதற்கு முன்னே இவர் மனைக்கேகி, சுசீலையம்மையார்கையிலளித்துச் சிவனடியவர்கள் அழுது செய்யப் பரிகலந்திருத்தி யிடம்பண்ணுதி யீதா வருகின்றேனென்று போக்குக்காட்டி மறைந்துவிட்டனர். சுசீலையாரும் உண்மையாகத் தமது கணவர்தாம் எழுந்தருளினவொன்று எண்ணி, வழக்கப்படி இடம்பெறத்திருத்திவைத்துத் தமது கணவனார் வரவை யெதிர்பார்த்துத் தலைக்கடைக்கு முள்ளுக்குமாக ஆடை நெய்வோன் குழல்போலுலாவி நின்றனர்.

அத்தருணத்தில், அடியவரை அழுது செய்விக்கும் வகை என்ன வென்ற சிந்தையோடு பரிசாரகர் புடைசூழ்ந்துவர மெல்ல மனைய ருகே செல்லுடம் சிவசருமனா அவர் தருமபத்தினியார் நோக்கி, இதோ வருகின்றேன் மகேசுர பூசைக்குப் பரிகலந்திருத்தென்று சிவநிவேத னப் பிரசாதங்கொடுத்துச் சென்றவ்வளவு நேரமாயிற்று, அடியவ ரனைவரும் பசித்திருக்கின்றாரே யென்ற தம்மில்லறக்கிழத்தியார் சொற் கேட்டுப் பெருவியப்படைந்துள்ளே சென்று பார்க்கையில் கோயிலில் விருந்த வேதியருக்குந் தாம் அழுது செய்வித்த பதார்த்தங்களினும் எண்மடங்குதிகமான சுவை, மணம் அளவு முதலியவற்றுற் சிறந்த அறுசுவை யுண்டி வகைகளிருக்கக்கண்டு, இது நம்மை யடிமையாக வுடைய இடைமருதவாணர் நமக்கருளிச் செய்த தாகுமென அவ்வர லாற்றை மனைவியர்க்குந் தெரியவுரைத்தருளி, அப்பிராசாதத்தினை மருதவாணராகவே கருதிப் பூசித்து மும்முறை வலம் வந்து பணிந்து பெருங்களிப்போடு சிவனடியவர்களை யுண்பித்துபசரித்தனுப்பிச் சே டப்பிரசாதத்தினைத்தாம் மனைவிமக்கள் சுற்றம் பரிஜனர் முதலியவர்க ளுடன் உண்டு பெருமகிழ்வுகொண்டு, இறைவர் தமக்கருளிய வருளப் பாட்டினையெண்ணி யெண்ணி யேமாப்புற்றிருந்தார். வடமீனிலுஞ் சிறந்தகற்புடைய அவர் மனைவி சுசீலையார் பெண்பாலாகவின் இங்ங னம் அருள் தெய்த பெருமான் சிறிது பொருள் அனுக்கிரகிக்கலாகா தோவென்றெண்ணி மௌனத்திருந்தனர். இங்ஙனமிருக்க.

சிவசருமர் கதைத்திரம்.

வழக்கப்படி அன்றிரவு கழிந்து விடியற்காலமாகுந் தருணத்தில் சிவசருமர் கனவிலும் அவர் மனைவி சுசீலையார் கனவிலும் விருத்த வேதியராயெழுந்தருளி, நம்பான் மிகுந்த பொன்புடைபீர் கோயிலரு கான காருணியாமிர்த தீர்த்தக் கரையின் கீழண்டைபுள்ள வில்வமரத் தடியில் நாம் ஒரு குழந்தை வடிவமாகயிருப்போம். நம்மை நீங்கள் எடுத்துக்கொண்டுபோய்க் காவிரிப்பூம் பட்டினத்தில் மகவில்லாமல் வருந்தி அருந்தவம்பல செய்யும் திருவெண்காடர் என்னும் வசியகுல மணியொருவருண்டு. அவர் நம்மிடத்தில் மெய்யன்புடையார் அவ ருக்கு நம்மைக்கொடுத்து நம்மளவு பொன்பெற்று நும்வறுமை தீர்ந்து இருமை இன்பமும் அடைமின்களென்று திருவாய் மலர்ந்தருளினர். அதுகேட்டுச் சிவசருமர் தியிலிட்ட புழுப்போற்றுடிதுடித்து, பிரம விஷ்ணுக்களரும் வேதமும் பெறுதற்கரிய பெரும் பொருளாகிய எம்

பெருமானைக் கொடுத்தோ பொன்னைப் பெற்று யாம் உயிர்தரித்து வாழ்வது; இதனிலும் தீப்பாய்ந்தேனும், கங்கை பாய்ந்தேனும், வரை பாய்ந்தேனும், விடமுண்டேனும் உயிர்துறத்தல் இன்பமாம்போலும். எங்ஙனம் துணிந்து எம்பெருமானைக் கொடுப்போம். சீச்சீ!! இச்ச மூசாரம்சவிகெட்டது. என்னைச்சுட்டாலும்தீராது. கொடிதுகொடிது. தீவினையாலானது என்பதுண்மையே. இவ்வுலகத்திலென்றும் மாறுப் பழிபாவத்துக்கு ஏதுவான இக்காரியந் செய்யத் தோலோதோல் நான் உடன்படேன். என்னிறைவனே! இவ்வுண்மையால் யான்இன்றே அழியினும் அழிக என்றார். அதுகேட்டுப் பெருமான். ஓ உத்தம வேதிய உமது நிலைமையும் மனவியின் திறமும் யாமுணர்வோம். உங் கனா இவ்விழுக்குக் காரியந்தொடங்கச் செய்பவேண்டு மென்பதல்ல நமது கருத்து ; முன்னொருகாலத்தில் நமது தோழனனை குபேரன் மானுடப்பிறப்பை யடையும்படி நேரிட்டது. அப்போது நாமவனுக் குப் புதல்வனாக வருவோமென்று அனுக்கிரகித்திருந்தோம். ஆதலால் அவ்வாறு நிறைவேற்றுங்காலமிதுவாக நேர்ந்தபடியால் இங்ஙனம்உம் மை ஏவினேம் அன்றி வேறல்ல. அக்குபேரன்தான் காவிரிப்பூம்பட் டினத்துத் திருவெண்காடரென்னும் வேளாண் வசியன். அவனுக்கு மெய்ஞ்ஞான நிலைமை அனுக்கிரகித்து நாம்எம்போதும்போல மறைந் துவிடுவோம். அக்காலத்தில் உமக்குக் குடும்பத்தோடு முத்தியளிப் போம். நீர் ஒன்றற்கும் அஞ்சாது யாம் சொல்லிய வண்ணம் செய்பு மென்றருளிச்செய்து மறைந்துவிட்டார்.

உடனே சிவசருமர் விழித்தெழுந்து அற்புதமும் ஆனந்தமு மூடையவராய்ப் படுக்கைவிட்டு நீங்கித் திருநீறணிந்து சிவத்தியானஞ் செய்து பெருஞ்சிந்தையோடு திரும்பினர். அதற்கு முன்னே தானே கணவனர் கண்ட கனவையே கண்டாரண்டெழுந்து அவர் விழிப்பை யெதிர்பார்த்திருந்த சுசீல யம்மையார் வணங்கித் தங்கனவைக்கொழு நரொடுகூற, அவர் தாங்கண்டதையுங் கூறி இருவரும் அச்சமுந்துன் பமுமுடையவர்களாய் முன்பின் தோன்றாது கவலைப்பட்டுக்கொண் டிருக்கையில் சுசீலயம்மையார் "வறியாரிருமையறியார்" என்ற மந் திரவாக்கியம் உண்மையே. சீச்சீ!! வறுமைகெட்டது. இவ்வறுமைக் கொடுமையாலன்றோ நம்மையுடைய பெருமானிடத்தில் விண்ணப்பஞ் செய்யவும், அதனைத் தீர்க்கும் வழியாக ஆண்டவன் இவ்வண்ணம் கட்டளையிடவும் நேரிட்டது. "அட்டுண்பாரிட்டுண்பார்" என்றதமிழ்

வேதமொழி பொய்யல்லவே. நாம் அவ்வறுமைக்கஞ்சுவானேன், இவ் வண்ணம் குலதெய்வத்தை விற்று அடாப்பழி சுமப்பானேன் *"சதை யைவிற்றுசங்கடந்தீர்வது" என்றவலத்து அழுந்திய அவரது நிலைமை நோக்கிக் கொழுநராகிய சிவசருமர், பெண்ணே நீ கூறியதுண்மையே, நமதுவினைப்பயன் குறித்தே மருதவாணரிவ்வண்ணம் அருள்செய்தார். ஆனால் நாம் சிவாஞ்ஞையைத் தடுக்கலாமா? பிரம விஷ்ணுக்களேதடுக் கமாட்டார்களென்றால் நாம் செய்யத்தக்கதென்னிருக்கின்றது. இறை வனேணையை மறுப்பதற்கு வேதமு மஞ்சி நிற்கின்றது. விதியில்லை. ஆகையால் நீ இங்குத்தானே நல்லெண்ணத்தோடுமிரு, நான் போய் வருகிறேனென்றார். அதுகேட்டவ்வம்மை மனம் பதைபதைத்து, எம் பெருமானே! தேவரீர் கட்டளைப்படி யிருக்கக்கடவேனே யொழிய மறுத்துரைக்கக்கடவனல்லன். எவ்வாறுயினுமாக அடியேனைத் தேவ ரீர் உடன்வரும்படி கட்டளையிட்டருளவேண்டும். மூவராலும் அறி யொண்ணாத மூர்த்தியெம்போல்வார் பிறப்பிறப்பையொழிக்கும் பெரு ங்கருணையால் தாம் ஓர்மானுடக் குழவியாவரேல்வளர்க்கும் தவப் பேறு எனக்கில்லை யாயினும் தேவரீர் அடிமையான வெனக்குப்பார்க் குந் தவப்பேறுமில்லை யாவதுமரபோ? என்று இரு கண்ணீருஞ்சோர விண்ணப்பித்து நின்றார். அதுகண்டச்சைவவேதியமணி, மனமிரங்கிப் பெண்ணே உன்கருத்திதுவாயின் விரைந்து வருகவென்ன, தம்பதிக ளிருவரும் மனைகடந்து சென்று ஆலயம்புகுந்து வழக்கப்படி பெருந் தனநாயகியாரையும் மருதவாணரையும் பணிந்து வலம்வந்துதொழுது இறைவிர் கட்டளையை யெண்ணி காருணியாமிர்த தீர்த்தத்தின் கீழ் பால்வந்தனர். அங்கே சத்தியந்தழைத்துத் தயைமலர்ந்து சைவமனம் வீசி அன்பு துளித்து உபகாரம்பலித்து இன்பம் பழுத்த சிவனடியார் திருக்கூட்டம் போலத்தழைத்தும் பூத்து மணந்து தேன்றுளித்துக் காய்த்துப்பழுத்திருக்கும் சூதம், பனசம், நாளிகேரம், பூகம், நரந்தம், சம்பீரம், குருந்தம், குரவங்கம், குருக்கத்தி, பாடலம், புன்னாகம், வகுளம், மந்தாரம், சம்பகம், சாரிசாதம், முதலிய விருக்ஷங்கள் நெரு ங்கி முல்லை, மாதவி முதலிய கொடிகளசைய இளந்தென்றல்வீசப் புனைத்தடங்கடோறு மன்ன முலாவி, மயில், குயில், கிளி, சகோரம் சக்கிரவாகம், வண்டான முதலியபறவைகள் பாடியு மாடியுங்களித்துத்

---

* "தசை சதை" யெனமருவிற்று.

திரிய, விந்திரனது நந்தவனமும் நாணும்படி வீற்றிருக்குங் கோயிலுய்யான வனத்துள் இளங்குழந்தை அழுகுரல்கேட்க, அச்சத்தோடும் அன்போடும் விரைந்து குரல்வழிச்சென்று, குருவருள் மந்திரவழிச் சிவத்தைக் காணும்பரிபாகிகளைப்போல, வேதமும். பிரமனும், விஷ்ணுவும் துதிக்க, இந்திரன் முதலிய தேவர் பூமலை பொழிந்துகவரி குடை முதலியபணிமாற, கைலைக்கல்லால மரமொத்ததோர் வில்வ மரத்தடியில், மந்திர பீடமன்னமணமலரணைமேல் பெரியரிற் பெரியோன் சிறுமகவாய்வீற்றிருக்கக்கண்டனர்.

சிவபெருமான் மகலாக எழுந்தருளியது.

கண்டளவில் அப்பொதுவாகிய பார்வையாற்றூனே பெருந்தவக் கொழுந்தராகிய தம்பதிகளிருவரும் தம்மைமக்கண்டிலர். பேரழகன் வடிவாகிய காந்தமிவர் நெஞ்சமென்னுமிரும்பைக்கவர்ந்து தன் வசஞ் செய்தது என்றல் மற்றைய அவயவங்களின் அழகினை யெவ்வாறு தனித்தனிகண்டுரைக்க வல்வர்கள். அவ்வவயவங்களுக்கு உவமை கூறத்தக்க பொருள்யாவை? ஒப்பதோர்க்கக்காலமேது? இடனேது? ஐயோ! முன்னமே மறைமொழியானது, "நித்த மணாளர் நிரம்பவழகியர், சித்தத்திருப்பரானன்னை யென்னும்" என்று வாளாங்கு விட்டதே. இனி அத்திருவுங்க அழகினைத் தனித்தனி ஆராய்ந்து வருணிக்கத்துணியும் வண்கண்ணர் யாரோ நாடம் அறியோம். சந்திப்படுமுன்னை குளிரையொழிக்குஞ்சந்திருப்புப்போலும்சமுகத்தைக் குறுக நினைக்குமுன்னமே மனத்திட்பத்தை யொழிக்கும் நிறங்கண்டன்றே "நீராடுருக்கி யென்னுருயிராய்நின்றனை" என்றது அருட்டிருவாசகம். ஆகவே இத்தம்பதிகள் கருணைவடிவைக்காணும் வரையில் அவர்கள் நெஞ்சக்கரணம் தலைக்காட்டி நின்றதே ஆச்சரியம்! அவர்களை முன்செய்த நல்வினைப்பயத்தாலது வரையிலவர்கள் மனம் இரும்புருவந்தரித்தவாறு போலும். அங்ஙனம் சிறுபோது தம்மைமறந்திருந்த சிவசருமர் தெளிந்து அத்தெய்வக் குழவியை விரைந்தாவலோடு மெடுத்து மார்போடணைத்து உச்சிமோந்து மெய்ப்பயன் பல வகையாலும் பெற்றூராய் ஐயனே! அரசே! அழகின்பயனே! அறிவாநந்தமே! அற்புதப்பேறே! அருட்கருவூலமே! அரும்பெரும்பொருளே! ஆசைப்பேரெல்லையே! அமுதம் பிரவாகமே! அன்பின்பிழம்பே ஆவியிர் நிலயமே! ஆக்கவினையே! அண்ணலே! அப்பாவென்று நாத் தடிதத்துக்குழற அழைத்தரற்றிக் கண்களிலன்பு நீர் பெருக வெடுத்

துச்சென்று, நினைவற்றுத் தம்பம் போனின்ற மனைவி கையிற்கொடுத் தார். அவ்வளவில் அவ்வம்மையார் நினை வெழ வெழுந்தணைத்துக் கண்ணெறிற்றி நெடிதுயிர்த்து மோந்தள்ளி முத்தங்கொண்டு, அன்பின் மிகுதியால் தனங்களிற் பால் சுரப்பவூட்டுதலும் ஐயர் உண்பார்போ லபிநயித்தார். அபிநயித்தலும் கலிகெடவந்த கற்பகமே! ஐயா! கண்ணுக்கினியானே! காதற்பெருக்கானே! எண்ணுக்கரியானே! எங்கட்கெளியாணை! பண்ணுக்குப் பண்ணனே! பார்வைக்கோர் பார்வையனே! மண்ணுக்கு வாழ்வானே! மாதவமே ஆதரவே! என்று சிராட்டித் தங்கணைவரைநோக்கி, எம்பெருமானே! நாம்பாற் குழவி யாகாமல் நம்பாற்குழவியாகிய வித்தெய்வ மணியைப் பிரிந்து மூயிர்தரிக்குமோ, இவ்வுலகத்து வேறுவாழ்வும் வேண்டுமோ, இம்மக னைக் கண்டாலெங்நெஞ்சு முருகுமேயானு லென்னெஞ்சு மாத்திரம் கன்னெஞ்சா? ஓகோபிரிவு கொடிது! ஆதலாலிக்குழந்தையைப் பிறர் ஒருவர்க்குங் கொடுக்கவென் மனமிணையாது, பொருள் வேண்டில் நீர் வேறுவகையிற் பெறமுயலுவீராக, யாம் நம்மனைக் கிப்போது செல் வோம் என்று எடுத்துப் போகலாயினர். அவ்வாறுபோகையில் சிவா னுக் கிரகத்தால் போகுந் திசை யிதுவென்றறியாமற் சென்று திருவி டை மருதுக்குக் கிழக்கின்கண் ணிருகாவதத்ததாகிய காவிரிப்பூம் பட் டினம் வந்து ஓர் முகூர்த்தப்போதில் சேர்ந்து பசிதாகத்தா லினைப் பிணையடைந்து அங்கோர் மனைப்புறமடித்தேதார் ஆராமத்தினையடைந் தார். அவ்விடத்து இனிய குழைதழைகளைப் பரப்பி அதில் தங்கையி லிருந்த தெய்வக்குழந்தையைக் கிடத்தி அக்குழவியையே பார்த்த வண்ணமா யினைப்பாறியிருந்தார். அவர் கணவராகிய சிவசருமரும் அவர் மக்களும் நிழல்போற் சென்றவ்விடமடைந் தயர்வுபிர்த்திருந்த னர். கெளரும் முனிவர்களே! இவ்வெதியர் மனைவி யில்லஞ்சேரவெண் ணிச் சென்றும், அடைந்தது கடவுள் கட்டளையின்படி காவிரிப்பூம் பட்டினம். சிவஞானையை யாவரால் கடக்கமுடியும். "ஒன்றை நினைக் கினது வழிந்திட்டொன்றுகும்" என்பது முதுமொழியன்றே என்றப்பால் உபமன்னியர் சொல்லத்தொடங்கினர்.

திருவெண்காடர் மகப்பேற்றுக் கனைத்திறம்.

முனிவர்களே! இஃதிப்படி யிருக்க, திருவெண்காடர் நாடோறும் "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த, மக்கட்பேறல்லபிற" என் றமுதுமொழியைப் பலகாலுஞ் சிந்தித்துருகித் தம்மை யுடையவர்

அங்ஙனே தெளிவுற்றுச் சிவஸ்ரீ எவ்வாறுமோ முழுவதுந் செல்லச் செல்லப்பார்ப்போம் என்றுள்ளடக்கிக்கொண்டிருந்தார். இவ்வதிசயமெல்லாம், அருகிலிருந்துபார்த்த திருவெண்காட்டடிகளார் திருவருளை யெண்ணி யுடல் பூரித்துப் புளகம்போர்ப்பச்சிறிதுபோது, கம்பித்துத் தம்பித்து நின்று பேராநந்தத்தா லொன்றுந் தோன்றாது பின்தெளிவுற்றுச் சிவசருமனைநோக்கி, ஆனந்த நீர்பெருகப் பேரன்போடும் எம்மையரே என்ன சிந்திக்கின்றீர், என்னையாண்ட மருதவாணர் திருவருளாலன்றே வம்மை நானிங்குப்பெற்றேன். தேவரீர் எங்குடிக்கவிதீர்த்த கருணையாளரன்றே? இது வுமது திருமாளிகையேயாம், எழுந்தருளுமென்றுபசரித்தார். சிவகலையம்மையாரும் சுசீலையாரைநோக்கி, அம்மே அஞ்சவேண்டுவதின்று நீர் கட்டளையிட்ட வண்ணமிக்குழவியைக் காப்பேன். சிவாஞக்கிரகத்தால் கிடைத்த விம்மகவு என்மகவேயாம். நீர் யாதோரையமும் கொள்ளவேண்டாம். யானும், இம்மகவும், இம்மாளிகையும், எங்கள் செல்வமும்உம்மதே. இதில்சந்தேகமில்லை. தேவரீர் எம்மை எவ்வகையானும் ஆண்டுகொள்ளலாம் என்றார். அப்போது சிவசருமர் இவ்வார்த்தைகளைக்கேட்டு, நமது இறைவர்கனவிற் குறித்தருளிய திருவெண்காட ரிவரேபோலும் என்று திருவுள் தோற்றுவிக்க வெண்ணிநின்றார்.

அப்பால், சிவகலையம்மையார் தங்கையிலிருந்த அற்புதமகனைத் தங்கணைவர்கையிற்கொடுப்ப, அவர் வாங்கி "மக்கண்மெய்ந்தீண்டலுடற் கின்பம்" என்ற மெய்ப்பயனை நுகர்ந்து, சொல்லின் முடிவாகவிளங்கி யின்பம் பரவிக் கொந்தளமாகிச் சிகழிகை முடித்த திருமுடியையும், தேய்பிறையின் குறைவறுத்த அருட்டிருமுகத்தையும், நீற்றுக்காப் பணிந்த திருநுதலையும், இருளறுக்கு மொளிக்கு மொளியாக விளங்குந் திருவிழியையும், உலகுயிர்ப்பவுயிர்க்குங்குமிழ்நாசியையும், மறை மணம் வீசும் பவளவாயையும், இசைவிளங்க விளங்குந்தாடணிகாதையும், உயிர்களைப் புரந்த குறிதிகழ் மணிகண்டத்தையும், போகமார்த்த பொன்னடையாளத்துப் புகழுனப்பரந்தமார்பையும், திசைப் போராற்றல் திரண்டதோளையும், வள்ளன்மைமலர்ந்த மலர்த்திருக்கை யையும், வையமதிக்கப்பெற்றமஞ்சுளவயிற்றையும் சிந்திப்பரியவுந்திச் சுழியையும், கண்கவர்கடியையும், கவின்பெறு தொடையையும், முன்னுற நீண்ட முழங்கழலையும் கோமளமாகித், தாமரை மலர்ந்த செம்மைபழுத்துக், திருவெலாங்கனிந்து, சொல்லளவாது கல்லென்

னைஞ்சை நீராயுருக்கிப், போராசைபெருக்கி, ஆதாரமாகி. அழுதா யிணையப், போதார்தெய்வப் புதுநலம்விளைத்துக், காணங்கவர்ந்து, மரணந்தவிர்த்து, மீகானத்து மின்னனைத்திகழ்ந்து, சாணற்காரிதாய்க் காணற்கினிதாய்க், காதமணைக்குடம் மெல்லியகுழலின் நல்லடிமலையும், இன்னிதனவொணைப்பின்னழகினையும், தனித்தனிநோக்காதுநோக்கிச் சிவயோகிகள் மௌனவின்பத்து மூழ்த்து மாறுபோல இன்பவெள்ளத் துண்மூழ்கினர். இங்கே இத்திருவெண்காடனர் தம்மை மறந்தனர், தந்நிலையறிந்திலர், மெய்ம்மை தெரிந்திலர் பொய்ம்மை யொன்றறியார், அச்சோயழகினையிவருண்டாரோ? அச்சோயினழகிவையுண்டபடியோ? அறியேம். சற்றுப்பொறுத்து இவருலகு முகமாயினர். அது திருவருள் திருப்பியவாறேபோலும். அங்ஙனே கண்ணெற்றி மார்பணைத் துச்சி மோந்து எச்சின்மபங்காலைமையள்ளி முத்தங்கொண்டங்கு மிங்குமாக வாணசயிழுத்தலைப்ப வள்ளமுசலாட வொவா வுலகை வெள்ளந்தினைத் துப்பல்காற் புதிது புதிதாகநோக்கி நோக்கிக் களைந்து களைந்து புல் வண்ணமன்றிச் சொல்வண்ணமறியாது, முகரேபோல, வேகாயசணை கிய தம்மைமந்தரை மீட்டுந்தம்மனையினார் கரத்தளித்துச், சிவசருமரையும் அவர்மனைவி சுசீலையாரையும் உபசரித்தழைத்துச் சென்று அவர்களை ஆதனத்திருத்தித் திருவடிவிளக்கி யருச்சித்து ஆடையாபரணங்களாலவரைப் புனைந்துமீட்டும் பலபடியாலும் பூசித்து நேசித்துத், தந்திருமகனைத்தொட்டிலி லப்போதே கிடத்திப் பொன்னு மணியாலும் புனைந்து, உளரும், ஒக்கலும், நட்டாரும், உற்றாரும், அயலாரும், அடியாரும், அறிஞருமாக விச்செய்திகேட்டுக் களிப்பிற்கானைவந்தார்க் கெல்லாம் ஓலை சிறப்பப் பொன்மணியாடையூண் உண்டி யாவுமளித் துபசரித்து, இரவலர் யார்க்கும் தம்பண்டாரந்திறந்து மிடிகெட நிதி மழை சொரிந்து மகவிழாக்கொண்டாடினர். மங்கலியமாதர் யாரும் வாழ்த்தினர். வேதியர் பூவும் பொரியும் அக்ஷதையுந்தூவி மறைவழி பல்லாண்டுபாடினர். மங்கலவாத்திய முழங்கினர். கணிகையர் நடித்தனர். சூதர் மாகதர் வந்தியர் புகழ்ந்தனர். அன்றவ்வூர் முழுவதும் மகிழ்ச்சிதாங்கிப் பெருவிழாக்கொண்டாடிற்று.

திருவெண்காடர் புத்திரோச்சவங் கொண்டாடல்.

அத்தருணத்தில், திருவருளாணையால் மற்றையர் கேளாத வண்ணம், ஓ! சிவசருமரே! திருவெண்காடரே! உங்களுக்குக் கனவிலிட்ட கட்டளைப்படி சீக்கிரத்தில் முடிக்கக் கடவீர்களென்று, ஓர் அசரீரி

வாக்குண்டாவே, சிவசருமர் அதைக்கேட்டுச்சத்தோடும், இருக்கு மொழிகளாற் றுதித்தார். திருவெண்காடர் கேட்டு அன்பும் ஆராமையும் மேலிட, எம்பெருமானே! மகவுபெற்ற மகிழ்ச்சியின்மயங்காமை கருணையாற் செய்வகை தெரிவித்து உய்வகைசெய்யும் பேரருளாளனே போற்றி, யாவைக்கு மூலமே போற்றி, முதலு முடிவுமில்லாதாய் போற்றி, மண், நீர், தீ, காற்று, வெளி, மதி, ஞாயிறு, இயமானனுமான வெண்வகை வடிவாம் அரசே போற்றி, ஆதாரமொன்றின்றியே யாவைக்கு மாதாரமாகும் அமுதமேபோற்றி, பிறப்பிறப்பிலாத பிஞ்ஞகனே போற்றி, குறிகுண மிலாத குணக்குன்றமே போற்றி, யோகியர்யோகத்து ஒளியேபோற்றி, அவர்களுணர்ச்சியே போற்றி, மெய்யறிவு இன்பவடிவாபோற்றி, பிரமமேபோற்றி, பரமனேபோற்றி, பெரியவபோற்றி, அரியவபோற்றி, பொன்வண்ணபோற்றி, பூதநாதனேபோற்றி, அங்கணபோற்றி, அனைத்துலகுமாளுடையபோற்றி, உயிர்க்குயிரான வுத்தமாபோற்றி, பூரணபோற்றி, புண்ணியாபோற்றி, ஆரணபோற்றி, அற்புதாபோற்றி, தேவர்கள்புகழும் தேவனே போற்றி, மூவர்கள்போற்றும் முதல்வனேபோற்றி, தத்துவபோற்றி, தயாநிதி போற்றி, வித்தகபோற்றி, வேதியபோற்றி, கண்ணுதலேபோற்றி, கனைகண்ணேபோற்றி, எண்ணுதற்கு எட்டா ஈசனேபோற்றி, அம்மையேபோற்றி, அப்பனேபோற்றி, அம்பிகை பங்குடையையனே போற்றி, வஞ்சகரறியாமாமணிபோற்றி, நெஞ்சகத்து ஆசை நிலைத்தாய்போற்றி, காதலாபோற்றி, காவலாபோற்றி, தேசனேபோற்றி, செல்வனேபோற்றி, நேசனேபோற்றி, நித்தனேபோற்றி, எண்ணிய வண்ணம் இசைவித்தாய்போற்றி, புண்ணியம்பழுத்த புராணனே போற்றி, போற்றிபோற்றி புராதனபோற்றி, போற்றிபோற்றி புராந்தகபோற்றி, போற்றிபோற்றி புயங்கபோற்றி, போற்றிபோற்றி புனிதனேபோற்றி என நாத்தழுதழுக்கத்துதித்து மெய்ப்புளகமரும்பவியர்த்து நெக்குருகிக் கண்ணீர் வாரப்பல்காற்பணிந்து தொழுது ஆடிப்பாடி அவல மறுத்தாராயினர்.

அப்பால் திருவெண்காடர், புதியதோர்மணித்துலை தருவித்து மந்திரமுறையாற் புனிதஞ் செய்து பூசித்துச் சாந்தி வினைமுடித்து, மெல்லிய அணையையோர் தட்டிற்பரப்பி, அதன்மேற்றம் பெறலரும் பேறுகிய தெய்வக்குழந்தையைக் கிடத்தி, மற்றொருதட்டிற் பொன்னும் மணியும் பெய்வாராயினர். அப்போது சிவானுக்கிரகத்தால்

பொன்னிடுந்தட்டு மேலெழுந்தே நிற்கக் குழுவி யிருந்ததட்டு நிலத்திற் ழுந்து கிடந்தது. இது நியாயமே. சிவபெருமான் அடியவர்களன்பு மேலேற மேலேறத் தாமதற்குள்ளடங்கியே நிற்றல் என்றுமுள்ளவியல் புவழக்குத் தானே. முன் அமர்நீதிப் பெருந்தகையாரிட்ட பொன்னி ன்றட்டினுக்குக் கோவணக்கள்வராகிய ஐயரிட்ட கோவணத்தட்டு தாழ்ந்தேதகிடந்ததன்றே. அவ்வற்புதத்தைக் கண்டயாவரும், மனம ருண்டு இஃதோர்தெய்வக்குழவியோ? சிவனருளோ? சிவபெருமானே யிவ்வடிவொடு வந்தவாறே? திருவெண்காடர் புண்ணியமோ? வென்று தத்தமக்குத் தோன்றியவாறு கூறினர்.

சிவசருமர், அவ்வாச்சரியத்தைக் கண்டுள்ளத் தச்சமிகவடைந்து துலைவலம்வந் தஞ்சலிசெய்து எதிர்நின்று, இடைமருதுடைய எந்தை பிரானே! அடியேன் பொருள்விழைவாற் றேவரீர்க்கடிமைபட் பட்ட வாறன்றே, திருவடித்தொண்டுக்கன்றே ஆசையுற்றடிமை பூண்டது. இங்ஙனமாகத் தேவரீர் திருவுளமிருந்தவா றென்னைபறியேன்? என் னைச் செல்வக்களிமயக்கில் வீழ்த்தவோ ? அல்லது, இவன்செய்தது டாறுத்தொண்டுதானே, அதற்குக் கூலிப்பயனிவ்வளவிற்றுக வென்று பொன்னைக்கொடுத்துப் புறந்தள்ளவோ ? எத்திறத்து மிப்பொன்னுல் தான் அபராதியே யாவேன். என் குடும்பப் பாதுகாப்பினுக்காகப் பொன்னளிக்கத் தேவரீர்க்குத் திருவுளமாயின் அளவைகடந்த பொன் னைக்கொடுப்பின் யான் என்செய்யக் கடவேன். இப்பொன்னைப்பாது காத்தற்கே என்வாழ்நாள் முழுதுமாய்விடின் உய்வகைபின்னேது ? அருளுடன்றிக்கண்டார்யாவரும், இவ்வேதியன் மாயம்வல்லன்கொல் லோ! பொருள்விழைவால், இப்புண்ணியவடிவான திருவெண்காட னைவஞ்சிப்பான் சிறிது செப்படிபோ வென்ன நினைக்கவுடன்றே வதுவாயிற்று. ஆகவே எம்பெருமான் கருணை யெழுமேனி யுய்விக்க வென்றிருப்பதுண்மையாயினித்துலைத் தட்டிவ்வளவிற்சமனிலையடைக வென்று மந்திராகூடை யிறைத்து வணங்கினர். அங்ஙனே துலைத்தட்டு திருவருளாணையாற் சமனிலைபெற்றது. பூமழைபொழிந்தது. தேவதுந் துமி முழங்கிற்று. அங்குநின்ற சராசரவுயிரனைத்தும் அன்பு பெருகிக் ளுதுகுதுப்புற்றன. அடியவர்யாரும் ஹரஹரமுழக்கஞ் செய்தனர். திரு வெண்காடர், சிவசருமரைப் பல்காற்பணிந்து பரவி நின்றனர். சிவ சருமரும் அருளுருவன்னித் தம்மை மறந்தவராய்ப் நின்றனர். அப்போது, சிவனுமையால், "ஓசிவசருமரே! உம்மைச்செல்வமயக்கிலாழ்த்தவென்

றல்ல இங்ஙனம்செப்தது. இத்திருவெண்காடர் பொருள்முற்றும்அறத் தொடுமீட்டப்பட்டது. அதனைப் பெறக்குரிய கலம் நீர் ஆதலால் இங் ஙனம் செப்வித்தனம். அஞ்சலிர். அஞ்சலிர். இன்று தொட்டுப்பதி ணண்டெல்லை கழிந்த தினத்து நீரும்உமது குடும்பமும் நமதுபதத்தழி வின்றி வாழ்ந்திருக்கப் பெறுவீர்கள். கவலைழிமின். இப்பொன்னைக் கொண்டு இனி இடைமருதனடைமின்" என்றோர் அசரீரிவாக்கு உண் டாயது. அது கேட்டங்கிருந்தார் யாவரும் கடலொலிதாணஹரஹர முழக்கஞ் செய்தார்கள். சிவசருமர் மனத்தவல மறுத்துப் பலகாலிறை வனைப் பணிந்து துதித்தனர். திருவெண்காடர் மீட்டும் சிவசருமனை வணங்கினர். சிவசருமர் அதுகண்டஞ்சி அவர்வணங்குமுன் தாம் அவர்க்கஞ்சலிசெய்து தழுவிக்கொண்டனர். அன்று அக்காவிரிப்பூம் பட்டின முழுவதும் லகலீலலக்கமே போன்றது. முனிவர்களே! இத னற்கடவுட்டிறம் அன்பளவன்றிப் பொருளளவல்ல வென்பது வெளிப் படின்றமை அறிமின்.

இங்ஙனம் விலைபம்பறியாத மணியை மகவாகப் பெற்றவெண் காட்டடிகள் துலைன்று மகவையெடுத்தணைத்து, மிச்சில் போக்கத் தக்கபொருள்களாற் கண்மிச்சில்போக்கி, இருக்கைசேர்த்து, பொருள் களையெல்லாம் திருவிடைமருதூரிலிருக்கும். சிவசருமர் திருமாளி கைக்குப்பரிசனரால் பொதிசெய்தனுப்புவித்துப் பின், அற்றைப்பொ முதே கன்னாகத் தம்மைமந்தர்க்குத் திருநாமஞ் சாத்தக்கருதி அங் கிருந்த முதியோரையும் சிவனடியரையும் சிவசருமரையும் விரவலும் சிவகிருபையால் அவரவருள்ளத்தும் ஒருபடித்தாய் "மருதவாணன்" எனத்திருநாமஞ் சாத்தலென்று, திருவெண்காடர் கருத்துப்போற் றென்ற, அதனைச் சிவசருமர், அருளவலான் முந்தி, மருதவாணன் என்று நாமகரணஞ் செய்தனன, அவரவரும் விபப்படைந்து, யான் கருதியதிதுவென்று கூறிக்களித்தனர். உடனே வெண்டுமுபகரணங்க ளைத் தருவித்துச் சிவசருமரே புரோகித உரிமை கொண்டு வேதாகம விதிப்படி தெவபூசை ஓமத்தீக்கடன் சாந்திவினைமுடித்து, பிள்ளைப் பெருமானுக்கு "மருதவாணன்" என்று திருநாமஞ் சாத்தினர். மறை முழக்கும் மங்கலதூரிய முழக்கமும் மலிந்தன. நற்சகுனம் பலவும் தோன்றின. திருவெண்காட்டையர் மிக மனங் களித்து வேதியர் முதலாயினர்க்குப் பொன், அணி, ஆடை, நெல், மணி, ஆனிரை, விளநிலம் முதலாயின வெறுப்பக் கொடுத்து, இரவலர்க்குப் பெருநிதி

வழங்கிச், சிவனடியவர், அந்தணர், ஒக்கல், நட்பினர் முதலியோரையும் ஏழைகண்முதலிய பல்லுயிரையும் உண்டி முதலியவற்றால் நன்றுபசரித்துப் பிறவிப்பெரும்பயன் கொண்டார். அங்குவந்திருந்தார் யாவரும் திருவெண்காடரையும் அவர் மைந்தரையும்பன்முகத்தாலும் வாயாரவாழ்த்தித்தத்தம்மிடஞ் சென்றனர்.

சிவசருமர் திருவிடைமருதூரடைந்து இருத்தல்.

அப்பால் சிவசருமர் விருந்துண்டு அன்று கழிந்து மறு நாள் போய்ம் மற்றை நாட்காலையிலே திருவருட் கட்டளையின்படி திருவிடை மருதூருக்குச் செல்லவேண்டிய தங்கருத்தைத் திருவெண்காடர்க்குக் குறிப்பிக்க, அவரும் அவ்வேதிய மணியை நன்றுகப் பூசித்துப் பொற் றேர் செய்து அவரையும் அவர்பன்னியையும் மக்களையுமேற்றிப், பிரிவாற்றாது பின்சென்று நெடுந்தூரம் வழிவிட்டு, அவர் கட்டளையால் தம்மனைக்குமீண்டனர். தேறிச் செல்லுந் தம்பதிகள் அருளாணையைக் கடப்பதற் கஞ்சித் தெய்வக்குழவியைத் திருவெண்காடர்க்குக் கொடுத்து வந்தார்களாயினும், அன்பிழுத்தவர்களை யலைக்க, மருதவாண! மருதப்ப! மகாலிங்க! மத்தியார்ச்சுன! மாணிக்க வள்ளலே! மைந்தனே! மணியே! வாழ்வளிக்க வந்த பெருவாழ்வே! மருந்தே! அப்பா! ஐயா! என அழைத்தழைத்து வருந்தி முன்செல்லக்காலை யாது திரும்பித் திரும்பிச் சிறிது தூரம் பார்த்துச்சென்று, அப்பால் முழுவதும் பிரிவாற்றுமைத்துயரால் விழுங்கப் பட்டாராய்த்தம்வசஞ் சிறிது மின்றித்தேரிற் சாய்ந்தனர். அதுகண்டு அவர்கள் மக்கள் வருந்தவே தேர்ப்பாகன் தேரை நிறுத்தி அவர்களுக்குச் சைத்தியோபசாரம் செய்து களைதெளிவித்தலும். விழித்தெழுவோர் ஐய! மருதவாண, என்றெழுந்தார்கள். அப்போது அன்பரன்புக் கெளிய பெருமான் கருணையால் அம்மருதவாணப் பேர்த்திருக்குழவி வடிவ மொன்றெடுத்து இவர்கள் கவலையற அத்தேரினூர்புறத்திலவர்கள் மைந்தர்களோடிருக்கக்கண்டு, துணுக்குற்றுக் குழந்தையை வாரியெடுத்து அணைத்துச்சி மோந்து ஐயனே! எவ்வாறு வந்தனை, எவ்வாறுவந்தனை? அப்பா! உன்னைப் பிரிந்தாற்றுவோமோ என்று அன்பினலுருகிக் கதறித் தேரை விரைவாக நடத்திக்கொண்டு வருகையில், அத்தம்பதிகட்கு அருளாணையின்படி, தேர் வேகத்தாற் சுழுத்தியொன்றுதோன்ற, தேர் திருவிடைமருதூர் அடைந்து திருமாளிகை வாய்தலிற் சேர்ந்தது. சேர்தலும் அவர்கள் மயக்கமொழிந்து, அணைத்திருந்த

குழந்தையாகிய மருதவாணரைப் பார்க்கையில் அம்மாயக்குழவி காணுதாக ; திடுக்கிட்டு உடல்பதைக்க, ஐயோ ! அணைத்திருந்த குழந்தை யேதாயிற்றே! தேர் வேகத்தால் யாம் உறங்கி விழுந்த போது தவறிக் கீழேவிழுந்ததோ? அல்லது குழவிவந்ததுபோற் கனவு தான் கண்டனமோ? யாரேனும் கொண்டு போயினரோ? என்று துடி துடித்து ஒன்றுந் தோன்றாது மயங்கிநின்று, கண்ட புன்மரமும் உரு கும்படி வருந்தி நிற்கையில், சிவசருமர் ஒருவாறு தெளிந்து தம்மனை யார் முகநோக்கிப் பெண்ணே நாம் வீணை வருத்தப்பட்டுக் கொண் டிங்கிருப்பதிற் பயனில்லை; நீ உன்மக்களை வைத்துக்கொண்டு உடை யவர் அருள்செய்த செல்வ மிகுதியாயிருப்பதால் அதிதிபூசை தவ றாது நிறைவேற்றி வருதி. நான் காவிரிப்பூம்பட்டினஞ் சென்று, நமது அற்புதக் குழந்தையிருக்கப்பார்த்து வருகிறேன். பார்க்க நேரிடாவிட் டால் தேகத்தை யொழித்து விடுகிறேன் என்று கூறினர். அதுகேட்ட அச்சுசிலையார், முன்னிலும் மிகவருந்தி, எம்பெருமானே! தேவரீரைப் பிரிந்தால், இம்மக்களும் செல்வமும் என்ன செய்யும், நீர் பிரியுமுன் என்னுயிர்தான் பிரியும், ஆதலால் தேவரீருக்கு அடியேனைப்பற்றிய கவலை யொழிந்துபோம் என்றார். அதற்குச் சிவசருமர் சொல்வதை யொன்றும் தோற்றுதவராய் மயங்கி நின்றார்.

அங்கே காவிரிப்பூம் பட்டினத்தில் அத்தெய்வக்குழவி, கண்ணி மைபோல் காத்திருக்கும் சிவகலை யம்மையாருக்கும் திருவெண்காட னார்க்கும் பலவிங்கிதங்களைக் காட்டிக் களிப்பித் திருந்தது. இங்ஙன மிருக்க, அக்குழந்தை யளவாகத் திருவெண்காடர் நிறுத்துச் சிவசரு மருக்குக் கொடுத்த திரவியம் மூன்று தினமாகப் பண்டியில் திருவிடை மருதூர்க்கு வந்துகொண்டிருந்தவன்றே; அன்று ஏனையமுற்றும்மெய்க் காவலோடுவந்து சிவசருமர் மனைக்கண் சேர்ந்தன. ஆகவே; அம் மெய்க்காவலர் கூட்டத்துள் இறைவர் கட்டளையால் அச்சேவகர்கள் வேடமாக வந்திருந்தகணதிபர் ஒருவர் ஓர்கவளிகையையுந் திருவெண் காடர் எழுதியவாறுக ஓர் ஓலைமுடங்கலையும் சிவசருமருக்குக் கொடுத் திச்சை வழியே போவாரோடும் போயினர். பின் சிவசருமர் அவ் வோலை முடங்கலை நிமிர்த்து வாசித்து அதனுள் மருதவாணப் பேரி ளங்குழவி சுகத்தி லங்கே பலவிளையாடல் செய்திருக்கும் செய்தியும் இவரது பிரிவாற்றுமை யகல அக்குழவி திருவடிவமாகவமைக்கப் பட்ட வொற்படமொன்றனுப்பியமையுந் திருவெண்காடர் குறித்தெழு

திய வண்ணமிருக்கக்கண்டு, மிகுமகிழ் சிறந்தெழுந்து கூத்தாடி உட னே அக்கவளிகைக் கட்டவிழ்த்து நோக்குதலும், அதில் தெய்வக் குழவியை மெய்ம்மையிற் கண்டவாறுகண்டு, அவலமற்றவராய்த் தம் மனைவி யாருக்குங்காட்டிப் பெண்ணே! இனி நாம் குழவியின் பொரு ட்டு வருந்துவது முறைமையல்ல. சிவபெருமான் ஆணைப் வேதம், அரி, பிரமர், இந்திராதி தேவரும் கடக்கவல்லாரல்லர். நாம் கடக்க வல்லமோ? ஆரூடையார் திருவுள்ளம் அத்தெய்வக் குழவி திருவெண் காடர் பாலிருக்கவேபோலும். நீயே நினைத்துப்பார். கோயில் நந்த வனத்திலக்குழந்தையைக் கண்டெடுத்த நீ உன்னிருப்பிடங் கொண்டு போகவென்று, என் சொற்கடந்தாடினையன்றே? சிவலீலை எவ்வித மாக முடிந்தது? திசை கெட்டுச்சென்று நெடுங்காதத்திருக்கும் காவி ரிப்பூம் பட்டினத்து, முன்பின் அறியாத அத்திருவெண்காடர் மனைப் புறத் தோட்டத்தை யடைந்தாய். அம்மட்டிலோ? இன்னரென்று விசாரித்து அறியாமல் வலிய அத்திருவெண்காடர் மனைவியார் சிவகலை யம்மையார் கையில் நீயே கொடுத்து, உன் பிள்ளையாக வளர்க்கக்கட வை யென்றும் சொல்லினாய். அது நிற்க, இந்தப்படத்தைப் பார்த் தனையோ? இவ்வாறு இவ்வுலகத்தில் சாதாரணமாய் யாவரால் எழுதக் கூடும். இதுமானுடரால் எழுதப்பட்டதன்று. நமது ஆசையும் ஆரா மையும்கண்டு அக்குழந்தை வடிவம் அமையக்கடவுளே யிப்படத்தை யும் தீட்டுவித்தனுப்பிய வாறுபோலும். ஆதலால், நாம் நமது ஆசை தணிய வித்திருவுருப்படத்தை யுபசரித்து நமது மற்றையநாளைக் குரு வருளாணைப்படி கழிக்கக்கடவேம் என்று மனைவியாைத் தேற்றினர்.

உண்மையே யன்றே? * "மைப்படியுங் கண்ணெனுந் தானுங் கச் சிமயானத் தான் வாட்சடையான் மாசொன்றில்லான் - ஒப்புடைய னல்ல னெருவனல்லனே ரூரனல்லனேருவமனில்லி, யப்படிய னவ்வு ருவ னவ்வண்ணத்தானவனருளே கண்ணுகக் காணினல்லா, லிப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத்தனிவ னிறைவனென்றெழுதிக்காட்டினா

---

* மைப்படியுங் கண்ணெனுந் தானுங் கச்சிமயானத்தான் வாட் சடையா னென்னினல்லா - னெப்புடையனல்ல னெருவனல்லனேரூர னல்ல னேருவமனில்லி - யப்படியுமந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணுகக்காணினல்லா - லிப்படியனிந்நிறத்த னிவ்வண்ணத்தனிவனி றைவ னென்றெழுதிக் காட்டினானே தை. என்பதாமுரம் பாடம்.

ணுதே.'' என்றதன்றுமறைமொழி. அப்பால் அதுகேட்ட கற்பரசி யாகிய அவ்வம்மையாரும் இஃதுண்மையாமென்று எண்ணித் துயர மாறினர். அதுமுதல் சிவசருமர் அத்திருப்படத்தை யலங்கரித்த தோர் கூடத்தமைத்துக் காலங்கடோறும் மகவுக்கும் கடவுட்கும் செய்யும் அன்பும், அச்சமும் பொருந்த வுபசரித்து, தங்கள் நியமப்படி சிவபூசை, பிதிர்கடன், அடியவ ரர்ச்சனை, வேதாகமமோதல், சுற்றந் தழுவல், பல்லுயிரோம்பல், ஏனைய வெள்வி முதலிய நித்த நைமித்தங் களைக் குறைவற நடத்தி வந்தனர். முனிவர்களே! இவர் முத்திய டைந்த செய்தி பின்னுஞ் கூறுவோம். இனித் திருவெண்காடர் செய்தி கூறுவோமென்று ஸ்ரீ உபமன்னிய பகவான் அப்பால் சொல்லத்தொ டங்கினர்.

அருட்குழவிப்பெருமான் திருவிளையாடல்.

அந்தணீரே! அப்பால் திருவெண்காடரும் அவர் மனைவியா ரும் தமது அருமைமைந்தனை நாளொருமேனியும் பொழுதொரு வண் ணமாக வளர்த்து வருகையில், குழவி, முகங்கவிழ்ந்து செங்கீரை யாடிப்,பின்னிருந்து சப்பாணிகொட்டிப், பெறுது பெற்றோர்க்குப் பேரா நந்தம் விளைத்தது. பெற்றோர்கள் தக்ககாலத்து அன்னப்பிராசன முத லிய கருமங்களை நடத்தி, குழவிப்பெருமானுக்கு உச்சிக்கூழியமுஞ் சுட்டியுஞ்சாத்தி, காதிற்குதம்பை புனைந்து, மார்பிலம்படைமதாணி மூத்துவடம் விளங்க அரையிற் பொற்சிறுமணி கட்டிக், கையிற் கடக மும் பவளமும் பொன்மணியுமாகக் கோத்தணிந்து, சிறுவிரன்மோதிர மழகு பெறவமைத்துக் காலிற் பாடகமுஞ் சிறு சதங்கையுந் தரித்து, கைத்தாய் செவிலித்தாய் சேடியர் புடைசூழ்ந்து கண்ணிமைபோலக் காத்துப் பாராட்டிச் சீராட்டியவ்வூரும் சுற்றத்தாரும் பெருமகிழ் தங்க அரசனுலகோம்புவதுபோற் போற்றுவாராயினர். ஆயினும், மூவருமேனைத் தேவரும் பதினெண்கணத்தவரும் நாடோறுங் கைலை போலக்கங் காணச் செல்லுமாறு காவிரிப்பூம்பட்டினத்து வந்து ஐயர் குழவித் திருவிளையாடலைத் தரிசித்துப்வற்றாராயினர். ஞானிகளுள் னக் கண்ணுற் காணும் பெருமானைச் சராசரவுபிரனைத்தும் ஊனக்கண் ணுற் கண்டு மண்மேற் பிறந்த பயனைப் பெறலாயின. அந்நகரச் சூழல் முழுவதும் வறுமை, பிணி, அகாலமரணம் முதலிய துன்பங்களொழி ந்தே போயின. மலடிகள் எல்லாம் மக்களைப்பெற்றனர். பெரும்பாவி யர் புண்ணிய சிலராயினர். கொல்லா விரதம் குதுகலித்து ஓங்கித்

தயாமூலதருமம் தலைபெடுத்து வழங்கிற்று. தருமசிலரனவர்க்குஞ் சத்தினிபாதந்தானே பதிந்தன. சிவனேசமும் அடியார் பணித்திற மும் அனவர்க்கும் சாதனமின்றிவிளங்கின. அடங்காதாரெல்லாம் அமரரேயாயினர். வேறுகுருமொழி பெறுது சிவஞானம் அனவருள த்தும் விளங்கச் சீவன்முத்த நிலைபெற்றனர். யார் எத்தொழிலச் செய்யினும் சிவபூசையாயின. யார் எதைக்கூறினும் சிவமந்திர ஜப மேயாயிற்று. யார் எதை நினைக்கினும் சிவத்தியானமாயிற்று. ஆண் பெண்ணுயிர்களனைத்தும் சிவமுஞ் சத்தியுமாயின. ஆகவே எல்லாஞ் சிவமயமென்பது விளங்கிற்று. அந்நகரமனைகடோறும், இத்திறப்வமக னைவப்பற்றி அன்பு செய்து புகழ்வாரும், அருமைசெய்து புதுமையாக வெண்ணிப் போய்ப்பார்ப்பாரும்,கைத்தொழில் மறந்து சீராட்டுவா ரு மாயினர். ஆயின் இஃது ஓர் வியப்பன்று. எனெனில், தீ அடுத்த திர ணங்களைத் தன்மயமாக்குவதும் ஆச்சரியமோ.

இங்ஙனம் எம்மருதவாணப் பெருந்தகை வளர்கிறகாலத்து மெல் லத்தளர் நடைப்பருவமடைந்து தாயார் பின்றொட விளையாடிச் சிறு தேருருட்டி வீதியிற் சிறு பேதைப்பெண்களிழைத்தாடுஞ் சிற்றிலழித் தும், அவர் வண்டலாட்டு விருந்தாயும், தமது திருவிளையாடற் பரு வத்தோடொத்த வனையவாணிபச் சிறுவரோடு வேறுபல விளையாடியும், திருமேனி புழுதியாடி அன்னையர் யாரும், "ஐயவருக அண்ணல்வருக அழுதவருகவருகவே, அப்பவருக அழகவருக அத்தவருக வருகவே, செய்யவருக தேசவருக செல்வவருக அல்லல்தீர்,தீர்த்தவருக மூர்த்தி வருக சிலவருகவருகவே, துய்யவருக சோதிவருக துணைவவருக மக விலாத், துக்கமகல வந்தவின்ப சுகசொரூப வருகவே, வையமுழுது முய்யவந்த வள்ளல்வருக வருகவே, மாகிலாதமருதவாணவருகவருக வருகவே." "பழிசெயாம லுலகமெங்கள் பாரசெல்வம்வீறவே, பரிவு செய்து குருவிருந்த பாலலீல வருகவே, கழிவிலாசை தணியவந்த காதலாள வருகவே, கவலதீர வாரம்வைத்த களைகணுளை வருகவே, ஒழிவிலாதெழுள்ளமுருகவுவகைசெய்தநிதியமே, உம்பர் இம்பர் வம்பு போலுதித்த ஐயவருகவெம், வழிகெடாமை வாழவைத்த மாதவம் வருகவே, மருதவாணவருகவெங்கள் மருதவாணவருகவே." "செத்த பின்பு முத்திதரவே செல்வமக்கள் வேண்டுவார், பித்தர்போலு முல கர்கண்டபேர்கள் யார்பின்வருவதை, மத்தர்சொல்லைக்கொண்டிலே மதிக்கிலேமெலாவதை, யத்தவெங்கள் மருதவாண வருள்கமுத்த மருள்

கவே.'' ''கண்ணழுத்தமருள்கவெங்கருத்தமுத்தமருள்கசெவ், வண்ண முத்தமருள்கவான் வரம்பமுத்தமருள்கவெம், பண்ணமுத்தமருள்க வெம்பாலமுத்தமருள்கவெம், மெண்ணமுற்றுமருதவாணவெங்தைதமுத் தமருள்கவே.'' ''சங்கமுத்தமேகமுத்தந் தாமரைப்பூமுத்தநல், மங்கை மார்களத்துமுத்தம் வளைகொள் முத்தமிப்பியின், துங்கமுத்தம் யானை மீன் துலங்குமுத்தம் வேண்டிலம், எங்களையமருதவாண வீகவாயின் முத்தமே.'' '' செம்மையான கண்டு சர்க்கரை செழித்தபாலுமெம், அம்மைதருவ மோடிவருக வருள்கமுத்த மொன்றுமேல், விம்முபுழுதி போக்கலாம் விளைந்துவருக முத்தமொன், றிம்மெனத்த ராயோவைய வெங்கள்மருத வாணனே.'' என்று அழைப்பவோடிமேல்விழுந்து முத்தமளித்தாடியும், மழலைதழையப் பேசியும் பெற்றோனை மகிழ்செய் தனர். '' மக்கண் மெய்தீண்டலுடற்கின்பமற்றவர் சொற்கேட்டலின் பஞ் செவிக்கு.'' '' அமிழ்திணுமாற்றவினிதே தம்மக்கள் சிறுகையளா வியகூழ்'' என்று திருக்குறள்கூறிய இன்பத்தை உண்மையாக நுகர்ந் தவர்கள் நமது திருவெண்காட்டடிகளும் அவர் திருமனைவியாருமன்றி வேறு யாரை யாம் கூறுவோம். என்னெனில், பரமகாரணரான சிவ பெருமானுடனே மைந்தரானல் மெய்யானமகவின்ப அனுபவம் யார்க் குண்டு. அது நிற்க.

இங்ஙனமித்தளர் நடைப்பருவ மொழிந்தவளவில், மருதவாணப் பெருமான் ஏனையவசியச் சிறுவரோடு கூடிக்கறங்குகழற்காய் முதலிய கருவிகொண்டு விளையாடியும், யானை, குரங்கு, மான், மனா, தகர், குறும்பூழ், சேவல் முதலிய வளர்த்தும், போர் செய்யும் விலங்கு பற வைகளைப் போர் மூட்டி யாடல்கண்டு களித்தும், சோலை, நந்தவனம், தோப்பு, தண்டலை, கூவல், வாவி, கயம், யாறு, கடல்களிற் சென்று பூ, காய், பழம்பறித்துச் சூடியுந், தின்றும், ஆடியுங், குதித்தும், நீந்தி யும், நகரமனைகடோறுஞ் சென்று ஏககாலத்திலனைவருபசாரத்தையுங் கொண்டு விருந்துண்டு அவர்க்கு வியப்பை விளைத்தும், அவர்கள் மறையவைத்த சிற்றுண்டிகளைத் தெரிந்தெடுத்துவந்து மகாரோடுண் டாடியுப், அவர்களப்பண்டத்தைத் தேடுகையில் முன்னில்லாமை காட்டி மீட்டும் வேரோரிடத்திலப்பண்ட மிருக்கக்காட்டியும், தந்தா யை விட்டுப் பிரியாமை மனைக்கண்ணே யிருந்துகாட்டி யூரிற் சிறு குறும்பு செய்துலாவியும், பற்பல கூட்டமாகப் பிரிந்து விளையாடுஞ் சிறுவரோடு தனித்தனியிருந்து காட்டியும், அச்சிறுவர் விரும்பியவாறு

மீனுயிருந் மணிக்கிரீவன் சாபந்தீர்த்தது. அள

உண்டியாடை பூணுதி கொடுத்தும் திருவிளையாடல் செய்தனர்.

மீனுயிருந்த மணிக்கிரீவன் சாபந்தீர்த்தது.

இங்ஙனம் பலபலவிளையாடல் செய்தொருநாள் அம்மகார்களோடு கடற்கரை சென்று விளையாடுவார், மணிக்கிரீவன் என்னும் கந்தருவன் சாபநீக்கத் திருவுளங்கொண்டு, மரக்கலமொன்று அச்சிறுவரனைவ ரோடுமேறி நெடுந்தூரஞ் சென்று திரிந்து ஆடிவருகையில், யோசனை நீளமுள்ளதோர் பெருமீன் இவர்கள் தோணி நோக்கி விழுங்குங் குறி காட்டிப் பெருஞ்சினத்தோடு விரைந்தோடி வருதல்கண்டு, அவ்வகைய மக்கள் யாரும் பொறிகலங்கி யஞ்சிப்பெருங் கூச்சலிட்டு, மருதவாண! மருதவாண! இனி என் செயக்கடவோம் யாமெல்லாரும் ஒருங்குமாள வந்ததே! இப்பெருமீன் வாயினின்றும் எங்ஙன முய்யவல்லோம்! அறியாது வந்தாவியிழக்கலாயிற்றே! அந்தோ! நம்மன்னை தந்தையர் வர வறியாது வருந்துவரே! என்று புலம்பி வருந்துகையில் அம்மீன் நா வாய்க்கருகே வந்து கூம்பின்றலை நின்ற அவருளொருவனைப்பற்றி விழுங்கியது. விழுங்கவே மற்றையர்கள் நடுங்கி மூர்ச்சித்தவராயினர். அப்போது மருதவாண வள்ளல்கண்டு இரக்கமுற்றுச் சிறுவர் பயந் தீர்ப்பாராய்த் தமது திருவடி நீட்டி அம்மீன்றலையின்மேலுதைத்தனர். உடனே அம்மீன் உயிர் துறந்து மாண்டது. மாளலும் அதன் யாக் கையினின்றும் ஓர் தெய்வ வடிவப் புருடன் புறப்பட்டு விமானமேறி அந்தரத்தே நின்று, இம்மருதவாண வள்ளலை நோக்கி எதிரிறைஞ்சித் தொழுது, ஐயா! நான்மணிக்கிரீவன்னென்னும் கந்தருவன் வேடிக்கை யாகத் திரிகையில், ஒரு வனத்தில் சிந்து முனிவனைக் கண்டு என் அழ கின் செருக்கால் அவனை யிகழ்ந்தேனுக, அவர் முனிவுற்று, உடனே என்னை மீனுகும்படி சபித்தார்.

அதுகேட்டஞ்சி யான் அவனை வணங்கி வேண்டலும் ஆனுடைய பெரியபெருமான் அன்பருய்ய வேண்டி மருதவாணப் பேர்மகனுய் எழுந்தருளும். அப்போது, அவர் செல்வத்திருவடிபட்டளவில் உன் மீனயாக்கையொழித்துய்வாயென்றருளிப் போயினர். அது முதல் யான் பல துயரப்பட்டு வருந்தி நின்றேன் அவ்வருத்த மெல்லா மின்று கட்டோ டொழிந்தது. பெருங்கருணையாளனே யென்று துதித்தலும், அவனுக்கருள் புரிந்து சுவர்க்கம் புகவிடுத்து, பயத்தால் மூர்ச்சித்து விழுந்திருந்த நாய்கமைந்தர்கள் உய்ந்தெழக் கருணையாலோக்கலும், அவர்யாருங்களை தெளிந்தெழுந்து, மருதவாண நம்பி அருகே நிற்ப

தும் மீனிறக்து மிதப்பது நோக்கி, மிகவியப்புற்று அவனைத் தழுவிக் களிப்புடனே உபசார வார்த்தைகளைச் சொல்லித்தமது கூட்டத்துள் ளொருவனை அம்மீன் முன்னமே விழுங்கியதன்றே அவன்மீட்டுந்தம் முடைய கூட்டத்துளில்லாமைக் கிரங்கி அம்மருதப் பிரானிடம் விண் ணப்பித்தார்கள். அதுகேட்டபெருமான் புன்னகை செய்து அதோ அவன் வருகின்றனன் பாருமென, அச்சிறுவன் அம்மீன் வயிற்றி னின்றும் விலையுயர்ந்த நவமணிகள் கணக்கில்லனவாரிப் பெரியதோர் சுமைசெய்துகொண்டு வாயின்வழியே சாதாரணமாய்த் துன்பமின்றி வரக்கண்ட அவ்விப்பர்மகார் அனைவரும் களிப்போ டெதிர்சென்ற வனைத்தழுவி யழைத்துவந்து அவன் கொணர்ந்த மணிகளைக்கண்டு மகிழ்ந்து தாமும் அவ்வாறு மணிகளைச் சேர்க்க விரும்பியதை மருதப் பெருந் தகையார்க்குக் கூற அவரும் கருணையாலவர்களை நோக்கி உங் கட்கு நவமணிகளில் விருப்பமிருக்கின், இம்மீன் வயிற்று நுழைந்து கொண்டு வம்மின் என, அச்சிறுவர்க ளவ்வாறே அம்மீன் வாய்வழி நுழைந்து அங்குத் தம்மாசை யெல்லைப்படிமட்டும் மணிகளை வாரிக் கட்டிச் சுமக்கலாற்றாது சுமந்துவந்து நாவாயிற் சேர்த்து, அவ்வைரும் தாந்தாங்கொடுவந்த மணிகளிற் சிறந்தன தெரிந்து மருதப்பிரானுக்குக் காணிக்கையென்று கிழிமுடிந்து வெவ்வேறு பொதிந்து வைத்தனர். உடனே நெடுநேரமாயிற்று நம்மன்னை தந்தையர் நமது வரவு நோக்கி நிற்பராதலின் யாம் விரைவிற் செல்லக்கடவமென்று அனைவரும் தோணி செலுத்தி வரலாயினர். அவரங்ஙனமாக.

• இங்கே நகரவணிகமாக்க ளனைவருந்தத்தமைந்தர்கள் மனைக்குக் காலத்தில் வராமைகண்டு மனம்வருந்தித் திருவெண்காடராகிய பட் டினத்துப்பிள்ளையார் திருமாளிகைவந்து விளவ, அவர் மனைவியாரும் தம்மைந்தர் வரவுகாணுது வருந்தினராய்த்தமது கணவர்க்குவிப்ப, யாவரும் நகரமுற்றுந்தேடினரா யெங்குங்காணுது கடன்மேல் விளை யாடச் சென்றிருக்கலாமென் றெண்ணிக்கடற்கரையடைந்து விசாரித் தவளவில், அங்குச்சிறுவரெல்லா மொருங்கே கூடி மிதலைமேலேறிச் சென்ற செய்தி யுணர்ந்து வருந்திவரும் வழியெதிர் நோக்கி வாடி நிற்குந் தருணத்தில், தோணியும் வந்து நின்றது; மக்களனைவரும் மணிக்குவைகளோடு கரையேறித்தத்தம் குரவரை வணங்கி நின்றனர். அவர்களனைவரும் பெருங்களியோடு தம்மக்களை யணைத்துக்கொண்டு மனைக்குச் சென்று அவர்கள் தந்தமணிகளைக்கண்டு களிப்புற்றுப்

பட்டினத்துப் பிள்ளையாருக்கு அவ்வரலா றுணர்த்திப் பெருவிழாக் கொண்டாடி யிருந்தனர். திருவெண்காடரும் தம்மைமந்தர் தந்தமணி களைக்கண்டு வியப்புற்று வேதியர்கட்கும் ஏழையர்க்குமாக அம்மணி களைவழங்கி மகமேடு மனைபுகுந்து இன்புடனிருந்தனர்.

மருதப்பிரான் வித்தியாப்பியாசம்.

இங்ஙனம் சின்னாள் கழியலும் மருதப்பருக்குக் கல்விபயில் பரு வம் வந்துதித்ததாகக் கண்ட திருவெண்காடர் தவஞ்செய் தாசிரியத் தன்மை யடைந்தா ரொருவரைத் தருவித்து, அவரைப் பூணைடை முதலியவற்றா லுபசரித்து இன்மொழியால் மகிழ்வித்து ஓர் நன்ன ளில் அவரிடத்து மருதவாணரைக் கல்விபயில வமைத்தனர். மருத வாணரும் சின்னாளிற்றானே அறுபத்துநான்கு கலைகளும் பயின்று வல்லராயினர். பேருலகைக் கணமொன்றி லுணர்த்தவல்ல பரமாசிரிய ராகிய ஈசனர் சின்னாளிற் பயின்றாரென்பது கொண்டகோலத்திற் கேற்பக்கூறியபடி யன்றி வியக்கத்தக்கபடி யன்று.

அஃதங்ஙனமாக, அந்நிய தேயத்தினின்றோர் வணிகன் பெற லரிய பருமணி முத்து ஒன்றை அக்காவிரிப்பூம் பட்டினத்தில் வாழும் வசியர்பால் கொண்டுவர, அதனை யவரனைவரும் கண்டளவிற் பிரமை கொண்டு மயங்கினரன்றி விலையறிய மாட்டாதாராய்த் தம்முட் சிறந்த திருவெண்காடர்பாற் கொண்டு வந்தனர். அப்போது திருவெண்கா டர் அம்மணியை நோக்கி அதன் பருமனுக்கும் திரட்சிவடிவினுக்கும் ஒளிக்கும் நிறத்தினுக்கும் வியந்து நெடுநேரந் தம்மனத்து ளாராய்ச் சியுடனிருந்து பின் எவ்வகைமணிக்கும் விலையாவது கொள்வோன் விருப்பினளவா மாயினும் இம்மணி பதினாயிரம்பொன் விலைபெறுமா கத் தோற்றுவது என்றார். அதுகேட்ட அவ்வாணிப ரனைவரும் ஒக்கு மென வுவந்து நின்றனர். அதனைக்கொடு வந்தவனும் பெருங்களிப் புற்று நின்றான். அத்தருணத்தில் மருதவாணப் பெருந்தகையார் பள்ளி க்குச்சென்று வருபவர் வழக்கம்போலும் தம் பிதாவுட னுண்ணத் தடை நேர்ந்ததாக அவரை யழைக்கவந்தனர். அங்குக்கூடியிருந்த வசியர்குழாத்தையும் அவரிடையிருந்த பெருமணி முத்தையுங் கண்டு, அங்கிருந்தாரை நோக்கிப் பெரியீர்! இம்மணி யெங்கிருந்து கிடைத் தது, இதன் விலையென்ன? யாரிதனை விலைமதித்து வாங்கினீர்களெ ன்று வினவினர். அப்போது திருவெண்காடர் மருதவாணரை நோக்கி, ஐயகுழந்தாய்! இம்மணியைப் பற்றிய விசார மேனக்கேன்? பசிபொறு க்க லாற்றுதவன் பள்ளிக்குச் சென்றுவந்து நீ மனை புகுந்துண்டு பசி யாற லாகாதாவென அவரை நோக்கி மைந்தனர், அப்பரே! அங்ஙன

மன்று பலகலைத்துறை பயில்வோ ருலகியலி லு முலகியற்பொருளி லும் உண்மையறிய முயல்வது கடனுதலின், நவமணிக ளிலக்கணத்தினை யான் எம்மாசிரியர்பாற் பயிலும்போது கேட்டதோர் குறிப்பாடிம் மணியிற் கண்டேனுகலின் அதனை நுமக்கு வெளிப்படுத்த முயன் றேன் எனலும், அங்குள்ள வசியருளொருவர் இவர் சொற்கேட்டு வியப்புற்று அதனையறிய விரும்பினராய், ஐய எம்மருதப் பெருந்த காய்! கேட்டருள்க வேற்றூரினின்றும் இவ்வணிகர் தந்த விம்மணி எம்மான் மதிப்பரிதாய் நுந்தையாராகிய விவ்வெண்காடர்பாற் றந்தே மாக அவர் பதினுயிரம்பொன் மதித்தனர். இதன்வரலா றிது, இனி நீர் கூறுவது கூறுமெனக் கேட்ட, மருதையர், பெரியோரே! யெந்தை யார் மதித்த பதினுயிரம் பொன்னையும் யானே தருகிறேன், ஆனல் இம்மணி கண்ணுலு நோக்கத் தக்கதன்று, என்னெனில், இதனுள் * நீர் கிடந்துள்ளது. இது ஆணிமுத்தன்று. இதைத் தொட்டாலும் வறுமை நோய்முதலிய வுண்டாம். அதனை நீவிர் அனைவரும் பார்க்க வென்று, முன்பின் நோக்கா தம்மணியை யுடைத்தனர், உடனே அதனுள்ளிருந்த நீர் வெளிப்பட்டது. அதுகண்டயாவரும் வியப்புற்று மருதப்பிரானை மகிழ்ந்து கொண்டாடினர்.

பின்பு மருதவாணப் பெயர்வள்ளல் அம்முத்தினைத் தந்த வணிக னுக்கிரங்கித் தாழுரைத்த வண்ணம் பொருள்தரவெண்ணி, கடாரபுர த்துவாழுஞ் சிவநேசத்திற் சிறந்த ஞானசந்தனன்னுந் தமது நேய னுக்குத் திருமுகமளிப்ப, அவ்வணிகன் அத்திருமுகம் பெற்றுக் கடா ரபுரமடைந்து அக்சைவனிடம் திருமுகங் கொடுத்தளவில் அவன் அற்

---

* முத்தினுள் நீரிருப்பது அதன் குற்றங்களுளொன்று. முத்தத் தின் குணம் ஆறும், குற்றம் பத்துமாம். குற்றமற்ற முத்துக்களணி யின் ஆயுள், செல்வம் முதலிய விர்த்தியாமென்பதும் குற்றமுள்ள முத்துக்களினுல் தரித்திரம் முதலிய விர்த்தியாமென்பதும் சாத்திர விதி. இதனை "உடுத்திர ளனைய காட்சி யுருட்சிமா சின்மை கையா, லெடுத்திடிற் றிண்மை பார்வைக் கின்புறல் படிகமென்ன, வடுத்திடு குணமா றின்ன வணியின்மூ தணங்கோ டின்மை, விடுத்திடுந் திரு வந் தெய்துமம் விளைந்திடுஞ் செல்வம் வாழ்நாள்" என்னும் பரஞ்சோதி மாமுனிவர் திருவிளையாடற்புராணத் திருவிருத்தத்தானும் "இனி முத்தின் குணமுருட்சி யியலுமன்வான் மீனின்றேசு, கனமறு வின் மை நோக்கிற் கவினுறல். படிகநன்று, வினவுமண் ணேறல்சந்நீர் சிவப்புமென் முகங்கறுத்த, வினமரு ளிவற்றினேடு கோணலென் றீரைங் குற்றம்" எனப் பிறரானும் கூறுமாற்றுனுணர்க. மற்றூர் சாரார் காற்றேறு, மண்ணேறு, கல்லேறு, நீர்நிலையென குற்றம் நான் கென்பர். இதனை "காற்றினு மண்ணினுங் கல்லினு நீரினுந், தோற் றிய குற்றந் துகளறத் துணிந்தவுஞ், சந்திர குருவே யங்காரகனென, வந்தநீர்மை வட்டத் தொகுதியும்" என்னும் சிலப்பதிகாரத்தானு முத் தின் குற்றமுங் குணமுமுணர்க.

மருதப்பெருந்தகை வாணிபத்தின்மேற் கலமேறிச்சென்றது. சக

புகமும் ஆராமையுங்கொண்டு அன்போ டெதிரேற்றுத் தலைமேற் றரித்துப் பூசித்து வாசித்து, உடனே அவ்வணிகனை உபசரித்து இனி யன கூறிக் குறித்த பொன்குவியலைக் கொடுத்து அனுப்பினான். இச் செய்தியுணர்ந்த வெண்காடர், தமது மைந்தர்பால் அச்சமும் அன்பு மிகுந்தவராயிருந்தார்.

மருதப்பெருந்தகை வாணிபத்தின்மேற் கலமேறிச்சென்றது.

இங்ஙனம் நிகழுநாளில் பதினைஞ்சண்டெல்லை குறுகியது. மருத வாணப் பெருந்தகையார் முன்னம் தாம்சிவசருமருக்கும், திருவெண் காடருக்கும் அனுக்கிரகித்தபடி- மூத்திக்கு விடுக்குந் திருவுள்ள மூடையராய் ஒருநாள் திருவெண்காடனிடஞ் சென்று, ஐயோ! கல மேறிக் கடலோடி- வியாபாரம் செய்து பல துறை பார்த்துவர மிக்க ஆசையொன்றுடையேன். தீவாந்தரங்களில் விலையுயர்ந்த மணி முதலி யன பல சிறந்த பண்டங்கள் இருப்பதாகக் கேள்விப்படுகின்றன. பொ வணிகராகப் பிறந்தவர்கள் இளமைப்பருவத்தில் வருந்தியும் பொ ருளை மிகுப்பத் தேடவேண்டுவதே கடனன்றே? மூதுமையின்னன்ன செய்யக்கூடும். பொருள் மிகுப்படமில்லாவிடி- மிம்மை மறுமைப்பயனை அடைவதெங்ஙனம்? "ஒண்பொருள் காழ்ப்ப விபற்றியார்க் கெண் பொருளேனு மிரண்டுமொருங்கு" எனப் பெரியருங் கூறினரே. "திரைகட லோடியுந் திரவியந் தேடு" என ஔவையாரும் கூறின ரன்றே? ஆகலால் எனக்குக் கட்டளையாணல் தீவாந்தர வியாபாரத் திற்குச் செல்லுடம் இந்தகரவாணிகமாக்களோடு யானுஞ் சென்று சின் னாளில் வருகிறேனென்றனர்.

அது கேட்ட வெண்காடர், நெஞ்சு திடுக்கிட்டு, அண்ணலே! என்ன கூறினைப்! பிள்ளைகளி தீர்க்கவந்த பெருமானே! உன்னைப் பிரி ந்து ஒருகணமேனும் உயிர்வாழவல்லேன! என்னினைந்து என்னசெய் ந்து துணிந்தாய்? உனக்குப் பொருளென்ன தாழ்வாகவாயுள்ளது? வேண்டிய செல்வ நிரம்பியிருக்கப் பல தண்டத்தேடு கடலோடி வருந்திப் பொருள் தேடவேண்டு மென்பதென்னை? எத்தனைகாலம் நீ என்னாறு செலவு செய்யினும் உலவாத நிதிக்குவையல் பாகிப்பற் நிக் கிடக்கின்றனமே. நீ செல்வப்பிள்ளையாகி மனம்போனபடி யுண் டுடுத் துலாவித்திரிவதைவிட்டு இவ்வண்ணம் நெடுந்தூரம் போக்குக் கிட்டம்பலைத் திவ்வாறு செல்வது முறையன்று. நீ இன்னும் முலைப் பால் மணம் நீங்காத வாயையுடைய சிறுபதலை. இக்காலம் உண்டுடுத் தாடித் தருக்குது. இதில் பொருள் தேடவிரும்புவது முறையல்ல. அன்னியும் உன் அண்ணையும் மூத்தண்ணையும் உன் பிரிவுக்கஞ்சி உயிர் துறப்பார்கள். ஆகலாவிட்போ திவ்வெண்ணத்தினை யொழிப்பாயாக ஐயனே! என்று வருந்திச் சொல்லினர்.

அதுகேட்ட மருதப்பரும், சிறுநகைசெய்து, அப்பரே! நீருரைத் தன முழுவதும் உண்மையே. உங்க ளன்புக்கும் நிலைமைக்கும் தக்

கதுவே கூறினீர். ஆயினும் "மகன்றந்தைக் காற்று முதவியிவன் றந்தையென் றேற்றான் கொல்லெனுஞ் சொல்" என்ற பெரியோர் ஆணையை நிறைவேற்றுவது என்கடன். ஆகவே அக்கடனை மனமொழி மெய்யளவாகக் கழிக்கவேண்டுமாலுல் பொருளின்றி முடியாது. ஏனெனில், "தம்பொரு ளென்பதம் மக்களவர் பொருடந்தம் வினையான் வரும்" என்பது சான்றோர் துணிபு. அன்றியும் உலகிய லறியாதவனுக்குத் தருமவியலும் கடவுளருளியலும் உணர்வதருமையாம். அவ்வுலகியலறிதலும் பலதேயஞ் சென்றுவருதல், அரசனைவழுகுதல், கற்றுணர் புலவர் கூட்டத் திருத்தல், இங்கித நட்பினரோடளவளாவலு மாகிய இந்நான்குங் கடைப்பிடித்து நல்லொழுக்கத்தோடும் ஒழுகினலன்றிமுற்றமுடியாது. இதற்கு இளமைப்பருவமும் ஒருகருவி. அறிவு தறியும் பருவமாகிய இது கடந்தால் தருமநுணுக்க மெவ்வாறு முதுமையில் வெளிப்படும். முன் தசரதன் தன் முதுமையில் தவஞ்செய்து வருந்தியீன்ற இராமனிலக்குவனென்னு மிளமைந்தரை அரக்கரோடு போர்செய்யவன்றோ விசுவாமித்திரமுனிவர் பின் செலுத்தினர். நீர் அறியாததல்லவே! குலவொழுக்கமும் தொழிலுமாயினும், மக்கள் காலையிற்பயில்வதே சிறப்பும் பயன்படுவதுமாம். "அகாலப்பயிரும் அன்னையப்பனில்லாப் பிள்ளையும் அல்லற்படும்" என்ப துலகவழக்கன்றோ? எல்லாமுணர்ந்த நீரே இங்ஙனமாலுல் என் அன்னைமார் பெண்பாலார் அவர்கள் நிலைமை ஏதாகமாட்டாது. ஆதலால் என் விண்ணப்பத்தைப் பயனற்றதாக்காது கட்டளை தாவேண்டுமென்று கூறக் கேட்ட வெண்காடனர் தம்முடைய மைந்தர் குறிப்பைத் தெரிந்து கொண்டு, இனி இவர் தடைக்கு அஞ்சார் என்று எண்ணி, ஆயின், ஐய! யாஞ முன்னுடன் போதுவல் போதுக என்றார்.

அப்போது மருதவாணர் அப்பரே! யாமிருவரும் ஒருங்கே சென்றால் எம்மன்னையர் நம் இருவர் பிரிவு மொருங்காற்றாதிறந்துபடுவர். அல்லதூஉம் முயற்சி ஊக்கமுற்றுச்சிறவாது. ஆகலின் நீர் கருணைசெய்திங்குத்தானே என்னன்னைமாரைக் காத்திடுதிர். யான் வினைவில் பொருள் தேடிவந்து சேர்கிறேனெனச் சொல்லக்கேட்டு, திருவெண்காட்டையர் மறுக்கமாட்டாதவராய்ச் சிறுபோது மயங்கிநின்று பின் னொருவாறு தெளிந்து, அவர் வழிச் செலவுக்கும் வியாபாரத்திற்கும் வேண்டுங் கருவிகளையும் துணையையும் பண்டங்களையுங் குறைவறச் சேகரித்து, புதியதொரு கலத்தில் நிரப்பித் தக்க மீகாமனொருவனை நியமித்து, நன்னாளில் வழிக்கொண்டு தாய் மூத்தன்னை தந்தை சுற்றத்தினர். சிவனடியர் முதலிய பெரியோர் யாரையும் வணங்கி விடை

பெற்றுக் கடற்றுறை யடைந்தனர். அதற்கு முன்னமே அவ்வூரி லுள்ள வணிகமாக்கள் மைந்தரும் இவர்க்குத் தோழருமானவர்கள் யாவரும் வாணிபத்தை முன்னிட்டு அவ்வாறு பற்பல பண்டங்களை கொண்டு கலமேறவந்திருந்தவர்களோடு தாமும் ஏறிக் காற்றின்சாய லு மொத்தவரக் கலஞ்செலுத்தி மிகவிரைவிற் சென்றனர். இவர்கள் அன்னை தந்தையர் சுற்றமனைவரும் காவிரிப்பூம் பட்டினத்திற்றானே இவர்கட்கு உளதிய மிகப்படல்கவென்று தத்தம் வழிபடுகடவுட் பராவி மைந்தர் வரவை யெதிர்நோக்கி நின்றனர்.

மருதப்பெருந்தகை வாணிபத்திறனும் மீட்சியும்.

இங்ஙன மிருக்கையில் பொருள்வளர்க்க வாணிபங்குறித்துக் கல மேறிச் சென்றவர்களனைவரும் சிலநாளில் ஒருதீபத்தினை யடைந்து அங்குத் தம்பாலுள்ள பண்டங்களை மாறிக்கொண்டு, வேறு பல நாடு நோக்கி மருதவாணரொழிய மற்றையர் யாவரும் போயினர். மருத வாண ரவ்விடத்திற்றானே யிருந்துகொண்டு தம்பாலுள்ள பண்டங் களை மாறிப் பொருள்கொண்டு, கோயில், மண்டபம், மடம், சத்திரம், சாலை, நந்தவனம், சோலை, குளம், கூவல், தடாகம் முதலிய பலவகை யறங்களையும் சிவகாருணியத்தாற் செய்து ஏழையர் முதலிய யாவர்க் கும் உபகரித்துக்கொண்டு பல்புகழ் நிறுத்திவந்தனர். இவ்வாறு சில மாதங்கள் கழிந்தன.

அப்பால், வாணிபத்தின் பொருட்டு வேறுதீப நோக்கிச் சென் றிருந்த அவர் நண்பர்யாவரும் அந்தந்த தீவுகளினும் நாடுகளினு முள்ள பண்டங்களை மாறிப் பொருள்விருத்தி செய்தாதிய மடைந்தவ ர்களாய்த் தின்னளிற்றானே மருதவாண ரிருந்தவிடம் வந்துசேர்ந் தவ ரைக்கண்டு முகமன்கூறிப் பிரிவாற்றுமை வினவி மகிழ்கொண்டாடி யிருந்து, அவர் வாணிபத்திறம் விளவினராக. அவரடைந்த விலாபம் வேறு பிறிதின்றி யவர்பால் வரட்டிகளும், அவல்கடலையுமே யிருக்கக் கண்டு, திடுக்கிட்டு ஐய! நீர் கொண்டுவந்த வுயர்விலைப் பண்டங்களும் பெருநிலத் திரவியங்களு மேதாயிற்று, உம்மிடத்தில் உலர்ந்த எருக் குப்பையும், மிகுந்த அவல்கடலையுமே யிருக்கின்றனவே! என்னகாரி யஞ் செய்தீர்? பட்டினத்துப் பிள்ளையாரெனப் புகழ்பெற்ற திருவெண் காடர் தவப்பேறுய்வந்த நீர் எம்மனைவர்க்குந் தலைவராக விருக்கின் றீர், எம்மினுஞ்சிறந்த அறிவாற்றலுடையீர், பொருள்வளர்க்க எம்மை யேவினீர், அருள் வளர்க்குங் கொடையாள ராயினீரன்றி யருள்வளர் க்கு மாண்பிலர்போல் என்னபண்டம் தேடி வைத்துள்ளீர்? ஐயா!

இது உமக்கு அடுக்குமே! நுங்தையார் கேட்டால் என்னினையார்? என்னுரையார்? நீர் என்செய்தீர்? என்செய்தீர்? நும்மையர்க் கென்னுரைப்பீர்? என்று மிக்க பரிதாபத்தினரா யவர்கள் விரைவு, மகாலிங்க மூர்த்தியாகிய மருதவாண வள்ளலார் அவர்களை அருக்கிய நோக்கு கிறற் சிறிது கடைக்கணித்து, அன்பரே! நீவிர் யாவரும் என்பொரு ட்டேடன் அவலப்படுகிறீர்கள்? எந்தையார், இக்கருமம்பற்றி நுங்களை விரைவாதவகை நேருமாக என்றனர்.

அதனைக்கேட்ட தோழர்கள் யாவரும், என்னகாரணம் இதுவ ரையு மிருந்தவாறன்றி நமது மருதவாண வள்ளல் குணத்தான் மாறு ற்றுக் குறிப்பு வேறுபட நின்றனர். திருவெண்காடர் தவப்பயனி துவேயோ? யாமென்செய்வது? போனதுபோக இனியாமனைவரு மிவ ரைப்பிரிந்து உறைவேமல்லேம் என்று தம்முள் துணிந்தனராகி யிரு க்கையில் அங்கு சில நாள்கழிய மீட்டுந் தங்கள் காவிரிப்பூம் பட்டி னஞ்செல்ல யாவரும் எண்ணித் தந்த மரக்கலங்களிற் றும்தேடிய பொருளையும் டண்டங்களையு மேற்றுவித்துத் தாழுமேறிக் காற்றின் வாய்ப்பறிந்து நாவாயோட்டி வருகையில், எல்லாம்வல்ல மருதவாணப் பெருந்தகை ஓர் திருவிளையாடலைக் கருதித் திடீரென்றோர் பெருங் காற்று மழைவரப்புரிந்து திசைதப்பிக் கலங்களோடச் செய்வித்தனர். ஆகவே அப்பெரும்புயலுட்சிக்கி யாவர்மனமுமுளையக் கப்பலிருட் சூழலுட் புகுந்ததாகப் பலநாள் திக்குத்தோற்றது அலைந்து திரிகை யில் அவரவர்கள் சேர்த்துவைத்திருந்த வுணவுமுதலிய வுபகரணங் கள் செலவழிந்துபோய்க் குளிரான் மெலிந்து அதனை நீக்குவதற் கெரிதுரும்பு மின்மையால் மிகவருந்திப் பெருங்கவலை யடைந்தவர்க ளாய், மகாலிங்க மூர்த்திமாதாகிய மருதப்பரிடம்வந்து தோழ மைமையா லினிய வார்த்தைகூறி, ஐயரே! உம்மையன்றி யித்தருணத் தில் எமக்கார்த்திக்கு? எம்மனைவரையும் காப்பது உமதுகடன். என் னெனில் பலநாளாய்க் காற்றுமழையுட் சிக்கித் திசைதப்பி யலை தில் காவிரிப்பூம் பட்டினம் சேரும்வரையி லாவதாகத்தேடி னைத் திருந்த விறகுமுதலிய வுபகரணங்கள் முழுவதும் செலவாய்விட்டன. இன்னம் மழை விட்டபாடில்லையாம் எங்குள்ளோமோ கலம் எத் திசை நோக்கிச் செல்கின்றதோ வொன்றுந் தெரியவில்லை. குளிரோவ யிருடலிற் றங்காவகை வாட்டுகின்றது. விறகுமுதலியன விலக்குக் கொள்ள வென்றாலும் கரைதுறை யாதொன்றுந் தோற்றவில்லை. என் செய்வோம் உம்மிடத்துள்ள வரட்டியையேயனு மித்தருண மெங்களுக் குக் கொடுத்து உபகரிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். கேட்

டீர்களோ! முனிவர்களே என் றுபமன்னியர் சொல்ல மேல்நடந்த கதைகேட்க ஆவலுடைய அம்முனிவர்கள் அவ்வாசிரியரை வணங்கி அப்பால் நடந்ததை வினவக் கூறலாயினர்.

கேளும் முனிவர்களே! அன்பர்கள் வேண்டுதலுக்கு இரக்க முற்ற நமது மருகவள்ளல் அவர்களை நோக்கி, அன்பர்களே! நீங்கள் ஊரைச்சேர்ந்தவுடனே என்வரட்டி பிடைக் கிடையாகக் கொடுத்தாற் போதும் என்று சொல்லி அதற்கவர்களிசைவு பத்திர மெழுதிப் பெற் றுக்கொண்டவ்வாறே நிறுத்துக்கொடுத்தனர். பின்பவர்கள் யாவருந் தந்தங்கலங்கட்குச் சென்று குளிர் பசி தணிந்து சுகமுற்று மருதப் பரை வாழ்த்தி யிருந்தனர். அப்பால் மழையும் விட்டது, காற்றுந் தணிந்தது யாவரும் திசை கண்டு பிடித்துக் கப்பலேலாட்டித் துறை முகமறிந்து காவிரிப்பூம் பட்டினம் வந்து சுகமாகச் சேர்ந்தனர்.

மருதப்பெருந்தகை ஊரை யடைந்தது.

இதற்குமுன்னே இவர்கள் பிரிவாற்றுமையால் வருத்தப்பட்டுப் பகலுணவு மிரவுறக்கமு மின்றி ஏக்கங் கொண்டிருந்த அவ்வவர்கள் தாய்தந்தையருஞ் சுற்றத்தினருடம் நண்பினருடம் இச் செய்திகேள்வியுற்ற வளவிலே தங்கடங்க ளிட்டதெய்வங்களை வாழ்த்தி வழிபட்டுக் காணிக்கை செலுத்தித் திருவிழாக் கொண்டாடினர்கள். திருவெண் காட்டரும் அவர்மனைவியும் துயரக்கடற்கரை காணாது உலகை மறந்து மருதவாணர் திருவுருவ மொன்று தவிர மற்றொன்றும் புலப்பாடில் லாதவர்களா யிருந்தவர்கள், மருதையர் திருத்தோணி துரைமுகம் பற்றியணைவதை சொன்னவளவில், தம்மையறியா தெழுந்த களிப்பென் னும் வெறிதித்தோரந்து முன்னிவர்களையுமிழாது விழுங்கிக் கிடந்த துய ரப்பெருங்கடலிருந்த விடங் காணுதபடி வளரச்செய்தது. அங்ஙனம் இன்ப மழை பொழிந்தது. இவர்கள் அங்கங் குளிர்ந்து ஐம்புலன் செழுத்துத் தத்துவங்களெல்லாந் தலையெடுத்து அறிவும் பழுத்த வாறுயிற்று. உடனே திருவெண்காடர் தமது பண்டாரத்தைத் திற ந்து வெழுகள் கொள்ளவிடுத்து, தமக்குச் செய்தி வந்து சொன்ன போனவர்க்கும் ஆடை ஆபரண நிதிக்குவை முதலிய வெறுப்பக் கொடுத்து, தக்காருக்தான மிதப்பவளித்துச் சுற்றத்தினர் நண்பி னர் முதலியோர்கட்கும் உண்டாட்டுச் சமைத்து, தமது ஆண்மார்த்த மூர்த்திக்கும், திருவெண்காடுடையார்க்கும் சங்கமேசரருக்கும் மைமித்திகத் திருவிழாக்களெடுப்பித்து, அங்ஙனே இல்லம் புது க்கி அணிசெய்வித்து அட்டமங்கலம் அமைத்து தகர்களிகொண்டாட,

யாவருந் தம்மைப் புடைசூழ்ந்துவரக் கடற்றுறை சென்று சிலரோடு படகேறி, மருதையரை யழைத்துவர நல்லோரை நாடிக் கப்பற்குச் சென்றனர். செல்லும்போது மருதவாணரோடு வாணிபத்திற்குச் சென்றேருருளொருவன் முன்வந்து இப்பட்டினத்துப் பிள்ளையாரோடு ஐயா! உமது திருக்குமாரனர் சிலநாளாய்ச் சித்தவியற்கை வேறு பட்டனராகக் கண்டேம். ஆதலால் இதனை உமக்குக் குறிப்பிக்கவே முன் வந்தே னென்று சொல்லிப் போயினன். அதனைக் கேட்டவுடனே நெஞ்சு திடுக்கிட்டு உவகைமாறிச் சற்றுக்கவலை கொண்டனராய், எவ் வகையாயினும் மகன் வந்து சேர்ந்தது போதும், மேலை விகர்ப்பங்க ளைச் சீர்செய்து கொள்வே னென்னுந் துணிவா லொருவாறு தேறிக் காலாந்தாழாது கலம்புக்குத் தம்மைநந்தரைத் தழுவிக்கொள்ள, அவ ரும் வழிபட்டு நிற்க, வெண்காடர் உச்சி மோந்தணைத்து ஆதரித்துச் சாவதானமாயருகிருத்திக்கொண்டு, பின்பு அக்கலத்துள் சிலவரட்டி களும் அவல்முதலிய சிலபண்டங்களுந் தவிர வேறில்லாமை கண்டு, பிரமித்து உடன் சென்றேரிளைஞனொருவன் வந்து மருதவாணர் சித்தவிகற் பத்தினராயினரென்று சொன்னதுண்மையே போலும். நஞ்செல்வன் முகக்குறியுஞ் சிறிது வேறுபாடுற்றுள்ளது. ஆயினும் தேற விசாரிப் போமென்று, மெல்ல மகாலிங்க மூர்த்திமானை அழைத்துக் கொண்டு படகிற் பிரவேசித்துக் கரையையடைந்தோர் மணிமாடத்தில் மருதப் பெருமானை யிருக்கப்பண்ணி, மெய்க்காப்பாளரை யமைத்துக் காக்கத் திட்டஞ்செய்து, மீட்டும் மருதரசுவந்த கலத்திற்கேகி, அங்குள்ள சரக்குகளாகிய வரட்டி, அவல் முதலியவற்றினையும், வணையபெட்டி கணக்கு முதலியவற்றையு மெடுப்பித்துவந்து மருதவாணரோடு சென்றுவந்த வாணிகமாக்களுடனிருந்து சோதிக்கும்போது, அவர் பெட்டியில் ஒரு வரட்டியும் ஓலையு மிருக்கக்கண்டு, முதலில் வரட்டி பெட்டியில் வர நிமித்தமென்ன ? இதில் ஓர் விசேட மிருக்கவேண்டு மென்றெண்ணி அதனை யுடைத்துப் பார்க்கையில் அதனுடவே சூரிய ளொளி விட்டெழுந்தாற் போலும் மாணிக்கமொன் றிருக்கக்கண்டு வியந்து, மற்றைய வரட்டிகளையும் சோதனை செய்கையில் அவ்வாறே யெல்லாவற்றுள்ளு மிருக்கவே வியப்பும் களிப்பும் அடங்காதவராய்த் தம்மை மறந்து, தம்மைநந்தர் திறத்தையும் ஆற்றலையும் எண்ணியட ங்கா மகிழ்வோடு மற்றையவற்றையும் சோதிக்கையில் அவல்மூட்டை முழுவதும் பொன்மணல் விரவியதாகவு மிருந்தன. ஓலையை யெடுத் துப் பார்க்கையில் அது உடன் சென்ற ஏனைய வாணிக மாக்கள் மருத வாணர்பாற் பெற்றுக் கொண்ட வரட்டிக்காக நகர் சென்ற வுடனே

அவ்வரட்டியைக் கொடுக்கும்படி யொப்புக்கொண் டெழுதிக்கொடுத்த பத்திரமாக விருந்தது கண்டு, அவ்வாணிப மைந்தரை நோக்கி இது நீர் எழுதிக் கொடுத்ததாமோ வென அவர்கள் யாவரும் ஒப்புக் கொண்டு ஆம் யாமெழுதித் தந்தமே என்றுகூறித் தம்முள் வியப்பும் அச்சமுமெய்தி மருதவாணர் தரமறியாது மயங்கிச் சித்த விகற்பங் கொண்டனரென்றும், வாணிகம்முறையே செய்யவறியாது, வறீதே வரட்டியும் அவலும் கொண்டு வந்தாரென்றும் மயங்கி மோசம்போ னோமே! அடைமழையில் அவர்பால் பெற்றவரட்டிகளை நன்கு சோதி யாமல்சாதாரணமானதென் றெண்ணி அடிப்பெறித் தொழித்தோமே! அவர் பத்திர மெழுதிக் கொடுக்க வென்ற போதும் யோசிக்காமற் போனோமே! இப்போது திருவெண்காடர் பத்திரப்படி வரட்டியைத் தரச்சொல்வாராலுல் என்ன சொல்ல வல்லோம். உளவறியாது மருத வாணர் சித்தவிகற்பங் கொண்டாரென்றும் யாரோ அவர்க்குச் சொல் லிவிட்டார்கள். இனி அவர் நம்மை என்ன வகையில் எண்ணுவார்? நாம் அனைவரும் அவரை வஞ்சிக்க முயற்சித்தவர்களாக வல்லவோ முடிந்தது. என்ன நேர்ந்தது? என்செய்யக் கடவோமென்று சிந்தித் துக் கொண்டிருந்தார்கள்.

திருவெண்காடர் மருதப்பிரானைக் காணுதுவருந்துகை.

திருவெண்காடரோவென்றுல் தமக்குத் தம்மகளர் தெடுத்தந்த மணிக்குவைநிதிக்குவைகளைக்கண்டு, கனி ததும்பினவராய் அங்ஙனே ஓடித் தம்மகளைத் தழுவ ஆவல்கொண்டு அக்காவன் மாளிகைக்குட் சென்றார். அங்கே மருதப்பெருமானைக் காணுமல் திடுக்கிட்டு மெய்க் காப்பாளரை விளவ, அவர்கள், எம்முடையீர்! நீவிட்டகட்டளைப்படியே காத்திருந்தனம், ஆயினும் தேவரீர் திருமகளர்சென்ற வழி யாதறியோமென்று கலங்கிநின்றனர். திருவெண்காடர், மனத்துள் ளூடும் ஓர் கலக்கந்தோன்ற இனி என்செய்கோ! நான் என்மகளுண் மையுந் திறனுமறியாது தவறிழைத்தேனே! எவ்வாறினியவளைக் காண்பேன்! என்னகருதியதோ அவன் திருவுள்ளம்? தந்தை நம்மை இழிவெண்ணினரென்று எண்ணுவதோ? அறிவிலோர் சொற்கேட்டை யர் அவமதித்தனரே எனச் சிந்திக்குமோ? என்னுயிர்க் கிழவன் என் னைத் சென்னைச் சுடப்பண்ணி மறைந்தனனே! தவறு! தவறு!! ஆயாது செய்யுங் காரியம் ஓயாத் துயரமாமன்றே. "பதறாத காரியஞ் சிதறாது" என்னும் பழமொழியையு மறந்தேனே என்றிப்படி நெடு நேரஞ் சிந்தித்து, வேறோர் நூபகந் தோன்ற நெடுநாட் பிரிந்த பிரி வாற்றுமையால் தாய் முதலியோர்களைப் பார்க்கவென்று ஒருகால்

போயிருக்கினும் இருக்கும், ஆதலால் மனைபுகுந்து பார்ப்போமென்று விரைவோடும் போயினர். அங்கு பெருங் களிப்பிலிருக்குந் தம்மனைவி தாய் முகம் நோக்கிச் சிறிது மனத்துயர மாறினவர்ாய்த் தம்மகளுர் வரவை விசாரித்தனர். அப்போதவ்விருவரும் இப்போதே நமது சிறுவன் வந்துண்டு இதோ புறத்திற் சென்றான். எமக்கவன் வாணிபத்தி னற்றேடித் தந்து பூசித்தளித்த ஆடை பூண்மணி யினவையெனக் காட்டக் கண்டும் ஒரு சற்றினரே யன்றித் தம்மனத்துட்டோன்றிய கலக்கமுற்று மொழித்தவரல்லர். ஆகவே மீட்டும் மருதவாணரை ஒருக்காற் பார்க்கவேண்டுமென்னும் அவாத் தூண்டிக்கொண்டேயிருப்ப வெழுந் தங்குமிங்கு மோடித்தேடி நகரமுற்றும் நாடுவாராயினர். நாடியும் எங்குங் காணுமையால் பெருங்கலக்கப்பட்டவராய் மறுபடியுந் தம்மாளிகைவந்து கிலேசப்பட்டுக்கொண்டிருந்தனர்.

மருதப்பிரான் றிருவுருக்கரந்ததும் சிவசருமர் முத்தியடைந்ததும்.

இவரிங்ஙனமாக மருதவாணரோ, இடை மருதில் தம்மை அன்போடு படவுருவத்துப் பூசித்து நோசித்திருந்த சிவசருமர் பாவனை முதிர்ந்து சிவயோகங்கூட, அவர் குடும்பத்தினரோடும் இரவுபகலற்ற சிவயோக சமாதியிலிருக்கையில், அவர்க்குக் கூறியிருந்த பதினாறாண்டும் நிரம்பியதால் சோதிப்பிழம்பாக வெளிப்பட்ட டச்சோதியில் அச் சிவசருமரையும் அவர் குடும்பத்தினரையும் ஐயிக்கம் பண்ணிக்கொண்டும் தாம் தம்முடைய மூலலிங்கமூர்த்தியாகிய மதுரவனேசுவரத்துட்புகி வறக் கலந்தெழுந்தருளி வீற்றிருந்தனர். கேளுரும் முனிவர்களே! கடவுள் "பந்தமும் வீடும் படைப்போன்றானே" என்ற முதுமொழி உண்மையாயிற்று என்றுடமன்னிய முனிவர் கூறினர்.

திருவெண்காட்டடிகள் திருவருள்பெற்றது.

அப்பால் நடந்த வரலாறு கூறுமென முனிவர்கள் விரை உப மன்னியபகவான் சொல்லலாயினர். முனிவர்களே! இவ்வாறு திருவெண்காடர் கிலேசப்பட்டு உண்டி வெறுத்தவராய்ச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், அவர் மனைவியார் ஒரு சிறு பெட்டியைத் தந்து அவர் முன்வைத்து இதனைத் தேவரீர் வந்தவுடனே கொடுக்கும்படி நமது மைந்தன்றந்துபோயினான் என்றார். உடனே பட்டினத்தார் மைந்தன்றந்ததென்னே போதவலோடெடுத்துத் திறந்துபார்த்தார். அதில் ஓர் காதற்றவூசியும் ஓர் ஓலை நறுக்கு மிருக்கக்கண்டு மிருந்த ஆச்சரியமுடையவராய் அவ்வோலையைப் பார்க்க அதில் "காதற்றவூசியும் வாராது காணுங்கடைவழிக்கே" என்றெழுதியிருந்தது. ஆயின் இவர் முன்னஞ் செய்தவக்குறை முடிக்கவந்த மூர்த்தியாதலால் மருத

வாணட்பெருந்தகையார் திருநோக்கம், பரிசம், பாவனை, வார்த்தை மூதலியவற்றால் மனம் முன்னமே பக்குவப்பட்டிருந்ததாக, அவ்வளவிற்றானே இவரோடு ஒருமைப்பட்டிருந்த இருவினைக் கட்டறவே, மும்மலமும் பரிபாகப்பட்டு, நாற்கரணமும் சுத்தமாய்ப், ஐந்தபுலனுமொரு நெறிநிற்காகி, ஆறபகையுமற்று, எழுபிறப்புங்காலற, எண்வகைச்சித்தியும் எதிர்நின்று பணிசெய்ய, ஒன்பது நிலையுந்தாண்டிப் பத்தாந்திசையும் சிவானந்தம் பரந்தவெள்ளமாக வெழுந்துகவர, அதனுள்மூழ்கித் தேடற்பொருள் வேறொன்றின்றிக் கவலையற்றாதலும் அருள்வாணி முன்னிற்கவே,

“பட்டைக்கிழித்தறப்படாவுரிதன்னைப்பரிந்தெடுத்து
மூட்டச்சுருட்டியென்மெய்குழலாள்கையின்முன்கொடுத்துக்
கட்டியிருந்தகனமாயக்காரிதன்காமமெல்லாம்
விட்டிப்பினியவென்றிருவிங்குனசிவன்மீண்டதுவே” எனும்,

“ஞாநற்றைகொங்கையும்மானர்கலவியுந்தூற்பொருளும்
போதநற்றாயுசுலுக்கென்செயலொன்செப்புதடுண்ணியத்தால்
தீதற்றமன்னவன்சிந்தையினின்றுதெளிவதற்கோ
காதற்றலுதியம்வாராதுகாணுங்கடைவழிக்கே” எனவும்

என்று சொல்லி இருவகைப் பற்றுமற்றவராய்ப் உபசாந்தம் பிறந்து சிந்தனிருந்தியுடன் உலகத்தினைபருக்கிய நோக்கால் நோக்கி, “தாய்ப்பிற்றபே நிலைகொம் பெறுக” என்றது சிவபெருஞ்ஞானிகளது தயாவினியல்பாதலால் உலகத்தாருய்யும்பொருட்டு, தமது நெஞ்சினை முன்னிலையாக்கி யுணர்த்துவார்,

“ஞாநற்றைத்தின்பபரண்ணுமலைபார்மலர்ப்பதத்தைப்
போதநற்றிப்போதும்பகலுநெஞ்சேயிற்கப்பதலைத்திற்
தீதறற்மெல்லியமன்றிடப்பனைத்தநிரவியமென்
காதற்றலுதியம்வாராதுகாணுங்கடைவழிக்கே” எனவும்.

“நைதத்திணட்பொருள்மண்ணுசமங்கையைவிட்டுவிடப்
போதித்தவன்பொதுநிற்கட்டலேபோதெப்தடுண்ணியத்தா
லாதித்தன்சுந்தரன்போலெளிச்சமதாம்பொழுது
காதற்றலுதியம்வாராதுகாணுங்கடைவழிக்கே” எனவும்.

உபநிடதப்பொருளாகிய திருப்பாடலருளிச்செய்து, தாயாரை நோக்கி, அம்மே! உமது கவன்றிறந்தது. நீர் யாதுகான்றற்கும் வருந்தாதிரும். உம்மை ஒருகணமும் பிரியேன். யான் குருநாதன் அணைவழியினிற்பவுறுபிணன் என, அன்னையாரும் அக்குறிப்பறிந்து,

ஐய! எனக்கிறுதிநாள் சமீபித்திருப்பதால் என்னீமக்கடனைக் கழித்தாவது செல்லலாகாதாவென, அவ்வாறேயாகவென்றுசொல்லி, எதிர்நின்ற தமது ஆப்தகண்பரும் தலைமைக்காரியக்காரருமாகிய சேந்தனைநோக்கியிப்பொருள்முழுவதும் இவ்வுலகிற்பல்லாரும்கொள்ளப்புரிவீரென்றுசொல்லி, சூறையிடப்பணிவித்து, தொடர்பொன்றுமில்லாராய்ப் புறப்பட்டனர். அக்காலத்திலவர்திருமேனிமேலாடைகழன்றிருந்தமைபுழுனைர்ந்திலர். அதுகண்டு அவர் மனைவியார் சிவகலையம்மையார் சென்றுவணங்கியெம்பெருமானே! அடியைமக்குத்தேவரீரைவிட்டோர் கதியில்லையே! அடியேனும்முடன் வருகின்றேன் என்றுபணிந்துகூற, பெண்ணே! யாவர்க்குங் கதியாவார் சிவபெருமானர். ஆயினும் யான் குருபரன்றிருவாணைவழிநிற்பேனையினேன், இனி இவ்வுலகமுயற்சியில் உழல்வேனல்லேன், நீயோ! என்னோடு தொடர்ந்துவருமாற்றலில்லாதவளாதலால் சிவநேசம் அடியார்நேசமறவாமல் இங்கிருந்து திருவடியடைதி. என்னுரை மறுப்பதுன்கடனல்லவென்றுசொல்லி அவளைநிறுத்தி, எதிலர்போற் சென்று ஊர்ப்பொதுமண்டபமடைந்திருந்தார். அப்போது, அவ்வூரிலுள்ள முதியோர், நட்பினர், சுற்றத்தினர், அயலவர்முதலியயாவரு மிச்செய்தியறிந்துவந்துகூடி அவரைக் கண்டு, ஐயரே! என்செய்தீர், நீர் எங்கள் முதலியல்லீரோ? என்னகுறையுள்ளதென்றிப் பரதேசிகோலங்கொண்டீர்? இனி எமக்கு ஆதரவாவார் யாவர் என்றிரங்கினர். அதுகேட்டு வெண்காட்டையர் அவர்களைச்சுட்டி நோக்காமே பராமுகமாக நோக்கித் திருவருளைச் சிந்தித்து,

மனையாளுமக்களும்வாழ்வுந்தனமுந்தன்வாசன்மட்டே
யினமானசுற்றமயானமட்டேவழிக்கேதுதுணை
தினையாமளவெள்ளளவாகினுமுன்புசெய்ததவந்
தனையாளவென்றும்பரலோகஞ்சித்திக்குஞ்சத்தியமே.
அத்தமும்வாழ்வுமகத்துமட்டேவிழியம்பொழுகம்
மெத்தியமாதரும்வீதிமட்டேவிம்மிவிம்மியிரு
கைத்தலமேல்வைத்தழுமைந்தருஞ்சுடுகாடுமட்டே
பற்றித்தொடருமிருவினைப்புண்ணியபாவமுமே.
எரியெனக்கென்னும்புழுவோவெனக்கென்னுமிந்தமண்ணுஞ்
சரியெனக்கென்னும்பருந்தோவெனக்கெனுந்தான்புசிக்க
நரியெனக்கென்னும்புன்னுயெனக்கென்னுமிந்நாறுடலைப்
பிரியமுடன்வளர்த்தேதனிதலுலென்னபேறெனக்கே.

அண்ணறன்வீ தியரசிருப்பாகுமணிபடையோர்
நண்ணெருநாலொன்பதாமவரேவலுநண்ணுமிவ்வூர்
துண்ணென்பசிக்குமடைப்பள்ளியானசுகமுமெல்லா
மெண்ணிலிகாலமவமேவிடுத்தனமெண்ணரிதே.

என்று நிலையாமையைப்பற்றிக்கூறிப்பின் தமது நெஞ்சைமுன்னிலை யாக்கி அவர்களுக்கு முன்னிலைப்புற மொழியாக,

மாடுண்டுகன்றுண்டுமக்களுண்டென்றுமகிழ்வதெல்லாம்
கேடுண்டெனும்படிகேட்டுவிட்டோமினிக்கேண்மனமே
யோடுண்டுகந்தையுண்டுள்ளெயெழுத்தைந்துமோதவுண்டு
தோடுண்டகண்டனடியார்நமக்குத்துணையுமுண்டே.

ஆறுண்டுதாப்புண்டணிவீதியம்பலந்தானுமுண்டு
நீறுண்டுகந்தைதெருங்கோவணமுண்டுநித்தநித்த
மாறுண்டுலாவிமயங்குநெஞ்சேமனதாறுஞ்சென்று
சோறுண்டுதூங்கிப்பின்சும்மாவிருக்கச்சுகமுமுண்டே.

உடுக்கக்கவிக்கக்குளிர்காற்றுவெய்யிலுடங்கிவந்தாற்
றடுக்கப்பழையவொருசேவட்டியுண்டுசகமுழுதும்
படுக்கப்புறந்திண்ணையெங்கெங்குமுண்டுபசித்துவந்தாற்
கொடுக்கச்சிவனுண்டுநெஞ்சேநமக்குக்குறைவில்லையே.

நாட்டமென்றேறியிருசற்குருபாதத்தைநம்புமொம்ம
லாட்டமென்றேறியிருபொல்லாவுடலையடர்ந்தசந்தைக்
கூட்டமென்றேறியிருசுற்றத்தைவாழ்வைக்குடங்கவிழ்நீ
ரோட்டமென்றேறியிருநெஞ்சேயுனக்குபதேசமிதே.

ஒன்றென்றிருதெய்வமுண்டென்றிருவுயர்செல்வமெல்லா
மன்றென்றிருபசித்தோர்முகம்பார்ஈல்லறமுநட்பு
நன்றென்றிருநடுநீங்காமலேநமக்கிட்டபடி
யென்றென்றிருமனமேயுனக்கேயுபதேசமிதே.

என்று பெறத்தக்க தின்னதென உறுதியைக்கூறியபின் முன்னிலைப் படுத்தி,

ஊரீருமக்கேகாருபதேசங்கேளுமுடம்படங்கப்
போரீர்சமனைக்கழுவேற்றுநீற்றைப்புறந்திண்ணையிற்
சாரீரனந்தலைச்சுற்றத்தைதீங்கிச்சகநகைக்க
வேரீருமக்கவர்தாமெதருவரிணையடியே.

கண்ணுண்டுகாணக்கருத்துண்டுநோக்கக்கசிந்துருகிப்
பண்ணுண்டுபாடச்செவிபுண்டுகேட்கப்பல்பச்சிலையா
லெண்ணுண்டுசாத்தவெதிர்நிற்கவீசனிருக்கையிலே
மண்ணுண்டுபோகுதையோகெடுவீரிந்தமானிடமே.

என்ற திருப்பாடல்களை இசைதாடசமாகவருளிச்செய்து, வேறு வாய் பேசாதுமௌனத்திருந்தனர் இவ்வாறு இவர் கூறியதைக்கேட்டவர்கள் வெருவி நாணமுற்று இந்நிலையாம்பெறுவதுகிடக்க, உளைவதும் அருமையென்றுளங்கூசிச் சென்றனர்.

அரசன் சேந்தனைச் சிறைசெய்ததும்
திருவெண்காடரைக்கண்டதும்.

அப்பால் இவர் துறவுபூண்டதும் இவரது செல்வமுற்றும் ஊர்க் கூறைகொள்ளவிடப்பட்டதுங் கேள்வியுற்ற, அந்நாட்டரசன்வந்து நிதியறைகொள்ளையாகாத வண்ணந்தடுத்து, திருவெண்காட்டடிகள் தமக்கை மைந்தரைத் தருவித்து இவருரிமைமுதலியன கொடுத்தங்கு இருக்கச்செய்து, முறைப்படியக் குடும்பப்பாதுகாப்பினுக்குவேண்டும் பொருள் தவிர வேனையவற்றைத் தனது பண்டாரத்துச் சேர்ப்பித்துத் தருமசாலை முதலியவற்றிற் குபயோகிக்கக் கட்டளையிட்டான்.

அப்போது, திருவெண்காட்டடிகள் நண்பருந்தலைமைக்காரியக் காரருமாயிருந்த சேந்தனது உண்மைநிலைமையை அறியாது அவ்வரசன் அவனைநோக்கிச் சேந்தனே! நமது திருவெண்காடர் செல்வமளவை கடந்தனவென்று பலருஞ்சொல்லக் கேள்வியுற்றிருக்கின்றோமாகையா லின்னுமெங்கெங்குள்ளதினக் கேட்கச் சேர்ந்தனர் அரசனைநோக்கி, மஹாராஜனே! அவர் நிதியுள்ளனமுழுவதும் காட்டிவிட்டேனுக, இனியொன்றுமறியேனென்று கூற, இறைமகன் அவர் சொல்லில் ஐயங்கொண்டவனுய்த் தன் பரிசனர்களைநோக்கி இவர் உண்மைகூறி வெண்காடர் நிதிநிலைகளையெமக்குக் காட்டும்வரையில் இவரைச் சிறைசெய்மின் என்று கட்டளையிட்டுத் தவத்தைதந் தளை செய்தாற்போலுந் தளைசெய்து சிறையிலிட்டு, இவர்காணியிடம் பொருள்முழுவதும் வெண்காடர் பொருளென்று கவர்ந்தான். சேந்தனரோ சிவம் பழுத்த நெஞ்சத்துப் பத்திவடிவினர்; யாதோர்வஞ்சமுமறியாதவர். ஆயினும் அவர்க்கித்துன்பநேர்ந்த காரணம், வெண்காடராகிய அவர் ஆசிரியர் தம்பொருளைச் சூறையிடப்பணித்தகாலையில் அறத்தின்வழியே அரிதிற்றேடிய விப்பொருளுஞ் சூறையிடற்பாலதேவனென்று நெஞ்சிலெண்ணினர். இங்ஙனம் குருவாக்கியத்தின்மேல்

விச்சரம்பிறந்தகுற்றம் இவ்வாறு துன்பவினைவுக்கேதுவாயிற்று: உடனே அச்சேந்தனர் மனைவியார் அரசன் கோன்முறைக்கஞ்சித் தமதுனே ஓரேபோகிய ஆண்மகவினையெடுத்துக்கொண்டு வேற்றூரிற்சென்று கற்புநிலைதவறாது கூலிவேலையாற் சீவனஞ்செய்திருந்தனர். இஃதிங்ஙனமிருக்க.

அரசன் பின்பு திருவெண்காட்டுப்பெருந்தகையாரைக் காணவேண்டிவந்து வளர்ப்பொதுமண்டபமடைந்து அங்கு சிவஞான நிட்டையில் வீற்றிருக்கும் எமது வெண்காட்டடிகளைநோக்கி, ஐயரே! நீர் இப்பரதேசி கோலங்கொண்டடைந்த விசேடப்பேறென்னையென்று வினவ; அக்கோமகனை நோக்கி "நீர்நிற்க நாமிருக்க" என்றார். அது கேட்ட வேந்தன், நாணமுற்றுச்சென்றான்.

சிவயோகசார்தனையிலிருத்தல்.

அப்பால் அடிகளாரும் பசிவந்தபோது வளிற்சென்றிருகைபேற்றுண்டு தமது நாட்டமுழுவதும் சிவனடிக்கண்ணதாக மற்றுபாடின்றி நின்று சிவயோகசமாதியில் சகசவனுபவம் பிறக்க, யாதாருபொருனின்று சிவயோகசமாதியில் சகசவனுபவம் பிறக்க, யாதாருபொருளினும் பற்று விடுதி பிரண்டுமற்ற திறமே மனவியாகவும், பலவுயிர்கணும் மைந்தராகவும், சிவனடியவர்களை சுற்றத்தினராகவும், அறியாமையே பகையாகவும், அன்பொருள்களாகவும், அருளையிடமாகவும், தத்துவங்களேயேவலாக்வும், சாந்தமேசார்பாகவும், தவமேமுயற்சியாகவும், தன்னிழப்பே போகமாக்வும், பிச்சையூணும் நிலைபாடலுங்கொண்டு நிரதிசயானந்தத்திருந்தனர்.

இந்நிலைமை யறியாத அவ்வூர் வாழ்கின்ற விவர்சுற்றத்தினர் இவரது பிச்சையூணும் புறந்திண்ணைக் கிடக்கையுங்கண்டு, இவர்செய்கையால் தம் மரபுக்குத்தாழ்வு நேர்ந்ததாக வெண்ணி, அவ்வூரிற் பிச்சையிடாவண்ணம் தடைசெய்தனர். அப்போது, பட்டினத்தடிகளிவர்க்கு எரிடத்திரக்கமுற்று உண்மையறிவுண்டாம்படி பசுமேய்க்குஞ் சிறுவிருடனையும், குப்பைமேற் புரண்டும், தறுநிலத்திற் றமது காலிற் பழுதைசுற்றிப்பற்றியீர்க்கும்படி சிறுவரையேவியும், பிச்சரென நாட்டவர் பழித்துரைக்கும்படி "குடியிருந்த மனைக்குக் கொள்ளிவைப்போம்" என்று சொல்லிச் சரித்தும்வந்தனர்.

திருவெண்காடருக்குத் தமக்கையார் நஞ்சிட்டதும், ஊர்பற்றியெறிந்ததும், தணித்ததும், திருவெண்காடு சேர்ந்ததும்.

அதுகண் டவர்முன்பிறந்தார் மானம்பொருதவராய் இவரிறக்கினு நன்றுமெனக்கருதி விடங்கலந்த ஓட்டப்பஞ்சணைத்து இவருண்

ணக்கொடுப்பித்தனர். அதனைத் திருவெண்காடர்திருவருளாலறிந்து, "தன்வினைதன்னைச் சுடும் ஓட்டப்ப மூட்டைச்சுடும்" என்று சொல்லி அத்தமக்கையார் வாழ் மனையிறப்பிற்செருகலும் தீப்பற்றியொருவராலுந் தணிக்கமுடியாது பிராணிகட்குஞ்சேதம்வராதபடி *யூர்முற்றுஞ்சுட்டது. அதுகண்ட யாவரும் அஞ்சிப்பட்டினத்தடிகள் திருவடிகளை வணங்கி முறையிட, இரக்கமுற்று அத்தியினைத் (தங்களைக்கேட்டுப் பிறந்திறந்திலம்) என்னும் செய்யுளைப்பாடித் தணித்தருளித் திருவெண்காட்டை யடைந்து சிவபெருமானைத் தரிசித்து (விளக்கினை வையமுய்ய) என்றது முதலிய பலதமிழ்ச் செம்பாடல்பாடிபலியேற்றுண்டு அங்கு "குடியிருந்தமனைக்குக் கொள்ளிவைக்கவேண்டும்" என்றுசொல்லி எழுந்தருளி யிருந்தனர்.

திருவெண்காடர் தாயார்க்குத்தகனகிரியைசெய்தது.

அங்ஙன மிருக்கையில் காவிரிப்பூம் பட்டினத்தில் இவருடைய அன்னையார் வாழ்நாள் குறுகித் தேகவியோகமுற்றனராக. சுற்றத்தினர் வழக்கப்படி யீமக்கடன் கழிக்க மயானத்திற் சேர்த்தனர். திருவெண்காட்டிருந்த பட்டினத்தடிகள் அதனைத்திருவருளாணையாலுணர்ந்து பெருமான் கட்டளைப்படி தாம் தம்முடைய அன்னைக்குச் சொல்லிய வண்ண முடிக்கவெண்ணிப் புறப்பட்டுவந்து காவிரிப்பூம்பட்டினத்து மயானவெல்லை யடைந்தவளவில் சுற்றத்தினர் வெருண்டோதுங்கவே தாம் அருகுசென்று, அவர்களடக்கிவைத்த சிதையைத் தள்ளிவாழைப்பட்டையாற் சிதையடுக்கி அதன்மேலன்னையைக் கிடத்தி,

வெண்பா.

ஐயிரண்டுதிங்களாவங்கமெலாநொந்துபெற்று
பையலென்றபோதேதபரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்திலேந்திக்கனகமுலைதந்தாளை
யெப்பிறப்பிற்காண்பேனினி. (க)

மூந்தித்தவங்கிடந்துமூந்நூறுநாட்சுமந்தே
யந்திபகலாச்சிவனையாதரித்துத்—தொந்தி
சரியச்சுமந்துபெற்றதாயார்தமக்கோ
வெரியத்தழன்மூட்டுவேன். (உ)

---

* இவ்வூருக்குச் சிவபுரமெனப் பெயர். இது திருவிடைமருதூருக்கு 2 அல்லது 3 மைல் தூரத்திலுள்ளது. நாலாக்கும் பாழடைந்திருக்கிறது.

வட்டிலி லுந்தொட்டிலி லுமார்மே லுந்தாண்மே லுங்
கட்டிலி லும்வைத்தென்னைக்காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக்காப்பாற்றிச்சீராட்டுந்தாய்க்கோ
விறகிலிட்டுத்தீமூட்டுவேன். (கூ)

நொந்துசுமந்துபெற்றுநோவாமலேந்திழுலை
தந்துணர்த்தெடுத்துத்தாழாமே—யந்திபகல்
கையிலேகொண்டென்னைக்காப்பாற்றுந்தாய்தனக்கோ
மெய்யிலேதீமூட்டுவேன். (சி)

அரிசியோநானிடுவேனுத்தாடனக்கு
வரிசையிட்டுப்பார்த்துமகிழாம—லுருசியுள்ள
தேனேயமிர்தமேசெல்வத்திரவியபு
மானேயெனவழைத்தவாய்க்கு. (ஞ)

அள்ளியிடுவதரிசியோதாய்தலேமேற்
கொள்ளிதனைவைப்பேனேகூசாமன்—மெள்ள
முகமேன்முகம்வைத்துமுத்தாடியென்றன்
மகனேயெனவழைத்தவாய்க்கு. (ரு)

விருத்தம்.

முன்னையிட்டதீமுப்புறத்திலே
பின்னையிட்டதீதென்னிலங்கையி
லன்னையிட்டதியடிவயிற்றிலே
யானுமிட்டதீமூள்கமூள்கவே. (எ)

வெண்பா.

வேகுதேதியதனில்வெந்துபொடிசாம்ப
லாகுதேதபாவியேனையதோ—மாகத்
குருவிபறவாமற்கோதாட்டியென்னைக்
கருதிவளர்த்தெடுத்தகை. (அ)

வெந்தாளோசோணகிரிவித்தகாகின்பதத்தில்
வந்தாளோவென்னைமறந்தாளோ—சந்ததமு
முன்னையேநோக்கியுகந்துவரங்கிடந்துதன்
றன்னையேயீன்றெடுத்ததாய். (க)

வீற்றிருந்தானன்னவீதிதனிலிருந்தாள்
நேற்றிருந்தாளின்றுவெந்துநீறுளாள்—பாற்றெளிக்க
வெல்லீரும்வாருங்கனேதன்றிரங்காமல்
லெல்லாஞ்சிவமயமேமயாம். (கo)

என்ற செந்தமிழ் பாடி உலகர்போலச் சடாக்கினியாற் சுடாது தமது ஞாலக்கினியால் தகனஞ் செய்து, அவரைச் சிவனடி நீழல் கூடும்படி தியானசமாதியால் அந்தியேஷ்டி நிறைவேற்றி, அங்ஙனே புறப்பட்டார். புறப்பட்டவர்,

மென்றுவிழுங்கிவிடாய்கழிக்கநீர்தேட
லென்றுவிடுமெனக்கென்கோவே—நன்றி
கருதார்புரமூன்றுங்கட்டழலாற்செற்ற
மருதாவன்சந்நிதிக்கேவந்து.

என்ற திருவெண்பா வோதித் திருவிடை மருதூர் சென்றண்டந்தனர். அங்கே இவர் வரவுணர்ந்த சிவனடியர் எதிர்கொண்டு வணங்க, அவர்களைத் தாமும் வணங்கிப் பெருமான் றிருவாலயத்தை யடைந்து வலம் வந்து பன்முறை பணிந்து எதிர்நின்று மனமுருக அன்புபெருகி யுடல்குழைந்து என்பு நெக்குவிட்டு வியர்வெழுந்து, கண்ணீராறாக மடைதிறந்து பாய், நாத்தழுதழுக்க வாபாரப்பாடுவாராய்,

"தெய்வத்தாமரைச்செவ்விதின்மலர்ந்து"

என்ற விணக்குறளாசிரிய முதலாக வெடுத்துத் திருமும்மணிக்கோவை பாடிப் புறம்போந்து மணிகடோறும் பலியேற்றுண்டு கோபுரத் திருவாயில் குடியாகக்கொண்டு சிவயோகசாதனையில் வீற்றிருந்தனர்.

திருவெண்காடர் திருவாரூரடைந்தது.

அப்பால் ஒருதினத்தில் இடைமருதுடையார் அவரது நனவில் அவ்வூர்க்காவலன்போற் றோன்றிப் புறந்திண்ணையிற் கிடக்கும் திருவெண்காடர்பால்வந்து கைக்கோலால் நிலத்தைத் தாக்கித் திருவடியாற்றீண்டியுணர்த்தி நீ யாரெனலும், அவர் ஊர் மெய்க்காவல! யாரவான் தோலோ, நரம்போ, தசையோ, உரோமமோ, எலும்போ, உதிரமோ, மூளையோ, மூச்சோ, மனமோ யாதாவறியேன், கலங்குறுகின்ற நெஞ்சக்கவலை யொழிதிறங்காணென் என்றனர். அங்ஙனே ஆளுடையபெருமான் மறைந்தருள, வந்தவர் இறைவரென்றுணர்ந்து ஆராமைமேற்கொண்டன்பாற் கரைந்துருகி யழுதுதொழுது அவர் நின்ற நிலத்து அடிச்சுவட்டினைக் கண்ணிணைற்றி மார்பணைத்துப் பொடி முடிக்கணிந்து பன்னிப்பரவியிருந்தார். இருப்பவர் ஒருநாள் நீர் விடாய்ப்பட்டெங்குங் குடிநீர்பெறாது மருதையரைப் பாடிப் பின் னிடம்பை பருவருத்துக் கரும்பிடுங் கழனியிலே யீர்க்கப்பண்ணி பலாப்புறவித்து ஓர் புறந்திண்ணையிற் படுத்துறங்கினர். அப்போது

மருதீசர் அவர் கனவிற்றோன்றி ஐய! வெண்காட! இனி நமது திருப் பதிகமோடாறுஞ் சென்று பாடுதியென்று கட்டளையிட்டருள, உடனே திருக்கண் விழித்து அக்கட்டளையுணர்ந்து உலகத்துயிர்கள் பிழைக் கும்வண்ணம் பலசமயப் பிணக்குகளற, அச்சமயபேதங்களையெல்லாம் ஆன்மாக்களுக்கு வினையளவாக வறிவூட்டி முடிவிற் பக்குவத்திலவ் வான்மாக்களைத் தரவேண்டிப் பெருமான் றமது ஆறு திருமுகத்து நின்றும் தோற்றுவித்தமையும், அவற்றின் முடிபும், பயனும்; விளங் கக்காட்டி மேலுண்மை யுபதேச நெறியையுமுணரப் பல தமிழ்ச்செம் பாடல்கள் பாடியருளி; மருதவன்னத்தையர் சந்நிதி யடைந்து பலகாலும் விழுந்து பணிந்தெழுந்து கோயில் வலங்கொண்டு புறத்தணைந் தன் பிறற் கரைந்துருகி யாடிப்பாடிப் பிரியா விடைகொண்டு புறப்பட்டுத் திருக்குடமூக்கு, கீழ்க்கோட்டம், காரோணம், நாகேச்சரம், குரங் காடுதுறை, மாயூரம், நனிபள்ளி, வலம்புரம், ஆக்கூர், கடவூர், தரும புரம், சிவபுரம், வாஞ்சியம், புகலூர், செங்காட்டங்குடி, மருகல் முத லிய திருப்பதிகளை வணங்கித் திருவாரூர்க்குச் சென்று அடியவர் எதிர்கொள்ள வணங்கி யுள்புக்குத் திருவீதி வலம்வந்து கோபுர வாயிலைப் பணிந்து பூங்கோயிலுடையாரையும் வீதிவிடங்கப் பெரு மானையும் பலகாற்றொழுது பாடிப் பிச்சையேற்று வீற்றிருந்தார்.

திருவாரூரில் இறந்தவனை யெழுப்பியது.

இங்ஙனம் அத்திருவாரூரி லிருக்கும்நாளிலே, மிகுந்த பத்திமா னை சிறுவனொருவன் பூர்வ புண்ணிய முடைமையால் எமது திரு வெண்காட்டடிகள்பால் பேரன்பும் பத்தியுஞ் செய்து காலந்தவறாது திருவழுது முதலியவற்றை யுபசரித்து இரவும் பகலும் பிரியாதெ தொண்டுசெய்துவருகையில், இச்சிறுவன் றுய்க்கொருமகனை, இவன் றந்தையோடு பிறந்த நல்லத்தையொருத்தி யொரே பெண்மகப் பே றுடையவளாய் வேறுதிக்கின்மையால் அப்பெண்ணை யிச்சிறுவனுக் கே கொடுத்துத் தமையன்குடியுந் தன்குடியும் விளங்கப் பண் வேண்டுமென்னுங் கருத்தினளாய் அவன் றுய்க்குணர்த்த, அவள் அதனை மகனுக்குணர்த்த அச்சிறுவ னதற்கிணங்காதுப் நிற்கக்கண்ட அவ்விருதுகுரத்தியரும் வருந்தித் தங்குறையைப் பட்டினத்துப் பிள்ளையார்பால் விண்ணப்பித்து வருந்துகையில், ஐயர் அவர்கள் றுறைப்பாட்டி னுக்கிரங்கி, மேல்நடக்குங் கருமங்கருதி யிச்சிறுவனை நோக்கி, ஐயா! நின் தாய் அத்தை யிவர்கள் குறைவை ஒழித்தி. இறைவன் றிருவருளாங்கா லுன்பாலாம். என் சொல்லைக் கடவாது கைப்பிடித்தி என்று கட்டளையிட்டருளினர். அதுகேட்ட அச்சிறு

வண் அஞ்சி, ஆளுடைய அடிகளை வணங்கி, எம்பெருமானீரே! தேவ ரீர் திருவடியைப் பிரியாது பணிசெய்து கிடக்கவெண்ணினேனுக்கு ஊழ்முறை பிங்ஙன மிருந்தபடி போலுந் தேவரீர் இவ்வாறு திருவுள் ளப்பாங்காய்க் கட்டளையிட்டதிறம் என்செயக்கடவேன். ஆயினும், எம்பெருமானே! தேவரீர், அங்ஙனம் மணம் புணருங்கால் வந்தருளி, ஆசீர்வதித் துய்யக்கொண்டருள்க வென்று வணங்கி விண்ணப்பித் தான. அடிகளும் அங்ஙனமாகவென்று அனுக்கிரகித்து விடைகொடுத் தனுப்பியருளினர்.

அங்ஙனே அவன்றாயும் அத்தையும் களிப்போடும் அழைத்துச் சென்று நன்னாள் குறித்து மணம் புரிவித்தனர். அம்மணப்பந்தலிலே, பட்டினத்தடிகளுஞ் சென்று, அவன் கருதியவாறு வாழ்த்தி, அவ் வாழ்த்திலே மேலவன் உறுவதுங் கூறுவாராய்,

"நாப்பிளக்கப்பொய்புரைத்துநவநிதியந்தேடி-
நலமென்றுமறியாதநாரியரைக்கூடிப்
பூப்பிளக்கப்பொய்புரைத்துப்புற்றீசல்போலப்
புலபுலெனக்கலகலெனப்புதல்வர்களைப்பெறுவீர்
காப்பதற்கும்வகையறியீர்கைவிடவுமாட்டீர்
கவர்பிளந்தமரத்துளையிற்காலுழைத்துக்கொண்டீர்
ஆப்பதனையசைத்துவிட்டகுரங்கதனைப்போல
அகப்பட்டீர்கிடந்துழலவகப்பட்டீரே."

என்கிற செய்யுளைக் கூறிச் சேஷையிட்டு ஆசீர்வதித்து இச்சைவழி சென்றனர்.

அப்பால் அவ்விடலை மனைவியோடு கூடிவாழ்ந் திருக்கையில், சின்னாள் கழியலும், ஊழ்வினை துரப்ப ஓர்நாள் எண்ணெயிட்டு நீராடி யன்றிரவில் காமங்கைமிக்கு மனைவியோடு புணர்ந்தனரை, சன்னிபா தங்கண்டு ஆயுள் முடிந்திறந்தான். இறத்தலும் அவன் மனைவி மாமி தாய் சுற்றம் அயலவரும் கூடிக் கடலென மறுகி யார்க்குஞ் சகியாத பேரழுகை செய்தனர்.

அத்தருணம், திருவருளிச்சைவழி புலாவும் எமது திருவெண் காட்டைபர் அவ்வீதி வழிவரலும் கண்டார் சிலர் ஓடிவந்து வணங்கி நின்று, எம்பெருமானே! தேவரீர்க்குப் பத்திப் பேரன்புசெய்து திரு வாக்கால் வாழ்த்துப் பெற்ற அடிமைச் சிறுவன் இன்று சன்னி பாத த்திலுல் இறந்தனன் என்றுகூறக் கேட்டுக்கொண்டே வந்தபோது, அவ்வழுகை யோசை செவிப்பட் டிரக்கமுற்று, அவனருகே செல்ல,

அங்கு இரங்குவார் யாவருடம் ஐயரைக் கண்டழுகை யொழித்து வணங்கி நின்றனராகவே அப்பிணமகனைக் கருணையாலோக்கி,

விருத்தம்.

வடிவந்தா னம்வாலிடம்மகளுந்தாயுமாமியும்
படிகொண்டாருலோகலபழிகொண்டாடனீதியோ
குடிவந்தானிமைழையோகுபவன்றுனுங்கூழையோ
நடுநின்றுனம்வீணேனுகரஞ்சூறையானதே.

என்கிற செய்யுளைப்பாடி யங்ஙனே தம்மை யாட்கொண்டார் பேரருணிலையை நாடி,

விருத்தம்.

மண்ணுமுருகுமாமுருகுமாயையுருகுமாலுருகும்
பெண்ணுமுருகுமாணுருகும்பேதாபேதவகையுருகும்
அண்ணலுருகுமிடத்தமர்ந்தவாத்தாருருகுமரவணையான்
எண்ணியுருகுங்குருநாதனென்பாலுரைத்தவோர்மொழியே.

என்ற திருப்பாடலைப் பாடியருளினர். அவ்வளவில் இறந்து கிடந்த பிணமகன் உயிர்பெற்றுத் துள்ளித் துடித்து உறங்கி விழித்த வனைப்போலெழுந்து வணங்கிநின்றனன். தேவர் பூமழை பொழிந்தனர். அந்தரதுந்துபி முழங்கிற்று. அடியவர் ஹரஹர முழக்கஞ்செய்தனர். அங்கு நின்ற சராசர வுயிர்களனைத்தும் ஆநந்த வெள்ளத்துண் மூழ்கின. பின்பு * உயிர்பெற்றெழுந்த காளை நடந்தவண்ண மொன்றும் அறியாதவனைப், பெருமான் திருவழுது செய்யக் காலந்தாழ்த்ததே என மனம் பதைத்து வருந்திநின்று, ஐயர் பிச்சை நிவேதனத்தைச் சித்தஞ் செய்வதற்கு முயலத் தொடங்கலும், கண்ட ஆண்டகையார் திருவுளங்கனிந்து,

---

* இது சிவஞானிக ளனுபவ நிலைமையை விளக்கிய படியாம் என்னை ? "துரியமலமீதுளதோர் சோதிவளநாடு, தோன்றுமதிலயர் நடஞ்செய்யு மணிவீடு, தெரியுமது கண்டவர்கள் காணிலுயிரோடு, சித்தாரெழுவரென்று, கைத்தாளம்போடு" எனவும், "சொல்லாலளப் பரியசோதிவரைமீது, தூயதுரியப்பதியி னேயமறையோது, எல்லாஞ் செய்வல்லசித்தர்தம்மையுறும்போது, இறந்தாரெழுவரென்று புறந்தா னையுதுறு" எனவும் † என்னுடையார் கூறுதலாற்காண்கவென்க. எம்மை ஆளுடைய பிள்ளையார் திருமயிலையில் எலும்பைப் பெண்ணுக்கியபடி

† (திருவருட்பிரகாசவள்ளலாராகிய ஸ்ரீமத் சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள்).

வெண்பா.

எருவாய்க்கிருவிரன்மேலேறுபுழுக்கூட்டுக்
கருவாய்க்கேகண்கலக்கப்பட்டாய்—திருவாரூர்த்
தேரோடும்வீதியிலேசத்துக்கிட்டாதாயே
நீரோடுந்தாரைக்கேநீ.

என்று அருளி அச்சிறுவனுக்கு நல்லருள்செய்து அறிவுணர்த்தி வாழ்த்தி அவனை அங்கிருத்தி, அப்பால் எழுந்தருளுகையில், அவ்வூரி லுள்ளார் யாவரும் வந்துவணங்கி, எம்பெருமானே! அடியோங்க ளுய்யும்படி எங்களேழைமைத் தொண்டுகொண்டிங்கேதானே வீற் றிருந்தருள்கவென வேண்ட, அவர்கள் குறிப்பினை யுணர்ந்து,

வெண்பா.

வெட்டவெளியானவெளிக்குந்தெரியாது
கட்டளையுங்கைப்பணமுங்காணுதே—இட்டமுடன்
பற்றென்றுற்பற்றுதுபாவியேனெஞ்சிலவன்
இற்றெனவேவைத்தவினிப்பு.

யும், ஆளுடையப் நம்பிகள் புக்கொளியூர் அவிநாசியில் முதலையுண்ட பிள்ளையை மீட்டும் உய்ந்தெழுந்து வரச்செய்தபடியும் இதுவாம்: "கொல்லான்மை மேற்கொண்டொழுகுவான் வாழ்நாண்மேற், செல்லா தியிருண்ணுங் கூற்று" என்றதனுல் சாகாவித்தையின் சித்திநிலைமை யும் வழியுமிதுவென்றதாம். இக்கருத்து வேதாகம புராணதங்களா னும் தேவார திருவாசக முதலிய திருமுறைகளானும் வெளிப்படக் காண்க.

இன்னும், "அடியார்க்கெளியவரம்பலவாணரடிபணிந்தால்
மடியாமற்செல்வவரம்பெறலாம்வையமேழளந்த
நெடியோனும்வேதனுங்காணுதநித்தநிமலனருட்
குடிகாணுநாங்களவர்காணுமெங்கள்குலதெய்வமே.

பிறவாதிருக்கவரம்பெறல்வேண்டும்பிறந்துவிட்டா
லிறவாதிருக்கமருந்துண்டுகாணிதுவெப்படியோ
வறமார்புகழ்த்தில்லையம்பலவாணரடிக்கமல
மறவாதிருமனமேயதுகாணன்மருந்துனக்கே."

என இத்திருவெண்காட்டடிகளா ருடன்பட்டுக் கூறுதலாலும் இவரது ஐயிக்க நிலைமையின் வரலாற்றாலும் உணர்க.

என்றருளிச்செய்து, அவர்களை நிறுத்திவிட்டு அங்கு நின்றும் புறப்பட்டு வழியிற் கிடைத்த பலதிருப்பதிகளையுந் தரிசித்து வணங்கிப் பாண்டி நாட்டை யடைந்தார்.

திருவெண்காடர் பாண்டிநாடு சென்றது.

அங்கே மதுரைப் பெருங்கருற்றுத் திருவாலவா யுடையாரையும் அங்கயற்கண்ணம்மையாரையுந் தொழுது,

கட்டளைக்கலித்துறை.

விடப்படுமோவிப்பிரவஞ்சவாழ்க்கையைவிட்டுமனந்
திடப்படுமோநின்னருளின்றியேதினமேமயலைபக்
கடப்படுமோவற்பர்வாயிலிற்சென்றுகண்ணீர்துதும்பிப்
படப்படுமோசொக்கநாதாசௌந்தரபாண்டியனே.

என்றது முதலாகப் பலதமிழ்பாடி அங்கு சில பகல் வீற்றிருந்தருளினர். அப்பால் அந்நாட்டிலுள்ள திருப்பதிகளெல்லாஞ் சென்று உடையவரைக் கும்பிட்டு, மலைநாடு அடைந்து திருவஞ்சைக்கள முதலிய திருப்பதிகளைத் தரிசித்து ஆளுடையாரைப் பணிந்துபாடிக் கொங்கு நாட்டை யடைந்தார்.

திருவெண்காடர் கொங்குநாடு சென்றது.

அக்கொங்கில் பேரையூர், அவிநாசி, முருகன்பூண்டி முதலிய திருப்பதிகளிற் சென்று சிவபெருமானுரைத் தொழுது வாய்போசா மோனவிரதத்தோடு அங்கிருக்கையி லொர்நாள் அரையிருளில் வட வானலம்போலும் பசித்தீயெழுந்து வருத்த, பட்டினப் பெருந்தகை யார் சென்று, ஒரு மூர்க்கனை குடும்பியின் தலைவாயிலில் நின்று கைதட்ட அவன் இவரை அறியாது யாரோ காமக்கள்ளனென் றெண்ணித் தடிகொண்டோடிவந்து புடைத்துத் தீங்கிழைக்க, எம்மைபர் நின்றநிலைபெயராது "சிவசிவ"வென்றிருக்க, அடுத்த மனைப்புறந் தின் ணையிற்கிடந்த அம்மனைக் கிழவனுணர்ந் தோடிவந்து அம்மூர்க்கனை விலக்கி, எட ! பேதையே!! இவர் சிவயோகஞ் சிறந்த பெரியாரோ, எனித் தீங்கிழைத்தனை யென்று விலக்கி, நம்பெருமானை வணங்கி யழைத்துச்சென்று, திருவமுது படைத்துப் பசியாற்றுவித்து உபசரித்தனன். அப்போது அடிகளார் திருவருள் நினைத்து,

பூணுமம்பணிக்கல்லபொன்னுக்குத்தானல்லபூமிதனைக்
காணுமம்படிக்கல்லமங்கையர்க்கல்லநற்காட்சிக்கல்ல

சேணுங்கடந்தசிவனடிக்கல்லவென்சிந்தைதெகட்டுச்
சாணும்வளர்க்கவடியேன்படுந்துயர்சற்றல்லவே.

என்றுசொல்லி, உடனே

இருக்குமிடந்தேடியென்பசிக்கேயன்ன
மூருக்கமுடன்கொண்டுவந்தாலுண்பேன்—பெருக்க
வழைத்தாலும்போகனரேனயென்றேக
மினைத்தாலும்போகனினி.

என்கிற வெண்பாவைப் பாடி, அங்கிருந்து புறப்பட்டுத் தருவம்புக்குக் கோகரணம் பணிந்துபோய், உஞ்சேனமாகாளம் அடைந்து, மாகாளேச்சுரரைப் பணிந்து நகரடுத்த சிறுபுறங்காட்டிலுள்ள தேர் கணபதியாலய மடைந்து பரஞான நிட்டையில் வீற்றிருந்தருளினர்.

கழுமரம்பற்றி யெரிந்தது.

அங்ஙனமிருக்க, அந்நகரத்தையாளும் பத்திரகிரி மகாராஜன் இருவினையொப்பு மலபரிபாகமும் உத்தமசத்தினி பாதமும் வாய்த்து அதிதீவரபக்குவராயிருந்ததால் அவரைத் தேற்றச் சிவனருள் புரிந்தமையின், அவர் அரண்மனையில் களவு செய்யும்படி ஓரிச்சையுண்டாகச் சில கள்ளர் ஒருங்கு கூடிவந்து அக்குறுங் காட்டிலுள்ள கணபதி சந்நிதியை யடைந்து தங்களுக்குக் களவு வாய்க்கவென்று பிரார்த்தித்துச் சென்று பட்டணத்தைச் சேர்ந்து சோர்வுகாலம் பார்த்து அரண்மனையி னுட்புகுந்து தங்கள் ஆசை தணியுமட்டும்வேந்தன் கருவூலத்து நிதிக்குவைகளையும் மணிபூண் வகைகளையும் வாரிச்சுமைசெய்து எடுத்துச் செல்லுகையில் பிரார்த்தனை பலிக்கச்செய்த மூத்த பிள்ளையார் ஞாபகம்வரவே ஓடி, சந்நிதியடைந்து தங்களுக்குக் கிடைத்த களவுப் பொருளில் விலையுயர்ந்தரத்நாதி பதக்கமெடுத்து விநாயகர்க்குச் சாத்திச் செல்வுழிச் சென்றார்கள். அது இருட்போ தாகையால் அவ்விலையுயராரம் அவ்வேகதந்தப் பெருமான் றிருக்கண்டமணியாது தவறி அருகே சிவயோக சாதனையில் வீற்றிருந்த எம் பட்டினத்தையர் திருக்கழுத் தணிந்தது இஃதிங்ஙனமிருக்க.

அங்கே அரசன் அரண்மனையிற் கருவூலத்துக் களவுபோன செய்தி வெளிப்படலும், அவ்வேவந்தன் பரிவாரங்களும், காவன்மாக்களும் வெளிப்பட்டு அந்நகரமுற்றும் புறவிடம்பலவுந் தேடிச் செல்லுகையில் வேற்றேரடிச்சுவடு வெளிப்பட வச்சுவடுபற்றிச் சென்று குறுங்காட்டிட் புகுந்து நாடிவந்து அப்பிள்ளையார் கோயிலை யடைந்தனர். அவ்வளவில் வைகறையாய் நிலந்தெளிந்துவர அருணோதய

மாகவே, சிவயோகத்தில் வீற்றிருந்த பட்டினத்தையரையும், அவர் கழுத்தில் ஓளிவிடும் அரதனவாரத்தினையும் கண்ட அப்பார் மன்னன் படார்கள் பதைத்தோடி யெம்மிடருமாணைக் கள்ளருளொர்ருவனென்று பற்றியீர்த்தலைத்துத் தமக்குத் தோன்றியபடியெல்லாம் துன்புறுத்து வாராயினர்.

அப்போது, நம்மையர் சமாதிவிட்டுக் கண்விழித்து விளைவொன்று மறியாராதலிற் காலபடர்போன்ற இராஜகிங்கரர் அலைக்குந்தோறும் தடுத்தல் முதலிய முயற்சியொன்றும் புரியாது வேறென்று முரையாது, "சிவசிவ" வென்று அருள்கருதி உண்முகமேனைக்கி நின்றனர். நிற்கவே, அவ்விறைமகன் பரிசனருட் சிலர் இவன்பெருமாயக்கள்ளனென்றார்கள். சிலர் அக்கள்ளரிற்றலைவன், இன்னும் நம்மரசரணைத்தற்றம் நோக்கிக் கொள்ளைகொள்ள வந்சகநடிப்புப்பூண்டுள்ளான் என்றார்கள். சிலர் அப்படியல்ல களிமயக்காற் றனித்தனன்போலும் என்றார்கள். சிலர்நமது நல்லூழ்வினை மயங்கச்செய்து இங்கு கிடைக்கப்பண்ணிற்று, இல்லையேல் இக்கள்ளரை நாம் எங்கு கண்டு தேடிப் பிடிப்போம், பிடியாவிட்டால் நம்மிறைவன் கொடுந்தண்டம் புரியுமே என்றார்கள். சிலர் பித்தரேறுவென்றார்கள். சிலர் எட! வாய்பேசாது மூகையாயுற்றனை? நுங்குழுவார் எனையர்பாண்டிற்றனர்? மற்றையபொருண்முற்று மென்னவாயிற்று? கூறிலுலன்றி நீயுயிர் பிழைத்தலரிதாம் என்றார்கள். இவ்வளவுஆரவாரத்திற்குடன் சித்தவிகற்பங்கலக்கமொன்றுமின்றிச் "சிவசிவ" என்றேறநிற்கு நிலையைக்கண்ட அக்காவன்மாக்களுட் சிலர் உற்று நோக்கித் துன்புறுத்தும் மற்றையரைத் தடுத்து, இவர் கள்ளரல்லர் சிவஞானச் செல்வமுடையப பெரியர்போலும் இருக்கின்றனர். கள்ளராலுல் இந்தராஜயோக்கியமான கண்டாபரணம்பூண்டு இவ்வளவு நகர் சமீபமான விடத்தில் நமது கையிற் கிடைக்கவிருப்பரோ? அன்றியும் நாம் ஈர்த்தலைத்துச் செய்யுமிப்பெருந் துன்பங்களுக்குச் சிறிதாயினும் முகச்சருருக்கும் துன்பத்துய்ப்பு மின்றிக்களிமுகத்தினராய்ச் "சிவசிவ" என்று உண்ணேணைக்கி நிற்றல் கூடுமோ? களிமயக்கின ரென்பதற்குச் சிறிதுமிடனில்லை. பித்தரே எனில் பித்துடையார் தேகவியலொன்றுமில்லை. ஆதலால் உண்மை தேற விசாரித்து அறியாது, நாம் கொடுமைசெய்தால் பழிபாவம் ஆவதன்றி இன்னும் என்ன வினையுமோ? எல்லாம் அரசனுக்கறிவித்துக் கட்டளைப்படி நட்டப்பதே நலம் என்றார்கள்.

இங்ஙனம் இங்கே நிகழுகையில், முன்னம் ஐயரைக்கண்ட வளவிலே சிலமூர்க்கச் சேவகர்களோடோடி அரசனைக்கண்டு வணங்கி,

எம்மிறைவ! நமது வைப்பறையைச் சூறையாடிய கள்வர்கள் தலைவன் ஊர்ப்புறத்துக் குறுங்காட்டிலுள்ள விநாயகர் கோயிலிற் கிடைத்தனன். அவனைக் கழுவேற்றி லொழிய வேனையர் கிடைப்பது மரிது. இன்னும் நமது பண்டாரமும் முற்றக்கொள்ளையாம். ஆகவே விரைவிற் கட்டளை தருகவென்று பதைத்தார்கள். அவ்வளவில் அரசன் நல்வினைப் பரிபாகமுடையனுதலின், நெஞ்சத்தோர் கலக்கந்தான்றி மயங்கி நிற்கக்கண்ட கிங்கர், கோமகன் மயங்கும் காரணம் யாது நஞ்சொல்லிலே நம்பிக்கை யில்லேபோலும் என்று எண்ணி, எம்முடையாய்! நாங்கள் பழிக்கிடமாம்படி ஆணைக்கஞ்சி வேற்றுளைப் பிடித்து வந்தபடியன்று, அக்கள்ளனிடத்தில் இன்றிரவிற் களவுபோன இராஜயோக்கியமான கண்டாபரணமொன்று இருக்கக்கண்டே பிடித்தனம். ஆதலின் வேறு ஆராய்ச்சிக் கடனில்லை. தண்டனைக்கே கட்டளையிட வேண்டும். அக்கள்வன் மாட்டிருந்த ஹாரமிதுவென்று தந்து காட்டினர்.

ஆகவே அரசனுத்தமாயினும் அனுக்கிரகசத்தி பதிவதன்முன் திரோதை பதிதல் முறைமையாதலால் அத்திரோதைசத்தி வசத்தினராய் மயங்கிக் கழுவேற்றக் கட்டளையிட்டார். அக்கட்டளையை யவர்கள் தந்து ஏனையர்க்குத் தெரிவித்தலும், அடிகள் பக்கல் காவலாளராய் விசாரித்திருந்த மற்றையர் மனமொவ்வாதிருக்கவும் இறைமகனைக் கஞ்சி, ஐயரைக் கழுமரத்துக் கருகணைத்துச் சென்றனர். செல்லலும் ஐயர் கண்டு புன்னகையோடு மேலே நோக்கி,

"என்செயலாவதியாதொன்றுமில்லையினித்தெய்வமே
உன்செயலேயென்றுணரப்பெற்றேனிந்தவூனெடுத்த
பின்செய்ததீவினையாதொன்றுமில்லைபிறப்பதற்கு
முன்செய்ததீவினையோவிங்ஙனேவந்துமூண்டதுவே."

என்ற திருப்பாடலை யருளிச்செய்தனர். அங்ஙனே கழுமரம் பற்றியெரிந்துவிட்டது. அவ்வளவில் அங்கிருந்த வரசன் பரிவாரத்தினர் கண்டு பயந்தோடி அரசனுக்கு நடந்த விவரங்களை விண்ணப்பித்தலும், இறைமகன் திடுக்கிட்டு ஒன்றுந் தோன்றுதவராய் அச்சமேற்கொண்டு தம்மையறியாத அன்பும் ஆசையும் பிடரி பிடித்துந்த, என்னை யாளுடைய ஆரியமணியோ வந்தருளிய தென்று நின்ற நிலையிலே பாதசாரியாகவே யோடிவந்து, பற்றியெரியுங் கழுமரத் தண்டையில் நிற்கும் தவப்பெருமலையாகிய வெமது வெண்காட்டடிகளைத் தரிசித்துக் கண்பெற்ற பேறு பெற்றவராய் இவ்வுலகினை முற்றும் மறந்தனர்.

பத்திரகிரியார் திருவருள்பெற்றது.

அங்ஙனம் தமையிழந்து நின்ற அரச சிகாமணியாகிய பத்திரகிரியார் சிறிதுணர்ச்சி கூடவே யடியற்ற பனைபோல விழுந்து பலமுறை வணங்கி நின்று எம்பெருமானே! அடியேனறியாமையால் திருமேனி மிக வருத்தமுற்றதுபோலும். பாதகனேன் என்செயக் கடவேன்! என்செயக் கடவேன்!! தேற்றவிசாரியாத பாவியேன் என்று ஆராமையால் வருந்துகையில், திருவெண்காட்டடிகள் கருணை மீதூர்ந்து கடைக்கணித்து நோக்காது நோக்கி அருள்பதிந் தவருளத்துச் சிவம் விளங்கத் தத்துவ நியதிசெய்து,

"நாய்க்கொருசூலுமதற்கோர்மருத்துவநாட்டிலுண்டோ
பேய்க்கொருஞானம்பிடிபடுமோபெருங்காஞ்சிரங்கா
யாக்குவாராதருந்துவாராதுபோலுடம்பு
தீக்கிரையாவதல்லாலேதுக்காமிதைச்செப்புமினே."

"மானுர்விழியைக்கடந்தேதறிவந்தனன்வாழ்குருவுங்
கோனுகியென்னைக்குடியேற்றிக்கொண்டனன்குற்றமில்லை
போனலும்போறிருந்தாலுநற்போறிதுபொய்யன்றுகா
ணானலுமிந்தவுடம்போடிருப்பதருவருப்பே."

என்ற திருப்பாடலைச் சொல்லியவளவிலே ஐயரைப் பூட்டியிருந்த தளைகள் தெறித்துவிழுந்தன. பின்பு அவர்க்குறுதி கூறும்படி

அஞ்சக்காரமென்னுங்கோடாவிகொண்டிந்தவைம்புலனும்
வஞ்சப்புலக்கட்டைவேரறவாட்டிவளங்கள்செய்து
விஞ்சத்திருத்திச்சதாசிவமென்கின்றவித்தையிட்டுப்
புஞ்சக்களைபறித்தேதன்வளர்த்தேதன்சிவபோகத்தையே.

என்ற திருப்பாட்டை யருளிச்செய்தார். உடனே அரசர்க்கரசான பத்திரகிரியார் நெஞ்சு தெளிவுற்றுத் துணிவுண்டாய் விரத்தி பிறத்தலும், அந்நின்ற நிலையிற்றானே அரசகோல முழுவதுமாற்றி, சூழ விருந்த அரசசுற்றம் பரிவாரமொன்றனையும் பின் றிரும்பிப்பாராது, திருவெண்காட்டடிகள் திருவடியி லடியற்ற பனைபோல் விழுந்து பற்றிக்கொண்டு, எம்பெருமானே! திருவடிக்குத் தவறிழைத்த அபராதியாகிப் பெரும்பழிசுமந்த வென்னை உய்யக்கொண் டருள்கவென்று கண்ணீருங் கம்பலையுமாகக்கலுழ்ந்து குறையிரந்து நின்றார். நிற்றலும் ஐயர்,

ஓங்காரமாய்நின்றவத்துவிலேயொருவித்துவந்து
பூங்காய்முளைத்தபயனறிந்தாற்பதிலுலகு

நீங்காமனீங்கிநிறையாநிறைந்துநிறைபுருவா
யாங்காரமானவர்க்கெட்டாக்கனிவந்தமர்ந்திடுமே.

என்று அருளிச்செய்து, பாவனைத்தீக்கையால் அவருளத்துச் சிவ யோக வனுபவ நிலைபதிய வனுக்கிரகித்து, அவரை நோக்கித் திருவிடைமருதூருக்குச் செல்க என்றருளிச்செய்து, அங்கு நின்றும் புறப்பட்டு விந்தம், காசி, கேதாரம் முதலிய வடதிசைத் திருப்பதிகளை வணங்கி ஸ்ரீசைலமடைந்து ஆலருண்டையாரைப் பணிந்து பாடி சிலநாள் எங்கிருந்து புறப்பட்டு மறுபடியும் மேல்கடற் கரையாகவே வந்து கொங்குட் புகுந்து பாண்டி நாடடைந்து திருக்குற்றாலம் பணிந்து,

திருக்குற்றாலம் - வெண்பா.

காலன்வருமுன்னேகண்பஞ்சடைமுன்னே
பாலுண்கடைவாய்படுமுன்னே—மேல்விழுந்தே
யுற்றாரழுமுன்னேயூரார்சுடுமுன்னே
குற்றாலத்தானேயேகூறு.

என்றது முதலிய பல திருப்பாடல்களைப் பாடி இராமேச்சுரம் வேதாரணிய முதலிய திருப்பதிகளை வணங்கி, மறுபடியுந் திருவிடைமருதூரை வந்தடைந்து மருதவாணரைப் பணிந்து கீழைக் கோபுரவாயிலில் வீற்றிருந்தருளினர்.

பத்திரகிரியாரது பின்சரித்திரம்.

பத்திரகிரியாரும் குருவருளாணைப்படி சிவயோகசாதனை விடாது பிச்சை யேற்றுண்டு தலங்கடோறுஞ் சென்று பணிந்து திருவெண் காட்டடிகள் வந்துசேர்ந்தறிமே தாமும் திருவிடைமருதூர் வந்து சேர்ந்து குருபாணப் பணிந்து அவர் திருவாணைக் குறிப்பின்படி மேலைக் கோபுரவாயிலில் இருந்துகொண்டு நாடோறும் பிச்சைபண்ணி வந்து குருநிவேதனம் ஆனபின்பு சேடத்தைத் தாமுமுண்டு சிவ யோகத்தில் வீற்றிருந்தனர்.

இங்ஙனம் நிகழ்நாளி லொர்நாள் பத்திரகிரியார் தமது நாண சாரியன் பரிகலச்சேடப் பிரசாதத்தினைத் தாம் அழுதுமெகாள்ளப் புகுந்தருணத்து, ஆதரிப்பாரற்றதோர் பெட்டைநாய்க் குட்டிவந்து வால் குழைத்துக் குறுகுறுத்து எழுமுகங் காட்டிப் பரியால் வருந்துந் தன்னிலைமையைக் குறிப்பிக்கக்கண்ட பத்திரகிரியார் பரமசிவகாருணியமூர்த்தி யாதலால் அதனிடத்தி லிரக்கங்கொண்டு அச்சேடப் பிரசாதத்திற் சிறிது அதற்கிட அதனை அப்பெட்டை நாயுண்டு பசி

யாறி அதுமுதல் பத்திரகிரியாரை விடாது அவர் செல்வழிச் சென் றும் நிற்புழி நின்றும் அடி நிழலினைப் பிரியாது அவர் திருமேனி காவற்றிருத்தாண்டி னிலைமைபூண்டிருந்தது. அவ்வரசோறும் அத னிடத் திரக்கம் வைத்து நாடோறும் தமதுச்சிட்ட சேடப்பிரசாதத் தினை அதற்கிட்டுவந்தனர். கேட்டீர்களோ முனிவர்களே! இழிந்த நாயாய்ப் பிறந்தும் அப்பெட்டை நாய் சிவஞானியின் திருவருளுக் குப் பாத்திரமாயிற்று. இப்பேறு இவ்வுலகத்தில் யார்க்குக்கிடைக்கும் என்று உபமன்னிய பகவான் கூறக்கேட்ட தவத்தினர் யாவரும் வண ங்கி விடைபெறுவாராயினர்.

எம்பெருமானே! "ஞாலமதின் ஞானநிட்டை புடையோருக்கு நன்மையொடு தீமையில்லை நாடுவதான்றில்லைச்-சிலமில்லை தவமில்லை விரதமோடாச்சிரமச் செயலில்லை தியானமில்லை சித்தமில்லை-கோல மில்லை புலனில்லை காணமில்லை குணமில்லை குறியில்லை குலமுமில்லை-பாலருட னுன்மத்தர் பசாசர்குணமருவிப் பாடலிடைடாடலினை பயி ன்றிடினும் பயில்வர்" என்ற வேதாகமக் கருத்தின்படி சஞ்சரிக் கின்ற பரமஞானியாகிய விப் பத்திரகிரியாருக்கு அந் நாயினிடத்தில் என் இரக்கம் வந்தது? முன்னாளில் சடபரதர் என்பவருக்கு ஓருமான் கன்றினிடத்தில் உண்டாகிய தயவு காரணமாகப் பற்றுவிளைந்து பல பிறவி நேர்ந்தவென்று சில புராணங்கள் கூறிற்றே. இஃதென்னை? தேவர்க்கும் மூவர்க்கும் யாவர்க்கும் பெறுதற் கரியதோர் சிவஞானி யின் உச்சிட்ட பிரசாதம், பிறவிகளுள் அறக்கடையதாயும் முற்றும் பாவநாசகியாயுமுள்ள இந்நாய்க்குக் கிடைக்கத்தக்க புண்ணியத்தவ மேலீடியாவை? இவை விளங்கத் திருவாய்மலர்ந் தருளவேண்டுமென் று மீட்டும் பணிந்தார்கள்.

அப்போது உபமன்னிய பகவான் புன்னகைசெய்து, அம்முனிவர் களை நோக்கி, உங்கள் விடை மிக நன்று. இஃதுலகம் அறிந்துய்யத் தக் கபடியாம். இதனை யாமுங்கட்குக் கூறுவோம். ஞாபகத்தோடுங் கேட் பீர்களாக வென்று சொல்லலாயினர்.

வேதாகமத்தின் முடிவான கருத்து.

*உலகத்தில் ஒருவன் ஒரு தொழிலைச் செய்யப்புகின், அத்தொ ழில் தனக்குப்பயன், பிறர்க்குப்பயன், தனக்கும் பிறர்க்கும்பயன் தன க்கும் பிறர்க்கும் பயனில்லாமையென நான்கு வகைபதாம். அவற்

* "ஓங்கருளீசனே டொன்றியே நின்றிருந்தும் - ஈங்கருணீங்கா ரென்றுந்தீபற - எல்லா வுயிர்க்குமென் றுந்தீபற" என்றார் பிற்காலத்துத் துப் பெரியரும்.

றுள் சிவனிவ்வுலகைப் படைத்தது தனக்குப் பயனே எனில், தனக்கு மேல் உயர்ந்தோ ரொருவரு மில்லான்று ணுதலாற் புகழ்ப் பயனன்று. வெற்றிற்குங் காரணன் ருகவே வேறுபயனுமின்று. தனக்கும் பிறர்க்கும் பயனெனில் தனக்குவமை யில்லாணுதலின் கூறவேவேண் டா. தனக்கும் பிறர்க்கும் பயனில்லையெனில் மைந்தர் விளையாட்டாம், போறிவுடையா ணுதலி னஃதமையாது. மற்றென்னெனில் அணுதிமூல மலவிருளிற் கிடந்த வுயிர்கள் உய்யவென்ற கருணையாலாக்கலிற் பிறர்க்கே பயனும். அங்ஙன மாக்குங்கால் ஆன்மாக்கள் குறையிரந்து வேண்டிச் செய்தபடி யன்று, தானே போருளாற் செய்ததாமாகவே, அத்தகைய போருளாளணுகிய சிவனடி நீழல் பிரியாத சிவஞானிக ளும், சுடுமியற்கை யில்லாத இரும்பும் நெருப்பின் கூட்டுறவால் சுடுந் தன்மைபெற்றாற்போல, அவனருட் சேர்க்கையால் நித்தியமான வான் மாக்களுக்குச் சுகதுக்கமில்லை. மாயாதனுவுக்கே யவைபுள்ளபடி யென்றறிந்திருந்தார்களாணலும் பெத்த தசையில் அவ்வுணர்ச்சி யவ் வான்மாக்களுக் கில்லாமையாற் படும்துன்பத்திற் கிரங்கி யருள்செய் தல் இயல்பாம். இவ்வருளில்லாவிடின் முத்திப்பேறே யின்றும். "அரு ளில்லார்க்கவ்வுலகமில்லை பொருளில்லார்க் கிவ்வுகமில்லாதியாங்கு" என்றதே சான்று. முத்திக்கு அருளேசார்பு. என்பதை "நல்லாற்று ணுடியருளாள்க பல்லாற்றுற் றேரினுமஃதே துணை" என்ற பெரியர் மொழியாலுணர்க. அதனற்றன் "அருட்செல்வஞ் செல்வத்துட் செல் வம் பொருட்செல்வம் பூரியார்கண் ணுமுள" வென்றார். இனித் தமிழ் மறையாகிய தேவாரத்துள்ளும் "சலங்கெடுத்துத் தயாமூலதன்ம மென்னுந் தத்துவத்தின் வழிநின்று சார்ந்தோர்க்கெல்லாம் நலங் கொடுக்கு நம்பியை நள்ளாற்றுணை நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே" என்றதும் என்க.

ஆனற் கண்ணன் பாரதப்போர்த் தொடக்கத்தில் இருதிறப்படை களையும் நோக்கித் தயவால் போர்செய்யேனென்ற அருச்சுனனுக்குப் போதித்த கீதையில், இச்சாஞானக்கிரியா சொரூபத்தால் ஆன்மா வொன்றே, ஆகவே தயவு செய்வானும் செய்யப்படுபவனும் வேறில்லை யாக, நீபஞ்சாது வில்லெடுத்துப் போர்புரியென்று பன்முகத்தானும் கூறி அவன் தயவைக் கெடுத்த தென்னையெனின் ? அங்ஙனமன்று, அந்த கீதை, * ஆன்மசொரூபஞானந் திடப்படும்படி பலமுகத்தும்

---

* அருச்சுனற்கு மிராமற்கு மதிகாரமவைபார்த்தே யறைந்தநூ லின், கருத்தறியாய் ஞானமொன்றே பிரமாணஞ்சரிதையது கணக் கன்றுகும், விருத்தமறிவாசார மூடையோனே ஞானியில்லோன் விரு த்தலுகும், திருத்தமுடனமைச்சவிது துணிவென்றே யுட்கொள்வாய் தீரனுகி., எனக் குமாரதேவர் மகாராஜாதுறவிலுட் கூறுதலாலுமறிக.

விரித்துக் கூறியபடி யல்லாது, ஆன்ம அனுபவஞானத்தைக் கூறிய தன்று அதனாற்றான் அவ்வருச்சுனனுக்கு உத்தரகீதையென்று மறு படியுங் கூறினார். அன்றியும், கண்ணனும் அருச்சுனனும் பூபாரங் கழிக்க வந்த நிமித்திகர்கள் ஆகவே உண்மை யனுபவஞானம்பற்றி விசாரிக்குங் கடனவர்கட்கில்லை. அங்ஙனமிருந்தும் நான்முறை பிற ராதிருக்கவேண்டுமென்னுங் கருத்தால், "இருவகை யுயிர்க்கு மினி யரு யின்பதுன்பம் யாவனென்னிதென்றறியா, தொருபொருளாலும் குறைவுபாடின்றி யுள்ளமு மொருவழிப்பாடாய்ப், பொருவருந்துணி வுங் கருணையும் பூரிந்து புலன்றெரியுணர்வை யென்பாலே, மருவினின் றருழுகும் யோகியென்பவனே மன்னவமற்றெனக்கினியான்." எனக் கருணையு மொருதலையாக வேண்டுமென்பதை விளக்கினர்.

அல்லதூஉம், அவ்வருச்சுனற்கு அங்கே வந்த தபவு, பாட்டன், மைத்துனன், மாமன், மகன், ஆசிரியன், நண்பன், உறவினன், பகைஞன் என்றெழுந்த பாசசம்பந்த தயவேயன்றி, உண்மையாலே யான்மசொரூப முணர்ந்ததனாலுண்டாகிய சருவஜீவ காருணியமல்ல அது உண்மை யுணர்ச்சியில்வந்த சருவஜீவகாருணியமேயாதல் மாறவும் மாறாது. யுத்தமும் நடவாதென் றுணர்க.

இனி சடபரதர்க்கும் நான் வளர்த்தமானென்று சுதந்தர புத்தியாலெழுந்த பந்த சம்பந்த தயவேயாம். அது அக்கதையான் விளங்கும்.

பெட்டைநாயின் முற்பிறப்பின் வரவாறு.

அப்பால் அப்பெட்டை நாயோவெனில் முற்பிறப்பில் அங்கதேசத்து, அழகிலே சிறந்த விலமாதொருத்தி மூத்தோரிளையோரென்ற வரம்பின்றிப் புணர்ந்து பலவகையாலும் வஞ்சித்துப் பொருள்தேடி, புலைகொலை கள்ளுண்ட லிவற்றிலே தன்னுளெல்லாம் போகக்கழித்துத் தருக்குற்றுத் திரிந்து பலகொடுமைகள் செய்து திரிபவளோர் நாளுச்சிப்போதில் சிவஞானியான குரவனுணைப்படி பிச்சைக்கு வீதியே சென்றதோர் மாணக்கரான பக்குவியின்கையிலே தன்விடபுருடர்களோடுண்டு மிகுந்திருந்ததோர் சிற்றுண்டியைப் பத்திவகையின்றிப் பரிகாசப்பொருட்டாகக் கொடுத்தனள். அதை யம்மாணக்கன் குருப்பிரீதிபண்ணித் தம்பசியாறி யிச்சைவழிச் சென்றனர். அப்பால் அவ்வேசை முதுமை யடைந்து வறுமை பசி பிணி முதலியவற்றால் வருந்தி வினையுலப்ப விறந்தொழிந்ததின் கருமசேடத்தால் ஒரு பெட்டைநாயாய்ப் பிறந்தாள்.

கேட்டீர்களோ! முனிவர்களே! அவ்வேளை தானுண்ட தன் சேடத்தைப் பரிகாசமாக வொரு சிவயோக சாதகியின் கரத்தளித்த தோடத்தால் நாயாய்ப் பிறந்தனளாயினும் அச்சேடப்பண்டம் அவ ளது பசியைத் தணித்த பலவிசேடத்தால் முத்திக்கே வழியா யிப் போது பத்திரகிரியாராகிய சிவயோகியின் உச்சிட்ட சேடப் பிரசாத த்திற்குப் பாத்திரமாய் அவர் திருமேனி காவற்பணிக் குரியதாகும் பேறுபெற நேர்ந்தது. திருமந்திரம் "மாத்திரை யொன்றினின் மன் னியமர்ந்துறை, யாத்தலுக்கீந்த வரும்பொருளானவை, மூர்த்திகண் மூவர்க்கு மூவேழ்குரவர்க்குந், தீர்த்தமதாவது தேர்ந்துகொள்ளீரே." ஆதலால், "அகரமாயிர மந்தணர்க்கியிலென், சிகரமாயிரஞ் செப்து முடிக்கிலென், பகர்தருஞானி பகலூண் பலத்துக்கு, நிகரில்லை யென் பது நிச்சயந்தானே." ஆகவே, "எறுடையா யிறைவா வெம்பிரானெ ன்று, நீறிடுவாரடியார் நிகழ்தேதவர்க, ளாறணிசெஞ்சடை யண்ணலிவ ரென்று, வேறணிவார்க்கு வினையில்லைதானே." என்றபடி சித்தித்தது.

திருவிடைமருதூரர் சோதனைத்திறம்.

கேளும் முனிவர்களே! அப்பால் இங்ஙனம் சின்னாள் கழியவே, திருமந்திரம், "வித்தகமாகிய வேடத்தாருண்டவூண், அத்தனயன்மா லருந்திய வண்ணமாம், சித்தந்தெளிந்தவர் சேடம்பருகிடின், முத்தி யாமென்றுநம் மூலன்மொழிந்ததுவே" என்றபடி அப்பெட்டைநாய்க் குப் பரிபாகம் நேர்ந்தது நோக்கி, நம்மருதூருடைய பெருமான் ஓர் அருட்சித்தவேடராய் பட்டினத்தடிகளிடத்தி லெழுந்தருளி, ஐயா! பசித்தீச்சுடுதலால் பிச்சையிடவல்லீரோவென, அவரும் புன்னகை செய்து, ஐயரே! யான் கோவணமே பாரமென்றுள்ளேன், தேவரீர் பசிக்குப் பிச்சையிடவல்லமே? ஆயின் மேலைக்கோபுரவாயிலில் ஓர் சமூசாரியுள்ளான் அவன்பாற் செல்வீரேலுமது பசிக்குத் தக்க பொருள் கிடைக்குமென்றார். அதுகேட்டு வலிதாளும் பேராளன் அங்ஙனே பத்திரகிரியார்பாற்சென்று, ஐயரே! கீழைக்கோபுரவாயிலி லிருந்தா ரொருவரை நான் பசிக்குச் சோறிடுமென்றேனுக, அவர் எனக்குக் கோவணமே பாரமாகப் போக்கின்றி யிங்கிருக்கின்றேன். ஆதலால் மேலைக்கோபுரவாயிலில் ஓர் சமூசாரியிருக்கின்றான். அவன் பாற் செல்வீரேல் உமது பசியாறுமென்றார். ஆகவே நீரேனும் என் பசியாற்றவல்லீரோ வென்றார்.

உடனே அவ்வுரைக் குறிப்புணர்ந்த பத்திரகிரிப் பெருமானும் உண்ணடுங்கி, இவ்விரந் துண்ணுமோடும் எச்சிலுண்ணு நாயுமோ என்னைப் பிச்சைதரவல்ல சமூசாரியாக்கியது. ஆண்டவர் திருவுள்ள

மிப்படியாயின் இனி யிதுதானெனக்கு என்செய்ய வல்லதென்று கையினிருந்த வோட்டினைச் சுழற்றி யெறிந்தார். அது சென்று அப் பெட்டைநாயின் பொறியிற் றுக்கவே ஓடுமுடைந்தது நாயுமிறந்தது. பிச்சைக்குவந்த மருதப்பிடாரனாணும் புன்னகையோடும் மறைந்து விட்டனர். பின்பு, பத்திரகிரியாரும் திருவருணிலைமையை நாடிச் சகநிட்டையமிக்கத் திருப்புலம்பல் முதலிய அநேகஞ் செந்தமிழ்ப் பாடல்களை யருளிச்செய்து அகிலவற்ற சிவயோகத்தில் வீற்றிருந்தார்.

பெட்டைநாயின் பின்வரலாறு.

அப்பால் அப்பெட்டை நாய், "உடையாய் கூவிப் பணிகொள்ளா தொறுத்தா லொன்றும் போதுமே" என்ற திருவாசகத் திருவுளப் பாங்கின்படி பரமயோகி கையினின்று மெறியுட்ட வோட்டினால் இறந்தவளவிலே மூன் பலகோடி பிறப்பிலுஞ் செய்த தீவினையெல்லா மொழிந்துபோய்ப் புண்ணியமேவிட்டு, மக்களின்றித் தவஞ்செய்திரு ந்த காசிமாநகரத்தரசன் விசுவகுத்தன் என்பவனுக்கு மகளாகப் பிற ந்து ஞானவல்லி என்ற பெயரோடு உலகத்தில் உயர்வு ஒப்பு இல்லாத அழகும், நற்குணமும், நற்செய்கையும் உடையளாய் சிவயோகியின் உச்சிட்டப் பிரசாதவிசேடத்தால் பூர்வஞானம் விளங்கக் குருவின் திருவடியில் நேயம் வைத்து வளருநாளில் அப்பெண்ணுக்கு மணஞ் செய்தற்குரிய மங்கைப்பருவம் வரக்கண்ட பிதாவாகிய அந்த விசுவ குத்த மகாராஜன் தன்மகளுக்குத் தக்கவன் யாவனென்று நாடிக் கொண்டிருக்கையில் வான் கிடையாதபடியால் ஓர்நாள் மிகவு மனம் வருந்திக் கன்னிகாமாடத்திருக்கும் தன் பெண்ணைப் பார்க்கவந்த வன் பெண்ணினழகை நோக்கித் தன்னருகிருந்த புரோகிதரைப் பார்த்து, ஐயா! இக் கன்னிகைக்குத் தக்கவன் இவ்வுலகி லொரு வனுண்டோ? அந்தோ என்செய்வேன்! பெண்களைப் பத்து வருடத் தின்மேல் மணம்புரியாது வைத்திருத்தல் பாவம்," என்று பெண் பாலும் சொல்லுகின்றார்களே என்று கண்ணீருகுத்தான்.

அதுகண்ட அப்பெண் திடுக்கென்று பயந்துடல் நடுங்கத் தந் தைதனையணைந்து நின்று, அப்பரே! நீர் இப்போது கூறியதென்ன? என்னை யார்க்கு மணஞ்செய்விக்கக் கருதுகின்றீர்? யான் யாருக்கு மூரியளல்லள். எனது குருநாதன் தென்னாட்டில் திருவிடைமருதூ ரில் மருதவாணராலயத்து மேலைக்கோபுரவாயிலில் எழுந்தருளி யிரு க்கின்றார். ஆதலால் என்னை அவரிடத்தி லனுப்பித் தென்திசை யுரைப்புவித்தால் அவர் யாக்குத் தொடுப்பரோ

உரியவளாவேன், நீர் என்னை வருந்திப் பெற்று வளர்த்த தந்தையென்ப துண்மையே லிவ்வுபகாரம் நீர் செய்யவேண்டும். இச்செய்கை ஆண்மகவில்லாத வமது குடிமுன்னோர் மூவெழு தலைமுறையாரும் முத்திபெறும் தவமாகமுடியும். ஆதலால் என்சொல்லை அவமதியாது சொல்லியவண்ணை முடிப்பிக்க வேண்டுமென்று மீட்டும் பணிந்தாள்.

அதுகேட்ட அரசன் நெஞ்சு துணுக்குற்று, இன்னுந் தாய்மடி விட்டிறங்கி யறியாத இச்சிறு குழந்தைக்குக் குருநாதன் யார்? அவரிருப்புத் தென்னாடு திருவிடைமருதூர் சிவாலய மேலைக் கோபுரவாயிலாம். அது இவளுக்குத் தெரிந்தபடி எப்படி? பிறர்சொல்லக் கேட்டிருந்தவாறுமன்று. அரசாட்சி செய்துவருகிற நான் இதுவரையில் கேளாதது, இவள் கேட்டதெங்கே? ஆனல் இவள் அழகு குணஞ் செய்கையை நோக்குமிடத்து, சாதாரணமான வுலகத்துப் பெண்களுள் ஒருத்தியல்லள். ஏதோ காரண மாதாகவே தோற்றுகின்றது. ஆதலால் இதை நன்கு விசாரிப்போமென்று புரோகிதரோடு தன் சபைக்குவந்து, நல்லவிவேகிகளும் யோக்கியதை யுடையவர்களுமான ஒற்றுவரைத் தருவித்து, அவர்களுக்குத் தன்கருத்தைத் தெரிவித்து உண்மையை யறிந்துவர வேவினன். அவர்களுமவ்வாறே தென்னாட்டு மருதூரடைந்து அடையாளப்படி பத்திரகிரியார் நிலைமை தெரிந்து வந்து அரசனுக்கு அறிவித்தார்கள். அங்ஙனே அக்கோமகன் பயணற்றுத் தன் பரிவாரங்களோடும் மகளைச் சிவிகையி லேற்றிக்கொண்டு தானும் புறப்பட்டுவந்து திருவிடைமருதூரடைந்து ஆலயஞ்சேர்ந்து மேற்றிசைக் கோபுரவாயிலின் அருகே சிவிகையினின்றும் தன்மகளை யிழிச்சி நின்றனன்.

பத்திரகிரியார் முத்திபெற்றது.

அத்தருணம் பத்திரகிரியார் சிவயோகசமாதியி லிருந்ததால் அவ்வரச கன்னிகை அஞ்சலியத்தத்தோடும் எதிர் நின்று காலம்பார்த்திருந்தனள். ஐயர் சமாதியினின்றும் உலகமுகமாகி விழித்து நோக்கலும், அப்பெண், எம்பெருமானே! அடிநாய்மீட்டும் திருவடிப்பேற்றுக்கே வந்ததென்று வணங்கலும், எல்லாமுணர்ந்த பெரியோராகிய அவரும் அவ்வாலாறு முழுவது மொருங்குணர்ந்து அப்பெண்ணைக் கைப்பற்றிச் சென்று அந்தக்கணமே கீழைக் கோபுரவாயிலி லிருக்கும் தம்முடைய நாணுசிரியராகிய திருவெண்காட்டடிகள் சந்நிதியில் விட்டு, எம்பெருமான் எச்சிலுண்ட நாய்க்கு மிப்பிறவிநோய் வராமோ என்று கண்ணீர்வார விண்ணப்பித்து நின்றனர். திருவெண்காட்டடிகளும், சிவச்செயலுக் கென்செய வல்லோமென்று திருவருளை

நாடினராக; அந்நிலையில் ஓர் பெருஞ்சோதி யுண்டாயது. அச்சோதியில் சிவபெருமான் றிருவாணைப்படி பத்திரகிரியார் அப்பெண்ணோடு புகுந்து *கலந்தனர். பூமழைபொழிந்தது. தேவதுந்துபி முழங்கிற்று. அங்கிருந்த சராசரவுயிரனைத்து மானந்தமயமே யாயிற்று. அடியவர் அரகர முழக்கஞ் செய்தனர். விசுவகுத்த மகாராஜன் முதலியோர் பரவசராய் நின்றனர். உடனே சோதியும் மறைந்து மகாலிங்கத்துட் சென்றொடுங்கிற்று. கேட்டீர்களோ முனிவர்களே! நாய் பெற்றபேறு யாவராலளவிட்டுச் சொல்லத்தரம்? யார்க்குத்தான் கிடைக்கும் ஆதலால் உலகத்தில் சிவஞானி தரிசன விசேடமே மங்கலங்களுளெல்லாம் பெருமங்கல மாவதென்று வேதாகமங்கள் சொல்வதுண்மை, என வுபமன்னிய முனிவர் கூறினர்.

பெட்டைநாய் முத்திபெற்றதின் காரணம்.

அதுகேட்ட முனிவர்கள் யாவரும் அன்பு மாராமையு மேலிட உபமன்னிய பகவானைவணங்கி, எம்பெருமானே! "சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின் முத்தியாம்" என்ற திருமந்திரப்படி அப்பெட்டைநாய் அதேதேதகத்தில் முத்திபெறுது செத்து மறுபடியும் அரசகுமாரியாகப் பிறந்து பூர்வஞானம்விளங்க வளர்ந்திருந்து பின் முத்திபெற்றதன் கர்ணம் வெளிப்படையி லெங்கட் குணர்வுதிக்கும்படி அருள்செய்ய வேண்டுமென, ஸ்ரீ வுபமன்னிய முனிவரும் கூறத் தொடங்கினர்.

முனிவர்களே! கேளுங்கள், நீங்கள் வினவியதுண்மையே ஆனால் அதே திருமந்திரம், "ஓரெழுத்தொரு பொருளுணரக் கூறிய, சீரெழுத்தாளரைச் சிதையச் செப்பிலேர், ஊரிடைச் சுணங்கணைப்பிறந் தோதருகம், பாரிடைக் கிருமியாய்ப் படிவர்மண்ணிலே." எனவும், "மந்திரமோரெழுத் துரைத்தமாதவர், சிந்தையிலெந்திடத் தீமைகள் செய்தவர், நந்திய சுணங்கணைப்பிறந்து நூறுரு, வந்திடும் புலையராய் மாய்வர்மண்ணிலே." எனவும் விதித்தது. ஆதலால், இந்நாய்ப் பிறப்பிற்கு முன்னடைந்திருந்த வேசைப்பிறப்பில் செய்தமற்றைத் தீமைகள் கிடக்க, சிவயோக சாதகியொருவரைப் பரிகாசஞ்செய்த

---

* பத்திரகிரியார் திருநகூஷத்திரம்.

ஓங்குதிருவெண்காட்டியரடிகள் தன்னருளைப்
பாங்குபெறவேவபெற்றபத்திரகிரி—யாங்கொளியாய்ச்
சித்திரைமாமகத்திற்சேர்ந்தனனேனன்மருதூரிற்
கர்த்தனருளிற்கலந்து.

குற்றம் சிறிதல்ல, பெரியதிற்பெரியது. அது அத்திருமந்திரம் விதித்தபடி. பலபல சன்மமெடுத்து இறந்தாலொழிய வேறுவகையாலொழியாது. எனெனில், பிறக்கும்பொழுதோ, சிவதருமோத்திரம். "என்றென் றெண்ணியிருக்கு முயிரிடர்ப்பட்டழியு மெழில்வரைக்கீழ், ஒன்று மொருவன் றனைப்போல்க் கருப்பாசயப்பை யுறுத்துதலான், மன்றவுததி மறிந்தாழ்வான் வருத்தமென்ன வருந்தியிடும், நின்மு கருப்பா சயவுதக வெள்ளங்கொள்ள நிறையழிந்தே" "அங்கியதனிற் றங்கியிடு மயோமயத்த கும்பத்திற், றங்குமொருவன்றபனம் போற்ற பன மெய்துந்தாயுதரத், தங்கிச்டவே யழலனைய சூசியதலைலாகத்தைத் பங்கித்திடவே படுமிடரி னிருநாற்குணிதம் பட்டழுங்கும்." "கருப்பாசயமேகட்டம தாமதனிலதிகங் கடுங்காலும், முரிக்கமிகவு மோக முற முன்னையுணர்வு மந்நிலையே, மரிக்கவாலக் கரும்பெனவே யோனிவழியின் வலிதாலைய நெருக்கப்பட்டு நிலமிசையே தோன்றுமுயிரூனிலையுடனே." என்றபடி கருப்பையுறுத்தல், அதிற் சலம் பூரித்தல், உதராக்கினிசுடல், பிரசூதவாயு முரித்துத்தள்ளுதல், யோனித்துவார நெருக்குண்டல் என்கிற ஐவகைப் பெருந்துன்பமும் பொறுக்கமுடியாது; தாங்கமுடியாது, வேறொருவரால் தடுக்க முடியாதாயுள்ளன. இறக்கும் பொழுதோ? பெருந்திரட்டு, "பரணமாகிய பெண்டிருஞ் சுற்றமும் பண்டுதங் கையிற்றந்த; விரணமான்வை கொண்டிட விவரை விட்டியம்பிடா திவணேகும், மரண வேதனை யாவராலறியலொமயங்கி யையம்புலனந்தக், காணம் யாவையுங் கலங்கிட வருந்துயர் கடவுள் யறிகிற்பான்." "வந்திடும் பிறவித்துன்ப மறித்துரை செய்யப்போமோ, வந்திமேலியும் பித்துமுணர்வொடு பொறிகலங்க, நந்திடா விருளேழுடி நாவுலர்ந் தலமந் தென்னை, இந்தமா விறப்பிற்றுன்பம் பவத்துன்பத் தெண்மடங்கே." என்றபடி அப்பிறத்தலிலும் எண்மடங்கு அதிகமான துக்கம், அதனுலன்றே? "சாதலி னின்னுதில்லை" என்றார் தேவர். "யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக்கு என்கடவேன்" என்றது திருவாசகம். "சாதல் சாதல் பொல்லாமை" என்றது மது. மார்க்கண்டேயர் அவ்விறத்தலுக் கஞ்சிச் செய்தமுயற்சி சற்றல்லவே: இனி எந்தப் பெரியார்தான் சாவுக்குப் பயப்படாதவர்கள், இழவு என்னுஞ்சொல் எப்பொருட் கேட்டுக்கும் பொதுவா யிருப்பினும் தேகக் கெடுதிக்கன்றே வுலகம் அப்பேரிட்டு வழங்குவது. ஆதலால் வினையொழிவு, பிறத்தலாலும் இறத்தலாலுந்தான் நேரிடும். ஆகவே, பெரியோரைப் பழித்தகுற்றம் நாயாய்ப் பிறந்து பலிபாத்திரத்தாலடியுண்டு இறத்தலாலொழிந்தது: குரு உச்சிட்ட பிரசாதபலத்

தால் முன்னுணர்ச்சியோடு அரசகன்னியாகப்பிறந்து தலைமடம்போ
தில் அருட்டெருந்தேசதியிற் கலக்கப்பெற்றது; என்று சொல்லி அப்
பால் கடந்த கதையைச் சொல்லலாயினர்.

தேவரும் முனிவர்களே! அந்த அருட்டெருந்தேசதி மறைந்த
வுடனே திருவெண்காட்டடிகள் திருக்குற்ற ஆணைமே மேவிட்டுக்
கண்களில் ஆநந்த நீர்பெருகச் சிறுபோது அவசமுற்றுத்தெளிந்து
அருட்டிரு நாடி; இறைவர் சந்நிதி நோக்கி, எம்பெருமானே! முன்
வரகுண பாண்டியனுர் பத்தினியாரைத் திருவிடையிற் கலந்துகொண்ட
பெருங்குரவனாளன்ன இன்று செய்த பெருங்குருவுக்கு எல்லை
யென்னுள்ளது? இன்னம் என்னையும் என்னிளையையும் இங்கு இருத்
தினைத்திபோலும், இனி எழுபடியேன் செய்யக்கடவன என்னை
என்று நின்றருளுக்குணத்தில்; ஐயர் திருவருளால், "ஐய! நம்மொற்
றியூர்க்குவருதி" என்றேனர் அசரீரி வாக்கு உண்டாதலும் வணங்கி
னிடைபெற்று அங்ஙனே புறப்பட்டு வழியிலிருந்த திருப்பதிகளில்
பெருமானை வணங்கித் திருவெண்காட்டடிகளையடைந்தார்: என்றபடமன்
னிய முனிவர் கூறக்கேட்ட முனிவர்கள் அவரை வணங்கி, எம்பெரு
மானே! வரகுணபாண்டியனுர் திருமணவிளை ஆளுடையார் திருவடி
விற் கலந்துகொண்ட வரலாறென்னையெனக் கூறலாயினர்:

வரகுணதேவர் கதை:

முனிவர்களே! முன்னொரு காலத்தில் பாண்டிநாட்டில் துவாத்
சாந்தத் தலமாகிய மதுரையிலே அரசாண்ட சந்திரவமிசத்தர்களாகிய
பாண்டியர் குடியிலவதரித்துச் சிவதேசதேம வடிவமா யிருந்த வரகுண
தேவர் மதுரைமுறை தேகாடாது அரசுசெலுத்தி வருநாளில் ஓர்நாள்
தேதோறி உலாவரும்போது முதுதேவதிய னொருவன் தேர்க்காலிற்சிக்கி
யிறந்தாணுகவே, அப்பிரமகத்தி அவ்வர்ச சிகாமணியைப்பற்றி வரு
த்த, தேவந்தன் அஞ்சி நான்முறைக்குழுவா யெல்லாம் புரிந்து மொழி
யாது கண்டு தங்குலதெய்வமாகிய திருவாலவாயுடையார் சந்நி
யடைந்து குறையிரப்பப் பெருமானுந் திருவுளமிரங்கி, ஐய! வரகுண
உடைமைவளிதயாகாசமாய் உருத்திரர் பூசித்தருள் பெற்ற திருவிடை
மருதூரடையின் இப்பிரமச்சாயை யொழியுமென்ன அசரீரி வாக்கா
லருளலும், உடனே அப்பஞ்சவர் தேகமான் உலதேகாம்பலி யமைச்சர்
வசநிறுவி, மற்றைய புரோகிதர் முதலிய வுறுதிச் சுற்றமும் பரிவார
மும் புடைசூழச் சேரணைட்டித் திருவிடைமருதூர் புக்குக் காருணியா
மிர்த தீர்த்தத்து நீராடி நித்தகருமம முடித்துக் தேகாயில் வலம்வந்து
கீழ்க்தேகாபுரவாயிலாற் புருதலும் அப்பிரமச்சாயை அரசனைப்பற்றிச்

செல்ல அஞ்சிப்புறத்தே நின்றது. பெரும்பாரங்கழியப் பெற்றோன் போன் றாசனலயத்துட் புகுந்து ஆருடையாரை வணங்கித் தொழுது துதித்து வலம் வந்து பணிந்து விடைபெற்று வெளிப்படுகையில், அசரீரியால் கீழ்வாயிலிற் பிரமசாயை நிற்றலால் மேலைவாயிலாற் செல்கவென்று அருளாணையாதலும், அவ்வாறே சென்று இருக்கை சேர்ந்து காலங்கடோறும் மருதவாணர் சந்நிதியடைந்து தரிசித்து அன்பு பெருக அங்கு வசித்திருக்குநாளில், ஓர்நாள் கள்ளனொருவன் அரண்மனையிற் சென்று கள்வுசெய்யக் காவலர் கடுகி அக்கள்ளனைப் பற்றிக் கட்டிவந்து இறைமகன் முன்னர்விடலும் பாண்டியனேறு அக் கள்ளன் உடம்பிற்றிருநீறு விளங்கக்கண்டு சிவனடியவனென்று கட்ட விழ்ப்பித்து வணங்கி அவன் வேண்டும் பொருள் கொடுத்தனுப்பி னர். மற்றொரு நாளிரவில் உள்ர்ப்புறத்து நரிகள் ஊளையிட அவ்வோசை சிவபெருமானைப் பாடிய பாடலோசையாகவெண்ணி அவற்றிற்கு ஆடைகள் பரிசாகவளித்தனர். பின்னொருநாளிரவில் மழை பெய்யுங் கால் தவளைகள் இரைச்சலிட, அவ்வினைச்சல் சிவாகமம் போலச் செவிப்பட அங்ஙனே மனங்கனிந்து மணிகளையும் பொன்னையுங் கல ந்து அந்நீரிலிறைப்பித்தார். ஒருகாலத்தில் பெருமானர் திருமஞ்ச னத்துக் காம்படி தைலஞ்சமைக்கவென் றுலாவிட்ட வெள்ளினைக்கர விற்றின்ற வொருவனைக்கண்டு பிடித்துக் கௌரியர் குலமணிபால் கொண்டுவர, அவனிவ் வெள்ளைத்தின்றதனல் இனிவரும் பிறப்பு எரு தாகப்பிறந்து சிவபெருமான் றிருவபிடேகத்திற்குத் தைலம் அமைக் குஞ் செக்குமரம் வலிக்கும் திருத்தொண்டு பெறலாமென்னு மாசையா லிங்ஙனஞ் செய்தேனெனக்கேட்டு, இங்ஙனமானல் யானும் அச்செக் கினையீர்க்கும் மற்றொருதாம் பேறுகிடைக்க உமது வாயிலிருக்கு மெள்ளினுட் சிறிதளியு மென்றிரந் துண்டுகளித்தார். ஒருகால் அம் மருதூ ரெல்லையி னுருண்டுகிடந்த வெற்றுத் தலையைக் கண்டிது மரு தூரடைவா ரடிப்பொடி யணியவன்றே விங்ஙனங் கிடந்துருள்வது, அப்பேறு எமக்குமாக வென்றத் தலையை யடித்தடித் திரந்துவந்தனர். வேறொருநாள் திருக்கோயில் வலம்வருகையில் சந்நிதியின் ஓர் புற த்தே நாய் மலமிருக்கக் கண்டதனை யப்புறப்படுத்துவார்க் கென்னை சிற் பாதி தருவேனென்று கருதி, மறுவலம் வருகையில் ஒருவரு மதை நோக்கார்காக, இனி யெடுப்பார்க் கென்னைசு மூற்று மளிப்பே னென்று கருதிச்சென்று, மூன்றுமுறை வலம்வருமளவும் யாரும் தொடாமைகண்டு தாம் தமது மேலிருந்த உத்தரியத்தால் வாரியெறி ந்தார். பிறிதொருநாள் ஊர் உலாவருகையில் வேப்பங்கனி யுதிர்ந்தி

ருக்கச் சென்று அதனை சிவலிங்கமாகக் கோயிலின் ஆசனமை மேற் கொண்டு பூசைபுரிவதற்கு விருப்பங்கொண்டு எழுந்திருந்தார். இங்ஙனம் அப்பாண்டிய வேந்தன் விசாலமான படுக்கை போன்படுக் கையையுடைய மலைகளுக்கு இருக்கையாகவும் செய்துவைத்தவரின் விக்கிரமச் சோழனும், இலக்குமி, சரசுவதி, இந்திராணி முதலிய தெய்வமாதர்கள் யாவருஞ்சென்றும் போற்றும் தற்புதம் வாய்ந்த காஞ்சிபுரி யென்னும் பட்டணத்தை யுடையவனைத் திருமணஞ்செய்து கன்றினையில் பள்ளிபடைறைக்குச் சென்று மகிழ்வியார் திருவடிகளை நோக்கி இப்படி தாய தாட்பருதவாணரருக்குத் தக்கவளாமே யென்றெண்ணி அங்ஙனே மகிழ்வியார் சரம்பற்றி ஆலயத்திற்குட் புகுதலும், அத்தரு ணம் வரவுமடங்கி இராத்திரி நடுநேரமாகவே, அர்த்தயாம தூசை நிறைவேற்றித் திருக்காப்புச் செய்து உகம்படித் தொண்டருஞ் புறம் படித் தொண்டருஞ் தத்தமிடத்து சென்றனராக, அம்மன்னவர் பெருமான் றிருவாயிற்புறத்தங்கின்று, விளரோவாது "ஐய! மருகுபடா!" என்றழைத்துத் திருக்கதவைத் தட்டலும், பெருமான் அவ்வேலத்தின் அன்பு வலைப்பட்டாராதலின், வரகுண வந்தேன்! வந்தேன்!! என் றோடிவந்து திருக்கதவந்திறப்ப, உட்சென்று, எம்பெருமானே! இம் மாது தேவரீர் திருவுளப்பாங்கினுக்கு ஆகுமென்று தொண்டுவந் தேனென அங்ஙனே பெருமானும் அவர் கருத்தினுக் கிசையக்காட்டி சிவலிங்கத்தினிடமாக வயிக்கஞ் செய்துகொண்டனர். வரகுணதேவ ரும் திருப்பித் தம்மாளண்மனை புகுந்து பெருங் களிப்புட னிருந்தார், கோயில் பழுபவண்ணம் திருக்காப் பணைந்தது.

கேட்டீர்களோ முனிவர்களே! மறுநாள் வைகறையில் திருவன ந்தவணர்த்த கோயிற்றுறையா ரணவருந் திருக்காப் பவிழ்த்துட் சென்றபோது சிவலிங்கப் பெருமானுக்கு ஓர் புறத்து வளமுதலிய வணிந்த பெண்கரமொன்று மணிக்கட்டுமட்டும் வெளிப்பட்டிருக்கக் கண்டஞ்சி அவ்வரு மொருமுகமாக வரகுணச் செல்வர்பாற் சென்ற றிவித்தலும், அவ்வரசர்பெருமான் அச்சமு நாணமு மேற்கொண்டு பெருமான் சந்நிதியடைந்து அகம்படித் தொண்டர்கள் தமக்கு அறி வித்தவண்ணமிருக்கக்கண்டு, பெருங்கவலையும் துன்பமும்மேலிட, எம்பெருமானே! பாவியேன் பற்றிய வெச்சிலென்றே அக்காத்தினை யுட்கொள்ளாது விட்டபடி யென்றிரங்கி விண்ணப்பித்து நிற்றலும், யாவரும் கேட்கும்படி அசரீரியால் "ஐயா! வரகுண! உன்பணியை யுலகறியச் செய்யவைத்த படியன்றி வேறல்ல" என்று பெருமான் கட்டளையிட் டருளியவுடனே, அங்கிருந்தா ரணவரும் காணும்படி

வெளிப்பட்டிருந்த அக்கை, சிவலிங்கத்துள் மறைந்தது. தேவர் பூமழை பொழிந்தனர். அந்தரதுந்துபி முழங்கிற்று. அடியவர் அரகர முழக்கஞ் செய்தனர். எவ்வுயிரும் பேரின்ப வெள்ளத்துண் மூழ்கின அப்பால் வரகுணதேவரும் பல திருத் தொண்டுசெய்து பெருமான் திருவடி நீழலை படைந்தனர். கேட்டீர்களோ முனிவர்களே! பத்தியி னிலக்கணம் இப்படி விசாரமற்றபடியில் வரம்பற்றதாக விருக்கின்றது, தேவர் மூவர் யாவர்க்கு மரிய சிவன் அன்பரன்புக் கெளியனாக விருக் கின்ற தன்மை கண்டீர்களோ? அதனலன்றே "மெய்யன்பை யுடை யாய்பெற நான் வேண்டுமே" என்றது அருட்டிருவாசகம், என்று சொல்லி மனமுருகித் திருவருளைத் தியானித்து அப்பால் திருவெண் காட்டடிகள் சரித்திரத்தை முனிவர்கட்குக் கூறத் தொடங்கினர்.

திருவெண்காடர் மறுபடியும் திருவெண்காடு அடைந்தது.

கேளும் முனிவர்களே! நமது பட்டினத்தடிகள் திருவெண்கா ட்டை யடைந்தவளவிலே திருவெல்லையைப் பணிந்து திருவீதி வலம் வந்து கோபுரத்தை வணங்கிப் பெருமான் சந்நிதி யடைந்து அன்பு பெருக உரைதடுமாறி யுரோமஞ் சிலிர்ப்பக் கரமலர் குவித்துக் கண் ணீர்ததும்ப ஆநந்தபரவசராய் மனங்குழைந்து குழைந்துருகப் பாடு வாராயினர்,

திருச்சிற்றம்பலம்,

திருவெண்காட்டுத் திருவிசைப்பா,

பூதமுங்காணம்பொறிகளைம்புலனும்பொருந்தியகுணங்களார்மூன்று
நாதமுங்கடந்தவெளியிலேநீயுநானுமாய்நிற்குநாளுளதோ [டம்
வாதமுஞ்சமயபேதமுங்கடந்தமோனலயவின்பசாகரனே
ஏதுமொன்றறியேனென்யாதுநின்செயலேயிறைவனேயெகநாயகனே,

பாவமேயிருந்தும்பாவமேவாழ்ந்தும்பாவமேயெமக்குறவாயும்
தேவரீரல்லாற்றிசைமுகமெனக்குத்திருவுளமறியவேறுளதோ
பாவலாரிருவன்செந்தமிழ்க்கிரங்கிப்பரவையாரூடலைமாற்ற
வவலாளாகியிரவெலாமுழன்றவிறைவனேயெகநாயகனே. (உ)

உண்டதேதயுண்டுமுடித்ததேதயுடுத்துமடித்தடித்துரைத்ததேதயுரைத்தும்
கண்டதேதகண்டுங்கேட்டதேதகேட்டுங்கழிந்தனகடவுநாளெல்லாம்
விண்டதாமரைமேலன்னம்வீற்றிருக்குமிவிழவமுவீதிவெண்காடா
அண்டனேபோற்றவம்பலத்தாடுமையனேயுய்யுமாறருளே. (ங)

திருச்சிற்றம்பலம்,

திருநாங்கூர் சேந்தனார்வரலாறு.

என்றசெந்தமிழ்த் திருவிசைப்பா பாடிவணங்கிப் புறம்போந்து அங்குவீற்றிருக்குநாளில், முன் அரசன் சிறையுளகப்பட்டிருக்குஞ் சேந்தனருடையபமனவியாரும், மைந்தராகியசிறுவரும், திருவெண்காட்டையர் இங்கு எழுந்தருளியிருக்குஞ் செய்தி கேள்வியுற்றுவந்து அவரதுதிருவடிகளிலே வணங்கிக்கோவென்றுகதறியழுதார்கள். அப்போது, ஐயர் இரக்கமுற்று, நீவிர்யாவர் நுமக்கடுத்தகுறையென்ன என்று வினவ, அவர்கள் நடந்தசெய்திகளையெல்லாம் விண்ணப்பித்து சேந்தனர் சிறையை விடுவித்தருளவேண்டுமென்று இரந்தார்கள். அதுகேட்டையர்போருளாளராதலால் திருவுளங்கனிந்து, சிவபெருமான் சந்நிதியிற்சென்று,

மத்தளைதயிருண்டாஞ்மல்மிசைமன்னிறைஞ்சும்
நித்தமுந்தேதடிக்காணுநிமலனை * யமலமூர்த்தீ
செய்த்தலைக்கயல்பாய்நாங்கூர்ச்சேந்தனைவந்தனிட்ட
கைத்தளைநீக்கியென்முன்காட்டுவெண்காட்டுளானை.

என்ற திருப்பாடலையருளிச்செய்த மாத்திரத்தில், பத்திவலைப்பட்ட பரங்கருணைக்கடலாகிய சிவபெருமான் மூத்தபிள்ளையாரைநோக்கி நஞ்சேந்தனையரசனிட்ட சிறைக்களனின்று நீக்குகவென்றருளிச்செய்யக் கணைசப்பெருமானர் அங்ஙனே துதிக்கரத்தால் சிறைக்களத்திருந்த சேந்தனர்தலையவிழ்ப்பித்துத் தூக்கித்திருவெண்காடர் முன்விட்டருளினர். சேந்தனரும் துயிலுணர்ந்தவர்போல், வசமற்றிருந்தவர் தெளிந்தெழுந்து எதிர்நிற்கும் தம்துகுருமணியாகிய திருவெண்காடரைக் கண்டுதிடுக்கிட்டுப்பணிந்து, எம்பெருமானே! அரசனிட்டசிறையினின்று மீட்பித்தாற்போலப் பாசச்சிறையினின்று மீட்பித்தருளவென்று மீட்டும் பணிந்தார்.

அப்போது, பட்டினத்தடிகள் இவர்பரிபாகநோக்கி, ஐயா! நின் குடும்பத்தோடு காட்டு விறகின் சிறுவிலைப்பொருள் கொண்டு சிவனன்பரொருவரை யூட்டியுண்டு திருத்தில்லைப்பதியிலுறைதி என்று கட்டளையிட்டருளிச் சீகாழிநோக்கி எழுந்தருளினர். அங்ஙனே சேந்தனர் அவரையுந் திருவெண்காடுடையாரையும் பணிந்து சிதம்பரதலத்தையடைந்து குர்வனுஜ்ஞப்படி யொழுகுவாராயினர்.

இங்ஙனமொழுகுநாளில் ஓர்கால் எழுநாள் அடைமழைபற்றி மனிதரியங்காவகை பெய்யப் பசியால்வருந்திக்காடுசென்று அரிது

* நீபோயின்று - எனப்பாடங்கூறுவாருமுளர்.

திருவெண்காடர் சரித்திரம்.

மூயன்று விறகுகொண்டுவந் தூரிலேமாறிப் பெற்றமானைக்கொண்டு சென்று மனைவியார் கரத்தளிப்ப அவர் களியமுது சமைத்தருத்தங்கண வனுக்குத்தெரிவிப்பக்குரவனுணைப்படி யமுதூட்டச்சிவனடியாரைத் தேடி ஊர் முழுவதுந் திரிந்தலைந்து கோயில்மண்டபந்தோறாடம்படுக்கு நாடுகையில், இவரது பத்திப்போன்பமுதுசெய்ய, அழகிய திருச்சிற் றம்பலமுடையாரே மூப்பிலாற்றளர்ந்த ஓர் அடியவர்திருவுருக்கொண்டு மிகுபசியால் வருந்திணைப்போல் ஓர் மண்டபத்திற் றங்கியிருக்கக் கண்டு, திருவடிகளிற்பணிந்து எம்பெருமானே! ஏழையேனின்றிருக் க்கைக் கெழுந்தருளி யமுது கொள்ளத்திருவுளமாமே என்ன, ஐயரு மதற்கிணைசந்து பின்றொடர்ந்துவர; இருக்கைசேர்ந்து குளிர்போக்கிப் பாதம்விளக்கிப் பீடத்தெழுந்தருளப்பண்ணிக் களியமுதாடைக்குப் பெருமானு மமுதுண்டு சேடத்தைமுன்றானையின் முடிந்து எழுந்தரு ளித் திருவம்பலம்புக்கு அங்குத்தரிசனத்துக்கு வந்திருந்த திருமால் அயன் முதலிய வானவர் முனிவர்யாவர்க்கும் அக்களியமுதின் சுவை யைக்கூறிச் சேடப்பிரசாதமளித்துச் சிவகாமியார்களிப்ப விற்றிருந் தார். சேந்தனரும் தங்குடும்பத்தோடு குறையறவிரதமுடித்தனராயச் சேடவமுதுண்டு பரயோகநித்திரையிலெழுந்தருளியிருந்தார்.

அங்ஙன்மிருக்க; சிவநேசத்திற் சிறந்த செல்வச் சோழமகாரா ஜன் நாடோறும் திருவம்பலத்திற்சிறந்த பூசனைநடத்திப் பூசை முடி வில் இறைவனருளால் எழும்மணியோசைகேட்டு அமுதுசெய்யும் விரதம்பூண்டான். அன்று நடுவிராத்திரியாயும் மணியோசைகே மையால் மன்னங்கலங்கி வருத்த மூற்றுத் தரையிற் கிடந்து துயின்று ஞை; சேந்தரரண்டை வெளிப்படுத்தும்படி கனவில் அம்பலத்தாடுமிறை சென்று, அரசனே! வருந்துதலொழி இன்று நம்முடைய சேந்தன் நிவேதித்த களியமுதுண்ணச் சென்றிருந்தனமாதலின் நீயெய்வித்த பூசனைக்கு வரத்தடைபட்டதென்றருளி மறைந்தார். உடனே அரசன் விழித்தெழுந்தாராமைம் மேலிட அச்சேந்தனர் பேரன்புடம் படுத்தியும் எவ்வகைத்தோ? எவ்வாறவரை யான்தரிசிக்கப் பெறுவேனென்று வருந்தித்திருவருளைச்சிந்தித்திருந்து அருணேரதயமாதலிடம் நித்தக் கடன் முடித்துத் திருக்கோயிலுக்கு வந்தான். அங்கு, திருவம்பலத் திருமுற்ற முழுவதும் தெய்வமணம் வீசிக் களியமுது உதிர்ந்துகிடந் தலைத் திருவம்பலத்தடியரும் தில்லைவாழந்தணரும் தானுமாகக்கண்டு த்தனனைவைக்கூறி, அவர்பத்தினையத் துதிக்க, யாவரும் அவனைத்தரி சிக்கும் விருப்பமுடையராயிருந்தனர். அஃதங்ஙனமாக. அப்போது மார்கழி ஆதிரைத்திருவிழாநாளாகத் தேரணிவிழாநடத்தற்கு முன்ன

நான் மறையாற்றடையுற்றன்று மழுங்கிற்றலும் கடைசப்பிராயத்திருத்தோள் விறலாக்கோலநக் கெழுந்தருளப்பண்ணை தோன்றவாதாக, யாவரும் வருந்தாகையில், அங்குத் தரிசனைக்குவந்திருந்த சேந்தனாரை நோக்கி, அவ்விடத்துத்தில்லைவாழந்தணர் அரசன் முதலிய எல்லாரும் கேட்குமாறு, "சேந்த தோள் நடக்க நம்மைமப் பல்லாண்டுபாடுக" என்றோர் அசரீரி உண்டாகலும், சேந்தனாரும் மனங்குழைந்துருகி எம்பெருமானே! நாய்க்குத்தவிசிட்டென்ன வென்னையுமோர் பொருளாக்கி இத்திருப்பணி தூட்டிய திருவருட்கென்னை கைம்மாறென்று, அங்ஙனே,

திருச்சிற்றம்பலம்.

கோயில், திருப்பல்லாண்டு. பண் - பஞ்சமம்.

"மன்னுக தில்லைவளர்கமம்படக்கர்கள்வஞ்சகர்போயகலப்
பொன்னின்செய்மண்டபத்துள்ளெடுகுந்துடுவனியெல்லாம்விளங்க
அன்னநடைமடவாளுமைமேகானடியேமுக்கருள்புரிந்து
பின்னைப்பிறவியறுக்கவெறிதந்தபித்தற்குப்பல்லாண்டுகூறுதுமே."

"என்னதவம்தாய்சாற்றமுற்றுமெனக்கழுதாமெம்பிராவனென்றன்று
சின்னதரைய்புஞ்சிவன்சீரடியாரடிநாய்சென்புமுறை
அந்தமிலானந்தச்சேந்தனெனப்புகுந்தாண்டுகொண்டாருயிர்மேற்
பந்தம்பிரியப்பரிந்தவனேயென்றுபல்லாண்டுகூறுதுமே."

திருச்சிற்றம்பலம்.

என்றருளிச்செய்தலும் தேர் நடந்து வீதிவலம்வந்து நிலைசேர்ந்தது. தூமழை பொழிந்தது. வானதுந்துபி முழங்கிற்று, அடியவர் அரகர என்றார்த்தனர்.

அப்போது தில்லைவாழந்தணர் அரசன் முதலிய யாவரும் மிகக்கனிந்துச்சேந்தரைவணங்க, அவர்கள் வணங்குமுன் தாம்வணங்கித் திருவிடைக்கழிசென்று, அங்கு முருகப்பிள்ளையாரை,

திருவிடைப்பபா, திருவிடைக்கழி.

மாலுலாமெருந்தெனைகையிற்சங்கம்வவ்விமுன்மலைமகண்மதலை
மேலுலாங்கனிவாருடிமுடிதாளுங்குமாமேவள்ளிதன்மணாளன்
சேலுலாங்கழனித்திருவிடைக்கழியிற்றிருக்குராமீழற்கீழ்நின்ற [ளை.
வேலுலாந்தடக்கைவேலன்சேந்தனென்னுமென்மெல்லியலிவ

என்ற பதிகம்பாடித் திருவாவடுதுறை, திருவீழிமிழலை, திரு

திருவிசைப்பா திருப்பதிகம்பாடிக் குருவருளால் குடும்பத்தோடும் சிற்சபையிலாடவெடுத்த திருவடிநீழலில் வீற்றிருந்தருளினர். *

திருவெண்காடர்புகழை உலகெலாம்பரவித்துதித்துய்ந்தன.

திருவெண்காடர் சீகாழியடைந்தது.

இங்ஙனம் சேந்தனரை முத்திவழிக்கு விடுத்து, ஸ்ரீ புகலிப் பதியடைந்த திருவெண்காட்டடிகள் ஆளுடையபிள்ளையார் திருவவதாரஞ்செய்த திருப்பதியென்று எல்லை வலம் வந்து பணிந்து சென்று கோயிலை யடைந்து திருத்தோணி வீற்றிருந்த பெரிய பெருமானையும் பெரிய பிராட்டியையும் வணங்கி யன்பு பெருகநின்று,

திருக்கழுமல மும்மணிக்கோவை

"திருவளர்பவளப்பெருமலைமணந்த"

என்ற விணைக்குறளாசிரியப்பா முதலாகவெடுத்து மும்மணிக் கோவைபாடி அங்கு சிலபகல்வீற்றிருந்து, உலகெலாமுய்யச் சிற்சபையிலாடுந் திருநடங் கும்பிட வோரெண்ணமுண்டாதலும்,

"அத்தனைமுப்பத்துமுக்கோடிதேவர்க்கதிபதியை
நித்தனையம்மைசிவகாமசுந்தரிநேசனையெங்
கத்தனைப்பொன்னம்பலத்தாடுமையனைக்காணக்கண்க
ளெத்தனைகோடியுகமோதவஞ்செய்திருக்கின்றவே."

திருவெண்காடர் சிதம்பரமடைந்தது.

என்றருளிச்செய்து கழுமலமுடையாரைச் சென்று வணங்கி விடைபெற்றுப் புறப்பட்டு, வழிக்கணுள்ள திருப்பதிகளையெல்லாந் தரிசித்து கொள்ளிடக்கரையேறிப் பெரும்பற்றபுலியூர்த் திருவெல்லை பணிந்துட் புகலும், நந்தவனங்களெல்லாம் சிவநேசஞ் சிறந்த

---

* திருவாதிரைநாளில் இறைவருக்குக் களி நிவேதனம் செய்யும் சம்பிரதாய மிதுமுதலாக வுண்டாயிற்று. இச்சேந்தனர் திருத்தொண்டின் னிலைமையைப்பற்றிப் பின் சந்தனசாரியார் நால்வருள் ஒருவராகிய கொற்றங்குடிவள்ளலாரும்

"அவிழ்ந்ததுணியிலவிழ்ந்தவமுதை
யவிழ்ந்தமனத்தேதாடளித்த—தவிழ்ந்தசடை
வேந்தனர்க்கின்னமுதமாயிற்றேறமெய்ப்பத்தி
சேந்தனர்செய்ததிறம்."

என்று துதித்தவாற்றலும் காண்க.

மெய்யன்பர்போலத் தாது வெண்பொடி பூசி, மலர் முகங்கண்ணீர் வார வண்டொலி பழிச்சொலி காட்டக்கண்டு வணங்கி யப்பாற்செல்லு. கையில் பரதநாடகஞ்செய்யு மாதர்போற் பூங்கொடியசைய, குயில், தவளை, நாரை, வண்டு ஒலிப்பன பல்லியமுழக்கிப் பாணர் பாடும்பாட் டொலிகாட்ட, சண்பகமரும்பி விளக்கேந்த, தாமரை பூத்துப் பாலி கைவண்ணஞ்செய்யத், தெங்கு பூரணகலசமேந்த, கமுகுபாளை விரித் துக்கவரியசைப்ப, கொம்பிற் றேத்தடை கண்ணுடிகாட்ட, பட்டினத் தடிகள்வரவுகண்டு அசரங்களு மெதிர்கொள்ளவேபோன்றன. இங்ஙன மிவ்வணிகளைக் கண்டு பெருமான் திருவருட் டண்ணளியை எண்ணி, நான்மறை முழக்கமறாத திருநகரத்துட்புகுந்து, துறக்கநாடுபோலும் செல்வ நிரம்பிய மாடங்களையுடைய திருவீதி நான்கையும் பணிந்து வலம்வந்து, எழுநிலக் கோபுரவாயிலை வணங்கித் திருமாளிகையைப் பிரதக்ஷிணம் பண்ணிக் கனகசபை தொழுது சிற்சபையிற் சென்று உலகாடவாடும் ஆநந்தத் திருநடனம் கண்டார். கண்டவளவிற் றம் மைக் காணுராய் நெடுநேரம் தம்பித்துக்கம்பித்து நின்று பின் தெ ளிவு சிறிதுவரக் கரைந்துகரைந்துருகி யன்பின் கடல்மடைதிறப்ப,

கோயிலுன்மணிமாலை.

வெண்பா.

பூமேலயனறியாமோலிப்புறத்தேத
நாமேபுகழ்ந்தளவை நாட்டுவோம் - பாமேவு
மேத்துகந்தான்றில்லையிடத்துகந்தானம்பலத்தே
கூத்துகந்தான்கொற்றக்குடை.

என்றெடுத்து நான்மணிமாலை பாடிக் குடந்தம் பட்டுக் கூத்தா டித் திருவருள் வெள்ளத்துட்படிந்தாரா யிது புறம்போந்தார். பின் பசியெழலும் (பன்னுகவாடகப் பொற்பாதம்) என்று பாடுதலும், உலகமாதாவாகிய சிவகாமியார் வேதியமாதுருவமாய் உச்சி நிவேத னப் பிரசாதத்தினை வட்டகை நின்றும் கொடுத்தருள உண்டு பசியா றினவுடன் மறைந்தருளலும் பிராட்டியா ரென்றுணர்ந்து ஆராமை மிகுதியால்,

கட்டளைக்கலித்துறை.

ஓடுமெடுத்ததளாடையுஞ்சுற்றியுலாவிமெள்ள
வீடுகடோறும்பலிவாங்கியேவிதியற்றவர்போ
லாடுமருட்கொண்டிங்கம்பலத்தேதிற்குமாண்டிதன்னைத்
தேடுங்கணக்கென்னகாண்சிவகாமசவுந்தரியே.

என்று துதித்து அலைவற்ற சிவயோகானுபவத்தில் வீற்றிருந் தனர். அங்ஙனமிருப்பவர்,

சோறிடுநாடு துணிதருங்குப்பைதாண்டான்பரைக்கண்
டேறிடுங்கைகளிறங்கிடுந்தீவினையெப்பொழுது
நீறிடுமேனியர்சிற்றம்பலவர்நிருத்தங்கண்டா
லூறிடுங்கண்களுருகிடுநெஞ்சமென்னுள்ளமுமே.

என்றபாடலை யருளிச்செய்து காலங்கடோறுஞ் சென்று சிற் சபைத் திருநடங்கும்பிட்டு "நினைமின்மனனே" யென்றதுமுதலிய அனேகந் திருப்பாடல்களை யருளிச்செய்து, பலநாள் கழியத், திரு வொற்றியூர்க்கு வருகவென்ற ஞாபகந் திருவருள் தோற்றுவித்தலும்,

"பாற்கடல்கடையப் படுங்கடிவெண்ணெயை"

என்ற வடைக்கலத் திருவகவல்பாடி (வான்றேடுமறையேயோ) என்றெடுத்து (நான்றேட நாணோ நாணோ) என்று அருளிச் செய்து திருநடனம் கும்பிட்டுத் திருவம்பலம் தொழுது மாளிகை வலம்வந்து கோபுரவாயிலை வணங்கி வீதிதோறும் பணிந்து புறம் போந்து வழிக்கொண்டார்.

வழியில் திருத்தினை நகரடைந்து சிவபெருமானை வணங்கி யங்கு நின்று கெடிலநதிக்கரை யடைந்து, ஆருடைய வாசுகளைக் கல்லா வமணர் கடலிலே கட்டியிட்ட கற்றாணை மிதப்பாகக் கரை பேற்று வித்த திருநதியென்று பணிந்து மூழ்கித் திருப்பாதிரிப்புலியூரி லடி யார்களுக்குத் தோன்றுத் துணையா யிருப்பாரை வணங்கி யருந்தமிழ் பாடிச் சிலநாளிருந்து திருவதிகையடைந்து புரமட்டவீரட்ட வாண சைப்பணிந்து பாடித் திருக்கோவல் வீரட்டமும் தொழுது விருத்த கிரியைத் தரிசித்துத் திருவண்ணமலையைக் குறுகினர்.

குறுகுதலும் தூரத்தே மாலயன்றேட நின்றமலைக் கொழுந்தா ரைக் கண்டுவணங்கி யூருள்ளேபோந்து திருவீதிபுணர்ந்து கோபுரந் தொழுது திருக்கோயில் வலங்கொண்டு சந்நிதியடைந்து பெருமானை யும் பெருமாட்டியையும் கும்பிட்டுத் துதித்து அருந்தமிழ் பலபாடி அன்புமீதூர வுருகிப்பழிச்சி உடையவரைப் பிரியாவிடைகொண்டு புரம்போந்து திருமலை வலம்புரிந்து அங்கு சிலநாள் வீற்றிருந்தார்.

திருவெண்காடர் திருக்காஞ்சிபுரமடைந்தது.

அப்பால் அங்கிருந்து புறப்பட்டுத் திருவோத்தூர் முதலிய திரு ப்பதிகளைத் தரிசித்துச்சென்று திருக்காஞ்சிநகருக் கணித்தாகலும்,

திருவெல்லையைப் பணிந்து சிவலோகம்போலும் திருக்கும் சோலை நந்தவனம் முதலியவற்றை வணங்கிச் செல்லுகையில், திருவெண் காட்டடிகள் எழுந்தருளும் வைபவத்தைக் கேட்ட திருக்காஞ்சிப்பதி வாழுஞ் சிவனடியார் யாவரும் அட்டமங்கலம்கொண்டு ஆரணமுழங்க மங்கள வாத்தியத்தோடு எதிர்கொண்டு வந்துவணங்க, அவர்கள் வணங்குமுன் தாமும் வணங்கித் திருமதில்வாயில் கடந்து, அறங்களை ல்லாமோங்க மூவரும் தேவரு முனிவரு நாடோறும் பெருமான் றிருவடி வணங்கித் திரியும் வீதிபணிந்து கோபுரவாயிலைக் கும்பிட்டு திருவேகாம்பரத்தை வலங்கொண்டு வழுத்தி அன்புபெருக ஆராமை யால் உளமுருகக் கண்களிலானந்த நீர்வாரத்தொழுது,

கச்சித்திருவந்தாதி கட்டளைக்கலித்துறை.

மெய்த்தொண்டர்செல்லுநெறியறியேன்மிகநற்பணிசெய்
கைத்தொண்டர்தம்மிலுநற்றொண்டுவந்திலனுண்பதற்கே
டொய்த்தொண்டுபேசிப்புறம்புறமேயுன்னைப்போற்றுகின்ற
வித்தொண்டனென்பணிகொள்ளுதியோகச்சியேகம்பனே.

என்றது முதலாகத் திருவந்தாதி பாடிப் புறம்போந் தங்கிருந்து திருவேகம்பமாலை, கச்சித்திருவகவல் முதலிய திருப்பாடல்களை யருளிச்செய்து கச்சிக்காரோணத் தருகில் வீற்றிருக்கு நாளி லொருநாள் பசித்தீ மிகவருத்த, ஆற்றாராய்,

விண்ணப்பம்.

அத்திமுதலிலறும்பீறுனவுயிரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந்தளிக்குந்தேசிகா—மெத்தப்
பசிக்குதையாபாவியேன்பாழ்வயிற்றைப்பற்றி
யிசிக்குதையாகாரோணேச.

என்றருளிச்செய்தார். உடனே அறப்பெருஞ் செல்வியாகிய வம்மையார் காமக்கோட்டத்திருந்து அந்தணமாதுருவாய் வந்தழு தளிப்ப வுண்டுபசியாறிக் காமக்கோட்டம், கச்சபாலயம் ஓணகாந்தன் றளி, கச்சிநெறிகாரைக்காடு, அனேகதங்காபத முதலிய திருக்கோ யில்களைப் பணிந்து பல தமிழ்மாலைபாடி அனேகம் அற்புதங்கள் விள ங்க சிலநாள் வீற்றிருந்து, அங்கு நின்றும் புறப்பட்டு திருவாலங்காடு, திருப்பாசூர், திருவெண்பாக்கம் முதலிய திருப்பதிகளை வணங்கி, கண்ணப்பதேவரும், சிவகோசரியாரும், சிலந்தியும், காளனும், அத் தியும் பூசித்துப் பேறுபெற்றும் கடைச்சங்க வாணராகிய நற்கீரதே வர் அருளிச்செய்த திருவந்தாதியாகிய கொழுத்த தமிழ்ச்சுவையுண்

திருவெண்காடர் சரித்திரம்.

டறிந்ததுமாகிய காளத்தித் திருமலையைவணங்க எண்ணி வழிச்செல் வாராயினர்.

திருவெண்காடர் திருக்காளத்தி யடைந்தது.

அங்ஙனம் பட்டினத்தடிகள் செல்லுகையில், திண்ணனுரை முன் வலிதாண்ட திருவருளுள்ளே தூண்ட ஆர்வன்பு மீதூர்ந்து,

"முப்போதுமன்னம்புசிக்கவுந்தூங்கவுமோகத்திளந்
செப்போதிளமுலையாருடன்சேரவுஞ்சீவன்விடு
மப்போதுகண்கலக்கப்படவும்மமைத்தாயையனே
யெப்போதுகாணவல்லேன்றிருக்காளத்தியீச்சுரனே."

என்று துதித்து இரவுபக லேுக்காது வீனரிந்து நடைகொண்டபோது, வழியில் பாம்புகள் மணிவிளக்கேந்தி நின்றன. காட்டியானைகள் நெகிடிபிடித்து முன்நடந்து முள்முதலிய விலக்கிவந்தன. புலிகள் வாலினுல் மார்க்கம் விளக்கிச் சுத்தஞ்செய்தன. புல்வாய் மான் மரை முதலியன முன்னும் பின்னும் அணிவகுத்து வழிகாட்டுவனவாயின. மயில்வாரண முதலியன சிறகுகளால் காற்றெழப் பண்ணியும் வெயி லுக்கு நிழல் பரப்பியும் சென்றன. குரங்கு முசுமுதலியன நல்கனி கிழங்கு வகைகளைத்திந் துடசரிப்பனவாயின. இங்ஙனம் விலங்கு பரி வைகள் செய்யும் திருப்பணியை ஐயர்கண்டு இத்திருப்பணி எம்மை யுடைய காளத்தியாள்வார் திருவடிக்கன்றே பொருந்துவமென்றும், பாம்புகளை நீக்கி யிவைமுன் எம்பெருமானை மணிகள் சாத்திப் பூசித்தகாளரைர் மாபோ எனப்பணிந்தும், நெகிடியேந்திச் செல்லும் யானையை ஐயரை முன்னருச்சித்த அத்தியின் சுற்றமோவென்று தொழுதும், மானினங்களை அப்பர் கையமைந்த மானின் உறவோ வென்னத் துதித்தும், அவ்வாறே மற்றையவற்றையும் சிவபெருமான் திருவடி நேயப் பற்றுள்ளவற்றி னினமாக வணங்கியும் செல்பவர், கண்ணப்பதேவர் திருத்தொண்டினையும் மற்றையடியார் திருத்தொ ண்டினையும் எண்ணி யெண்ணி மனங்குழைந்துருகி,

"வாளான்மகவரிந்தட்டவல்லேனல்லன்மாதுசொன்ன
சூளாலிளமைத்துறக்கவல்லேனல்லன்முண்டுசெப்து
நாளாறிற்கண்ணிடந்தப்பவல்லேனல்லனினிச்சென்
சூளாவமிதப்படியோதிருக்காளத்தியப்பருக்கே"

என்றது முதலாகத் திருத்தொண்டத்தொகையுட் குறித்துள்ள அடி யவர் திருத்தொண்டினைத் திருப்பாட்டாக வருளிச்செய்து, திருமலை யைத் தூரத்தே கண்டுதொழுது, அணித்தாகச் சென்றடிவாரம் பணி

ந்து திருமலை வலங்கொள்வார் அங்கு தவஞ்செய்யும் பெரியாரையெல்லாம் வணங்கி, வேறுதொழில் செய்யுமவரையுங் குறமகளிரையும் சிவகோசரியாராகவும் பெருமான் திருவடியடைந்த கன்னியராகவும் எண்ணிப்பரவிவந்து சந்நிதியடைந்து அன்பு மீதூர வருந்தமிழ்பாடியுடல் நெக்குவிட்டுருகக் குழைந்துகுழைந்து பலவாறுதுதித்து அரிதுபுறம்போந்து அங்கிருக்குநாளில் ஆளுடையபெருமான் வடகைலைத் திருவோலக்கஞ்சேவிக்க விரும்பி,

"மந்திக்குருளையொத்தேனில்லைநாயென்வழக்கறிந்துஞ்
சிந்திக்குஞ்சிந்தையையானென்செய்வேனினைத்தீதகற்றி
புந்திப்பரிவிற்குருளையையேந்தியபூசையைப்போ
லெந்தைக்குரியவன்காணத்தினைகயிலாயத்தனே."

என்ற திருப்பாடலைப் பாடலும் தென்கைலைவாணர் அவ்வடகைலைக் கோலந் தரிசிப்பித்தருளத் தரிசித்துப் பலதமிழ்ச்செம்பாடல் பாடி அருள் விடைபெற்றுத் திருமலை வணங்கித் திருவொற்றியூரைக்கருதி எழுந்தருளினர். கேளும் முனிவர்களே! எங்கும் சிவன் பரிபூரணனென்று நன்குணர்ந்த சிவஞானிகளும் அனுபவமுதிர்ச்சிபெறவும் உலகவாதனை யோரிடம்பற்றிநின்று லொழியாதெனவும் நம்மையுணர்த்தவேண்டி யிங்ஙனம் தலங்கடோறும் எழுந்தருளிப் பல அற்புதங்களை விளக்கினரென்றுல் வேறுயாம் சிந்திக்கத்தக்கதென்னையுள்ளது. நெஞ்சினியற்கைப் புதியதையே நாடுவதாகவேநம்மேனருக்கவ்வுண்மையையுணர்த்துங் கருணையானன்றே அப்பெரியரித்திறங் கடைப்பிடித்தருளிச்செய்தது என்றுபமன்னியர் அருளிச்செய்தார்.

ஞானவித்தைகளிரண்டின் முறைமை.

அப்போது முனிவர்கள் அவரை வணங்கி, சுவாமீ! அவ்வாறுயின் இத்திருவெண்காட்டடிகளே,

தனித்திருவெண்பா.

"ஆரூரரிங்கிருக்கவவ்வூர்த்திருநாளென்
றாரூர்கடோறுமுழுலுவீர் - நேரே
யுளக்குறிப்பைநாடாதவூமர்காணீவிர்
விளக்கிருக்கத்தீத்தேடுவீர்."

எனத் தலயாத்திரை செய்பவரை நோக்கி மறுத்துரைத் தருளியவாறென்னை யென்று விளவ, ஞானசிரியராகியவுபமன்னியர் கூறுவார். கேளும் முனிவர்களே! இத்திருவெண்பாவிற் கூறியது, சாதகமுதிர்ந்து சகசம் பிறந்து காருணியத்தாற் றலயாத்திரைசெய்கின்ற நம்

லோர்களை யன்று; ஞாஞசாரியன் வேண்டுமென்று மூர்த்தி, தலம், தீர்த்தம் இவைகளைத் தொடங்கித் தவஞ்செய்கின்றவர்களையு மன்று; உண்மையுணராது உலகபோகம்வேண்டி யறிவின்மையாற் காமிய தவ மாகிய தலயாத்திரை செய்வாரை நோக்கியவாறும். மூர்த்தியருச்சனை விடயத்திலும், "பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி மெச்சிச் சிவபத வீடருள்பவனே" எனவும். திருக்கழுமல மும்மணிக்கோவையுள், "தோணிபுரேசர் அடித்தாமரைசென்று சார்வதற்குப் போதும் பெரு விடிற் பச்சிலையுண்டு புனலுண்டெங்கும் எதும் பெருவிடினெஞ் சுண்டு" எனவும் அருளிச்செய்த இப்பெரியரே, தனிப்பொதுத்* திரு விருத்தத்துள், "சொல்லிலுஞ் சொல்லின் முடிவிலும் வேதச்சுருதி யிலும், அல்லிலுமாசற்ற வாகாயந் தன்னிலுமாய்ந்து விட்டோர், இல் லிலு மன்பரிடத்திலு மீசனிருக்கு மிடங், கல்லிலுஞ் செம்பிலுமோ விருப்பானெங்கள் கண்ணுதலே" என்றார். எனினில் முத்திசாதன மாகிய பத்திசெலுத்துமிடம் குருலிங்க சங்கமம் என மூன்றும். இவ ற்றுள் உண்மை புணர்ந்து அக்குருலிங்கசங்கமங்கள் மூன்றும் ஒக் கக்கண்டு பணிசெய்யும் பக்குவிகளொழிய, உண்மையுணராது மூர்க் கத்தால், கேவலவுபாதான காரணம்பற்றிக் குருவை மனிதனென் றும் அடியார்களைச் சாதாரண சீவர்களென்றும் தம்மூளிகழாது இலி ங்கமொன்றனையே பொருளெனக் கொண்டு நடிக்கின்ற காமியதவத் தி னரையும், உலகபோகத்தை விரும்பி யுழலும் வஞ்சகநடிப்பினரையும் நோக்கிக்கூறியபடியாம், ஆனல் அவர் தாமே தமதனுபவமாக "வெட் டாத சக்கரம் பேசாதமந்திரம் வேறொருவர்க், கெட்டாத புட்ப மிறை யாத தீர்த்தமினி முடிந்து, கட்டாதலிங்கங் கருதாதநெஞ்சங் கருத்தி னுள்ளே, முட்டாத பூசையன்றே குருநாதன் மொழிந்ததுவே" எனவும், "உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையு மூத்தையறப், புளியிட்ட செம்பையும் போற்றுகிலை னுயர்பொன்னனவே,யொளி யிட்ட தாளிரண்டுள்ளே யிருத்துவதுண்மையென்று, வெளியிட்டடை த்துவைத்தே னினிமேலொன்றும் வேண்டிலனே" எனவுங்கூறியவா றன்னையெனின், தகரவித்தை சார்வான் மகவித்தை யென்னும் ஞானவித்தையிரண்டனுள் இவ்வையர் தகரவித்தையுடையராதலால் அது, மந்திரம், கலை, வருணம், பதம், புவனம், தத்துவமென்னு மத்துவாவாறையு நியதிசெய்து மேனின்ற வருளைத் தரிசித்துப் பரை யோக முற்றுச் சிவத்தோடிரண்டற்று நிற்றன் முறைமையதாகவே,

---

* திருவிருத்தமெனக் கவித்துறையை வழங்கு மரபு திருநாவுக் கரசுகள் முதற்றிருமுறையுட்காண்க.

திருவெண்காடர் வொற்றியூரடைந்து முத்திபெற்றது. கக

அம்முறைமை விளக்கியபடியாம். கல்லெழுத்தாணியைச் செம்பையும் பொற்றுகிலெனவாளாகூறி விடாது உயிர் பொன்னெனப்பொற் றுகிலெனத்தொண்டு கூட்டமுடித்ததுசைவசமாம். இம்முறை யை இவரருளிச்செய்த பூசனைமாலை, திருத்தொண்டமகிழ்தகம் எனு மிவற்றுள் விளங்கக்காண்க.

திருவெண்காடர் இவற்றியூரடைந்து முத்திபெற்றது.

முனிவர்களே! அப்பால் இவர் திருவொற்றியூரைக் குருதிக் குரு திபடனைத்தினம் கடிது வருவார், பெருமான் றிருவருளமுதமுறிப் பெருகவே,

"கண்டங்கரியதாங்கண்மூன்றுடையதா
மண்டத்தைப்போலவழகுதாம் - தொண்டர்
உடலுருகத்தித்திக்குமோங்குபுகழோற்றிக்
கடலருகேகிற்குங்கருமம்பு."

என்ற தனித்திருவெண்பாவைப்பாடிக் கண்ட சராசர முழுவதும் குருலிங்க சங்கமங்களாகக்கண்டு ஆராமை மிக அன்புபெருக,

"வாவியெல்லாந்தீர்த்தமணலெல்லாம்வெண்ணீறு
காவனங்களெல்லாங்கணநாதர் - பூவுலகில்
ஈதுசிவலோகமென்றென்றேமெய்த்தவத்தோர்
ஓதுந்திருவொற்றியூர்."

என்ற திருவெண்பாவாற்றுதித்துப் பலதரமும் பணிந்தெழுந்து திரு வெல்லைபக்குறுகி வணங்கியுட்புகுந்து திருவீதியடைதலும் தம் மையறியாதெழுந்த பேராசைக்கடலுண் மூழ்கி,

"ஓடிவிழுந்துசீப்பாயுமொன்பதுவாய்ப்புண்ணுக்
கிடுமருந்தையானறிந்துகொண்டேன் - கடுவிருந்துந்
தேவாதிதேவன்றிருவொற்றியூர்த்திருவிற்
போவாரடியிற்பொடி."

என்ற தனித்திருவெண்பா வோதி மேலுமேலு மடங்காத காதலால்,

"சுடப்படுவாரறியார்புரமூன்றையுஞ்சுட்டபிரான்
றிடப்படுமாமதிற்றென்னெற்றியூரன்றிருப்பாப்பில்
நடப்பவர்பொற்பதநந்தலைமேற்படநன்குருண்டு
கிடப்பதுகாண்மனமேவிதியேட்டைக்கிழிப்பதுவே."

என்று துதித்து அத்திருவீதியை அங்கவலம் வந்து சந்நிதியடைந்து அடியவர்தங்களாராவமுதனை அடங்காதகாதல் பெருக விழியான் முக

ந்துண்டு அருட்கடலிலலைந்து அழுந்தி உடல் குழையவன்பு நெக்கு விட்டுருகக் கரைந்து கரைந்து கண்ணீருங் கம்பலையுமாய்க்கைகளுச்சி மேலேற,

திருவொற்றியூர்த்தோகை.

"இருநிலமடந்தையியல்பினி லுடுத்த
பொருகடன் மேகலழுகமெனப்பொலிந்த
வொற்றிமாநகருடையோய்."

என்றெடுத்து அகவலொருபாவொருபதாகிய ஒற்றியூர்த்தோகை பாடி துதித்துத் தம்வசமிழந்து பாவசமுற்று நெடுநேரநின்று பின்தெளிந்து பிரியாவிடைபெற்று மீள்வார், படம்பக்கத்து நிரம்பிய போழகன் றிருவடிகளிலே,

"ஐயுந்தாடார்ந்துவிழியுஞ்செருகியறிவழிந்து
மெய்யும்பொய்யாகிவிடுகின்றபோதான்றுவேண்டுவன்யான்
செய்யுந்திருவொற்றியூருடையீர்திருநீறுமிட்டுக்
கையுந்தாழப்பண்ணியைந்தெழுத்தோதாதவுங்கற்பியுமே"

என்று விண்ணப்பித்து, அரிது புறம்போந்து, திருவெல்லைபிரியாராய்ச் சாக்கிர முதலிய வைந்தவத்தைகளையுங் கடந்து அருளுருக்குத்தம்மை யுணவாக்கி முழுவதும் விழுங்கப்பட்டாராய்த் தத்துவமுழுவது மிச்சைவழி பணிகேட்டப் பிரணவமே திருவுருவாக அருட்சகசம் பிறக்க வே யுலகுபேயாகப் பசுமேய்க்குஞ் சிறுவரோடு கூடி ஆடியும்பாடியும் பலவிளையாடல் புரிந்திருக்குநாளில் உலகமறிந்து பிழைக்கவும், உடனுடுஞ் சிறுவர்களிக்கவுமாக, முதல்வன் முறையீடு, அருட்புலம்பல், இறந்தகாலத்திரங்கல், நெஞ்சொடு புலம்பல், பூரணமாலை, நெஞ்சொடுமகிழ்தல், உடற்கூற்றுவண்ணம் இவற்றை அருளிச்செய்து பசுநிரைமேய்க்கும் அச்சிறுவரோடுகூடி மணற்குன்றிலும் புன்னைச் சூழலிலும் பல்விளையாடல்செய்து வீற்றிருக்குநாளில், ஐந்தெழுத்தருச்சனை முறைப்படிசெய்து திருவருளுக்கு முற்றும் தம்மை உணவாக்கித் தத்துவமுழுவதுந் தம்மியல் வேறுபட்டு அருள்வடிவாய்த் தம்வசப்படவே தாம் பஞ்சாவத்தையையுங் கடந்து, பஞ்சபூதகாரியமாகிய தூலவுடம்பே பஞ்சாக்கரகாரியமாகிய மந்திர சரீரமாகத் திரிந்து நின்றது. அப்போது திருவெண்காட்டடிகளும், உடன் விளையாடும் சிறுவர்களைநோக்கி, சிறுவீர்காள் நுங்கட்குச்சிலவிடைதங் காட்டுவல் என்னை யோர்குழியிற் புதையுமென அவர்களு மவ்வாறே புதைத்தவுடன், அவர்களுக்கு வியப்புண்டாம்படி வெளிப்பட்டு வேறோர் மணற்குன்றின் மேனின்றனர். அதுகண்டு அவர்கள் மனமகிழ்கொ

ண்டு மீட்டு மீட்டும் புதைக்கப் புதைக்க வெளிப்பட்டு நின்று பாராக்கு காட்டி அப்பால் ஒருவிசைபுதைக்கவெளிப்படாமல் சிவலிங்கவடிவ மாக மூலத்து நின்றார் * அப்போது சிறுவர்கள் கண்டு வியப்புற்ற அச்சமுமடைந் தூரிலேயுள்ளவர்கட்கு நடந்தனவற்றை யுரைத்திட்ட, அவர்கள் யாவரும் திரண்டுவந்து அவ்வற்புதத்தைக் கண்கள்செய்த தவப்பயன் பலிக்கும்படி தரிசித்தார்கள். பூமழைபொழிந்தது. தேவ துந்துபிமுழங்கிற்று. முனிவருட் சிவனடியவர்களும் அரகரவென்று முழக்கஞ்செய்தனர். உலகெலாம் போராநந்தவெள்ளத்துண் மூழ்கின.

கேட்டீர்களோ முனிவர்களே! இம்முத்திநிலையே முடிவானதும் உண்மையானதுமென் றுணர்வீர்களாக. இங்ஙனம்பட்டினத்துப்பெரு ந்தகையாகிய திருவெண்காடர் சுத்தசன்மார்க்க முத்தி சித்தியாகப் பெற்ற செய்தி உலகெல்லாம் பரவிப் பக்குவிகள் யாவரும் கேட்டுத் துதித்துப் போராநந்த மூற்றனர்.

இதற்குமுன்னே யிவர் பத்தினியாராகிய சிவகலை யம்மையார் தங்கணவனார் திருவடித் தியானத்திலேயே யிருந்து சிவயோகமுற்றுச்சிவபதம் பெற்றனர்.

காவிரிப்பூம் பட்டினத்துள்ளார் யாவரும் ஐயர் ஐக்கிய நிலைமை கேட்டங்கு நின்றும் புறப்பட்டுவந்து திருவொற்றியூரையடைந்து தரி சித்துப் பலதிருத்தொண்டுசெய்து திருவருட்பாங்கராயினர்கள். யாவர் க்கு மங்கல முண்டாக என்று உபமன்னிய முனிவர், முனிவர்கட்குக் கூறியபடி, சூதபுராணிகர் சவுனகராதியர்க்கு ஸ்ரீபவிஷியோத்தரபுரா ணத்துள் திருவிடைமருதூர் மான்மியத்திலே கூறிய பட்டினத்துப் பிள்ளையார் திவ்வியசரித்திரத்தைக் கூறிமுடித்தனர்.

இந்த சரித்திரத்தை யுண்மையான பத்தியோடும் சிரத்தையோ டும் வாசிப்பவர்கட்கு இம்மையில் ஆயுள், செல்வம், மக்கள், சிவஞா னமும் உண்டாய் மறுமையில் பேரின்பநிலையான சிவபதமும் உண்டாம்.

உண்மையான முத்திநிலையின்னதென்பது.

இது உண்மையான முத்தி நிலை யின்னதென்ப துணர்த்திற்று. எங்ஙனமெனில், மற்றைய சமயமார்க்கிகளெல்லாரும் கருமதேதகமாகிய

திருவெண்காடர் திருநகரூத்திரம்.

*"ஆடியுத்திராடமவிர்பூம்புகார்த்திருவெண்
காடரொற்றித்தியாகர்கவின்பதியில் - நீடுமணி
லிற்கோவியன்னுட்டிளைஞர்கோலந்தரித்துக்
சிற்கோலமான தினம்.

இத்தூலவுடம்பு பிராரத்தத்தைப் புசித்து ஒழித்து இங்கே விழுந்து போக ஆன்மா சூக்குமதேகத்தோடு முத்தியடையுமெனவே கூறுவர். ஆனல் திருவாசகம், "செத்தேபோலுற் சிரியோரோ" என்றதும்தவிர "மண்மேல்பாக்கை விழுமாறும் வந்துன்கழற்கேபுகுமாறும், அண்ணு வெண்ணைக் கடவேனை அடிமைசால வழகுடைத்தே" என்றது. எனவே தேகம் பிணியிலா யிம்மண்ணிலே விழாது மூவகைச்சித்தியுள் ஓர்வகைச்சித்தி பெற்றுநிற்பதே முடிவான முத்திநிலையென்றவாறு யிற்று. தாயுமானவரும், "முத்தியிலுந்தேகமிசை மூவிதமாஞ் சித்தி பெற்றோர் - எத்தனேபேரென்றுரைப்ப தெந்தாய்பராபரமே." என்றார். என்றவர், அம்மட்டில்விடாது, "தேகம்யாதேனுமொரு சித்திபெறச் சீவன் முத்தி-ஆகு நெறிநல்லநெறியையாபராபரமே." என்றார்.

இனி தேகஞ் சித்திபெறப் பெறுமுத்தியேயன்றி, அதுவிழுந்த பின் ஆன்மா முத்திபெறுதலு முண்டு என்று கூறுவாரை நோக்கி அவரே "உலகநெறிபோற் சடலமோயவுயிர்முத்தி, யிலகுமெனல்பந்த வியல்பே பராபரமே." என்று உண்மைகூறி மறுத்தனர்.

குமாரதேவரும், "சுத்தசாதகம்" என்னும் நூலுள்ளே, "தொம் பதம்விளங்கின் மேல்வினைமறைத்த தொல்லிருளகன்று போயொளிக் கும், தம்பதமான தற்பதம்விளங்கிற் சஞ்சிதமாயை போயொளிக்கும், அம்பதமானவசிபதம்விளங்கிலரும் பிராரத்தம்போயொளிக்கும், செம் பாவருளேவடிவதாயான்மா சிவத்தினுக்கங்கமாய் நிகழும்." எனவும்,

"அடுத்தமற்றிரண்டுசனனத்தில்வீட்டை படைந்திடுந்தாம்பத நெறியோர், அடுத்தமற்றொருநற்சனனத்தில்வீட்டையடைந்திடுந்தற் பதநெறியோர், அடுத்தவிச்சன னந்தனிலடைந்திடும் வீடசிபதநெறி யுளோரிவரும், அடுத்தவிவ்வுடலோ டடைந்திடாவிடின்மேல்யாக்கை யொன்றெடுக்குமென்றுணர்வாய்." எ-ம்,

"ஒடுங்கிடுங்காலந் தோன்றினவடைவி னெடுங்கிடுமென்றுரைப் பதனல், ஒடுங்கிடுங்காலஞ் சத்தியவாதிக் கொடுங்குமிவ்வுடறன்மாத் திரையில், ஒடுங்கிடுங்கால மசத்தியவாதிக் கொடுங்குமிவ்வுடலசத்திய மாய், ஒடுங்கிடுங்கால முடலிங்கேவீழ்ந்தா லொடுங்கினதில்லை யென் றுணர்வாய்." எ-ம்,

"மேலொருவடிவை யெடுத்ததேதயாகின் மேவுமிவ்வுடலிங்கேவீ ழும், மேலொருவடிவையெடுத்ததின்றுகின்மேவுமிவ்வுடலிங்கேவீழா மேலொருசிவத்தைச்சீவன்சென்றடையுமேவுமிவ்வுடலிங்குத்தானே,

மேலொருசிவத்தின்வடிவதாமருளாய் வெளியதாமூலகுகண்டிடவே.” எ-ம்,

“சூக்குமமதனி னின்றுமுன்வினையிற் றூலதேதகமு முளதாகும் சூக்குமந்தனது காரணமடையிற்றூலமுஞ் சூக்குமத்தடையும், சூக்குமந்தனதுகாரணமடையத்தூலமிங்ககன்றதேதியென்றால், சூக்குமந்தனதுகாரணம்விடுத்துத்தூலமென்றெடுத்ததென்றுணர்வாய்.” எ-ம்,

“தூலவிவ்வுடலைவிடுத்துநில்லாது சூக்குமஞ்சூக்குமம்விடுத்துத், தூலநில்லா திரண்டையும்விடுத்துத் தொல்லுயிர்நிலாவுயிர் விடுத்துத், தூலசூக்குமங்கணின்றிடாதுயிருஞ்சூக்குமமும்முடிவடைந்தால், தூல முழுமுடிவையடைந்திடாதிந்தத்தொல்லுலகினில்விழுந்திடுமோ.” எ-ம்,

“வினையினிலெடுத்தவிவ்வுடல்மேலும் வினையுளதெனிலிங்கேயக லும்,வினையிலதெனிலிங்கிவ்வுடலுனைவினையறுமோமயமாகி,வினையுள வுடல்போற் றோற்றன்மாத்திரமாய் விளங்கியேயிவ்வுறுபுரிபோல், வி னையிலாப்பரமமுத்தியில்வெளியாய்விமலநல்லருளதாய்விடுமே.” என வும் விளங்கக்கூறுதல்காண்க.

இன்னுமிக்குமாரதேவர், இவ்விடயத்தில் வேதாகமங்கள் கூறும் சாதகம், உபாயம் முதலியவெல்லாம் வெளிபெற அந்நூலுட் கூறுத லாலுமுணர்க. இந்நிலை தமக்கரியதென மற்றையவர் விட்டொழிந் தார்கள்போலும்.

இன்னும் அருணகிரிநாதர் அநுபூதியுள் “சாகாதனேயசரணங் களிலே” எனவும், “கூகாவெனவென்கிளைகூடியழப், போகாவகைமெ ய்ப் பொருள்பேசியவா”எனவும் பிறவாற்றாலுங் கூறுதலும், முத்துத் தாண்டவர், “மாணிக்கவாசகர் பேறெனக்குத் தரவல்லாயோ அறி யேன்” எனக்கூறுதலும் பிறசான்றோர் கூறுதலும் காண்க.

இனி முத்தியிலேபுந்தேதகம்பெறும் மூவகைச் சித்தியாவன, உருவச்சித்தி, அருவச்சித்தி, உருவருவச்சித்தி எனவாம். அவற்றுள் ஆளுடையநம்பிகளாகிய சுந்தரமூர்த்திசுவாமிகளும், சேரமானும் திரு மேனியோடுங் கைலைக்குச்சென்றதுபோல்வன உருவச்சித்தியாம், அவை சுத்ததேதகமெனவும், சுவர்ணதேதகமெனவும். பிரணவதேதகமெ னவும் வழங்கி நிற்கும். அருவச்சித்தியாவது, திருவாதவூரடிகள் திருமேனி சிற்சபையிலே பரமாகாசமாகக் கலந்துநின்றது. “உரு வெளிதான்வாத வூருத்தமர்க்கல்லா லின்னுங்-குருமொழி நின்றூர்க்கு மூண்டோ கூறுப்பராபரமே.” எனத்தாயுமானவர் கூறுதலும்காண்க. உருவருவச்சித்தியாவது, ஆளுடையபிள்ளையார்,முருகனர்முதலியோ

கள் சோதியிற்கலந்ததும் அரசுகள் சிவலிங்கத்துட் கலந்ததும், போல்வன. அன்றித் தம்மேனியையே சிவலிங்கமாக நிறுத்துவதுமாம். ஆதலால், திருவெண்காட்டடிகளும் அங்ஙனம் நிறுவியுலகுய்யவழி காட்டியவாறும். சிற்றம்பலநாடிகள் முதலிய பலபெரியரும் இவ்வாறே தம்முடம்பைச் சிவலிங்கமாக நிறுத்தியவர்களாம். ஆகவே முத்தி முடிவென்பது இதுவென யாவரு மொரு தலையாக வுணரற்பாலதாம். இனிதிருத்தொண்டத் தொகையுள்ளே கூறிய மெய்ப்பொருளார், வனிதநாதர் முதலிய நம்பெருமக்கள் திருமேனியை மண்மேல் வீழ்த்தியவாறு என்னையெனின், அவர்கள் உலகத்துள்ள பந்த சீவர்கள் உண்மையறிந்துய்யச் சன்மார்க்க முதலிய நான்கு மார்க்கங்களையும் நடத்திக்காட்டி யுணர்த்தியருளக் கருணையால் திருமேனி கொண்ட நிமித்த மூர்த்திகளாதலின், அவ்வவ்வுயிர்களில் விணைப்பரிபாக நிலைமைவெளியாம்படித் தாம் தந்திருமேனியை யிச்சைவழி நிறுத்தியருளியபடியாம். ஆகலின், அதற்கு இவ்விதிகொள்ளற்க. அதனுண்மையைக் குருமுகத்தாற்பெறுக.

வேதவேள்விவிதிமுறைவாழிய
ஆதிநீறெழுத்தைந்தன்பர்வாழிய
பேதியாமுத்திபெற்றவெண்காடனூர்
காதைவாழியகற்பவர்வாழியே.

என்னையுமோர்பொருளாக்கியோராரும் வெண்காடரினியகாதை, மன்னிய விவ்வுலகேத்தத் தமிழ்வகுக்க மனம்வலித்த மாபுசான்ற, துன்னியமெய் யன்பரெலா மிகவாழ்க வுயிர்த்தொகைகள் சுகத்தினோங்க, வின்னியனல் லறம்வாழ்க வாழ்கமழை யிவ்வுலக மினிதுமாதோ.

பட்டினத்துப்பிள்ளையார் என்று வழங்கும்

திருவெண்காடர் சரித்திரம்

முற்றுப்பெற்றது.

பிழையும் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
சூ	உடு	தீவர்களாகிப	தீவர்களாகிய
எ	க	திருவுளா	திருவுலா
க0	கஙூ	கோபுர	கோபுர
கஉ	சு	அச்குற்றம்	அக்குற்றம்
கசூ	உக	குறவற	குறைவற
கள	கஅ	கலீனென	கலீனென
கஅ	உ	நடப்பினரும்	நட்பினரும்
,,	உடு	திருவெண்காடாருக்கு	திருவெண்காடருக்கு
,,	உன	றேன்றிச்	றேன்றிச்
உங	சூ	கண்டானை	கண்கடானை
,,	கஉ	பொம்மை	பொய்ம்மை
உசூ	கடு	லாசாரமின்றி	லாகாரமின்றி
ஙூ	கஅ	பரிபூரணை	பரிபூரணனை
ஙஉ	உசூ	மறுபிறப்பன்றே	மறும்பிறப்பன்றே
ஙடு	ஙச	துணையாகியும்	துணையாகியும்
ஙசூ	கஙூ	தலல	தல்ல
,,	உஅ	வினவசத்தாற்	வினவசத்தராய்
,,	ஙச	வயிற்றிய்	வயிற்றிற்
ஙன	ன	ஞானகலாம் பையாகிய	ஞானகலாம்பையாகிய
ஙசூ	கஙூ	மூகங்காட்டி	மூகங்காட்டி
சஉ	க0	ருத்தாபிஷேகம்	ருத்திராபிஷேகம்
,,	ஙச	பவிகளாகிய	பாவிகளாகிய
சங	உஅ	புஷ்பசந்தன	புஷ்பஞ்சந்தன
சடு	கள	பிறவரொவர்	பிற்ரொவர்
சசூ	கஉ	புதுமெழி	புதுமொழி
சசூ	கஙூ	காலக்கடன்	காலேக்கடன்
டு0	ஙக	சேட்பதும்	கேட்பதும்
டுக	ஙச	திருவெண்காடராகிப	திருவெண்காடராகிய
டுஙூ	டு	பட்டுடுத்துப்	பட்டுடித்திப்
,,	உடு	நண்பிரானராதியர்	நண்பினராதியர்
டுடு	உஅ	விரும்	விரும்பி
டுன	கச	அம்மயப்ப	அம்மையப்ப
,,	ககூ	வேதாமங்	வேதாகமங்
டுஅ	உச	விறைவினை	விறைவனை
கூஉ	ஙஙூ	மூபா	உபா
கூங	கஉ	விம்பிரமாண்டமும்	விப்பிரமாண்டமும்
கூசூ	உங	றிரவம்	[illegible]

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
சுசு	உஅ	காலததில்	காலத்தில்
சுஎ	கஉ	அப்சரிசாரகர்கள்	அப்பரிசாரகர்கள்
சுசு	க	கணத்திரம்	கணத்திறம்
,,	உ0	தெய்த	செய்த
,,	உஉ	கணத்திரம்	கணத்திறம்
எ0	கங	தேர்முனைன	தேர்முனை
,,	ககூ	நாம் எம்மேபோதும்	நாம் எப்போதும்
எக	க	கணத்திரம்	கணத்திறம்
,,	அ	மாட்டார்கனென்றுல்	மாட்டார்களென்றுல்
,,	உங	இறைவிர்	இறைவர்
,,	உசு	சாரிசாதம்	பாரிசாதம்
எஉ	க0	மகலாக	மகவாக
,,	கரு	வல்வர்கள்	வல்லவர்கள்
,,	உ0	வண்கண்ணர்	வன்கண்ணர்
,,	உசு	அவர்களை	அவர்கள்
,,	ஙஉ	அழுதம்	அழுதப்
,,	ஙங	ஆவியிர்	ஆருயிர்
எங	க	கணத்திரம்	கணத்திறம்
,,	அ	எங்கட்கெளியமேனை	எங்கட்கெளியாமேனை
,,	ஙச	யுடைவர்	யுடையவர்
எஅ	ச	மகிழ்க்சி	மகிழ்ச்சி
எசு	உங	அருவுமன்றி	அதுவுமன்றி
அ0	ங	பெறக்குரிய	பெறற்குரிய
அக	கச	தேறிரிச்	தேரேறிச்
அரு	உரு	மாகிலாத	மாசிலாத
அள	க	மீனையிருந்	மீனையிருந்த
,,	எ	கென்று	சென்று
கூங	ஙங	யருள்வளர்	மருள்வளர்
கூரு	க	மருந்தப்	மருதப்
கூசு	உ0	தாய்	தாம்
கஉசு	உக	கொரண்டுவர	கொண்டுவர
கஙங	கு	கொள்ளவ	கொள்வ
கஙச	ஙக	புரம்	புறம்
கஙரு	ஙச	பேறுபெற்றும்	பேறுபெற்றதும்
கஙசு	கஅ	பர	பற
கஙஅ	ககூ	தம்முளிகழாது	தம்முளிகழ்ந்து
கச0	கச	வேண்டுவன்	வேண்டுவல்
கசஙு	கசு	விளங்குகக்	விளங்ககக்